# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - டிசம்பர் 2020

**www.tnpscthervupettagam.com**











SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ....10
தமிழ்நாடு செய்திகள் ....25
உலகின் மிகப் பழமையான நானோ அமைப்புகள் .... 25
அதிக எண்ணிக்கையிலான பெண் நீதிபதிகள் .... 26
ரம்மி ஆட்டம் மீது தமிழ்நாட்டின் தடை .... 26
மாநிலங்களின் நிலை குறித்த அறிக்கை .... 26
தமிழ் வழியில் படித்தவர்களுக்கான இட ஒதுக்கீடு .... 27
சர்வதேச பாரதி திருவிழா .... 28
தமிழ்நாட்டின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள் .... 28
அம்மா சிறு மருத்துவமனைகள் .... 29
ஓலா ஸ்கூட்டர் தொழிற்சாலை .... 29
தங்கக் குவியல் .... 29
தொ. பரமசிவன் .... 30
சின்னமன்னா நாராயணசாமி நாயுடு விருது .... 30
அப்துல் ஜப்பார் .... 31
பொங்கல் பரிசு .... 31
தேசியச் செய்திகள் ....32
3வது உலக புதுப்பிக்கத் தக்க ஆற்றல் முதலீட்டுச் சந்திப்பு மற்றும் கண்காட்சி (RE-Invest 2020) .... 32
லச்சித் திவாஸ் .... 32
இந்தியக் காலநிலை மாற்ற அறிவுத் தளம் .... 33
திருநர்களுக்கான தேசியத் தளம் .... 33
மனித வள மேலாண்மை அமைப்பு – இந்திய இரயில்வே .... 34
33வது பிரகதி உரையாடல் .... 34
கோவிட் – 19 தொற்றின் தடுப்பு மற்றும் மேலாண்மை அறிக்கை .... 35
சட்டமன்ற உறுப்பினர் – தகுதி நீக்கம் .... 35
ப்ரூ பழங்குடியினர் - அகதிகள் பிரச்சினை .... 35
தேசியக் கடல்சார் கள விழிப்புணர்வு மையம் .... 36
கர்நாடக மாநில சட்ட மேலவை உறுப்பினர் தகுதி நீக்கம் .... 36
இந்தியாவில் சாலை விபத்துகள் .... 36
100 ஆக்டேன் பெட்ரோல் .... 37
2021 ஆண்டின் குடியரசு தின விருந்தினர் .... 37
உள்நாட்டு விமானம் தாங்கிக் கப்பல் ஐ.என்.எஸ் விக்ராந்த் .... 37
புரெவி புயல் .... 38
கற்றல் மேலாண்மை அமைப்பு .... 38
ராமாயணப் படகுப் பயணச் சேவை .... 38
ஆடி மஹோத்ஸவ் .... 38
புதுதில்லியில் விவசாயிகளின் போராட்டம் .... 39
இந்திய இராணுவத்தில் புதிய பதவிகள் .... 39
காவல் நிலையங்களின் ஆண்டுத் தரவரிசை .... 40

7வது வாஷ் (நீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்) மாநாடு ...... 40
மிகவும் நம்பகத் தன்மை வாய்ந்த நிறுவனம் ...... 41
ஃபைசர் இந்தியா...... 41
9வது சர்வதேச மணல் திருவிழா ...... 42
இந்தியாவின் உலகளாவிய  புரிதல் திட்டம் ...... 42
கொவேக்சின் (COVAXIN) ...... 42
இந்தியக் கைபேசி மாநாடு – 2020 ...... 43
இன்வெஸ்ட் இந்தியா ...... 43
தாரு பழங்குடியினர் ...... 44
இந்தியாவில் மலேரியா ...... 44
நகர நிர்வாகக் குறியீடு ...... 44
தேசிய டிஜிட்டல் சுகாதார திட்டம் ...... 44
ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை ...... 45
கோ-வின் (Co-Win) செயலி ...... 45
புதிய நாடாளுமன்றக் கட்டிடம் ...... 45
சிந்து சமவெளி நாகரிகத்தில் (IVC) இறைச்சி ...... 46
இந்திய நீர்த் தாக்க மாநாடு...... 46
நகர வாழ்க்கைத் தரம் ...... 47
கொள்ளை நோய் மேலாண்மை குறித்த பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) ஆய்வு...... 47
விஸ்வாஸ் (VISVAS) திட்டம்...... 48
‘இலக்கு 2035: இந்தியாவில் பொது சுகாதாரக் கண்காணிப்பு’ ...... 48
நிலையான மலை மேம்பாட்டு உச்சி மாநாடு ...... 48
மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளிப்பதற்கான தேசிய மையம்...... 48
2019-20 ஆம் நிதியாண்டிற்கான தேசியக் குடும்பச் சுகாதார ஆய்வு (NFHS-5) ...... 49
விக்யான் யாத்திரை ...... 49
வெளிநாடு வாழ் இந்தியர்கள் ...... 50
பிராண்ட் இந்தியா மிஷன் ...... 50
தபால் வாக்கு முறை ...... 50
இ-சஞ்சீவனி தொலைதூர மருத்துவம் ...... 51
சுங்க நிலை இல்லாத இந்தியா ...... 51
கடல்சார் பகுதி கட்டுப்பாட்டகம் ...... 51
DRIP 2 ...... 52
மீயொலி வேக காற்று சுரங்க வழி வசதி ...... 52
பண்டிட் தீனதயாள் உபாத்யாய் தொலைத்தொடர்பு திறன் சிறப்புமிகு விருதுகள் ...... 52
E5 தொடர் ஷின்கன்சென் ...... 53
ஹைட்ரோ கார்பன் உற்பத்தி செய்யப்படும் வடிநிலம்...... 53
இமயமலை டிரில்லியம்...... 54
திறன் மேம்பாட்டிற்கான இந்தியாவின் முதலாவது சிறப்புமிகு மையம் ...... 54
5வது உலகத் தொழில்நுட்ப மாநாடு...... 54
ASSOCHAM அமைப்பின் 100வது ஆண்டு...... 54
உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்காகப் புதிய பாதைகள்...... 55
இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா (IISF)...... 55

அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் 100வது ஆண்டு (AMU) ... 56
டிஜிபாக்ஸ் (Digi Boxx) ... 57
இரயில்வேயில் அந்நிய நேரடி முதலீடு ... 57
விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் 100வது ஆண்டு ... 57
லித்தியம் சுத்திகரிப்பு நிலையம் ... 58
முதன்மை ஆற்றல் கலவை ... 58
கோவிட் நோய்த் தொற்று காலத்தில் மிகவும் உதவிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MP) ... 58
மிகப்பெரிய ஓவியம் ... 59
இந்தியாவின் இளம் வயது மாநகராட்சித் தலைவர் ... 59
100வது கிசான் இரயில் ... 60
கிழக்குப் பிராந்திய சரக்குப் போக்குவரத்திற்கான பிரத்தியேக தடம் ... 60
மோன்பா என்ற கையால் உற்பத்தி செய்யப்படும் காகிதத் தொழிற்சாலை அலகு ... 61
சிஐஐ-ஐடிசி நிலைத்தன்மை விருதுகள் 2020 ... 61
டிஜிட்டல் இந்தியா விருதுகள் 2020 ... 62
சர்வதேசச் செய்திகள் ... 62
அதிக அளவில் இணைப்பு கொண்ட நகரம் ... 62
ஆசியான் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் சந்திப்பு – ப்ளஸ் ... 63
கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு ... 63
ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அரசாங்கத் தலைவர்களுக்கு இடையேயான உச்சி மாநாடு 2020 ... 63
சூடானின் முன்னாள் பிரதமர் ... 64
ஆஸ்திரேலியா மற்றும் இஸ்ரோ ... 64
2020 ஆம் ஆண்டின் சொல் (வார்த்தை) ... 65
ஈரானில் யூரேனியம் செறிவூட்டல் ... 65
5 கண்கள் – நாடுகளைக் கொண்ட குழு ... 65
அதிகக் கல்வியறிவு பெற்ற புலம்பெயர்ந்தோர்கள் ... 66
உணவு மற்றும் வேளாண்மையின் நிலை 2020 ... 66
ஐ.நா. துப்புரவு மற்றும் சுகாதார நிதி ... 67
UNCTAD அறிக்கை ... 67
ஓநாய் படைபிரிவு 44 ... 67
உலக மலேரியா அறிக்கை, 2020 ... 67
சர்வதேச ஊழல் குறிகாட்டி – ஆசியா ... 68
QS ஆசியப் பல்கலைக்கழகத் தரவரிசை 2021 ... 68
தெரேமின் - 100 வது ஆண்டு ... 69
அவசரகாலப் பயன்பாட்டு அதிகாரமளிப்பு ... 69
உலக வர்த்தக அறிக்கை, 2020 ... 69
IFCN நிறுவனத்தின் உலகப் பால் பண்ணைச் செயற்பாட்டாளர்கள் தரவரிசை ... 70
கஞ்சாவின் புதிய வகைப்பாடு ... 70
7 வது IEF-IGU அமைச்சர்கள் எரிவாயு மன்றம் ... 71
உற்பத்தி இடைவெளி, 2020 ... 71
உலகளாவிய காலநிலை மீதான நிலை பற்றிய தற்காலிக அறிக்கை ... 72
அமைதிக் கலாச்சார அமர்வு ... 72
8வது உலகத் தீவிரவாதக் குறியீடு – 2020 ... 73

2020 ஆண்டிற்கான டைம் பத்திரிக்கையின் குழந்தை ..... 73
சிஎல்எம்வி மாநாடு ..... 74
3ஆர்எப் செயல்திட்டம் ..... 74
குறைவாக வளர்ந்த நாடுகள் அறிக்கை 2020 ..... 74
ஆசாத் பட்டான் திட்டம் ..... 75
பாஷன் சார் தீவு ..... 75
பார்ச்சூன் 2020 ஆண்டின் சிறந்த தொழிலதிபர் ..... 76
டிரேஸ் லஞ்ச அபாயக் குறியீடு ..... 76
கோவாக்ஸ் முன்னெடுப்பு ..... 77
உலகளாவிய ஊதிய அறிக்கை 2020-21 ..... 77
உலகப் பொருளாதார மன்றம் 2021 (WEF 2021) ..... 78
யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தளங்களின் பட்டியல் ..... 78
ஆயுதங்களின் சந்தை அறிக்கை ..... 78
வங்க தேசம் மற்றும் பூடான் ..... 79
எவரெஸ்ட் மலையின் புதிய உயரம் ..... 79
சர்வதேச மதச் சுதந்திரச் சட்டம் ..... 79
கூகுள் தேடல்கள் ..... 80
கோவிட்-19 தடுப்பூசியை அறிமுகப்படுத்திய முதல் நாடு ..... 80
கொள்ளை நோய்த் தடுப்புத் தயார்நிலை நாள் ..... 80
இஸ்ரேல் – மொராக்கோ அமைதி ஒப்பந்தம் ..... 81
இந்தியப் பெருங்கடல் தீவு விளையாட்டுகள் ..... 81
ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டம் ..... 81
ஆசிய பசிபிக் நோய்த் தடுப்பு அணுகல் வசதி ..... 81
டைம் பத்திரிகை 2020 ஆம் ஆண்டின் நபர் ..... 81
கோல்டுமேன் சுற்றுச்சூழல் விருது – 2020 ..... 82
யுனெஸ்கோ கல்வி அறிக்கை ..... 82
வங்கபந்து ஷேக் முஜிப் பரிசு ..... 83
சிவப்பு வழி ஒப்பந்தம் ..... 83
இந்தியப் பணியிட சமத்துவக் குறியீடு ..... 83
WHO நிறுவனத்தின் 2019 உலகளாவிய சுகாதார மதிப்பீடுகள் ..... 84
வாஷ் (WASH) குறித்த உலகளாவிய முன்னேற்ற அறிக்கை ..... 84
சமநிலை வாழ்க்கை (வாழ்வு) மாநாடு ..... 84
மனித வளர்ச்சிக் குறியீடு 2020 ..... 85
சாபஹார் துறைமுகம் குறித்த TWG சந்திப்பு ..... 86
"நாணய மோசடியாளர்கள்" கண்காணிப்புப் பட்டியல் ..... 87
நேத்ரா (NETRA) கட்டுப்பாட்டு மையம் ..... 87
மைய வங்கிகள் மற்றும் மேற்பார்வையாளர்களின் அமைப்பு ..... 87
மனிதச் சுதந்திரக் குறியீடு 2020 ..... 87
சர்வதேச விளையாட்டில் ரஷ்யா ..... 88
நுழைவாயில் ஒப்பந்தம் ..... 88
நிதியியல் அமைப்பைப் பசுமையாக்குவதற்கான அமைப்பு ..... 88
6வது இந்திய-ஜப்பான் சம்வாத் கருத்தரங்கு ..... 89

கொள்ளை நோய்க் காலம் மற்றும் கூட்ட நெரிசலுக்கான (அதிகளவில் கூடுதல்) எதிர்வினை ....... 89
20வது IORA அமைப்பின் அமைச்சர்கள் குழு........ 89
2020 ஆம் ஆண்டின் கலாச்சாரப் பாரம்பரியப் பாதுகாப்பிற்கான யுனெஸ்கோ ஆசிய-பசிபிக் விருதுகள் ........ 90
4வது ஆசிய நீர் மேம்பாட்டுக் கண்ணோட்டம் 2020........ 91
ஐக்கியப் பேரரசு இந்தியா இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம்........ 91
இஸ்ரேல் தேர்தல் ........ 92
அயல்நாட்டில் அமைந்த நாடு கடந்த திபெத்தியப் பாராளுமன்றம் ........ 92
கரையோரக் கண்காணிப்பு (ரேடார்) அமைப்பு ........ 92
ஐக்கிய நாடுகள் மற்றும் இஸ்ரேல்........ 93
வோடபோன் வழக்கு ........ 93
இந்தியாவின் மீது ஐரோப்பிய ஒன்றியம் (EV) – ஐக்கியப் பேரரசு (UK) பிரிக்ஸிட் ஒப்பந்தத்தின் தாக்கம்........ 93
2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களின் சர்வதேச ஆண்டுகள் ........ 94
உலக சுகாதாரப் பிரச்சினைகள் ........ 95
இந்தியா-ஜப்பான் எஃகு ஒத்துழைப்பு ........ 95
இயற்கைக் குறியீடு 2020 செயற்கை நுண்ணறிவு ........ 96
பொருளாதாரச் செய்திகள்........96
தேன் - வேளாண் உற்பத்தியாளர் அமைப்பு திட்டம் ........ 96
இந்தியப் பொருளாதாரம் – பொருளாதார மந்த நிலை........ 97
இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு (FDI) : தற்பொழுது, அடுத்து, அதற்கு அப்பால் ........ 97
உலக முதலீட்டாளர் வாரம்........ 98
சந்தை மூலதனம் ........ 98
அந்நிய நேரடி முதலீட்டின் மூலங்கள் ........ 98
RTGS........ 99
MSPக்கு 1.5 மடங்கு சூத்திரம்........ 99
எச்.எஸ்.என் விதிமுறை ........ 100
பணக் கொள்கை 2020-21 ........ 100
லாட்டரி மீதான வரிகள்........ 100
இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி........ 101
ரொக்கத் தகவமைப்பு வசதி – RRB ........ 101
வரி நீதி மீதான நிலை 2020 ........ 101
PM - WANI ........ 102
ஆத்ம நிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா ........ 102
நேர்மறை செலுத்து முறை ........ 102
தானியங்கி வங்கிப் பணச் செயல்பாட்டு மையம் ........ 103
பீம் தளம்........ 103
அலைக்கற்றை ஏலம்........ 103
நிதியியல் நிலைப்புத் தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் 23வது சந்திப்பு........ 104
ஒழுங்குமுறை ஆய்வுப் பெட்டி........ 104
17வது தொழில் செய்வதற்கு உகந்த நாடுகள் அறிக்கை........ 104
உலகின் 6வது மிகப்பெரிய பொருளாதாரம் ........ 105
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ........ 105

**ஹுவாலாங் ஒன்** ........ **105**
**MQ-9B ஆளில்லா விமானம்** ........ **106**
**ஹயபூசா 2 விண்கலம்** ........ **106**
**வறண்ட சுருட்டப்பட்ட பஞ்சு கொண்ட நேரடி ஆர்டி-பிசிஆர் முறை** ........ **107**
**கர்நாடகாவில் கடல் ஒளிர்வி பூத்தல்** ........ **107**
**நீல அலை நிகழ்வு** ........ **108**
**வரிக்குதிரை வகை மீன் மரபணு** ........ **108**
**உலகின் மிகச்சிறிய  நினைவகச் சாதனம்** ........ **108**
**பிரம்மோஸ் மீயொலி வேக ஏவுகணை** ........ **108**
**டமாரு அடிப்படையிலான வலையமைப்பு** ........ **109**
**பாதுகாப்பு புவித் தகவல் ஆராய்ச்சி அமைப்பு** ........ **109**
**C32 LH2 உந்து விசைத் தொட்டி** ........ **109**
**ஆஸ்திரேலியாவின் சதுரக் கிலோமீட்டர் தொகுப்புப் பாதை கண்டுபிடிப்பான் (ASKAP)** ........ **110**
**குவாண்டம் மேலாதிக்கம்** ........ **110**
**எச்எல்-2எம் டோகாமாக் அணுஉலை** ........ **110**
**சாங்’இ திட்டம்** ........ **111**
**5G NR - புதிய வானொலி** ........ **111**
**காற்றிலிருந்து நீர்** ........ **112**
**குறுகிய பட்டை இணையப் பொருட்கள் அமைப்பு** ........ **112**
**தரவுப் பேச்சற்ற கேட்பொலி** ........ **112**
**குவாண்டம் பாதுகாப்பு தகவல் பகிர்ந்தளிப்பு** ........ **113**
**அங்காரா A5** ........ **113**
**திட்டம் 17A என்பதின் ஹிம்கிரி** ........ **113**
**HGC019 தடுப்பூசி** ........ **114**
**GECAM பணி** ........ **114**
**S-400 டிரைம்ஃப்** ........ **114**
**ஜெமினிட்ஸ் விண்கற்கள் பொழிவு** ........ **115**
**சிம்எஸ்-01 செயற்கைக்கோள்** ........ **116**
**லூன் திட்டம்** ........ **117**
**எரிக்சன் கைபேசி அறிக்கை** ........ **117**
**சாங்க்’இ  5 (Chang’e 5)** ........ **118**
**நேர்கோட்டில் சனி மற்றும் வியாழன் கோள்கள் சேர்க்கை** ........ **118**
**குளிர் காலத்தின் நீண்ட இரவு நாள்** ........ **119**
**வெளிக் கிரகத்திலிருந்து முதல் சாத்தியமான வானொலி சமிக்ஞை** ........ **119**
**ஐநூறு மீட்டர் துளை கோள வடிவத் தொலைநோக்கி** ........ **119**
**ஐ.ஐ.டி-தில்லியின் ‘போலி முட்டைகள்’** ........ **120**
**நடுத்தர வரம்பு கொண்ட நிலத்திலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணை** ........ **120**
**நாக்லேரியா பௌலேரி** ........ **121**
**போர்டுலாகா லால்ஜி** ........ **121**
**பசுமை உந்துவிசைத் தொழில்நுட்பம்** ........ **122**
**நிமோனியா தடுப்பூசி** ........ **122**
**சுற்றுச்சூழல் செய்திகள்** ........ **123**

சாங் அணை குடிநீர் திட்டம் – உத்தரகாண்ட் ... 123
கிழக்குத் தொடர்ச்சி மலையில் புதிய பல்லி வகை ... 123
அமெரிக்கக் காற்றுத் தரக் குறியீடு ... 123
இந்தியாவின் தடை செய்யப்பட்ட கெளுத்தி மீன் ... 123
குஜராத்தில் சிறுத்தைகளுக்கான தனியார் பாதுகாப்பு ... 124
இடம்பெயரும் பறவைகள் விழா ... 124
மாசுபாடு குறித்த மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் – தில்லி ஐஐடியின் ஆய்வு ... 124
காலநிலை அவசரநிலை ... 125
பெரிய மலேயன் அணில் ... 125
அம்மோனியாவின் முக்கியப் பகுதி ... 125
கென்-பெட்வா நதிநீர் இணைப்புத் திட்டம் ... 126
ராய்மோனா தேசியப் பூங்கா ... 126
பெரிய ஆப்பிரிக்க நத்தை ஊடுருவல் (ஆக்கிரமிப்பு) ... 126
இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் உலகப் பாரம்பரியக் கண்ணோட்டம் - 3 127
புதிய மிருகக்காட்சிச் சாலைகள் ... 127
மகாராஷ்டிராவின் புதிய வனவிலங்குச் சரணாலயம் ... 127
காலநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு ... 128
நுண்-காலநிலை மாற்றம் அடைதல் ... 128
உமிழ்வுகள் இடைவெளி அறிக்கை 2020 ... 129
கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வுகள் (CO2) வீழ்ச்சி ... 129
காலநிலை உயர் இலட்சிய மாநாடு 2020 ... 129
மைரிஸ்டிக்கா சதுப்பு நில மரத் தவளை ... 130
2020 புவியின் சாதனையாளர்கள் விருது ... 130
பூமியின் இளம் சாதனையாளர்கள் பரிசு 2020 ... 131
முரைனா புல் ... 132
கட்ச் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திப் பூங்கா ... 132
இமய மலை செரோ (மலை ஆடு) ... 132
இந்திய வெட்டுக் கிளிகள் – சிவப்புப் பட்டியல் ... 132
R தொகுப்பு ... 133
ஐஎஸ்ஓ 9001:2015 தரச் சான்றிதழைப் பெற்ற முதலாவது விலங்கியல் பூங்கா ... 133
2020 ஆம் ஆண்டின் கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத்திற்கான உலகளாவிய நிலை குறித்த அறிக்கை ... 134
12வது கிரிகா மாநாடு – புது தில்லி ... 134
புதுப்பிக்கப்பட்ட ஐயூசின் (IUCN) சிவப்புப் பட்டியல் ... 134
கானமயில் (GIB) ... 135
E20 எரிபொருள் ... 135
சிறுத்தைகளின் நிலை மீதான அறிக்கை - 2018 ... 136
இந்திய சுறா மீன்கள் குறித்த ஆய்வு ... 137
நீலத் திமிங்கலங்களின் எண்ணிக்கை ... 137
லடாக்கின் சோ கர் ஈரநிலப் பகுதி ... 137
குரங்குகளுக்கான மறுவாழ்வு மையம் ... 138
பேசல் ஒப்பந்தம் ... 139
2020 ஆம் ஆண்டின் மத்திய தரைக்கடல் மற்றும் கருங்கடலில் மீன்வள நிலை ... 139

பசுமை தேசிய நெடுஞ்சாலைப் பெருவழிப் பாதை ........ 140
மாநிலச் செய்திகள் ........ 140
இருவாய்ச்சி பறவைத் திருவிழா ........ 140
துவாரே சர்க்கார் ........ 141
அருணாச்சல மாநிலத்தின் பசலிப்பழம் (கிவி) ........ 141
குடியிருப்புப் பகுதிகளின் மீதான மறுபெயரிடுதல் ........ 141
சுவஸ்திய சாத்தி சுகாதாரத் திட்டம் ........ 142
எலுரு மர்ம நோய் ........ 142
மகாசரத் ........ 142
போடோ மொழி ........ 142
ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி – ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY) செகாத் (SEHAT) ........ 142
முதலாவது வெப்பக் காற்று பலூன் சவாரி ........ 143
8 வது வடகிழக்குத் திருவிழா ........ 143
பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள் ........ 144
பக்கிர் சந்த் கோஹ்லி – மறைவு ........ 144
உலகளாவிய ஆசிரியர் பரிசு, 2020. ........ 144
இரவீந்திரநாத் தாகூர் இலக்கிய விருது – 2020 ........ 144
2020 ஆம் ஆண்டின் இளம் கணிதவியலாளர்களுக்கான ராமானுஜர் விருது ........ 145
படைத் தலைவர் பிரீத்திபால் சிங் கில் ........ 145
2020 ஆம் ஆண்டின் சமூகத் தொழில்முனைவோர் விருது ........ 145
The Presidential Years ........ 146
ஹிந்த் கேசரி ........ 146
100 மிகவும் சக்தி வாய்ந்த பெண்களின் போர்ப்ஸ் 2020 பட்டியல் ........ 147
தங்க மயில் சுற்றுச்சூழல் மேலாண்மை விருது ........ 147
சுகதாகுமாரி மறைவு ........ 148
கைலாஷ் சத்யார்த்தியின் ஒரு புதிய புத்தகம் ........ 148
ஜெய்ராம் ரமேஷ் புத்தகம் ........ 148
விளையாட்டுச் செய்திகள் ........ 149
2020 ஆம் ஆண்டிற்கான பிபாவின் இறுதித் தரவரிசை ........ 149
இந்திய விளையாட்டு விருதுகள் 2020 ........ 149
15வது ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை ........ 149
பிபா கால்பந்து விருதுகள் 2020 ........ 149
டென்னிஸ் விருதுகள் - 2020 ........ 150
2020 ஆம் ஆண்டிற்கான சர்வதேச ஹாக்கிக் கூட்டமைப்புத் தரவரிசைகள் ........ 150
கொலோன் குத்துச்சண்டை உலகக் கோப்பை ........ 151
கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு 2021 ........ 151
தசாப்தத்தின் ஐ.சி.சி அணிகள் ........ 152
2021 கால்பந்து உலகக் கோப்பை ........ 152
முக்கிய தினங்கள் ........ 153
உலக எய்ட்ஸ் தினம் – டிசம்பர் 01 ........ 153
உலகக் கணினி எழுத்தறிவு நாள் - டிசம்பர் 02 ........ 153
தேசிய மாசுக் கட்டுப்பாட்டு நாள் - டிசம்பர் 02 ........ 154
அடிமைத் தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச நாள் - டிசம்பர் 02 ........ 154

மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச நாள் - டிசம்பர் 03 ........ 154
56வது எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) எழுச்சி தினம் – டிசம்பர் 01 ........ 155
வங்கிகளுக்கான சர்வதேச நாள் - டிசம்பர் 04 ........ 155
உலக மண் தினம் - டிசம்பர் 05 ........ 155
பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கான சர்வதேச தன்னார்வ தினம் - டிசம்பர் 05 ........ 156
இந்தியக் கடற்படை தினம் – டிசம்பர் 04 ........ 156
மகாபரிநிர்வாண் திவாஸ் - டிசம்பர் 06 ........ 157
ஆயுதப் படைகள் கொடி தினம் – டிசம்பர் 07 ........ 157
சர்வதேசப் பயணியர் விமானப் போக்குவரத்து தினம் – டிசம்பர் 07 ........ 158
சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் – டிசம்பர் 09 ........ 158
மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10 ........ 158
சர்வதேச விலங்கு உரிமைகள் தினம் - டிசம்பர் 10 ........ 159
சர்வதேச யுனிசெஃப் தினம் - டிசம்பர் 11 ........ 159
36வது SAARC சாசன நாள் - டிசம்பர் 08 ........ 159
பன்னாட்டு மலைகள் நாள் - டிசம்பர் 11 ........ 159
சர்வதேச நடுநிலைமை நாள் - டிசம்பர் 12 ........ 160
சர்வதேச உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு நாள் - டிசம்பர் 12 ........ 160
தேசிய ஆற்றல் பாதுகாப்பு தினம் – டிசம்பர் 14 ........ 161
சுவர்னிம் விஜய் மஷால் – டிசம்பர் 16 ........ 161
பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் – டிசம்பர் 17 ........ 161
சர்வதேசப் புலம்பெயர்ந்தோர் தினம் – டிசம்பர் 18 ........ 162
49வது விஜய் திவாஸ் – டிசம்பர் 16 ........ 162
சர்வதேச தேநீர் தினம் - டிசம்பர் 15 ........ 163
உலக அரபு மொழி நாள் - டிசம்பர் 18 ........ 163
சிறுபான்மையினர் உரிமைகள் நாள் - டிசம்பர் 18 ........ 164
கோவா விடுதலை நாள் - டிசம்பர் 19 ........ 164
சர்வதேச மனித ஒற்றுமை தினம் – டிசம்பர் 20 ........ 165
தேசியக் கணிதவியல் தினம் – டிசம்பர் 22 ........ 165
தேசிய விவசாயிகள் தினம் (கிசான் திவாஸ்) - டிசம்பர் 23 ........ 166
தேசிய நுகர்வோர் தினம் - டிசம்பர் 24 ........ 167
நல் ஆளுகை தினம் - டிசம்பர் 25 ........ 168

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநிலமானது தொடர்ந்து 6வது முறையாக உறுப்பு தானத்தில் சிறந்த மாநிலம் என்ற விருதைப் பெற்றுள்ளது.
- சமீபத்தில், மகாராஷ்டிர மாநில அரசானது மும்பையில் நீர் சுத்திகரிப்பு (உப்பு நீக்கம்) ஆலையை அமைக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.
  - தமிழ்நாடு, குஜராத், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்குப் பிறகு நீர் சுத்திகரிப்பு ஆலையைத் தொடங்கும் 4வது மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- 11வது தேசிய உறுப்பு தான தினமானது 2020 ஆம் ஆண்டு நவம்பர் 27 அன்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தினால் அனுசரிக்கப்பட்டது.
- ரஷ்யாவானது ஸிர்கோன் என்ற ஒரு மீயொலி வேக ஏவுகணையை ஆர்க்டிக் பகுதியில் வெற்றிகரமாக சோதித்துப் பார்த்தது.
  - இந்த ஏவுகணையானது மாக் 8 வேகத்தில் வெள்ளைக் கடலிலிருந்து பேரண்ட்ஸ் கடல் பகுதிக்கு ஏவப்பட்டது.
- பூடான் நாடானது ஜெர்மனியுடன் ராஜாங்க உறவுகளைத் தொடங்கி உள்ளதாக அறிவித்துள்ளது.
  - கடந்த 7 ஆண்டுகளில் பூடான் பேரரசின் முதலாவது இராஜாங்க உறவுமுறை இதுவாகும்.
- மாதவிடாய் சுகாதாரத் துணிகள், உறி பஞ்சுகள் ஆகியவற்றை இலவசமாக வழங்கும் உலகின் முதலாவது நாடு ஸ்காட்லாந்து ஆகும்.
  - மாதவிடாய் காலப் பொருள்களுக்கு ஏற்படும் தட்டுப்பாட்டிற்கு எதிராக உலகில் இது போன்ற நடவடிக்கையை எடுத்திருக்கும் முதலாவது நாடு ஸ்காட்லாந்து ஆகும்.
- நியூஸிலாந்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினரான டாக்டர் கௌரவ் சர்மா அவர்கள் அயல்நாட்டில் சமஸ்கிருத மொழியில் பதவிப் பிரமாணம் எடுத்த முதலாவது இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாராளுமன்றவாதி என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
  - இவர் முதலில் நியூசிலாந்தின் பூர்வாங்க மொழியான மௌரி என்ற மொழியிலும் அதன் பின்னர் சமஸ்கிருத மொழியிலும் பதவிப் பிரமாணம் எடுத்துள்ளார்.
- சமீபத்தில் நிலக்கரியிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் முதலாவது மற்றும் கடைசி அரபு நாடாக ஐக்கிய அரபு அமீரகம் உருவெடுத்துள்ளது.
  - பெரும்பாலான வளைகுடா நாடுகள் அதிக அளவு எண்ணெய் மற்றும் இயற்கை வளங்களைப் பெற்றுள்ளதால் தங்களின் மின்சாரத் தேவைகளை எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தி ஆலைகளைக் கொண்டு பூர்த்தி செய்து கொள்கின்றன.
- மத்திய அரசின் நிதிப் பற்றாக்குறையானது தற்போதைய நிதியாண்டில் அக்டோபர் மாதத்தின் முடிவில் வருடாந்திர நிதிநிலைக் கணிப்பில் ஏறத்தாழ 120% அல்லது ரூ 9.53 இலட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.
- ரோசர்பே ஆனது கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட புதிய தொழில் தொடக்க நிறுவனங்கள் மற்றும் சிறுகுறு தொழில் நிறுவனங்களின் நிதியியல் செயல்பாடுகளைச் சமநிலைப்படுத்தி அவற்றுக்கு நிவாரணம் அளிப்பதற்காக வேண்டி இந்தியாவின் முதலாவது பெருநிறுவன கடன் அட்டைகளை வழங்கியுள்ளது.
- ஈரானிய விஞ்ஞானியான மோக்சென் பஹ்ரிசாடெக் என்பவர் ஈரானின் அப்சார்டு நகரில் படுகொலை செய்யப் பட்டார்.

- கீத் கோம்ஸ் என்பவர் இயக்கிய ஷேம்லெஸ் எனும் ஒரு குறும்படமானது 93வது ஆஸ்கர் விருதுகள் அல்லது அகாடமி விருதுகளின் குறும்படப் பிரிவில் போட்டியிட இந்தியாவால் அதிகாரப் பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது.
- அயோத்தி விமான நிலையத்தை மரியாதை புருஷோத்தம் ஸ்ரீ ராம் விமான நிலையம் என மறுபெயரிடுவதற்கான யோசனைக்கு உத்தரப் பிரதேச மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
  - இந்த முன்மொழிவு அந்த மாநிலச் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பின்னர் பயணியர் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு அனுப்பப் படும்.
- லடாக்கானது லே பகுதியில் உள்ள இந்திய விமானப் படை நிலையத்தில் அதிக உயரத்தில் ஒரு மிகப்பெரிய சூரிய ஒளி மின்சக்தி உற்பத்தி திட்ட அமைப்பைப் பெற்றுள்ளது.
- இந்தியாவில் உள்ள ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் ஆக்ஸிலரேட்டர் ஆய்வுக் கூடமானது (Accelerator Lab) சமூக மட்டத்தில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை வளர்ப்பதற்காக கடைமட்டப் புத்தாக்கத் தரவுதளத்தை (Grassroot Innovation Database) அறிமுகப்படுத்தி உள்ளது.
  - இது Grassroots Innovation Augmentation Network, ஹனி பீ நெட்வொர்க் நிறுவனம் மற்றும் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் இந்திய ஆக்ஸிலரேட்டர் ஆய்வுக் கூடம் ஆகியவற்றால் பொதுப் பயன்பாட்டிற்காக உருவாக்கப் பட்டு உள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் லக்னோ பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு நிறுவன தினத்தினை முன்னிட்டு ஒரு நினைவு நாணயத்தை வெளியிட்டுள்ளார்.
  - இது 1920 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- சமீபத்தில் கிழக்கு இந்தோனேசியாவில் அமைந்துள்ள ஒரு எரிமலையான இலி லெவோடோலோக் என்ற எரிமலையானது வெடித்துச் சிதறியது.
  - ஜாவா தீவில் உள்ள மெராபி மற்றும் சுமத்ரா தீவில் உள்ள சினாபங் ஆகியவற்றுடன் சேர்த்து இந்தோனேஷியாவில் தற்பொழுது வெடித்துக் கொண்டு இருக்கும் 3 எரிமலைகளில் இதுவும் ஒன்றாகும்.
- மெரியம்-வெப்ஸ்டர் அகராதியால் 2020 ஆம் ஆண்டின் சிறந்த வார்த்தையாக 'பாண்டமிக்' (Pandemic – நோய்த் தொற்று) என்ற சொல் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- "உலகின் மிகத் தனிமையான யானை" காவன் (36) பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமாபாத் மிருகக் காட்சி சாலையில் இருந்து கம்போடிய நாட்டுச் சரணாலயத்தில் ஓய்வு பெறுவதற்காக வேண்டி தனது பயணத்தைத் தொடங்கி உள்ளது.
  - காவன் ஆனது பாகிஸ்தானில் உள்ள ஒரே ஒரு ஆசிய யானையாகும்.
- ஒருண்டோய் என்ற ஒரு திட்டமானது அசாம் அரசால் தொடங்கப்பட உள்ளது.
  - இந்தத் திட்டத்தின் மூலம், பெண்கள் மேம்பாட்டிற்காக ஒவ்வொரு மாதமும் குறைந்த பட்சம் ரூ.830 என்ற தொகையை நேரடியாக அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு மாற்ற அந்த மாநில அரசாங்கம் முயல்கிறது.
- பிரிட்டிஷ் அகாடமி ஆஃப் ஃபிலிம் அண்ட் டெலிவிஷன் ஆர்ட்ஸின் (BAFTA) திருப்புமுனை என்ற முன்னெடுப்பின் (Breakthrough Initiative) தூதராக ஏ.ஆர்.ரஹ்மான் அறிவிக்கப் பட்டு உள்ளார்.
  - நெட்ஃபிலிக்ஸ் ஆதரிக்கும் இந்த முயற்சியானது, இந்தியாவில் திரைப்படம், விளையாட்டுகள் அல்லது தொலைக்காட்சியில் நிலவி வரும் ஐந்து திறமைகளை அடையாளம் காண்பது, கொண்டாடுவது மற்றும் அவற்றை ஆதரிப்பதை

நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஆசிய அபிவிருத்தி வங்கியானது 'ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய ஒத்துழைப்பின் எதிர்காலம்' என்ற ஒரு புதிய புத்தகத்தை வெளியிட்டுள்ளது.
- இந்தியாவின் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது ஐசிஐசிஐ லோம்பார்டு பொதுக் காப்பீட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படும் பாரதி ஏஎக்ஸ்ஏ பொதுக் காப்பீட்டு நிறுவனத்தின் கையகப்படுத்தலுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் 110 வேளாண் தொழிலாளர்கள் கொல்லப் பட்டதற்காக போகோ ஹராம் ஜிகாதிஸ்ட் தீவிரவாதிகள் மீது குற்றம் சுமத்தப் பட்டு உள்ளது.
- உத்தரகாண்ட் மாநிலமானது கலாதுங்கி-நைனிடால் என்ற நெடுஞ்சாலையின் குறுக்கே தனது முதலாவது சுற்றுச்சூழல் சார் பாலத்தைக் கட்டமைக்கின்றது.
  - இந்தப் பாலமானது மூங்கில், புல் மற்றும் கயிறு போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களால் முழுவதும் கட்டமைக்கப்பட்டு இருக்கின்றது.
- இராஜஸ்தான் முதல்வரான அசோக் கெலாட் அவர்கள் நாட்டின் முதலாவது உறுப்பு தான நினைவகத்தை ஜெய்ப்பூரில் திறந்து வைத்தார்.
- பேட்டா நிறுவனத்தின் உலகளாவிய தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப் பட்ட முதலாவது இந்தியராக சந்தீப் கட்டாரியா என்பவர் உருவெடுத்துள்ளார்.
- மக்களவையின் சபாநாயகரான ஓம் பிர்லா அவர்கள் மக்களவையின் பொதுச் செயலாளராக மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான உத்பல் குமார் சிங் என்பவரை கேபினட் செயலாளர் அந்தஸ்தில் நியமித்துள்ளார்.
  - மேலும் சபாநாயகர் அவர்கள் இந்தப் பதவியிலிருந்து விடைபெறும் சினேகலதா ஸ்ரீவத்சவா என்பவரை மக்களவையின் ஒரு கௌரவ அதிகாரியாகவும் நியமித்து உள்ளார்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) மன்ற நாட்டுத் தலைவர்களின் 19வது சந்திப்பில் பகிரப்பட்ட புத்த மதப் பாரம்பரியம் குறித்த ஒரு SCO ஆன்லைன் கண்காட்சியானது தொடங்கி வைக்கப் பட்டது.
  - இதே வகையைச் சேர்ந்த முதலாவது கண்காட்சி இதுவாகும்.
- இந்தியக் கிரிக்கெட் வீரரான விராட் கோலி ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டிகளில் 12,000 ரன்களை மிக விரைவாக (251 போட்டிகளில்) எட்டி சச்சின் டெண்டுல்கரால் நிகழ்த்தப்பட்டிருந்த சாதனையை முறியடித்துள்ளார்.
- சமீபத்தில் கர்நாடக மாநில உயர் நீதிமன்றமானது 18 வயது நிரம்பிய எந்தவொரு தனிநபரும் (வயது வந்தோர்) அவருடைய விருப்பத்தின் பேரில் திருமணம் செய்து கொள்வது அடிப்படை உரிமை என்றும் இது இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டு உள்ளது என்றும் கூறியுள்ளது.
  - இந்தத் தீர்ப்பானது நீதியரசர் S. சுஜாதா மற்றும் சச்சின் சங்கர் மகதும் ஆகியோரைக் கொண்ட ஒரு அமர்வினால் வழங்கப்பட்டுள்ளது.
- சீனா கடந்த 30 ஆண்டுகளில் தற்பொழுது முதல்முறையாக இந்தியாவிடமிருந்து அரிசியை இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது.
  - உலகின் மிகப்பெரிய அரிசி ஏற்றுமதியாளர் நாடு இந்தியா ஆகும். உலகின் மிகப்பெரிய அரிசி இறக்குமதியாளர் நாடு சீனா ஆகும்.
- ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்ட இறைச்சியை விற்பனைக்கு அனுமதிக்க இருக்கும் முதலாவது நாடு சிங்கப்பூர் ஆகும்.

  - இந்த இறைச்சியானது கோழிகளைக் கொல்லாமல் விலங்கு செல்களிலிருந்து உருவாக்கப்பட்டு இருக்கின்றது.

❖ தேசிய அறிவியல் திரைப்படத் திருவிழாவின் 10வது பதிப்பானது காணொலி வாயிலாக திரிபுராவில் நடத்தப் பட்டது.

  - இது திரிபுரா மாநில அரசு, இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பான விக்யான் பிரசார் ஆகியவற்றினால் கூட்டாக இணைந்து ஒருங்கிணைக்கப் படுகின்றது.

❖ மத்தியத் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகமானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் தேதி முதல் தரைவழி இணைப்பு தொலைபேசியிலிருந்து கைபேசிகளுக்கு அழைப்புகளை மேற்கொள்வதற்கு வேண்டி எண்களுக்கு முன்னால் 0 சேர்க்க வேண்டும் என்று கூறியுள்ளது.

❖ ஆந்திர மாநில சட்டமன்றமானது அம்மாநிலத்தில் இணையவழி விளையாட்டைத் தடை செய்யும் ஆந்திரப் பிரதேச விளையாட்டு (திருத்தம்) மசோதா 2020 (AP Gaming (Amendment) Bill) என்ற மசோதாவை நிறைவேற்றியுள்ளது.

❖ வாரணாசியின் அன்னபூர்ணா சிலையானது கனடாவிலிருந்து ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு மீண்டும் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட இருக்கின்றது.

❖ GIFT நகரத்தின் கட்டுப்பாட்டாளரான சர்வதேச நிதிச் சேவை மையங்கள் ஆணையமானது சர்வதேசக் காப்பீட்டு மேற்பார்வையாளர்கள் சங்கத்தின் உறுப்பினர் ஆகியுள்ளது.

  - GIFT ஆனது (Gujarat International Finance Tec City) இந்தியாவில் செயல்பாட்டு நிலையிலிருக்கும் முதல் ஸ்மார்ட் சிட்டி மற்றும் சர்வதேச நிதிச் சேவை மையமாகும்.

❖ சமீபத்தில் ரிசர்வ் வங்கியானது HDFC வங்கியை அதன் டிஜிட்டல் 2.0 என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டு இருந்த அனைத்து நடவடிக்கைகளையும் தற்காலிகமாக நிறுத்துமாறு கேட்டுக் கொண்டு உள்ளது.

❖ பிரதமர் அண்மையில் அகமதாபாத்தில் உள்ள ஜைடஸ் பயோடெக் பூங்கா, ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனம் மற்றும் புனேவில் உள்ள சீரம் இந்திய நிறுவனம் ஆகியவற்றுக்குச் சென்று தடுப்பூசி மேம்பாடு மற்றும் உற்பத்திச் செயல்முறைகளை ஆய்வு செய்தார்.

❖ புனேவில் உள்ள சீரம் இந்திய நிறுவனம் ஆக்ஸ்போர்டு-அஸ்ட்ரா ஜெனெகா உருவாக்கிய கோவிட் - 19 தடுப்பூசியான கோவிஷீல்டின் அதிக அளவிலான உற்பத்திக்குத் தேர்வு செய்யப் பட்டுள்ளது.

❖ சுபாஸ் சந்திரபோஸின் 125வது பிறந்த நாளை குறிக்கும் வகையில் கொல்கத்தாவின் மேஜர்ஹேட் பாலம் "ஜெய் ஹிந்த்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

  - 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இடிந்து விழுந்த பழைய பாலத்தின் இடத்தில் புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது.

❖ ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தைச் சேர்ந்த முதலாவது துரோணாச்சாரியா விருதைப் பெற்றவரான குல்தீப் ஹண்டோ அவர்கள் பிரதமரின் "ஃபிட் இந்தியா" என்ற பிரசாரத்தின் தூதுவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ சென்னை மெட்ரோ இரயிலானது அமெரிக்காவில் உள்ள உலகப் பாதுகாப்பு அமைப்பிடமிருந்து சர்வதேசப் பாதுகாப்பு விருது – 2020 என்ற விருதைப் பெற்றுள்ளது.

❖ உதய் சங்கர் என்பவர் 2020-21 ஆம் ஆண்டிற்கான இந்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறைக் கூட்டமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- இப்பதவியில் தற்பொழுது இருக்கும் சங்கீதா ரெட்டி என்பவருக்கு மாற்றாக இவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தொழில்சார் சொத்துரிமை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது இரு நாடுகளும் இணைய நெறிமுறை குறித்த சிறந்த நடைமுறைகள், அறிவு ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ள வழிவகை செய்கின்றது.

❖ ஓமன்-இந்தியா என்ற ஒரு தோழமைக் கூட்டமைப்பு அமைக்கப்படும் என்று ஓமன் அரசு அறிவித்துள்ளது.

- மேற்கு ஆசியாவில் ஓமனால் தொடங்கப்பட்ட இதே வகையைச் சேர்ந்த முதலாவது முன்னெடுப்பு இதுவாகும்.

❖ சிரோமணி அகாலி தளத்தின் ஆதரவாளர் மற்றும் பஞ்சாப்பின் முன்னாள் முதலவரான பிரகாஷ் சிங் பாதா அவர்கள் தனது பத்ம விபூஷன் விருதைத் திரும்ப ஒப்படைத்துள்ளார்.

❖ முகநூல் நிறுவனத்தினால் நிறுவப்பட்ட "லிப்ரா" என்ற மெய்நிகர் நாணயமானது "டெய்ம்" (Diem) என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.

- டெய்ம் என்பது "தினம்" என்பதைக் குறிக்கும் ஒரு இலத்தீன் சொல்லாகும்.

❖ வானியலில் தனது நட்சத்திரத் தொகுப்பு (விண்மீன் சார்ந்த) கண்டுபிடிப்புகளுக்காக என்று வெகுவாக அறியப்படும் பியூர்டோ ரிக்கோவின் மிகப்பெரிய ஆர்சிபோ தொலைநோக்கியானது வெடித்துச் சிதறியது.

- 1963 ஆம் ஆண்டில் கட்டமைக்கப்பட்ட இது உலகில் உள்ள 2வது மிகப்பெரிய ஒற்றை – குடை அமைப்பு கொண்ட ரேடியோ தொலைநோக்கியாகும்.

❖ நீதியரசர் முரளி சங்கர் குப்பு ராஜு மற்றும் அவருடைய மனைவி தமிழ்ச்செல்வி ஆகியோர் மதராஸ் உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளாகப் பொறுப்பேற்றனர்.

- இதற்கு முன்பு 2019 ஆம் ஆண்டில் நீதியரசர் விவேக் பூரி மற்றும் அவருடைய மனைவி அர்ச்சனா பூரி ஆகியோர் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகளாகப் பொறுப்பேற்றனர்.

❖ "பிக்செல்" என்ற ஸ்டார்ட் அப் நிறுவனம் மற்றும் நியூ ஸ்பேஸ் இந்தியா நிறுவனம் ஆகியவை இந்தியாவின் முதலாவது தனியார் தொலையுணர் செயற்கைக்கோளைச் செலுத்துவதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.

❖ 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 04 அன்று, சென்செக்ஸ் ஆனது முதன்முறையாக 45000 புள்ளிகளை எட்டியது.

❖ சமீபத்தில் இலட்சத் தீவின் நிர்வாகியான தினேஸ்வர் சர்மா அவர்கள் காலமானார்.

❖ 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 04 அன்று வருவாய் நுண்ணறிவு இயக்குநரகத்தின் நிறுவன தினமானது அனுசரிக்கப் பட்டது.

- இந்த அனுசரிப்பின் போது, மத்திய நிதித் துறை அமைச்சரான நிர்மலா சீதாராமன் அவர்கள் "இந்தியாவில் கடத்தல் – 2019/20" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டார்.

❖ திருநர் குழந்தைகளுக்கான இந்தியாவின் முதலாவது குழந்தைகள் இல்லமானது விரைவில் பெங்களூரு நகரில் தொடங்கப் பட உள்ளது.

❖ ஐக்கியப் பேரரசானது உலகின் முதலாவது மாசுபட்ட காற்றினால் ஏற்படும் இறப்பு அல்லது சட்டப்பூர்வமாக சான்றளிக்கப்பட்ட காற்று மாசுபாட்டினால் ஏற்பட்ட ஒரு இறப்பைப் பதிவு செய்துள்ளது.

- பிரபல தமிழ்ப் புத்தக வெளியீட்டாளரான கிரியா ராமகிருஷ்ணன் அவர்கள் சமீபத்தில் சென்னையில் காலமானார்.
  - கிரியாவின் தற்போதைய தமிழ் அகராதி (தமிழ் - தமிழ் - ஆங்கிலம்) என்பதை வெளியிட்டதன் மூலம் அவர் மிகவும் பிரபலமானவர்.
- பிபிசியின் '2020 ஆம் ஆண்டின் 100 பெண்கள்' பட்டியலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 'Casteless Collective' என்ற இசைக்குழுவின் கானா பாடகர் இசைவாணி அவர்கள் இடம் பெற்றுள்ளார்.
  - தடகள வீரர் மனாசி ஜோஷி, காலநிலை ஆர்வலர் ரிதிமா பாண்டே மற்றும் போராட்டத் தலைவர் பில்கிஸ் பானோ ஆகியோர் இந்தப் பட்டியலில் உள்ள மற்ற இந்தியப் பெண்கள் ஆவர்.
- உலகில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் இந்தியா நான்காவது இடத்தில் உள்ளது.
- ஹைதராபாத்தைச் சேர்ந்த அகஸ்தியா ஜெய்ஸ்வால் என்பவர் இந்தியாவில் 14 வயதில் பட்டம் பெற்ற முதல் பட்டதாரி ஆவார்.
  - அவர் ஹைதராபாத்தின் உஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றார்.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் குஜராத்தின் ஜாம்நகர் மற்றும் ராஜஸ்தானின் ஜெய்ப்பூர் ஆகிய நகரங்களில் தலா ஒரு ஆயுர்வேத மருத்துவ நிறுவனங்களை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- சீரம் இந்திய நிறுவனத்தின் தலைமை நிர்வாகி அதார் பூனாவாலா அவர்கள் இந்த ஆண்டிற்கான சிறந்த ஆசிய மனிதர்கள் என்ற விருது வழங்கப்பட்ட 6 நபர்களில் ஒருவராவார்.
  - இந்த விருதானது சிங்கப்பூர் தினசரிப் பத்திரிக்கையான ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் என்ற பத்திரிகையால் வழங்கப் பட்டுள்ளது.
- சமீபத்தில் சீனாவானது கொடிய வறுமையை ஒழிப்பதற்கான தனது 8 ஆண்டு காலத் திட்டத்தில் வெற்றி பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது.
- சமீபத்தில் மத்திய அரசானது கேரளாவில் உள்ள ராஜீவ் காந்தி உயிரித் தொழில்நுட்ப மையத்தின் 2வது வளாகத்திற்கு எம்எஸ் கோல்வால்கர் என்ற ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கத்தினுடைய கருத்தாக்கம் கொண்டவரின் நினைவாக மறுபெயரிட்டுள்ளது.
- ஆக்ரா மெட்ரோ ரயில் திட்டத்தின் கட்டுமானப் பணியானது பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப் பட்டது.
- ஜெகன் தருவாலா என்பவர் பஹ்ரைனில் நடைபெற்ற சாஹிர் கிராண்ட் பிரிக்ஸின் பார்முலா 2 என்ற பந்தயத்தில் வெற்றி பெற்ற முதலாவது இந்தியர் என்ற ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார்.
- HCL தொழில்நுட்ப நிறுவனத்தைச் சேர்ந்த ரோஷிணி நாடார் மல்கோத்ரா அவர்கள் ஹரூன் என்ற நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஒரு உலகளாவிய செல்வந்தர்கள் பட்டியலில் நாட்டில் உள்ள பணக்காரப் பெண்மணிகள் என்ற வரிசையில் முதலிடத்தைப் பிடித்து உள்ளார்.
  - இவருக்கு அடுத்து பயோகான் நிறுவனத்தைச் சேர்ந்த கிரண் மஜூம்தார் ஷா அவர்கள் அடுத்த இடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளார்.
- ஜப்பான் 2021 ஆம் ஆண்டில் 7 அணிகள் பங்கேற்கும் பிஃபா உலகக் கோப்பையை நடத்த உள்ளது.
- செங்கடலில் உள்ள ஆமைகளானது கடல் வெப்பநிலையின் காரணமாக பெண்பாலாக மாறி வருகின்றது.

- "இணைய வழிக் குற்றங்களின் மறைமுக விளைவுகள்" என்ற ஒரு உலக அறிக்கையானது மெக்கபி (McAfee) என்ற ஒரு நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்டு உள்ளது.
- உலக சாதனைப் படைத்தவர்களாக மோன்டோ டியூபிளான்டிஸ் (சுவீடன்) மற்றும் யுலிமர் ரோஜாஸ் (வெனிசுலா) ஆகியோர் உலக ஆண் மற்றும் பெண் தடகள வீரர்களாகப் பெயரிடப் பட்டுள்ளனர்.
- உத்தரப் பிரதேசத்தில் லக்னோ-வாரணாசி இரயில் பிரிவில் அமைந்துள்ள தண்டுப்பூர் என்ற ஒரு இரயில் நிலையமானது மா பாராகி தேவி தாம் என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த உலக சுகாதார வல்லுநரான அணில் கோனி என்பவர் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள உலக சுகாதார அமைப்பு என்ற ஒரு அறக்கட்டளையின் தொடக்கத் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- சிக்கிம் மாநிலத்திற்குப் பிறகு 100% கரிம வேளாண்மையை அடைந்த முதலாவது ஒன்றியப் பிரதேசம் இலட்சத் தீவு ஆகும்.
- இந்திய இரயில்வேயானது தில்லி-வாரணாசி அதிவேக இரயில் பெருவழிப் பாதைக்கான நில ஆய்விற்கு லிடார் என்ற தொழில்நுட்பத்தைப் (LiDAR technique) பயன்படுத்த உள்ளது.
    - லிடார் என்பது ஒளியைக் கண்டறிதல் மற்றும் வரம்புத் தொழில்நுட்பம் (Light Detection and Ranging technique) என்பதைக் குறிக்கின்றது.
- சமீபத்தில் அமெரிக்காவின் தேசிய அறிவியல் நிறுவனமானது நுண்ணலைக் கதிர்வீச்சு என்பது மர்மமான நரம்பியல் குறைபாடான "ஹவானா" என்ற ஒரு குறைபாட்டிற்கு முக்கியக் காரணம் என்பதைக் கண்டறிந்துள்ளது.
    - ஹவானா என்ற ஒரு குறைபாடானது கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக சீனா, கியூபா, மற்றும் இதர நாடுகளில் உள்ள அமெரிக்க இராஜாங்க அதிகாரிகள் மற்றும் நுண்ணறிவுப் பிரிவு அதிகாரிகளைத் தாக்கத் தொடங்கியுள்ளது.
- சமீபத்தில் "கண்ணாடியிழையின் தந்தை" எனப்படும் நரேந்திர சிங் கபானி (94) என்பவர் அமெரிக்காவில் காலமானார்.
    - 1954 ஆம் ஆண்டில் கண்ணாடியிழையின் மூலம் படங்களைப் பரிமாறியதில் இவர் முதலாமானவர் ஆவார்.
- இனப் படுகொலையைத் தடுத்தல், அதனால் பாதிக்கப்பட்டவர்களின் கௌரவம் மற்றும் அனுசரிப்பு மீதான சர்வதேச தினமானது டிசம்பர் 09 அன்று அனுசரிக்கப் பட்டது.
    - இதே தினம் மனித உரிமைகள் தொடர்பான முதலாவது ஒப்பந்தமான "இனப் படுகொலை ஒப்பந்தம்" எனப்படும் இனப் படுகொலைக் குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல் குறித்த 1948 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் நினைவைக் குறிக்கின்றது.
- மேற்கு வங்கமானது தாஜ்பூரில் தனது முதலாவது ஆழ்கடல் துறைமுகத்தின் கட்டுமானத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - ஆழ்கடல் துறைமுகமானது மிகப்பெரிய மற்றும் அதிக எடை ஏற்றப்பட்ட கப்பல்களின் பயன்பாட்டிற்காக என்று பொதுவாக ஏற்படுத்தப் படுகின்றது.
- கோவிட் – 19 நோய்த் தொற்றுக்கு எதிராக தங்கள் உயிரைப் பணயம் வைத்து அதை எதிர்த்துப் போராடும் மருத்துவர்கள், செவிலியர்கள், மளிகைக் கடைப் பணியாளர்கள், பொருட்களை வீடுகளுக்கேச் சென்று வழங்குபவர்கள் போன்ற அத்தியாவசியப் பணியாளர்கள் டைம் பத்திரிக்கையின் இந்த ஆண்டின் நபர்களுக்கான விருதினை வென்றுள்ளனர்.

- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 08 அன்று, இந்தியக் கடற்படையானது ஐஎன்எஸ் கல்வாரி என்ற கப்பலின் மீது கடற்படைக் கொடியானது முதன்முறையாக ஏற்றப் பட்டதை அனுசரிப்பதற்காக 53வது நீர்மூழ்கி தினமானது அனுசரிக்கப் பட்டது.
- சர்வதேச கடல்சார் அமைப்பானது NavIC அமைப்பை உலகளாவிய ரேடியோ கண்காணிப்பு அமைப்பின் ஓர் அங்கமாக அங்கீகரித்துள்ளது.
- இன்டர்போலின் தெற்காசியப் பிரிவில் இருந்து 'கிராலர்' என்ற ஒரு மென்பொருளை வாங்கிய இந்தியாவின் முதல் நிறுவனமாக மகாராஷ்டிர மாநில சைபர் துறை உருவெடுத்துள்ளது.
  - இந்த மென்பொருள் நாடு முழுவதும் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிராக, அரசின் நடவடிக்கையான ஆபரேஷன் பிளாக்ஃபேஸ் (Operation Blackface) என்ற ஒரு நடவடிக்கையில் பயன்படுத்தப் படும்.
- கடலுக்கடியில், கொச்சி மற்றும் லட்சத்தீவு பகுதிகளை ஒளியிழை கம்பி வடம் (Optical Fibre Cable) மூலம் இணைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியக் கிரிக்கெட் வீரரான விராட் கோலி அவர்கள் சமீபத்தில் ரோஹித் சர்மாவால் நிகழ்த்தப்பட்ட 20 ஓவர் கிரிக்கெட் போட்டிகளில் அதிக அளவில் 50 ரன்கள் எடுத்த சாதனையைச் சமன் செய்துள்ளார்.
- இந்தியக் கடற்படையானது ஆளில்லா குட்டி விமானங்களைக் கையாளுவதற்காக இஸ்ரேலின் 'ஸ்மாஷ் 2000 பிளஸ்' என்ற அமைப்பை வாங்க உத்தரவிட்டுள்ளது.
- எழுத்தாளரான அமீஷ் திரிபாதி அவர்கள் தனது புதிய புனைக் கதைப் புத்தகமான "தர்மா : அர்த்தமுள்ள வாழ்விற்கான காவியங்களை குறிவிலக்கம் செய்தல்" (Dharma: Decoding the Epics for a Meaningful Life) என்ற ஒன்றை அறிவித்துள்ளார்.
- நீதியரசரான ராஜேஷ் பிண்டால் அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களால் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஒன்றியப் பிரதேசங்களுக்கான பொது உயர் நீதிமன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - அந்த உயர் நீதிமன்றத்தின் முதலாவது பெண் தலைமை நீதிபதியான கீதா மிட்டலின் ஓய்விற்குப் பிறகு இவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய இராணுவத்தில் உள்ள மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய நிர்வாகப் படைப் பிரிவான இராணுவப் படைப் பிரிவானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 08 அன்று இராணுவப் படைப் பிரிவின் 260வது படைப் பிரிவு தினத்தை அனுசரித்தது.
- இந்திய ரிசர்வ் வங்கியானது மகாராஷ்டிராவில் உள்ள கரட் ஜனதா சஹாகாரி என்ற வங்கியியல் நிறுவனத்தின் உரிமையை ரத்து செய்துள்ளது.
  - ஒரு வங்கியின் நிதியியல் நீர்மத்தின் போது, அதில் நிதி இருப்பு வைத்து உள்ளவர்கள் நிதி இருப்புக் காப்பீடு மற்றும் கடன் உத்தரவாதக் கழகத்திடமிருந்து ரூ.5 இலட்சம் வரை இருப்புத் தொகையை மீண்டும் பெற முடியும்.
- ஐக்கியப் பேரரசிற்குப் பிறகு தனது குடிமக்களுக்கு பைசர் நோய்த் தடுப்பு மருந்திற்கு ஒப்புதல் அளித்த இரண்டாவது நாடு கனடா ஆகும்.
- கர்நாடக மாநில சட்டசபையானது பசுவதை எதிர்ப்பு மசோதாவை நிறைவேற்றி உள்ளது.
  - இது அம்மாநிலத்தில் பசு வதையை முற்றிலும் தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 09 அன்று, பிஎஸ்இ சென்செக்ஸ் ஆனது முதன்முறையாக 46000க்கும் மேலான புள்ளிகளுடன் நிறைவு பெற்றது.
- ஷேக் சபாஹ் அல்-ஹாலித் அல்-சமாஹ் அவர்கள் குவைத் நாட்டின் 8வது பிரதமராக நியமிக்கப் பட்டுள்ளார்.

- இதற்கு முன்பு அப்பதவியில் இருந்த ஜாபெர் – அல் முபாரக் அல் ஹமத் அல்-சபாஹ் என்பவரது பதவி விலகலுக்குப் பிறகு இவர் நியமிக்கப் பட்டுள்ளார்.

❖ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரான நிதின் கட்கரி அவர்கள் பீகாரில் உள்ள சோன் நதியின் மீது கட்டப்பட்டுள்ள கோலிவர் பாலத்தைத் திறந்து வைத்தார்.

❖ ஆந்திரப் பிரதேச மாநில அரசானது அம்மாநிலத்தில் இந்தியாவின் மிகப்பெரிய நிலம் மற்றும் வீட்டு வசதி ஆய்வைத் தொடங்குவதற்காக இந்தியக் கள ஆய்வு நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

- இது "ஒய்எஸ்ஆர் ஜெகனன்னா சாஸ்வத பூமி ஹாக்கு-பூமி ரக்சனா" என்று பெயரிடப் பட்டுள்ளது.

❖ மோல்னுபிரவிர் என்ற மருந்தானது 24 மணி நேரத்தில் சார்ஸ்-கோவ்-2 (SARS-CoV-2) என்ற தொற்றின் பரவுதலைத் தடுக்கும் வகையில் செயல்படுவதைக் காட்டுகின்றது.

- SARS-CoV-2 தொற்று பரவுதலை விரைவாகத் தடுக்கும் வகையில் வாய் வழியாகச் செலுத்தப்படும் முதலாவது மருந்து இதுவாகும்.

❖ பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 12 அன்று இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறைக் கூட்டமைப்பின் 93வது வருடாந்திரப் பொது சந்திப்பு மற்றும் வருடாந்திர மாநாட்டில் தனது தொடக்க உரையை நிகழ்த்தினார்.

- இந்த வருடாந்திர மாநாட்டின் கருத்துரு, "ஊக்கம் பெற்ற இந்தியா" என்பதாகும்.

❖ ஆர்டெமிஸ் என்ற நிலவில் தரையிறங்கும் ஒரு திட்டத்திற்காக, இந்திய அமெரிக்கரான ராஜா ஜோன் வுர்புத்தூர் சாரி அவர்கள் 18 விண்வெளி வீரர்களில் ஒருவராக நாசாவினால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

- இந்தத் திட்டமானது 2024 ஆம் ஆண்டில் நிலவில் முதலில் பெண்ணையும் அடுத்து ஆண் ஒருவரையும் தரையிறங்க வைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ கேரளா சுகாதாரத் துறை அமைச்சர் சைலஜா அவர்கள் அம்மாநிலத்தில் "பிளாஸ்மோடியம் ஓவல்" எனப்படும் மலேரியாவின் புதிய மரபணு ஒன்று கண்டறியப் பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

❖ 2021 ஆம் ஆண்டின் ஜனவரி 26 அன்று புதுதில்லியில் நடைபெற உள்ள இந்தியக் குடியரசு தினக் கொண்டாட்டத்தில் தலைமை விருந்தினராக கலந்து கொள்ள இந்தியப் பிரதமரின் அழைப்பை இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் ஏற்றுக் கொண்டு உள்ளார்.

❖ 2022 ஆம் ஆண்டிற்கான ஐ.சி.சி மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியானது 2022 ஆம் ஆண்டில் நியூசிலாந்தில் நடைபெறும்.

❖ இந்தியாவிற்கும் வங்கதேசத்திற்கும் இடையிலான 'சுவாதிநாதா சரக்' என்ற ஒரு சாலையானது 2021 ஆம் ஆண்டு மார்ச் 26 அன்று திறக்கப் படும்.

- இந்தச் சாலையானது வங்கதேசத்தின் மெஹெர்பூர் மாவட்டத்தில் உள்ள முஜிப் நகர் வழியாக இந்தியாவை இணைக்கும்.

❖ ஐக்கிய அரபு அமீரகமானது தனது தலைநகரான அபுதாபியில் கோவிட் -19 தடுப்பூசிகளை அறிமுகப் படுத்தியுள்ளது.

- இந்த வளைகுடா நாடு உலகெங்கிலும் பரவலாக தடுப்பூசி போடத் தொடங்கிய நாடுகளில் ஒன்றாகும்.

❖ இந்தியா போஸ்ட் பணவழங்கீட்டு வங்கியும் அஞ்சல் துறையும் இணைந்து புதிய டிஜிட்டல் கட்டண பயன்பாட்டான 'டக்பே' என்ற வசதியை (DakPay) அறிமுகப் படுத்தி உள்ளது.

- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் கடத்தல் என்ற ஒரு அறிக்கையின்படி மிசோரமானது மியான்மரிலிருந்து மிக முக்கியமான போதைப் பொருட்கள் கடத்தல் வழிகளில் ஒன்றாக உருவெடுத்துள்ளது.
- சினிமாஸ்கோப் (CinemaSCOpe) என்பது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் உள்ள நாடுகளுக்காக இந்தியத் தூதரகத்தினால் பிரத்தியேகமாகத் தொடங்கப்பட்ட ஒரு திரைப்படத் தொடராகும்.
- சமீபத்தில் சர்வதேச ஒலிம்பிக் குழுவானது பிரேக் டான்சிங் (Breakdancing) எனும் ஒரு நடனத்தை அதிகாரப் பூர்வ ஒலிம்பிக் விளையாட்டாக உறுதி செய்துள்ளது.
  - இது 2024 ஆம் ஆண்டின் பாரிஸ் விளையாட்டுப் போட்டிகளில் சேர்க்கப்பட உள்ளது.
- சமீபத்தில் இந்திய இரயில்வேயானது மருத்துவமனை மேலாண்மைத் தகவல் முறைமை எனும் ஒரு அமைப்பைத் தொடங்கியுள்ளது.
  - இந்தத் திட்டத்தின் சோதனைப் பதிப்பானது தெற்கு மத்திய இரயில்வேயில் தொடங்கப் பட்டுள்ளது.
- சாக்சம் என்ற ஒரு கடலோர ரோந்துக் கப்பலானது கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தில் உருவாக்கப் பட்டு வருகின்றது.
  - முதலாவது மற்றும் கடைசி கடலோர ரோந்துக் கப்பல் இதுவேயாகும்.
- சமீபத்தில் அமெரிக்க செனட் சபையானது தேசியப் பாதுகாப்பு அதிகாரச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
  - இது இந்தியாவை அமெரிக்காவின் நேட்டோ கூட்டு நாடுகள் மற்றும் தென் கொரியா, இஸ்ரேல் போன்ற நாடுகளுக்கு இணையாகக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தீயணைப்புப் பாதுகாப்புச் சான்றளிப்புச் செயல்பாடுகளை நவீனப்படுத்துவதற்கான ஒரு அமைப்பிற்கு ஒப்புதல் வழங்கிய இந்தியாவின் முதலாவது மாநிலம் குஜராத் ஆகும்.
- மணிப்பூரைச் சேர்ந்த கங்கோம் பாலா தேவி என்பவர் தொழில்சார் ரீதியில் ஒரு ஐரோப்பியக் கால்பந்து லீக்கில் கோல் அடித்த முதலாவது இந்தியப் பெண்மணியாக சாதனை படைத்துள்ளார்.
  - இவர் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஸ்காட்லாந்து சங்கத்தில் இணைந்ததின் மூலம் தொழில்சார் ரீதியில் ஒரு அயல்நாட்டு கால்பந்து ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதலாவது இந்தியப் பெண்மணி ஆவார்.
- சமீபத்தில் பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் அவர்கள் காலநிலை மாற்றத்திற்கு எதிராக போராடுவதை பிரெஞ்சு அரசியலமைப்பில் சேர்க்க பொது வாக்கெடுப்பு ஒன்றை அறிவித்தார்.
- அமெரிக்காவில் கோவிட் -19 நோய்த் தடுப்பூசி பெற்ற முதல் நபர் சாண்ட்ரா லிண்ட்சே என்பவர் ஆவார்.
- இந்தியாவானது இமயமலைப் பகுதியில் பிராந்தியக் காலநிலை மையம் ஒன்றை நிறுவ உள்ளது.
  - இந்த மையம் இந்தியாவிற்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் சேர்த்து வானிலை தொடர்பான சேவைகளை வழங்கும்.
- மக்களவை சபாநாயகரான ஓம் பிர்லா அவர்கள் “The Shaurya Unbound - Tales of Valour of the Central Reserve Police Force” என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டார்.
  - இது 2001 ஆம் ஆண்டில் நிகழ்த்தப் பட்ட பாராளுமன்றத் தாக்குதல் பற்றிய ஒரு புத்தகமாகும்.

- நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரானது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக ரத்து செய்யப் படவுள்ளது.
  - இது மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சரான பிரல்ஹாத் ஜோஷி அவர்களால் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- இந்தியக் கடலோரப் பாதுகாப்புப் படையின் இடைமறிப்புப் படகானது குஜராத்தில் உள்ள ஹசிராவில் பணியில் சேர்க்கப்பட்டது.
- அமெரிக்கத் தேர்தல் குழுவானது 306 வாக்குகள் வழங்கி ஜோ பைடனின் வெற்றியை அதிகாரப் பூர்வமாக அறிவித்து உள்ளது.
- வங்க தேசமானது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 14 அன்று தியாகிகள் அறிவுசார் தினத்தை அனுசரித்தது.
  - இது 1971 ஆம் ஆண்டு வங்க தேசத்தில் நிகழ்ந்த இனப்படுகொலையைக் குறிப்பதற்காக அனுசரிக்கப் படுகின்றது.
- பாகிஸ்தான் நாடானது தனது புதிய சட்டத்தின் ஒரு பகுதியாக கற்பழிப்பாளர்களுக்கு மரண தண்டனை மற்றும் இரசாயன முறையில் ஆண்மை நீக்கம் ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- பிரதமர் மோடி 2021 ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் ஜி7 மாநாட்டில் கலந்து கொள்வதற்கான பிரிட்டனின் பிரதமரான போரிஸ் ஜான்சனின் அழைப்பை ஏற்றுக் கொண்டு உள்ளார்.
  - இந்த மாநாடானது ஐக்கியப் பேரரசினால் நடத்தப்பட உள்ளது.
- இந்தியா மற்றும் வங்க தேசத்திற்கு இடையிலான 55 ஆண்டு பழமையான சிலாகட்டி-ஹால்டிபாரி (மேற்கு வங்கம்) இரயில் இணைப்பானது தொடங்கி வைக்கப் பட்டுள்ளது.
  - இந்த இணைப்பானது 1965 ஆம் ஆண்டில் இந்தியா-பாகிஸ்தான் போரின் போது துண்டிக்கப் பட்டது.
- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்துறை அமைச்சரான நிதின் கட்கரி அவர்கள் ஊரகப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்காகவும் விவசாயிகளுக்கான கூடுதல் வருமானத்தை ஏற்படுத்துவதற்காகவும் வேண்டி "வேதம் சார்ந்த ஓவியத்தை" வெளியிட்டுள்ளார்.
  - மாட்டுச் சாணத்தினால் உருவாக்கப்படும் இந்த ஓவியமானது காதி மற்றும் கிராமத் தொழிற்துறை ஆணையத்தின் மூலம் விரைவில் வெளியிடப்பட உள்ளது.
- இந்தியாவானது உலக அளவில் நேர்மையான விளையாட்டுச் சூழலை உறுதிப்படுத்துவதற்காக உலக ஊக்க மருந்து எதிர்ப்பு ஆணையத்திற்கு 1 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியை வழங்க முடிவு செய்துள்ளது.
  - இந்தியாவினால் வழங்கப்படும் இந்தப் பங்களிப்பானது சவுதி அரேபியா, சீனா மற்றும் எகிப்து ஆகிய அரசுகளினால் வழங்கப்படும் பங்களிப்பை விட மிக உயர்ந்ததாகும்.
- பாகிஸ்தான் கிரிக்கெட் வீரரான முகமது அமீர் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து தனது ஓய்வை அறிவித்துள்ளார்.
- சான் சிட்ரோ என்ற ஒரு இயக்கமானது கியூபாவின் கலைப் பணிகளின் மீதான தணிக்கைக்கு எதிரான போராட்டமாக கியூபாவில் 2 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது.
- பிரசார் பாரதியின் தலைமைச் செயல் அதிகாரியான சசி சேகர் வேம்பதி அவர்கள் ஆசிய பசிபிக் ஒளிபரப்பு ஒன்றியத்தின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.

- ❖ சமீபத்தில் இந்திய அரசு மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவை நாட்டின் ஊரகக் கட்டமைப்பு மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றிற்கு ஆதரவு அளிப்பதற்காக 1 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- ❖ அமெரிக்க ஊடக ஆளுமை மற்றும் நிகழ்நேர தொலைக்காட்சிக் கலைஞரான கெய்லி ஜென்னர் என்பவர் போர்ப்ஸ் பத்திரிகையின் 2020 ஆம் ஆண்டின் அதிக ஊதியம் பெறும் ஆளுமையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- ❖ மத்திய விளையாட்டுத் துறை அமைச்சகமானது யோகாசனத்தை ஒரு போட்டித் தன்மை கொண்ட விளையாட்டாக அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்துள்ளது.
  - ○ சர்வதேச யோகாசன விளையாட்டுகள் கூட்டமைப்பானது யோகா குருவான பாபா ராம்தேவ் என்பவரின் கீழ் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அமைக்கப்பட்டது.
- ❖ கத்தாரின் தலைநகரான தோஹா ஆனது 2030 ஆம் ஆண்டின் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் என்றும் சவுதி அரேபியாவின் தலைநகரான ரியாத் ஆனது 2034 ஆம் ஆண்டின் ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் என்றும் ஆசியாவின் ஒலிம்பிக் ஆணையமானது அறிவித்துள்ளது.
  - ○ மேலும் தோஹா நகரமானது 2022 ஆம் ஆண்டு பிஃபா உலகக் கோப்பைப் போட்டியையும் நடத்த உள்ளது.
- ❖ இந்திய அரசானது "விவசாயிகளுக்கு முன்னுரிமை அளித்தல்' எனப்படும் 100 பக்கம் கொண்ட ஒரு மின் புத்தகக் கையேட்டை வெளியிட்டுள்ளது.
  - ○ இந்த கையேடானது ஒப்பந்தப் பண்ணையத்தின் மூலம் பயனடைந்த விவசாயிகளின் வெற்றிகரமான நிகழ்வுகளை எடுத்துக் காட்டுகின்றது.
- ❖ மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகமானது 2022 ஆம் ஆண்டில் நேதாஜியின் 125வது பிறந்த தினத்தை அனுசரிப்பதற்காக கொல்கத்தாவில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அருங்காட்சியகத்தைத் திறக்க உள்ளது.
- ❖ சமீபத்தில் இந்திய தேசியப் பணவழங்கீட்டுக் கழகமானது (National Payments Corporation of - NPCI) நேரடித் தொடர்பற்ற ரூபே வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - ○ ரூபே முன்செலுத்து அட்டையானது அனைத்துப் பண வழங்கீடுகளுக்கும் வேண்டி ஒரே அட்டை வசதியை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டில் NPCI கழகத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டது.
- ❖ டாடா குழுமத்தின் தலைவரான ரத்தன் டாடாவிற்கு நீடித்த வணிகம் மற்றும் அமைதியின் உலகளாவிய தொலைநோக்குப் பார்வை என்ற ஒரு விருது வழங்கி கௌரவிக்கப் பட உள்ளார்.
- ❖ சமீபத்தில் கர்நாடக முதல்வரான எடியூரப்பா அவர்கள் "பெங்களூரு திட்டம் 2022" என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
  - ○ இந்தத் திட்டமானது பெங்களூரு மக்களின் தினசரிப் பிரச்சனைகள் மற்றும் சவால்கள் ஆகியவற்றைக் களைவதற்கு வேண்டி பெங்களூரு மக்களுக்குத் தேவையான கட்டமைப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் போன்றவற்றை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ அமெரிக்கா வான் படையானது தனது உறுப்பினர்களுக்குப் புதிய பெயரைச் சூட்டி உள்ளதாக அறிவித்துள்ளது.
  - ○ இதன் விண்வெளி வல்லுநர்கள் தற்பொழுது "பாதுகாவலர்கள்" (Guardians) என்று அழைக்கப்பட உள்ளனர்.
- ❖ சமீபத்தில் யுனெஸ்கோ அமைப்பானது சிங்கப்பூரின் கூவி விற்கும்படியான ஒரு தெருவோர உணவுக் கலாச்சாரத்தை அங்கீகரித்துள்ளது.

- இது அதனை தொட்டுணர முடியாதது என்ற கலாச்சாரப் பாரம்பரியத்தின் கீழ் இணைத்துள்ளது.

❖ பாகிஸ்தான் நாடானது தேசியப் பாலியல் குற்றவாளிகள் பதிவேட்டை உருவாக்க உள்ளது.

- ஒரு நாட்டில் உருவாக்கப்படும் முதலாவது தேசியப் பாலியல் குற்றவாளிகள் பதிவேடு இதுவேயாகும்.

❖ சூரிய ஒளிக் காற்று ஊடுருவுதல் என்பது சமீபத்தில் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப் பட்ட ஒரு இணையவழித் தாக்குதலாகும்.

❖ N501Y எனப்படும் கொரானா வைரஸின் ஒரு புதிய வகை தொற்றானது ஐக்கியப் பேரரசில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

❖ நேபாள நாட்டு அதிபரான பித்யா தேவி பண்டாரி அவர்கள் நேபாளத்தின் நாடாளுமன்றக் கலைப்பிற்கான பரிந்துரை மற்றும் 2021 ஆம் ஆண்டில் தேர்தல் தேதிகள் ஆகியவற்றிற்குத் தனது ஒப்புதலை வழங்கியுள்ளார்.

- இந்தப் பரிந்துரையானது அந்நாட்டு அதிபரான கே பி சர்மா ஒலி அவர்களால் சமர்ப்பிக்கப் பட்டது.

❖ அன்சு மாலிக் அவர்கள் செர்பியாவில் நடைபெற்ற மல்யுத்த உலகக் கோப்பையில் ஒரு வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

- செர்பியாவின் பெல்கிரேடில் நடைபெறும் தனிநபர் உலகக் கோப்பையில் இந்தியாவின் முதலாவது பதக்கம் இதுவாகும்.

❖ சென்னைக் கணித நிறுவனமானது கணிதம் மற்றும் கணினி அறிவியலில் மேம்பட்ட ஆராய்ச்சிக்கான டாக்டர் எஃப் சி கோஹ்லி என்ற ஒரு  சிறப்புமிகு மையத்தை நிறுவ இருக்கின்றது.

❖ அமெரிக்க-இந்திய மூலோபாய பங்காண்மைத்துவத்தை மேம்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடியின் பங்கிற்காக வேண்டி அவருக்கு 'லெஜியன் ஆஃப் மெரிட்' (மேன்மையான படையணிப் பிரிவு) எனும் விருதை வழங்கி அதிபர் டொனால்ட் டிரம்ப் கௌரவித்தார்.

- மேலும் இது ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் முன்னாள் ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோருக்கும் அமெரிக்க அதிபரால் வழங்கப் பட்டது.

❖ உத்தரப் பிரதேச மாநில அரசானது அம்மாநிலத்தின் ஊரகப் பகுதிகளில் சொத்து மற்றும் நிலம் தொடர்பான பிரச்சினைகளை ஒழிப்பதற்காக வரசாத் எனும் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

❖ தேசிய நீர் திட்டமானது நேரு யுவகேந்திரா சங்கதன்  என்ற அமைப்புடன் இணைந்து மழை நீர்ச் சேமிப்பை ஊக்கப்படுத்துவதற்காக "ஜல் சக்தி அபியான் II : மழை நீர் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தைத் தொடங்குதல்" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.

- இந்தப் பிரச்சாரத்தின் முழக்கம் "எங்கு மழை நீர் விழுகிறதோ, எப்போது மழைநீர் விழுகிறதோ அதனைச் சேமித்தல்" என்பதாகும்.

❖ மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள கடல்சார் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமானது ஆந்திரப் பிரதேசத்தின் விஜயவாடாவில் மீன் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்காக வேண்டி ஒரு தகவல் அழைப்பு மையத்தைத் தொடங்கியுள்ளது.

- இது தொடர்பான இந்தியாவின் முதலாவது தகவல் அழைப்பு மையம் இதுவாகும்.

❖ கேரள மாநில அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் பெண்கள் அமைப்பு ஆகியவை இந்தியாவின் முதலாவது பாலினத் தரவு மையத்தைத் தொடங்குவதற்காக வேண்டி

கூட்டு சேர்ந்துள்ளன.

- இது திருவனந்தபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட பாலினப் பூங்காவில் ஏற்படுத்தப்பட உள்ளது.

❖ இமாச்சலப் பிரதேச முதல்வரான ஜெய்ராம் தாகூர் அவர்கள் 2020 ஆம் ஆண்டின் சர்வதேச கீதா மகா உத்சவத்தை ஹரியானாவின் குருசேத்திராவில் தொடங்கி வைத்தார்.

❖ "புரூட்ஸ்" (விவசாயிகள் பதிவு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட பயனாளிகள் தரவு அமைப்பு – FRUITS/ Farmer Registration and Unified Beneficiary Information System) தளம் என்பது கர்நாடக அரசினால் தொடங்கப்பட்ட ஒரு மின்னாளுகைத் திட்டமாகும்.

- இது நிலம் தொடர்பான தகவல்களைச் சரிபார்ப்பதற்காக அம்மாநிலத்தின் பூமி என்ற இணையத் தளத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

❖ மத்திய அமைச்சரவையானது இந்திய தேசியத் திரைப்பட ஆவணக் காப்பகங்கள், திரைப்படப் பிரிவு, திரைப்படத் திருவிழாக்களின் இயக்குநரகம் மற்றும் குழந்தைகளுக்கான இந்தியத் திரைப்படச் சமூகம் ஆகியவற்றைத் தேசியத் திரைப்பட வளர்ச்சிக் கழகத்துடன் இணைப்பதற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.

- உலக அளவில் அதிக எண்ணிக்கையில் திரைப்படங்களைத் தயாரிக்கும் மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும்.

❖ சமீபத்தில் அமெரிக்காவின் ஹவாய் பெரிய தீவில் உள்ள கிலாவே எரிமலையானது வெடித்து உள்ளது.

❖ டைரக்ட்-டு-ஹோம் (டி.டி.எச்)/நேரடி வீட்டிற்கு ஒளிபரப்பு செய்யும் சேவைகளில் 100% அந்நிய நேரடி முதலீட்டிற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது, மேலும் அதன் உரிம காலத்தை இருபது ஆண்டுகளாக உயர்த்தியுள்ளது.

- இந்தியாவானது உலகின் மிகப்பெரிய டி.டி.எச் சந்தையாகும்.

❖ வினீத் அகர்வால் அவர்கள் ASSOCHAM என்ற அமைப்பின் புதிய தலைவராக பதவியேற்று உள்ளார்.

- இவர் ஹீரா நந்தானி குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குநரான நிரஞ்சன் ஹீரா நந்தானி என்பவருக்குப் பதிலாக பதவியேற்று உள்ளார்.

❖ விளையாட்டுத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு அவர்கள் இந்தியா முழுவதும் எட்டு கேலோ இந்தியா சிறப்பு மையங்களைத் திறந்து வைத்து உள்ளார்.

- இந்த மையங்கள் அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், மிசோரம், தெலுங்கானா, கேரளா, நாகாலாந்து, ஒடிசா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களில் அமைந்து உள்ளன.

❖ சமீபத்தில் யுனிசெப் ஆனது கோவிட்-19 தடுப்பு மருந்து சந்தைத் தகவல் பலகையைத் தொடங்கி வைத்துள்ளது.

- யுனிசெப் ஆனது கோவாக்ஸ் கொள்முதல் ஒருங்கிணைப்பாளர் மற்றும் கொள்முதல் முகவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

❖ மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சகமானது "சுவச்சதா அபியான்" என்ற ஒரு கைபேசிச் செயலியைத் தொடங்கியுள்ளது.

- இந்தச் செயலியானது தூய்மையற்ற கழிவறைகள் மற்றும் மனித மலத்தை மனிதனே அகற்றும் தொழிலாளர்கள் (Manual Scavengers) ஆகியோரின் தரவுகளை ஒன்று சேர்த்து புவியியல் குறியீடுகளை இடுவதற்காக மேம்படுத்தப் பட்டுள்ளது.

❖ ஒடிசா மாநில முதல்வர் அவர்கள் ஒடிசாவின் ரூர்கேலாவில் இந்தியாவின் மிகப்பெரிய ஹாக்கி விளையாட்டு அரங்கம் கட்டப் படுவதாக அறிவித்துள்ளார்.

- இந்த விளையாட்டு மைதானமானது 2023 ஆம் ஆண்டு எப்ஐஎச் ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பையை நடத்த உள்ளது.

❖ "சாஹீன்" (ஈகிள் 1x) எனப் பெயரிடப் பட்ட சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான ஒரு கூட்டு ஆகாயப் படைப் பயிற்சி பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் நடத்தப் பட்டது.

❖ மகாராஷ்டிர மாநிலமானது புனேவில் ஒரு சர்வதேச விளையாட்டுப் பல்கலைக் கழகத்தை அமைக்க முடிவு செய்துள்ளது.

❖ இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமானது (ISRO) விண்வெளிக்கான ஒரு பிராந்தியக் கல்வி மையத்தை அமைப்பதற்காக உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் உள்ள ஐஐடி-பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

❖ காற்றுத் தரநிர்ணய ஆணையமானது குழாய்மயமாக்கப் பட்ட இயற்கை எரிவாயு முறைக்கு மாறுமாறு புதுதில்லியின் தேசியத் தலைநகரப் பகுதியிலுள்ள அனைத்துத் தொழிற்துறை நிறுவனங்களையும் சமீபத்தில் வலியுறுத்தியுள்ளது.

❖ மத்திய நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகமானது "இ-சம்பதா" எனப்படும் ஒரு புதிய தளத்தையும் ஒரு புதிய கைபேசி செயலியையும் சமீபத்தில் அறிமுகப் படுத்தி உள்ளது.

- இந்தச் செயலியானது அரசுத் துறைகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கான வாழ்விட அணுகுதலை எளிமைப்படுத்துவதை ஊக்குவிக்க உள்ளது.

❖ ஜார்க்கண்ட் மாநில அமைச்சரவையானது பிரதான் மந்திரி கிசான் பீமா யோஜனா என்ற திட்டத்திற்கு மாற்றாக தனது புதிய பசல் ரஹத் யோஜனா என்ற திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

❖ 2020 ஆம் ஆண்டின் எப்ஐசிசிஐ (FICCI) இந்திய விளையாட்டு விருதுகளில் வான் படை விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியமானது "விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த நிறுவனமாக" தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

❖ இந்திய அஞ்சல் துறையானது 2019-20 ஆம் ஆண்டில் அஞ்சல் துறைப் பணியாளர்களின் சிறந்த சாதனைகளுக்காக மேகதூத் விருதுகளை வழங்கியுள்ளது.

❖ தமிழ்நாடு மாநிலத்தில் 2021 ஆம் ஆண்டில் நடக்கவுள்ள சட்டமன்றத் தேர்தலானது 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்காக வேண்டி தபால் வாக்குகள் முறை அறிமுகம் செய்யப் படுவதைக் காண உள்ளது.

❖ ஆசிய இளையோர் சாம்பியனான இந்தியாவைச் சேர்ந்த யாஷ் வர்தன் அவர்கள் சர்வதேச ஆன்லைன் (நிகழ்நேர) துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பின் 6வது பதிப்பில் 10 மீ துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.

- இந்த மூன்றாவது பதிப்பில் இவர் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

❖ டெல்லி மெட்ரோவின் மெஜந்தா பாதையில் (ஜனக்புரி மேற்கு-தாவரவியல் பூங்கா) இந்தியாவின் முதல் ஓட்டுநர் இல்லாத இரயிலை பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் துவக்கி வைத்தார்.

- 2002 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட டெல்லி மெட்ரோவானது இந்தியாவின் மிகப்பெரிய நகர்ப்புற துரிதப் போக்குவரத்து அமைப்பாகும்.

❖ கட்டாய மத மாற்றங்களுக்கு எதிராக மத்திய பிரதேச அமைச்சரவை புதிய மதமாற்ற எதிர்ப்புச் சட்டமான லவ் ஜிகாத் எதிர்ப்பு என்று அறியப் படும் ஒரு சட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- இந்தப் புதிய சட்டம் மத்தியப் பிரதேசத்தின் மதச் சுதந்திரச் சட்டம், 1968 என்ற சட்டத்திற்கு மாற்றாக அமைகிறது.

- ஜிஎஸ்டி வரியினைச் செலுத்துவோர் தங்கள் வரியில் குறைந்த பட்சம் 1% அளவிலான பணத்தை ரொக்கமாகச் செலுத்த வேண்டும் என்று வருவாய் துறை சமீபத்தில் அறிவித்துள்ளது.
    - இது 2021 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வர உள்ளது.
- கான்பூரின் ராமாய்பூர் கிராமத்தில் இந்தியாவின் முதல் மிகப்பெரிய தோல் பூங்காவை (Leather park) நிறுவ உத்தரப் பிரதேச அரசு தயாராக உள்ளது.
    - இந்த திட்டத்திற்கு சமீபத்தில் மத்திய வர்த்தக அமைச்சகம் ஒப்புதல் அளித்து உள்ளது.
- "In Pursuit of Happiness" (மகிழ்ச்சியை நோக்கியப் பயணத்தில்) என்ற புத்தகம் டெல்லி உயர்நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ராஜீந்தர் சச்சரின் வாழ்க்கை வரலாறு என்பதாகும்.
    - "இந்திய முஸ்லீம் சமூகத்தின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலை அல்லது சச்சார் குழு அறிக்கை 2006" என வெகுவாக அழைக்கப்பட்ட ஒரு அறிக்கைக்கு அவர் பெயர் பெற்றவர் ஆவர்.

# தமிழ்நாடு செய்திகள்

## உலகின் மிகப் பழமையான நானோ அமைப்புகள்

- ஆராய்ச்சியாளர்கள் பண்டைய மட்பாண்டத் துண்டுகளின் "தனித்துவ கருப்புப் பூச்சுகளில்" மனிதர்களால் உருவாக்கப்பட்ட மிகப் பழமையான நானோப் பொருட்களைக் கண்டறிந்துள்ளனர்.
- கி.மு. 600 ஆம் நூற்றாண்டு என்ற காலக் கட்டத்தைச் சேர்ந்த இந்த மட்பாண்டங்கள் தமிழ்நாட்டின் கீழடியில் உள்ள அகழாய்வுத் தளத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- சமீபத்தில் இந்த ஆராய்ச்சியானது அறிவியல்சார் அறிக்கைகள் என்ற இதழில் வெளியிடப் பட்டுள்ளது.
- இந்த அறிக்கை இந்தப் பூச்சுகள் கார்பன் நானோ குழாய்களால் (CNTs) ஆனவை என்பதை உறுதி செய்கின்றது.
- CNTsகள் விட்ட அளவில் மீட்டரில் ஒரு பில்லியன் அளவு கொண்ட கார்பன் குழாய்கள் ஆகும்.
- CNTsகள் ஒரு ஒழுங்கான முறையில் அமுக்கப்பட்ட கார்பன் அணுக்களின் ஒரு குழாய் அமைப்புகளாகும்.
- இது 2600 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த அமைப்பைப் பாதுகாத்திட வழிவகை செய்கின்றது.
- CNTsகள் உயர்வெப்பம், மின் கடத்துத் திறன் மற்றும் உயர் இயந்திர வலிமை உள்ளிட்ட மிகையான பண்புகளைக் கொண்டுள்ளது.
- இதற்கு முன்பு, மனிதனால் அறியப்பட்ட மிகப் பழமையான நானோ அமைப்புகள் சிரியாவில் 16-18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த டமாஸ்கஸ் தகடுகளில் கண்டறியப் பட்டன.



## அதிக எண்ணிக்கையிலான பெண் நீதிபதிகள்

- மதராஸ் உயர் நீதிமன்றமானது அதிக எண்ணிக்கையிலான பெண் நீதிபதிகளைக் கொண்ட உயர் நீதிமன்றமாக தனது நிலையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- இந்த உயர் நீதிமன்றமானது மொத்தமுள்ள 75 நீதிபதிகளில் 13 பெண் நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

## ரம்மி ஆட்டம் மீது தமிழ்நாட்டின் தடை

- ரம்மி உள்ளிட்ட இணைய வழி சூதாட்ட விளையாட்டுகளைத் தடைசெய்யும் அவரசச் சட்டம் ஒன்றை தமிழக ஆளுநர் பன்வரிலால் புரோஹித் அறிவித்துள்ளார்.
- தடையை மீறி விளையாடுவோருக்கு ரூ.5000 அபராதமும் ஆறு மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்படும்.
- ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் அறிவித்த அவசரச் சட்டமானது பின்வரும் சட்டங்களில் திருத்தம் செய்கிறது.
    - தமிழ்நாடு சூதாட்டத் தடைச் சட்டம், 1930
    - சென்னை நகர காவல் சட்டம், 1888 மற்றும்
    - தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம், 1859.

## மாநிலங்களின் நிலை குறித்த அறிக்கை

- மூன்றாவது முறையாக, அஇஅதிமுக அரசின் கீழ் தமிழ்நாடு மாநிலமானது "சிறப்பாகச் செயல்படும் பெரிய மாநிலமாக" (ஒட்டு மொத்தம்) உருவெடுத்துள்ளது.
- இது "இந்தியா டுடே – எம்டிஆர்ஏ மாநிலங்களின் நிலை குறித்த ஆய்வு 2020" என்ற ஆய்வில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இது தில்லியில் உள்ள ஒரு முதன்மை ஆராய்ச்சி நிறுவனமான 'சந்தைப்படுத்துதல் மற்றும் வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்' என்ற ஒரு நிறுவனத்தினால் மேற்கொள்ளப் பட்டு உள்ளது.
- இதில் இமாச்சலப் பிரதேசம் 2வது இடத்தையும் பஞ்சாப் 3வது இடத்தையும் பிடித்து உள்ளன.
- கோவிட் – 19 மேலாண்மைப் பிரிவில், பெரிய மாநிலங்களில் அசாம் மாநிலத்திற்கு அடுத்து தமிழ்நாடு தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

- சிறிய மாநிலங்களில், கோவா மாநிலமானது தொடர்ந்து 3 ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்படும் மாநிலமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.




### *தமிழ்நாட்டின் செயல்பாடு*

- மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்து இந்தியாவின் 2வது மிகப்பெரிய பொருளாதார மாநிலம் தமிழ்நாடு ஆகும்.
- இது இந்தியாவில் 6வது அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமாகும்.
- இது நாட்டில் மூன்றாவது அதிக தனி நபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டு உள்ளது.
- இது நாட்டில் மிகவும் நகரமயமாக்கப்பட்ட மற்றும் தொழில்மயமாக்கப்பட்ட மாநிலம் ஆகும்.
- தமிழ்நாடு மாநிலத்தில் ஊட்டச் சத்துக் குறைபாடானது நாட்டில் மிகக் குறைந்ததாக உள்ளது.
- தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, தமிழ்நாடு மாநிலமானது தேசிய சராசரியை விட அதிக பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் அகில இந்திய சராசரியான 4.2% என்ற சதவிகிதத்தை விட இரட்டிப்பாக 8.03% என்ற அளவில் தமிழ்நாடு பதிவு செய்துள்ளது.
- அதே ஆண்டில் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட தமிழ்நாட்டின் தலா தனிநபர் வருமானமானது ரூ.1,53,853 ஆகும்.
- இது தமிழ்நாட்டின் நிலையான முந்தைய ஆண்டில் 12வது இடத்திலிருந்து 6வது இடத்திற்குச் செல்ல வழிவகை செய்துள்ளது.
- 2018-19 ஆம் ஆண்டில் தமிழ்நாடானது ரூ.1,42,941 என்ற தலா தனிநபர் வருமானம் என்ற அளவுடன் 12வது இடத்தில் இருந்தது.

## தமிழ் வழியில் படித்தவர்களுக்கான இட ஒதுக்கீடு

- தமிழ்நாட்டின் ஆளுநரான பன்வாரிலால் புரோகித் அவர்கள் டிஎன்பிஎஸ்சி ஆணையத்தில் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு 20% இடஒதுக்கீட்டை அளிப்பதற்கான ஒரு மசோதாவிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளார்.

- இது தற்பொழுது தங்களது கல்வியை மாநில மொழியான தமிழில் படித்தவர்களால் மட்டுமே நிரப்பப்பட உள்ளது.
- இந்தத் திருத்தத்தின் படி, விண்ணப்பதாரர் தங்களது கல்வியைத் தேர்வு அறிவிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு, தகுதித் தேர்வு வரை நிறைவு செய்திருக்க வேண்டும்.
- தமிழ்வழிச் சட்டம், 2010 என்ற ஒரு சட்டமானது திமுக ஆட்சியின் போது நடைமுறைக்கு வந்தது.

## சர்வதேச பாரதி திருவிழா

- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்று பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2020 ஆம் ஆண்டின் சர்வதேச பாரதி திருவிழாவில் காணொலி வாயிலாக உரையாற்றினார்.
- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் எழுத்தாளர் சீனி விஸ்வநாதன் என்பவருக்கு 2020 ஆம் ஆண்டின் பாரதி விருதை காணொலி வாயிலாக வழங்கினார்.
- விஸ்வநாதன் அவர்கள் சுப்பிரமணிய பாரதி குறித்த ஒரு மிகப்பெரிய சுருக்கத்தை கால வரிசைப் படி எழுதியுள்ளார்.
- இந்த விழாவானது சென்னையில் உள்ள வானவில் கலாச்சார மையத்தினால் நடத்தப் பட்டது.
- இது தேசியக் கவிஞர் மகாகவி சுப்பிரமணிய பாரதியின் 138வது பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்காக அனுசரிக்கப்பட்டது.
- சுப்பிரமணிய பாரதி அவர்கள் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11 அன்று எட்டயபுரத்தில் பிறந்தார்.

## தமிழ்நாட்டின் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள்

- தமிழ்நாடு மாநில அரசானது தமிழகத்தில் உள்ள பின்வரும் 2 நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கப்பட்ட இடங்களாக அறிவித்துள்ளது. அவை
    - திருவண்ணாமலை மாவட்டத்தின் கீழரவந்தவாடி கிராமத்தில் உள்ள அம்மாகுளம் மற்றும்
    - அரியலூர் மாவட்டத்தின் அழகர்மலை கிராமத்தில் உள்ள ஒரு யானைச் சிலை
- அம்மாகுளம் ஆனது நாயக்கர் ஆட்சிக் காலமான 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம்.
- அழகர்மலையில் உள்ள யானைச் சிலையானது 16-17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும்.
- தமிழ்நாடு தொல்லியல் துறையானது ஏற்கெனவே 92 பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளது.



## அம்மா சிறு மருத்துவமனைகள்

- தமிழக முதல்வர் சென்னையில் "அம்மா சிறு மருத்துவமனை" திட்டத்தை டிசம்பர் 14 அன்று தொடங்கி வைத்தார்.
- இது போன்று மொத்தம் 200 மருத்துவமனைகள் சென்னையிலும், 2,000 மருத்துவமனைகள் தமிழகத்திலும் விரைவில் திறக்கப்படும்.
- நமது மாநிலத்தில் 1,851 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன.
- ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத இடங்களிலும், ஏராளமான ஏழை மக்கள் வசிக்கும் இடங்களிலும் இந்தச் சிறு மருத்துவமனைகள் திறக்கப்படும்.
- பொது ஆலோசனை மற்றும் அடிப்படை ஆய்வு நடத்த உதவும் வகையில் ஒவ்வோர் அம்மா சிறு மருத்துவமனையிலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் மற்றும் ஒரு உதவியாளர் இருப்பார்கள்.
- இந்த மருத்துவமனைகள் உடல் வெப்பநிலை, இரத்த ஆக்ஸிஜன், இரத்த அழுத்தம், ஹீமோகுளோபின், இரத்தச் சர்க்கரை, சிறுநீர் மாதிரிகள் சோதனை போன்ற அடிப்படை சுகாதார வசதிகளை வழங்கும்.




## ஓலா ஸ்கூட்டர் தொழிற்சாலை

- உலகின் மிகப்பெரிய ஸ்கூட்டர் உற்பத்தித் தொழிற்சாலையை ஓலா நிறுவனமானது தமிழ்நாட்டில் உள்ள ஒசூரில் அமைக்க உள்ளது.
- ஓலா தனது முதல் தொழிற்சாலையை இந்த மாநிலத்தில் அமைப்பதற்கு, ரூ.2,400 கோடி முதலீட்டுடன் தமிழக அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுள்ளது.

## தங்கக் குவியல்

- இந்தத் தங்கக் குவியலானது உத்திரமேரூருக்கு அருகில் உள்ள குழம்பேஸ்வரர் ஆலயத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்தக் கோயிலானது 11 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த இரண்டாம் குலோத்துங்க சோழன் காலக் கட்டத்தைச் சேர்ந்தது என்று நம்பப்படுகின்றது.
- உத்திரமேரூர் ஆனது தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரு இடமாகும்.
- உத்திரமேரூரில் முதலாம் பராந்தக சோழன் (907-950), முதலாம் இராஜராஜ சோழன் (985-1014), முதலாம் இராஜேந்திர சோழன் (1012-1044,) மற்றும் முதலாம் குலோத்துங்கச் சோழன் (1070-1120) ஆகியோரது காலகட்டத்தைச் சேர்ந்த கல்வெட்டுகளும் உள்ளன.
- உத்திரமேரூரில் உள்ள கோவில் கல்வெட்டுகள் ஊரகத் தன்னாட்சி குறித்து அவர்களது வரலாறு சார்ந்த நிகழ்வுகளை விவரிக்கும் வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.



## தொ. பரமசிவன்

- இவர் டிசம்பர் 24 அன்று காலமானார்.
- இவர் ஒரு இந்திய மானுடவியலாளர் மற்றும் தமிழ் மரபு எழுத்தாளர் ஆவார்.
- இவர் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் ஒரு தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர் ஆவார்.
- தமிழ்ச் சமூகத்தின் பாரம்பரியமான ஆராய்ச்சிக்காக இவர் வெகு சிறப்பாக அறியப் படுகின்றார்.
- இவர் சிலப்பதிகாரம் போன்ற காவியங்களின் வாயிலாக தமிழின் கலாச்சார நிலையை மறுவரையறை செய்தார்.
- இவர் அழகர் கோயில், பண்பாட்டு அசைவுகள், அறியப்படாத தமிழகம், வழித் தடங்கள், சமயம், சமயங்களின் அரசியல், உரைகள், நாள் மலர்கள், மானுட வாசிப்பு, மரபும் புதுமையும் மற்றும் இதுவே ஜனநாயகம் உள்ளிட்ட 15ற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.




## சின்னமன்னா நாராயணசாமி நாயுடு விருது

- தமிழ்நாடு முதல்வர் எடப்பாடி கே. பழனிசாமி இந்த விருதை அறிவித்துள்ளார்.
- இது நெல் செறிவாக்கல் முறையின் மூலம் அதிக அளவில் நெல்லை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்பட இருக்கின்றது.
- விவசாயிகளின் தலைவரான மறைந்த சி. நாராயணசாமி நாயுடு என்பவரின் நினைவாக இந்த விருதிற்கு இவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது.

- இவர் பல பத்தாண்டுகளாக விவசாயிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்தார்.
- நாராயணசாமி அவர்கள் 1973 ஆம் ஆண்டில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைத் தொடங்கினார்.
- இவர் கோவில்பட்டியில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 21 அன்று காலமானார்.



## அப்துல் ஜப்பார்

- அப்துல் ஜப்பார் அவர்கள் ஒரு தமிழ் வானொலி ஒளிபரப்பாளர் மற்றும் தமிழ் மொழி கிரிக்கெட் வர்ணனையாளர் ஆவார்.
- மேலும் இவர் தமிழ்நாடு கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராகவும் பணியாற்றினார்.
- இவர் கடந்த டிசம்பர் 22 அன்று தனது 81வது வயதில் காலமானார்.



## பொங்கல் பரிசு

- தமிழ்நாடு முதல்வரான கே. பழனிசாமி அவர்கள் ரூ.2500 நிதி மற்றும் பரிசுத் தொகுப்பு அடங்கிய பொங்கல் பரிசை அறிவித்துள்ளார்.
- இது அறுவடைத் திருவிழாவைக் கொண்டாடுவதற்காக மாநிலத்தில் உள்ள அனைத்து 2.6 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட உள்ளது.
- கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசானது குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.1000 நிதியை வழங்கியது.
- தற்பொழுது இது ரூ.1500 அதிகரிக்கப் பட்டு, ரூ.2500 ஆக வழங்கப்படுகின்றது.
- 2014 ஆம் ஆண்டில் அஇஅதிமுக அரசின் மூலம் 1 கிலோ அரிசி மற்றும் 1 கிலோ சர்க்கரையுடன் சேர்த்து ரூ.100 நிதியை தமிழ்நாடு மக்கள் பெறத் தொடங்கினர்.

# தேசியச் செய்திகள்

## 3வது உலக புதுப்பிக்கத் தக்க ஆற்றல் முதலீட்டுச் சந்திப்பு மற்றும் கண்காட்சி (RE-Invest 2020)

- இந்த மாநாடானது மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை அமைச்சகத்தினால் (Ministry of New and Renewable Energy - MNRE) நடத்தப்படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இந்த மாநாட்டின் கருத்துரு, "நீடித்த ஆற்றல் மாற்றத்திற்கான புத்தாக்கம்" என்பதாகும்.
- ஆஸ்திரேலியா, பிரான்சு, டென்மார்க், ஜெர்மனி, ஐக்கியப் பேரரசு, மாலத் தீவுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியவை Re-Invest மாநாட்டின் பங்காளர் நாடுகளாகும்.
- குஜராத், மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகியவை இதன் பங்காளர் மாநிலங்களாகும்.
- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனானது உலகின் 4வது மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனாகும்.
- இது அனைத்து மிகப்பெரிய பொருளாதார நாடுகளிடையே மிக அதிக வேகத்தில் வளர்ந்து வருகின்றது.
- தற்பொழுது இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி திறனானது 136 ஜிகா வாட்களாக உள்ளது.
- இது நமது மொத்தத் திறனில் 36% ஆகும்.
- இந்தியாவின் வருடாந்திர ஆற்றல் உற்பத்தித் திறனானது 2017 ஆம் ஆண்டு முதல் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின்னாற்றலை விட முன்னிலையில் உள்ளது.
- கடந்த 6 ஆண்டுகளில், இந்தியாவானது இரண்டரை மடங்கு என்ற அளவில் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனை அதிகரித்துள்ளது.
- புனல் (நீர்) மின்சாரமானது மத்திய மின்சாரத் துறை அமைச்சகத்தினால் தனியாக நிர்வகிக்கப் படுகின்றது. அதனால் இது MNRE திட்டங்களில் இணைக்கப் படவில்லை.




## லச்சித் திவாஸ்

- இது நவம்பர் 24 அன்று இந்தியாவில் அனுசரிக்கப்பட்டது.
- இது லச்சித் போர்புஹ்ரன் என்பவரின் பிறந்த தின நினைவாக அனுசரிக்கப்பட்டது.
- லச்சித் போர்புஹ்ரன் அஹோம் பேரரசில் ஒரு தளபதியாக செயல்பட்டார்.

- இது தற்போதைய அசாம் மாநிலத்தைக் குறிக்கின்றது.
- இவர் 1671 ஆம் ஆண்டு சராய்கத் போரில் தனது தலைமைத்துவப் பண்பிற்காக அறியப் படுகின்றார்.
- இந்தப் போரானது ராம்சிங் தலைமையிலான முகலாயப் படைகளுக்கும் லச்சித் போர்புஹ்ரன் தலைமையிலான அஹோம் படைகளுக்கும் இடையே நடைபெற்றது.
- இது சராய்கத்தில் (தற்போது குவஹாத்தி) பிரம்மபுத்திரா நதிக்கரையில் நடைபெற்றது.
- இந்தப் போர் நடைபெற்ற போது அஹோமின் அரசர் மிர் ஜும்லா என்பவராவார்.
- ஆம்பரின் ஆட்சியாளரான மிர்சா ராஜா ஜெய்சிங்கின் மூத்த மகன் ராம் சிங் ஆவார்.

## இந்தியக் காலநிலை மாற்ற அறிவுத் தளம்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவ்டேகர் அவர்கள் காணொலி வாயிலாக இந்தத் தளத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் தளமானது காலநிலை மாற்றப் பிரச்சினைகளைக் களைவதற்காக தேசிய மற்றும் சர்வதேச அளவில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் குறித்த முக்கியத் தகவல்களைக் கொண்டிருக்கும்.
- 2015 ஆம் ஆண்டின் பாரிஸ் ஒப்பந்தத்தைச் சாதிக்கும் வகையில் செயல்படும் ஒரே ஜி20 நாடு இந்தியா ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவானது, தனது ஜிடிபியில் 2005 ஆம் ஆண்டு நிலையிலிருந்து 21% என்ற அளவிலான உமிழ்வுத் திறனைக் குறைக்கும் தனது தன்னார்வ இலக்கை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.
- மேலும் இந்தியாவானது இலக்கு ஆண்டான 2030 ஆம் ஆண்டிற்கு முன்பாகவே 35% என்ற அளவிலான உமிழ்வுக் குறைப்பு என்ற இலக்கை அடையும் வகையில் செயல்பட்டு வருகின்றது.
- இந்தியாவின் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட 3 பங்களிப்புகள் பின்வருமாறு:
  - 2030 ஆம் ஆண்டில் ஜிடிபியின் உமிழ்வுத் தீவிரத்தை மூன்றில் 1 பங்காகக் குறைத்தல்.
  - புதை படிவமற்ற எரிபொருள் ஆதாரங்களிலிருந்துப் பெறப்படும் மின்சாரத்தின் நிறுவப்பட்ட உற்பத்தித் திறனாக 40% என்ற அளவினை அடைதல்.
  - கார்பன் டை ஆக்ஸைடின் 2.5 பில்லியன் முதல் 3 பில்லியன் டன்கள் வரையான கார்பன் சேமிப்புத் திறனுக்குச் சமமாக 2030 ஆம் ஆண்டில் மரங்கள் பரப்பிற்கான வனப் பரப்பை கூடுதலாக ஏற்படுத்துதல்.

## திருநர்களுக்கான தேசியத் தளம்

- சமீபத்தில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சகமானது "திருநர்களுக்கான தேசியத் தளம்" என்ற ஒரு மின்னணு தளத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்தத் தளமானது அடையாள அட்டை மற்றும் சான்றிதழ்களை ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கு வேண்டி திருநர் சமூகத்திற்கு உதவ உள்ளது.
- இது திருநர்கள் (பாதுகாப்பு உரிமைகள்) சட்டம், 2019 என்பதின் ஒரு முக்கிய அம்சமாகும்.
- "கரிமா கிரெக் : திருநர்களுக்கான தங்கும் விடுதியானது" குஜராத்தின் வடோதராவில் தொடங்கி வைக்கப் பட்டது.

- இந்த அமைச்சகமானது திருநர்களுக்கு 13 தங்கும் விடுதிகள் மற்றும் அதன் வசதிகளை விரிவுபடுத்துவதற்கு வேண்டி 10 நகரங்களை அடையாளம் கண்டுள்ளது.
- வடோதரா, புதுதில்லி, பாட்னா, புவனேஸ்வர், ஜெய்ப்பூர், கொல்கத்தா, மணிப்பூர், சென்னை, ராய்ப்பூர் மற்றும் மும்பை ஆகியவை இந்த 10 நகரங்களாகும்.

## மனித வள மேலாண்மை அமைப்பு – இந்திய இரயில்வே

- சமீபத்தில் இந்திய இரயில்வேயானது டிஜிட்டல் மயமாக்கப்பட்ட ஆன்லைன் HRMS (Human Resource Management System) என்ற அமைப்பைத் தொடங்கியுள்ளது.
- இது மேம்படுத்தப்பட்ட உற்பத்தித் திறன் மற்றும் பணியாளர் மனநிறைவு ஆகியவற்றை அளிப்பதற்கான இந்திய இரயில்வேயின் ஒரு உயரிய உந்துசக்தித் திட்டமாகும்.

## 33வது பிரகதி உரையாடல்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இந்த பிரகதி சந்திப்பிற்குத் தலைமை தாங்கினார்.
- பிரகதி என்பது துடிப்பான செயல்பாடு கொண்ட ஆளுகை மற்றும் குறித்த காலத்திற்குள் திட்டங்களைச் செயல்படுத்துதல் என்பதைக் குறிக்கும்.
- இது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது பிரதமர் அலுவலகம், இந்திய அரசின் செயலாளர்கள் மற்றும் மாநிலத் தலைமைச் செயலாளர்கள் என மூன்று அடுக்கு முறையில் செயல்படுகின்றது.
- இது பொது மக்களின் குறைகளைக் களைவதை நோக்கமாகக் கொண்ட பல்முனை மற்றும் பல பயன்பாட்டுத் தளமாகும்.
- மேலும் இது இந்திய அரசு மற்றும் மாநில அரசால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள திட்டங்களைக் கண்காணித்து மறு ஆய்வு செய்கின்றது.
- இந்த நிகழ்வானது மாதத்திற்கு ஒருமுறை அதாவது நான்காவது புதன் கிழமையன்று நடைபெறுகின்றது.
- இந்தத் தினமானது பிரகதி தினம் என்று அழைக்கப்படுகின்றது.



## கோவிட் – 19 தொற்றின் தடுப்பு மற்றும் மேலாண்மை அறிக்கை

- இது நிதி ஆயோக்கினால் வெளியிடப் பட்டுள்ளது.
- இது கோவிட்-19 தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் சிறந்த நடைமுறைகளை எடுத்துக் காட்டுகின்றது.
- இந்த அறிக்கையில் நோய்த் தொற்றை எதிர்த்துப் போராடும் கேரளாவின் முயற்சிகள் ஒரு சிறப்பிடத்தைப் பிடித்துள்ளன.

## சட்டமன்ற உறுப்பினர் – தகுதி நீக்கம்

- 1988 ஆம் ஆண்டில் மக்களவையிலிருந்துத் தகுதி நீக்கம் செய்யப்பட்ட இந்தியாவின் முதலாவது நாடாளுமன்ற உறுப்பினர் லால்டுஹோமா என்பவராவார்.
- இவர் தற்பொழுது 2020 ஆம் ஆண்டில் மிசோரமின் சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.
- ஒரு சுயேட்சை வேட்பாளராக இவர் அம்மாநிலத்தின் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் ஒரு கட்சியின் சார்பாக அவர் தன்னைப் பிரதிநிதித்துவப் படுத்திக் கொண்டதன் காரணமாக இவர் தகுதி நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.

## ப்ரூ பழங்குடியினர் - அகதிகள் பிரச்சினை

- ப்ரூ அல்லது ரியாங் பழங்குடியினர் திரிபுரா, அசாம், மிசோரம் ஆகிய மாநிலங்களில் வாழ்ந்து வருகின்றனர்.
- திரிபுராவில் இந்தச் சமூகமானது குறிப்பாக எளிதில் பாதிக்கப்படக் கூடிய ஒரு பழங்குடியினக் குழுவாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- மிசோரமில், இவர்களது பெயரை அம்மாநிலத்தின் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கக் கோரி பூர்வாங்க அமைப்புகளால் அவர்கள் இலக்காக்கப் பட்டுள்ளனர்.
- திரிபுராவில் இவர்களது நிரந்தரக் குடியிருப்பை உறுதி செய்வதன் ஒரு முயற்சியாக, இந்த ஆண்டில் மத்திய மற்றும் இரண்டு மாநிலங்களுக்கிடையே (மிசோரம் மற்றும் திரிபுரா) ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, அகதிகள் முகாம்களில் வாழும் 32000 மக்கள் திரிபுரா மாநிலத்தில் நிரந்தரக் குடியிருப்பாளர்களாக அறிவிக்கப் பட்டுள்ளனர்.
- இந்த ஒப்பந்தமானது திரிபுரா மாநிலத்தில் உள்ள வங்காளிகள் மற்றும் மிசோ ஆகிய பழங்குடியின குழுக்களின் போராட்டங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது.



## தேசியக் கடல்சார் கள விழிப்புணர்வு மையம்

- இந்தியக் கடற்படையின் தகவல் மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு மையமானது ஒரு தேசியக் கடல்சார் கள விழிப்புணர்வு மையமாக மாறுகிறது.
- இது 26/11 மும்பை பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட கடல் தரவு இணைவிற்கான ஒரு முதன்மை நிறுவனமாகும்.
- குருகிராமில் அமைந்துள்ள தகவல் மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு மையமானது நீண்ட ஆழமானக் கடல்களில் செல்லும் கப்பல்களைக் கண்காணிக்கிறது.
- இது தேசியக் கட்டளை கட்டுப்பாட்டுத் தொடர்பு மற்றும் புலனாய்வு அமைப்பின் ஒரு முதன்மை மையமாகும்.

## கர்நாடக மாநில சட்ட மேலவை உறுப்பினர் தகுதி நீக்கம்

- கர்நாடக மாநில உயர் நீதிமன்றமானது விஸ்வநாத் என்பவர் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்யப் பட்டுள்ளார், எனவே அம்மாநில அமைச்சரவையில் அவரை இணைத்துக் கொள்ள முடியாது என்று அறிவித்து உள்ளது.
- விஸ்வநாத் அவர்கள் இந்திய அரசியலமைப்பின் சரத்து 164(1B) மற்றும் சரத்து 361(B) ஆகியவற்றின் கீழ் தகுதி நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.
- விஸ்வநாத் கர்நாடக மாநிலச் சட்டமன்றத்திற்காக நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் தோல்வியடைந்த போதிலும் அம்மாநில சட்ட மேலவை உறுப்பினராக நியமிக்கப் பட்டார்.
- ஏற்கெனவே இவர் 2019 ஆம் ஆண்டில் இந்திய உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி தகுதி நீக்கம் செய்யப் பட்டுள்ளார்.
- தகுதி நீக்கம் செய்யப் பட்ட ஒரு நபர் இடைத் தேர்தலில் அதே தொகுதியிலிருந்து வெற்றி பெற்றிருந்தால் மட்டுமே அவர் மீண்டும் அமைச்சர் பதவியை ஏற்கத் தகுதியுடையவர் என்று கூறப்படுகின்றது.

## இந்தியாவில் சாலை விபத்துகள்

- ஒரு நாளைக்கு 156 சாலை விபத்துக்களுடன், தமிழ்நாடானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடத்தில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசியக் குற்ற ஆவணங்கள் காப்பகத்திடம் உள்ள தரவுகளின் படி இவ்வாறு கூறப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டினை அடுத்து மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அதிக சாலை விபத்துகள் நிகழ்கின்ற மாநிலங்களாக உள்ளன.
- தேசிய நெடுஞ்சாலையில் நிகழும் இறப்புகளைப் பொறுத்த அளவில், தமிழ்நாடு மாநிலமானது உத்தரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கு அடுத்து 3வது இடத்தில் உள்ளது.
- பெரிய நகரங்களின் கீழ், சாலை விபத்துகளால் ஏற்படும் மரணங்களில் சென்னை நகரானது தில்லி நகருக்கு அடுத்து 2வது இடத்தில் உள்ளது.
- மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சகத்தின் விபத்துகள் அறிக்கை 2019 என்ற ஒரு அறிக்கையானது நாட்டின் மிகக்கொடிய சாலை விபத்துகளை ஏற்படுத்தும் அபாய இடங்களைக் கொண்ட நகரங்களில் சென்னை நகரத்தை 3வது இடத்தில் வைத்துள்ளது.




## 100 ஆக்டேன் பெட்ரோல்

- சமீபத்தில் இந்திய எண்ணெய்க் கழகமானது முதலாவது 100 ஆக்டேன் என்ற பெட்ரோலிய விற்பனையைத் தொடங்கியுள்ளது.
- நாட்டில் 100 ஆக்டேன் எரிபொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது இதுவே முதன்முறையாகும்.
- இது பொதுவாக உயர் செயல்பாடு கொண்ட ஆடம்பர வாகனங்களில் பயன்படுத்தப் படுகின்றது.
- இது ஜெர்மனி, அமெரிக்கா, கிரீஸ், மலேசியா, இந்தோனேசியா, இஸ்ரேல் ஆகிய உலகில் உள்ள 6 நாடுகளில் மட்டுமே கிடைக்கின்றது.
- ஆக்டேன் தரநிலை என்பது எரிபொருள் நிலைப்புத் தன்மையின் ஒரு அளவீடாகும்.

## 2021 ஆண்டின் குடியரசு தின விருந்தினர்

- 2021 ஆம் ஆண்டின் குடியரசு தின விருந்தினராக இங்கிலாந்துப் பிரதமர் போரிஸ் ஜான்சனை இந்தியா அழைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.
- இவர் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டால், கடந்த 27 ஆண்டுகளில் ராஜபாதை அணிவகுப்பில் கலந்து கொண்டுச் சிறப்பித்த முதல் பிரிட்டிஷ் பிரதமர் இவராவார்.
- 1993 ஆம் ஆண்டின் ஜனவரி 26 அன்று இந்த அணிவகுப்பில் பிரதான விருந்தினராக வந்த கடைசி இங்கிலாந்துப் பிரதமர் ஜான் மேஜர் ஆவார்.
- அவரது வருகை உறுதி செய்யப் பட்டால், கோவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியில் இந்தியாவுக்கு நேரில் பயணம் செய்யும் முதல் அரசாங்கத் தலைவரும் இவராவார்.
- 2020 ஆம் ஆண்டின் பிப்ரவரியில் மியான்மர் ஜனாதிபதி வின் மைன்ட் மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆகியோர் இந்தியாவுக்கு வருகை தந்த கடைசி அரசாங்கத் தலைவர்கள் ஆவர்.

## உள்நாட்டு விமானம் தாங்கிக் கப்பல் ஐ.என்.எஸ் விக்ராந்த்

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்த விமானம் தாங்கிக் கப்பலானது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் அல்லது 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளது.
- இந்த விமானந் தாங்கிக் கப்பல் கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் அதன் கட்டுமானத்தின் இறுதிக் கட்டத்தில் உள்ளது.

- ஐ.என்.எஸ் விக்ராந்தின் குறிக்கோள் "ஜெய்மா சாம் யுதி ஸ்ப்ர்தா" ("Jayema Sam Yudhi Sprdhah") என்பதாகும்.
- இது ரிக் வேதத்திலிருந்து எடுக்கப் பட்டுள்ளது.

## புரெவி புயல்

- இது தென் தமிழகத்தில் கன்னியாகுமரி மற்றும் பாம்பனுக்கு இடையில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இது மாலத் தீவினால் பெயரிடப்பட்ட ஒரு புயலாகும்.

## கற்றல் மேலாண்மை அமைப்பு

- இது டிஜிட்டல் முறையில் கர்நாடக மாநில அரசினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது அம்மாநிலத்தில் உள்ள அரசுக் கல்லூரிகளில் செயல்படுத்தப்பட உள்ளது.
- இது நாட்டில் தொடங்கப் பட்டுள்ள இதே வகையைச் சேர்ந்த முதலாவது முன்னெடுப்பு ஆகும்.
- இது உயர் கல்வியில் மொத்தச் சேர்க்கை விகிதத்தை மேம்படுத்துவதையும் டிஜிட்டல் வழிக் கற்றலை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## ராமாயணப் படகுப் பயணச் சேவை

- உத்தரப் பிரதேசத்தின் அயோத்தியாவில் உள்ள சரயு நதியில் ஒரு சுற்றுலாச் சேவையானது தொடங்கப்பட உள்ளது.
- சரயு நதியில் தொடங்கப்படும் (காக்ரா/தேசிய நீர்வழிப் பாதை) முதலாவது ஆடம்பர படகுப் பயணச் சேவை இதுவாகும்.

## ஆடி மஹோத்ஸவ்




- ஆடி மஹோத்ஸவ்வானது இணையவழியில் மத்தியப் பிரதேசத்தில் தொடங்கப் பட்டது.
- ஆடி மஹோத்ஸவ் என்பது ஒரு தேசியப் பழங்குடியினர் திருவிழாவாகும்.
- இது பழங்குடியினர் விவகாரங்கள் அமைச்சகம், இந்திய அரசு மற்றும் இந்தியப் பழங்குடியினச் சந்தையிடல் வளர்ச்சிக் கூட்டமைப்பு (TRIFED - Tribal Cooperative Marketing Development Federation of India) ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.

- இந்தத் திருவிழா நாட்டின் பாரம்பரியக் கலை மற்றும் கைவினைப் பொருட்கள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தை காட்சிப் படுத்துகிறது.

## புதுதில்லியில் விவசாயிகளின் போராட்டம்

- விவசாயம் தொடர்பான பின்வரும் மூன்று புதிய சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் போராட்டம் நடைபெற்று வருகிறது. அவையாவன
  - விவசாய விளைபொருள் வியாபாரம் மற்றும் வர்த்தக (மேம்பாடு மற்றும் எளிமைப்படுத்துதல்) சட்டம், 2020
  - விவசாயிகளுக்கு (அதிகாரமளித்தல் மற்றும் பாதுகாப்பு) விலை உத்தரவாத ஒப்பந்தம் மற்றும் விவசாயச் சேவைகள் சட்டம், 2020
  - அத்தியாவசியப் பொருட்கள் திருத்தச் சட்டம், 2020
- இந்தச் சட்டங்கள் விவசாயிகளை இடைத்தரகர்களின் கொடுங்கோன்மையிலிருந்து விடுவிக்கும் என்று அரசாங்கம் கூறுகிறது.
- அவை அரசாங்கத்தால் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகளை (உள்நாட்டில் மண்டி என்று அழைக்கப்படும்) விவசாயிகள் புறக்கணிப்பதற்கும், தனியாருக்கு நேரடியாக பொருட்களை எளிதாக விற்பனை செய்வதற்கும் வேண்டி விவசாயிகளுக்கு உதவுகின்றன.
- விவசாயிகள் இப்போது தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களில் ஈடுபட்டு பிற மாநிலங்களில் விவசாயப் பொருட்களை விற்கலாம்.
- இந்த நடைமுறை இந்தியாவில் ஒப்பந்த வேளாண்மை (contract farming) என அழைக்கப் படுகிறது.
- வர்த்தகர்களை இந்தப் புதிய விதிமுறைகள் உணவுப் பொருட்களை இருப்பு வைக்க அனுமதிக்கின்றன.
- இது வணிகர்கள், தொற்றுநோய் காலத்தில் ஏற்படும் விலை உயர்வை எளிதில் தங்களுக்கு அனுகூலமாக்கிக் கொள்ள உதவும்.
- இத்தகைய நடவடிக்கை பழைய விதிகளின் கீழ் குற்றமாக கருதப் பட்டது.

### *விவசாயிகளின் கவலைகள்*

- இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் விவசாய நிலங்களில் 86 சதவீதத்திற்கும் அதிகமானவை தலா இரண்டு ஹெக்டேர் (ஐந்து ஏக்கர்) நிலத்தை வைத்திருக்கும் சிறு மற்றும் குறு விவசாயிகளால் கட்டுப்படுத்தப் படுகின்றன.
- சிறிய விவசாயிகள் தங்கள் பொருட்களைப் பெரிய நிறுவனங்களுக்கு விற்க நேரிடும் போது தங்களுக்குப் போதுமான பேரம் பேசும் சக்தி இருக்காது என்று அஞ்சுகிறார்கள்.
- இந்தப் புதியச் சட்டங்களும் எழுத்துப் பூர்வ ஒப்பந்தங்களைக் கட்டாயம் ஆக்குவதில்லை.
- இந்தப் புதிய விதிகள் எந்தவொருப் பொருளுக்கும் குறைந்தபட்ச ஆதார விலைக்கு வேண்டி எந்தவொரு உத்தரவாதத்தையும் அளிக்கவில்லை.
- தற்போதுள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையும் ஒரு கட்டத்தில் ஒழிக்கப் படும் என்று விவசாயிகள் கவலைப்படுகிறார்கள்.

## இந்திய இராணுவத்தில் புதிய பதவிகள்

- இராணுவத்தில் ஒரு புதிய துணை இராணுவத் தளபதி பதவியை உருவாக்க பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

- லெப்டினென்ட் ஜெனரல் பரம்ஜித் சிங் அவர்கள் இந்த முதல் துணை இராணுவத் தளபதி பதவியைப் பெறவுள்ளார்.
- இது இராணுவத்தில் மூன்றாவது துணைத் தளபதி பதவியாகும்.
- இது தவிர, போர்த் தகவலுக்கான பொது இயக்குனர் (Director General of Information Warfare) என்ற மற்றொரு புதிய பதவியும் உருவாக்கப் பட்டுள்ளது.

## காவல் நிலையங்களின் ஆண்டுத் தரவரிசை

| Rank | State | District | Police Station |
|---|---|---|---|
| 1 | Manipur | Thoubal | NongpokSekmai |
| 2 | Tamil Nadu | Salem City | AWPS-Suramangalam |
| 3 | Arunachal Pradesh | Changlang | Kharsang |
| 4 | Chhattisgarh | Surajpur | Jhilmili (Bhaiya Thana) |
| 5 | Goa | South Goa | Sanguem |
| 6 | Andaman & Nicobar Islands | North & Middle Andaman | Kalighat |
| 7 | Sikkim | East District | Pakyong |
| 8 | Uttar Pradesh | Moradabad | Kanth |
| 9 | Dadra & Nagar Haveli | Dadra & Nagar Haveli | Khanvel |
| 10 | Telangana | Karimnagar | Jammikunta Town PS |

- இந்தத் தரவரிசையை உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.
- இது 2015 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படுகிறது.
- மணிப்பூரின் தொளபால் மாவட்டத்தில் உள்ள நோங்போக் செக்மாய் காவல் நிலையமானது நாட்டின் மிகச் சிறந்த காவல் நிலையமாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள சேலம் நகரத்தின் சூரமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையமானது இந்தப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் சாங்லாங் மாவட்டத்தில் உள்ள கர்சங் காவல் நிலையமானது இதில் மூன்றாம் இடத்தைப் பிடித்துள்ளது.

## 7வது வாஷ் (நீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்) மாநாடு

- இது யுனிசெஃப், தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- வாஷ் (WASH - Water, Sanitation & Hygiene) என்ற இந்த மாநாட்டின் கருத்துரு "சுகாதாரம் முக்கியம்" (Hygiene Matters) என்பதாகும்.

- இந்திய அரசானது 2024 ஆம் ஆண்டிற்குள் அனைத்து வீடுகளுக்கும் பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீர் கிடைப்பதற்கும் அதனைப் பயன்படுத்துவதற்கும் வேண்டிய அணுகும் வசதியை ஏற்படுத்திட வேண்டும் என இலக்கு நிர்ணயித்துள்ளது.




## மிகவும் நம்பகத் தன்மை வாய்ந்த நிறுவனம்



India's Most Trusted Brands 2020: TRA report

| | | |
|---|---|---|
| 1. | DELL | LAPTOPS |
| 2. | MI | MOBILE PHONES |
| 3. | SAMSUNG | MOBILE PHONES |
| 4. | APPLE IPHONE | MOBILE PHONES |
| 5. | LG | TELEVISIONS |
| 6. | OPPO | MOBILE PHONES |
| 7. | SONY ENTERTAINMENT | HINDI - GEC |
| 8. | MARUTI SUZUKI | 4 WHEELER |
| 9. | SAMSUNG | TELEVISIONS |
| 10. | VIVO | MOBILE PHONES |

- டெல் நிறுவனமானது டிஆர்ஏ நிறுவனத்தின் 'நிறுவனங்கள் மீதான நம்பகத்தன்மை அறிக்கை 2020' என்ற ஒரு அறிக்கையில் தொடர்ந்து 2 ஆண்டுகளாக இந்தியாவின் மிகவும் நம்பகத் தன்மை கொண்ட ஒரு நிறுவனமாக உருவெடுத்துள்ளது.
- இதற்கு அடுத்து எம்ஐ என்ற கைபேசி நிறுவனமானது 2வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதற்கு அடுத்து சாம்சங் கைபேசி நிறுவனம் 3வது இடத்தையும் ஆப்பிள் ஐபோன் 4வது இடத்தையும் எல்ஜி தொலைக்காட்சி 5வது இடத்தையும் பிடித்துள்ளது.

## ஃபைசர் இந்தியா

- ஃபைசர் இந்தியா நிறுவனம், இந்தியாவில் கோவிட்-19 தடுப்பூசிக்கான அவசரகாலப் பயன்பாட்டு அங்கீகாரத்தை பெற வேண்டி இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு இயக்குனரகத்தை அணுகிய முதல் மருந்தக நிறுவனமாகும்.
- ஏற்கனவே இங்கிலாந்து மற்றும் பஹ்ரைன் ஆகியவை ஃபைசரின் தடுப்பூசியான BNT162b2 என்ற மருந்துக்கு அனுமதி அளித்துள்ளன.
- இந்தத் தடுப்பூசியைச் சேமிக்க மிகக் குறைந்த வெப்பநிலையான மைனஸ் 70 டிகிரி செல்சியஸ் தேவைப் படுகிறது.

- சீரம் இந்திய நிறுவனமானது ஆக்ஸ்போர்டு-அஸ்ட்ரா ஜெனெகா கோவிட் -19 தடுப்பூசியான 'கோவிஷீல்ட்' என்ற மருந்துக்கு அவசரகாலப் பயன்பாட்டு அங்கீகாரத்தை நாடுகிறது.
- சீரம் இந்திய நிறுவனம் உலகின் மிகப்பெரிய தடுப்பூசி உற்பத்தியாளர் நிறுவனம் ஆகும்.

## 9வது சர்வதேச மணல் திருவிழா

- சர்வதேச மணல் கலைத் திருவிழாவின் 9வது பதிப்பானது ஒடிசாவின் பூரி மாவட்டத்தின் கோனார்க்கில் உள்ள சந்திரபாகா கடற்கரையில் தொடங்கியது.
- உலகின் புகழ்பெற்ற மணல் கலை வல்லுநர் மற்றும் பத்மஸ்ரீ விருது பெற்றவரான சுதர்சன் பட்நாயக் என்பவர் இந்தத் திருவிழாவின் தலைமை மேற்பார்வையாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இந்தக் கலை வடிவத்திற்காக தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஒரு தளத்தை அளிக்கும் நாட்டில் உள்ள ஒரே மாநிலம் ஒடிசா ஆகும்.
- இந்த ஆண்டு, இந்தத் திருவிழாவின் கருத்துரு, "சுற்றுச்சூழல் மற்றும் கோவிட் - 19" என்பதாகும்.




## இந்தியாவின் உலகளாவிய புரிதல் திட்டம்

- சமீபத்தில் இந்தியக் கலாச்சார உறவுகள் மன்றமானது (Indian Council for Cultural Relations ICCR) இந்தியாவின் உலகளாவிய புரிதல் என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கி உள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ICCR மன்றமானது இதர நாடுகளில் உள்ள பள்ளிகளில் பயிற்றுவிக்கப் படும் பள்ளிப் புத்தகங்களை ஆய்வு செய்ய இருக்கின்றது.
- இது யுனெஸ்கோவின் நகர நிலப்பகுதி மேலாண்மைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் படுகின்றது.

## கொவேக்சின் (COVAXIN)

- பாரத் பயோடெக் நிறுவனமானது தனது உள்நாட்டிலேயே மேம்படுத்தப்பட்ட கோவிட்-19 தடுப்பு மருந்தான "கோவாக்ஸின்" என்பதற்காக இந்தியாவின் தலைமை மருந்து கட்டுப்பாட்டகத்திடம் (DGCI - Drugs Controller General of India) நெருக்கடி காலப் பயன்பாட்டு ஒப்புதலுக்காக விண்ணப்பித்துள்ளது.
- இந்த நடவடிக்கைகளின் மூலம், பைசர் மற்றும் சீரம் இந்திய நிறுவனம் ஆகியவற்றிற்குப் பிறகு இந்தியாவில் நெருக்கடி காலப் பயன்பாட்டிற்கான ஒப்புதலுக்கு விண்ணப்பித்த மூன்றாவது நோய்த் தடுப்பு நிறுவனம் ஹைதராபாத்தில் உள்ள பாரத் பயோடெக் நிறுவனம் ஆகும்.

- கோவேக்ஸின் ஆனது இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்துடன் இணைந்து பாரத் பயோடெக் நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே மேம்படுத்தப் பட்டுள்ளது.
- ஐக்கியப் பேரரசு மற்றும் பஹ்ரைன் ஆகியவற்றில் ஒப்புதல் பெற்ற பின்பு இந்தியாவில் அதற்காக விண்ணப்பித்த முதலாவது நிறுவனம் பைசர் (இந்தியா) ஆகும்.
- நெருக்கடி காலப் பயன்பாட்டிற்காக விண்ணப்பித்த இரண்டாவது நிறுவனம் சீரம் இந்தியா என்ற ஒரு நிறுவனமாகும்.
- சீரம் இந்தியா என்ற நிறுவனமானது கோவிட்ஷீல்டு நோய்த் தடுப்பு மருந்தின் ஒப்புதலுக்காக விண்ணப்பித்துள்ளது.
- இது ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் மற்றும் மருந்து உற்பத்தி நிறுவனமான ஆஸ்ட்ராஜெனேகா ஆகியவற்றினால் இணைந்து மேம்படுத்தப்பட்டுள்ளது.

## இந்தியக் கைபேசி மாநாடு – 2020

- மத்தியத் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் இந்திய செல்லுலார் செயற்பாட்டாளர்கள் கூட்டமைப்பு இணைந்து இந்தியக் கைபேசி மாநாட்டை நடத்தி உள்ளன.
- இது "உள்ளடக்கியப் புத்தாக்கம் – திறன்மிகு, பாதுகாப்பான, நீடித்த கருத்து" என்ற ஒரு கருத்துருவின் கீழ் நடத்தப்படுகின்றது.
- இது செயற்கை நுண்ணறிவு, இணைய வழிப் பாதுகாப்பு, தொடரேடு, தரவுப் பகுப்பாய்வு, பொலிவுறு நகரங்கள் மற்றும் இணையப் பொருட்கள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துகின்றது.

## இன்வெஸ்ட் இந்தியா

- சமீபத்தில் ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி மாநாட்டு அமைப்பானது (UNCTAD - United Nations Conference on Trade and Development) ஐக்கிய நாடுகள் முதலீட்டு ஊக்குவிப்பு விருது – 2020 என்ற விருதின் வெற்றியாளராக "இன்வெஸ்ட் இந்தியாவை" அறிவித்து உள்ளது.
- இந்த விருது வழங்கும் விழாவானது UNCTAD அமைப்பின் தலைமையகமான ஜெனீவாவில் நடைபெற்றது.
- ஐக்கிய நாடுகளின் இந்த விருதானது உலகில் உள்ள சிறந்த நடைமுறை முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனங்களின் தலைசிறந்த சாதனைகளை அங்கீகரித்து அனுசரிக்கின்றது.
- இன்வெஸ்ட் இந்தியா ஆனது மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் மத்திய தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறையின் கீழ் 2009 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- இது இந்திய முதலீட்டாளர்களுக்கு முதன்மை ஆதரவுத் தளமாகச் செயல்படும் ஒரு தேசிய முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் ஆதரவு நிறுவனமாகும்.
- இது ஒரு இலாப நோக்கற்ற நிறுவனமாகும்.

INVEST INDIA
NATIONAL INVESTMENT PROMOTION AND FACILITATION AGENCY

## தாரு பழங்குடியினர்

- ❖ சமீபத்தில் உத்தரப் பிரதேச மாநில அரசானது உலகம் முழுவதும் உள்ள தனது பூர்வீக தாரு பழங்குடியினரின் தனித்துவக் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ இவர்கள் கீழ்நிலை இமயமலைப் பகுதி அல்லது சிவாலிக்கில் அமைந்துள்ள கீழ்நிலைப் பகுதிகளில் வாழ்கின்றனர்.
- ❖ தாரு பழங்குடியினர் இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர்.
- ❖ இந்தியத் தராய் பகுதியில் இவர்கள் உத்தரகாண்ட், உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் வாழ்கின்றனர்.

## இந்தியாவில் மலேரியா

- ❖ முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2019 ஆம் ஆண்டில் 17.6% சரிவைக் கண்ட ஒரே நாடு இந்தியாவாகும்.
- ❖ மலேரியா நோயாளிகளை 59 சதவீதம் குறைத்து மேகாலயா மாநிலம் நாட்டில் முதலிடத்தில் உள்ளது.
- ❖ அதைத் தொடர்ந்து ஒடிசா மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

## நகர நிர்வாகக் குறியீடு

- ❖ பிரஜா அறக்கட்டளையானது சமீபத்தில் நகர நிர்வாகக் குறியீட்டை வெளியிட்டு உள்ளது.
- ❖ இது நகர்ப்புற நிர்வாகச் சீர்திருத்தங்களின் அடிப்படையில் தரவரிசை செய்யப் பட்டது.
- ❖ இதில் மாநிலங்களின் பட்டியலில் ஒடிசா முதலிடத்தில் உள்ளது.
- ❖ அதைத் தொடர்ந்து மகாராஷ்டிரா மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- ❖ இந்தப் பட்டியலில் மணிப்பூர் மற்றும் நாகாலாந்து ஆகியவை இறுதியில் தரவரிசைப் படுத்தப் பட்டிருந்தன.

## தேசிய டிஜிட்டல் சுகாதார திட்டம்

- ❖ இது 2021 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்தியா முழுவதும் வெளியிடப்படும்.
- ❖ பிரதமர் நரேந்திர மோடி 2020 ஆகஸ்ட் மாதம் தனது சுதந்திர தின உரையின் போது இதை அறிவித்தார்.
- ❖ தேசிய டிஜிட்டல் சுகாதார மேலாண்மைக் கொள்கையே தேசிய டிஜிட்டல் சுகாதார திட்டத்தின் அடிப்படையாகும்.
- ❖ டிஜிட்டல் சுகாதாரத் துறையில் இந்தியா ஒரு பயணத்தை மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.
- ❖ இது ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் ஒரு தனித்துவமான சுகாதாரக் கணக்கை வழங்கும், இதன்மூலம் அவர்களால் நாடு முழுவதும் சுகாதாரப் பராமரிப்புக்கு ஏற்படும் தேவையைச் சிக்கலில்லாமல் அணுக முடியும்.
- ❖ தேசிய டிஜிட்டல் சுகாதாரத் திட்டமானது ஒன்றியப் பிரதேசங்களில் சோதனை முறையில் நடந்தேறியது.

## ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை

- இந்தியாவின் 9 மாநிலங்களில் 'ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டை' கொள்கை வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டுள்ளதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இந்தக் கொள்கையை வெற்றிகரமாக செயல்படுத்திய 9 மாநிலங்கள் கோவா, ஆந்திரா, ஹரியானா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, உத்தரப் பிரதேசம், திரிபுரா மற்றும் குஜராத் ஆகியன ஆகும்.
- இத்திட்டத்தின் கீழ், பயனாளிகள் நாடு முழுவதும் உள்ள எந்தவொரு நியாய விலைக் கடைகளிலிருந்தும் மானிய விலையில் உணவு தானியங்களை வாங்க முடியும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் மிகப்பெரிய பயனாளி மாநிலம் உத்தரப் பிரதேசமாகும்.
- அதைத் தொடர்ந்து கர்நாடகா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் கீழ் உள்ள உணவு மற்றும் பொது விநியோகத் துறை இந்தத் திட்டத்திற்கான முதன்மைத் துறையாகும்.

## கோ-வின் (Co-Win) செயலி

- மத்திய சுகாதார நலத் துறை அமைச்சகமானது இந்த டிஜிட்டல் தளத்தை உருவாக்கி உள்ளது.
- இது கோவிட் -19 நோய்த் தடுப்பு மருந்து விநியோகம், தரவைப் பதிவு செய்தல் மற்றும் நோய்த் தடுப்பு மருந்திற்காக மக்கள் தாங்களாகவே பதிவு செய்து கொள்வதற்கு வழிவகை செய்தல் ஆகியவற்றின் நிகழ்நேரக் கண்காணிப்பிற்காகப் பணியாற்ற உள்ளது.
- இந்த Co-Win தளத்தின் மூலம், மக்கள் நோய்த் தடுப்பு மருந்திற்காக தாங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும்.

## புதிய நாடாளுமன்றக் கட்டிடம்

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள சன்சத் மார்க்கில் புதிய நாடாளுமன்ற கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.
- இந்தத் திட்டத்தின் கட்டுமானத்திற்கு டாடா திட்ட நிறுவனத்திடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இது ரூ.971 கோடி செலவில் 64,500 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் அமையவுள்ளது.
- இந்தப் பணி 2022 அல்லது அதற்கு முன்பு முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்தியாவானது தனது எழுபத்து ஐந்தாவது சுதந்திர தினத்தை 2022 ஆம் ஆண்டில் கொண்டாட உள்ளது.
- இந்தப் புதிய பாராளுமன்றக் கட்டிடமானது, 888 கீழவை இருக்கைகளுடனும் 384 மேலவை இருக்கைகளுடனும் சேர்த்து ஒரு மிகப்பெரிய மக்களவை மற்றும் மாநிலங்களவை வளாகத்தைக் கொண்டிருக்கும்.
- இது நாடாளுமன்றத்தின் கூட்டுக் கூட்டத் தொடரின் போது 1224 உறுப்பினர்களுக்கு இடமளிக்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது.
- இந்தப் புதிய நாடாளுமன்றக் கட்டிடமானது தற்பொழுது உள்ள நாடாளுமன்றத்தில் உள்ளவாறு மைய வளாகத்தைக் கொண்டிருக்காது.



## சிந்து சமவெளி நாகரிகத்தில் (IVC) இறைச்சி

- ஒரு புதிய ஆய்வானது சிந்து சமவெளி நாகரித்தில் (Indus Valley Civilization - IVC) விலங்கின் உடல் பொருட்கள் பயன்படுத்தப்பட்டு இருப்பதைக் கண்டுபிடித்து உள்ளது.
- இது பீங்கான் பாத்திரங்களில் கால்நடை மற்றும் எருமை இறைச்சி பயன்படுத்தப் பட்டுள்ளதையும் உள்ளடக்கியுள்ளது.
- மக்கள் தங்களது பால்வளத் தேவைகளுக்காகவும் வேண்டி கால்நடைகளை வைத்து இருந்தனர்.
- மேலும் இந்த ஆய்வானது கோடை காலம் மற்றும் குளிர் காலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பயிரிடப்படும் முறை நடைமுறையில் இருந்ததையும் கண்டுபிடித்துள்ளது.
- இங்கு பார்லி, கோதுமை, அரிசி மற்றும் தானியங்கள் இருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.
- இது IVC நாகரீகத்தில் 4600 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தவையாகும்.
- இந்த ஆய்வானது உத்தரப் பிரதேசத்தின் ஆலம்கீர்பூரில் உள்ள 4 கிராமங்கள் மற்றும் ஹரியானாவில் 5 இடங்கள் என 5 தளங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இது கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயிலும் அக்சயேத்தா சூரியநாராயணா என்பவரால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இது தொல்லியல் அறிவியல் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

## இந்திய நீர்த் தாக்க மாநாடு

- இதே வகையைச் சேர்ந்த முதலாவது மாநாடு இதுவாகும்.
- இது கங்கையைத் தூய்மைப் படுத்தும் முறையைத் தழுவுவதற்கான முறைகள் குறித்த தேவை குறித்து விவாதிப்பதையும் அது குறித்த செய்தியைப் பரப்புவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது தேசியத் தூய்மை கங்கைத் திட்டம் மற்றும் கங்கை நதி வழிநிலப் பகுதி ஆய்வுகள் மையம் ஆகியவற்றினால் இணைந்து நடத்தப்படுகின்றது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "அர்த்த கங்கையின் மீது கவனம் செலுத்துவதுடன் நதிகள் மற்றும் நீர் நிலைகளின் விரிவான ஆய்வு மற்றும் முழுமையான ஒரு மேலாண்மை" என்பதாகும்.

## நகர வாழ்க்கைத் தரம்

- இது பம்பாயில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப மையத்தினால் தொகுக்கப்பட்டது.
- இந்த ஆய்வானது இந்தியாவில் 14 நகரங்களின் விரிவான ஒப்புமைசார் நகர மேம்பாட்டுத் தரத்தை அளவிடுகின்றது.
- முதன்முறையாக பாலினச் சமநிலையானது இதில் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டது.

### *முக்கிய அம்சங்கள்*

- இதில் முதலிடத்தில் உள்ள நகரம் மும்பை ஆகும்.
- மிகவும் மோசமான நிலையில் உள்ள நகரம் பாட்னா ஆகும்.
- பெண்களுக்கு உகந்த நகரம் சென்னை ஆகும்.
- பெண்கள் வாழ்வதற்கு உகந்ததில் கடைசி இடத்தில் (மிகவும் மோசமான நிலையில்) உள்ள நகரம் பாட்னா ஆகும்.
- பெண்களுக்கு எதிராக அதிக குற்ற விகிதத்தைக் கொண்ட நகரம் ஜெய்ப்பூர் ஆகும்.
- பெண்களுக்கு எதிராக குறைந்த குற்ற விகிதத்தைக் கொண்ட நகரம் சென்னை ஆகும்.

**IIT-B RANKING OF INDIAN CITIES**

| Index | Highest ranked | Lowest ranked |
|---|---|---|
| Basic amenities | Pune | Patna |
| Economic development | Mumbai | Patna |
| Safety and security | Kolkata | Patna |
| Transportation access | Delhi | Indore |
| Environmental impact | Mumbai | Lucknow |
| Infrastructure development | Kolkata | Patna |
| Gender role | Chennai | Patna |

## கொள்ளை நோய் மேலாண்மை குறித்த பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) ஆய்வு

- கோவிட்-19 தொற்றை மேலாண்மை செய்த மாநிலங்களின் பட்டியலில் வடகிழக்கு மாநிலங்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளன.
- இதற்கு அடுத்து இதில் பீகார் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இந்தப் பட்டியலில் இராஜஸ்தான், மகாராஷ்டிரா, இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கடைசி இடங்களில் உள்ளன.
- இந்தப் பட்டியலில் வடகிழக்குப் பிராந்தியமானது நுண் பொருளாதாரக் குறிகாட்டிகளில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதற்கு அடுத்து இதில் இமாச்சலப் பிரசேதம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகியவை தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இந்தப் பிரிவில் பீகார், ஆந்திரப் பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகியவை கடைசி இடங்களில் உள்ளன.
- மத்திய அரசின் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தும் மாநிலங்களின் பட்டியலில் உத்தரப் பிரதேசம், குஜராத் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை முதலிடங்களைப் பிடித்துள்ளன.

- இதில் கோவா, மேற்கு வங்காளம் மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன.
- இந்த அளவீட்டிற்காக ஒரு தேசம் ஒரு குடும்ப அட்டைத் திட்டம், பிரதான் மந்திரி சுவநிதி, பிரதான் மந்திரி சம்மன், அவசர கால கடன் இணைப்பு உத்தரவாதத் திட்டம், பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா ஆகிய 5 திட்டங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்டன.
- இதில் அனைத்துத் திட்டங்களிலும் வடகிழக்குப் பகுதி ஆனது முதலிடத்தைப் பிடித்து உள்ளது. இதற்கு அடுத்து இதில் உத்தரப் பிரதேசம் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- இதில் சத்தீஸ்கர், மேற்கு வங்காளம் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகியவை கடைசி இடங்களில் உள்ளன.

## விஸ்வாஸ் (VISVAS) திட்டம்

- மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சகமானது வன்ஜித் இகாய் சமூக் அவுர் வர்கோன் கி அர்த்திக் சஹாயாதா (VISVAS - Vanchit Ikai Samooh aur Vargon ki Aarthik Sahayta) என்ற ஒரு திட்டத்தைத் தொடங்கவுள்ளது.
- இது ரூ.3 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டுள்ள பட்டியலிடப்பட்ட வகுப்பினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது சுய உதவிக் குழுக்களுக்கான ஒரு வட்டி இடையீட்டுத் திட்டமாகும்.

## 'இலக்கு 2035: இந்தியாவில் பொது சுகாதாரக் கண்காணிப்பு'

- நிதி ஆயோக்கானது இந்த வெள்ளை அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையானது இந்தியாவில் 3 அடுக்கு சுகாதார அமைப்பை (முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை) ஆயுஷ்மான் பாரத்துடன் ஒருங்கிணைக்க முனைகிறது.

## நிலையான மலை மேம்பாட்டு உச்சி மாநாடு

- இந்த உச்சி மாநாட்டின் ஒன்பதாவது பதிப்பு உத்தரகாண்ட் மாநிலத்தின் டெஹ்ராடூனில் தொடங்கியது.
- இந்த ஆண்டின் கருத்துரு 'கோவிட் 19 தொற்றுக்குப் பிந்தைய நெகிழ்திறன் கொண்ட மலைப் பகுதிப் பொருளாதாரம், அதன் ஏற்பாடு, புதுமை மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக வெளிப்படும் பாதைகள்' என்பதாகும்.
- இந்திய மலைகள் முன்னெடுப்பு என்ற ஒரு அமைப்பானது இந்த உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது.

## மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளிப்பதற்கான தேசிய மையம்

- இந்தியாவில் இதுவே இம்மாதிரியான முதல் வகையாகும்.
- இது மத்திய ஆயுதக் காவல் படையால் நிறுவப் பட்டது.
- பணியில் இருக்கும் போது பாதிக்கப்பட்ட திவ்யாங் (மாற்றுத் திறனாளி) வீரர்களை மீண்டும் திறமைப்படுத்தி மறுவாழ்வு அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மையம் தெலுங்கானாவின் ரங்காரெட்டி மாவட்டத்தில் உள்ள மத்திய ஆயுதக் காவல் படைக் குழு மையத்தில் அமைந்துள்ளது.

## 2019-20 ஆம் நிதியாண்டிற்கான தேசியக் குடும்பச் சுகாதார ஆய்வு (NFHS-5)

- இது மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகத்தால் தொடங்கப் பட்டு உள்ளது.
- இது கடைசியாக வெளியிடப் பட்டு (NFHS-4 2015-16) 4 ஆண்டுகளுக்குப் பிறகு தற்பொழுது வெளியிடப் பட்டுள்ளது.
- மொத்தப் பிறப்பு விகிதமானது (Total Fertility Rate - TFR) பெரும்பான்மையான மாநிலங்களில் குறைந்துள்ளது.
- பீகார், மணிப்பூர், மேகாலயா ஆகிய மாநிலங்களைத் தவிர இதர அனைத்து மாநிலங்களும் 2.1 அல்லது அதற்குக் குறைவான TFR விகிதத்தைக் கொண்டுள்ளன.
- இது பெரும்பான்மையான மாநிலங்கள் மாற்று நிலை பிறப்பு விகிதத்தை எட்டி உள்ளதைக் குறிக்கின்றது.
- தற்பொழுது அசாமில் பாலின விகிதமானது பெண்களுக்குச் சாதகமானதாக மாறி உள்ளது.
- 2019-2020 ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் 1000 ஆண்களுக்கு 1012 பெண்கள் உள்ளனர்.




## விக்யான் யாத்திரை

- இது அறிவியல்சார் முயற்சியை ஊக்குவிக்கும் ஒரு ஊக்குவிப்பு நடவடிக்கையாகும்.
- இது 6வது இந்திய சர்வதேச அறிவியல் திருவிழாவின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப் படுகின்றது.



- இந்த நிகழ்வானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தால் நடத்தப் படுகின்றது.
- இந்த ஆண்டிற்கான இதன் கருத்துரு, "சுயசார்பு இந்தியா மற்றும் உலகளாவிய நலத்திற்கான அறிவியல்" என்பதாகும்.

## வெளிநாடு வாழ் இந்தியர்கள்

- அண்மையில், கர்நாடக உயர்நீதிமன்றமானது வெளிநாடு வாழ் இந்தியர்கள் பிரிவின் கீழ் உள்ள மாணவர்கள் தொழில்முறைப் படிப்புகளில் சேருவதற்கு வேண்டி அவர்களை "இந்தியக் குடிமக்கள்" எனக் கருத வேண்டும் என்று கூறியுள்ளது.
- 1955 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டத்தில் திருத்தங்களைச் செய்து 'வெளிநாடு வாழ் இந்தியர்கள் குடியுரிமை' (OCI - Overseas Citizenship of India) என்ற திட்டத்தை 2005 ஆம் ஆண்டில் இந்திய அரசு அறிமுகப்படுத்தியது.
- 2015 ஆம் ஆண்டு 09 ஜனவரி அன்று, இந்திய வம்சாவளியினர் அட்டை (PIO - Persons of Indian Origin) வழங்குவதை நிறுத்தி விட்டு அதனை OCI அட்டையுடன் இந்திய அரசு இணைத்து விட்டது.

## பிராண்ட் இந்தியா மிஷன்

- நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக வேண்டி இந்தத் திட்டத்தை இந்திய அரசு தொடங்க உள்ளது.
- இந்த பணியானது வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தினால் இயக்கப் பட இருக்கின்றது.
- உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதே இதன் முக்கிய ஒரு நோக்கமாகும்.
- துவக்கத்தில் டயர் மற்றும் ரப்பர் தொழில் சார்ந்த அமைப்புகளில் கவனம் செலுத்துவதே இதன் நோக்கமாகும்.

## தபால் வாக்கு முறை

- இந்தியத் தேர்தல் ஆணையமானது சில நாடுகளில் வாழும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்காக (NRI – Non Resdient Indian) தபால் வாக்குகளைச் சோதனை அடிப்படையில் அறிமுகப் படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்தப் பரிந்துரையானது அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, ஜப்பான், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, பிரான்சு மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளில் வாழும் NRI வாக்காளர்களுக்காக முதன்முறையாக செயல்படுத்தப்பட உள்ளது.
- மொத்தமுள்ள 1.18 இலட்சம் NRI வாக்காளர்களில், அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் (89,000ற்கும் மேல்) கேரளாவில் பதிவு செய்யப் பட்டுள்ளனர்.
- இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் (ஏறத்தாழ 7500) ஆந்திரப் பிரதேசத்தில் பதிவு செய்யப் பட்டுள்ளனர்.
- இந்தியாவின் வெளிநாடு வாழ் இந்தியர்களின் எண்ணிக்கையானது 16 மில்லியன் மக்களுடன் உலகில் மிகப் பெரியதாக விளங்குகின்றது.
- NRI மக்களுக்கான வாக்குரிமையானது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 என்ற சட்டத்தில் ஒரு திருத்தம் செய்ததன் மூலம் 2011 ஆம் ஆண்டில் தான் அறிமுகப் படுத்தப்பட்டது.

- NRI வாக்காளர்கள் தங்களின் கடவுச் சீட்டில் குறிப்பிடப் பட்டுள்ள அவர்களது வசிப்பிடம் உள்ள தொகுதியில் மட்டுமே சென்று வாக்களிக்க முடியும்.
- இவர்கள் நேரில் சென்று மட்டுமே வாக்களிக்க முடியும். இவர்கள் தங்களது அடையாளத்திற்காக வேண்டி வாக்களிக்கும் இடத்தில் தங்கள் அசல் கடவுச் சீட்டை அங்குள்ள அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

## இ-சஞ்சீவனி தொலைதூர மருத்துவம்

- சமீபத்தில் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகமானது ஒரு மில்லியன் என்ற அளவில் இ-சஞ்சீவனி தொலைதூர மருத்துவ ஆலோசனைகளைக் கடந்துள்ளதாக அறிவித்துள்ளது.
- சுகாதாரச் சேவையை ஆன்லைனில் வழங்கும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது முறை இதுவாகும்.
- இது ஆயுஷ்மான் பாரத் – சுகாதார மற்றும் நல மையத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படுகின்றது.
- அதிக எண்ணிக்கையிலான தொலைதூர மருத்துவ ஆலோசனைகளைப் பதிவு செய்துள்ள 2 மாநிலங்கள் தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகியவையாகும்.




## சுங்க நிலை இல்லாத இந்தியா

- மத்திய அரசானது தடையற்ற வாகன இயக்கத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் சுங்கக் கட்டண வசூலிப்பிற்காக புவியிடங் காட்டியை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது இந்தியாவை "சுங்க சாவடித் தடையற்றதாக" மாற்றும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- புவியிடங்காட்டியை அடிப்படையாகக் கொண்ட சுங்கக் கட்டண வசூலிப்பு முறையின் கீழ் வாகனங்களின் இயக்கங்களின் அடிப்படையில் சுங்கக் கட்டணமானது குறிப்பிட்ட நபரின் வங்கிக் கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

## கடல்சார் பகுதி கட்டுப்பாட்டகம்

- இந்தியாவின் முதலாவது கடல்சார் பகுதி கட்டுப்பாட்டகமானது (Maritime Theatre Command - MTC) 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது.
- இது இந்திய விமானப் படை, இந்தியக் கடற்படை, இந்திய ராணுவம் மற்றும் இந்திய கடலோரக் காவல் படையின் சொத்துகளை ஒருங்கிணைக்க உள்ளது.

- இது மேற்குக் கடற்படைக் கட்டுப்பாட்டகம் (மும்பை), அந்தமான் நிக்கோபார் முச்சேவை கட்டுப்பாட்டகம் (போர்ட் பிளேயர்), கிழக்குக் கடற்படைக் கட்டுப்பாட்டகம் (விசாகப்பட்டினம்) மற்றும் தெற்கு வான்படை கட்டுப்பாட்டகம் (திருவனந்தபுரம்) ஆகியவற்றை ஒன்றிணைக்க உள்ளது.
- மிகப்பெரிய இராணுவ மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக உருவாக்கப்படும் முதலாவது புவியியல்சார் பகுதி கட்டுப்பாட்டகம் இதுவாகும்.




## DRIP 2

- சமீபத்தில் உலக வங்கியானது இந்தியாவில் தற்பொழுதுள்ள அணைகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் அவற்றின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காகவும் வேண்டி 250 மில்லியன் அமெரிக்க டாலர் நிதிக்கு ஒப்புதல் வழங்கி உள்ளது.
- DRIP (Dam Rehabilitation and Improvement Project) என்பது அணைப் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் என்பதைக் குறிக்கின்றது.
- இது உலக வங்கியிடமிருந்துப் பெறப்படும் கடன் உதவியுடன் செயல்படுத்தப் படுகின்றது.
- இந்தத் திட்டமானது ஆரம்பத்தில் கர்நாடகா, ஜார்க்கண்ட், கேரளா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், ஒடிசா, உத்தரகாண்ட் மற்றும் தமிழ்நாடு ஆகிய 7 மாநிலங்களில் தொடங்கப் பட்டது.

## மீயொலி வேக காற்று சுரங்க வழி வசதி

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் அவர்கள் இந்தியாவின் முதலாவது மீயொலி வேக காற்று சுரங்க வழி வசதியை (hypersonic wind tunnel facility) ஹைதராபாத்தில் தொடங்கி வைத்தார்.
- ரஷ்யா மற்றும் அமெரிக்காவிற்குப் பிறகு செயல்படும் திறன் மற்றும் அளவின் அடிப்படையில் இது போன்ற ஒரு வசதியைப் பெற்ற 3வது நாடு இந்தியா ஆகும்.

## பண்டிட் தீனதயாள் உபாத்யாய் தொலைத்தொடர்பு திறன் சிறப்புமிகு விருதுகள்

- மத்தியத் தகவல் தொடர்பு மற்றும் மின்னணு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சரான ரவி சங்கர் பிரசாத் அவர்கள் தொலைத்தொடர்பு திறன் சிறப்புமிகு விருதுகளை வழங்கினார்.
- முதலாவது விருதானது சீனிவாஸ் கரணம் அவர்களால் வென்று எடுக்கப் பட்டது.

- ஆழ்கடல் தகவல் தொடர்புக்காக வேண்டி விலை குறைந்த தொழில்நுட்பத் தீர்வை மேம்படுத்தியதற்காக இவருக்கு இந்த விருது வழங்கப் பட்டுள்ளது.



## E5 தொடர் ஷின்கன்சென்

- சமீபத்தில் ஜப்பான் நாடானது மும்பை – அகமதாபாத் அதிவேக புல்லட் இரயில் திட்டத்தின் முதலாவது தொடரை வெளியிட்டுள்ளது.
- E5 தொடர் ஷின்கன்சென் ரயில்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டி பயன்படுத்தப் படுகின்றன.
- இந்தத் திட்டமானது 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட உள்ளது.
- E5 ஷின்கன்சென் இரயில்கள் என்பவை அதிவேக ஜப்பான் இரயில்களாகும்.



## ஹைட்ரோ கார்பன் உற்பத்தி செய்யப்படும் வடிநிலம்

- எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு துரப்பனக் கழகமானது இந்தியாவின் 8வது ஹைட்ரோ கார்பன் உற்பத்தி செய்யப்படும் வடிநிலப் பகுதியைத் திறந்துள்ளது.
- இது மேற்கு வங்கத்தில் உள்ள அசோக் நகரில் திறக்கப் பட்டுள்ளது.
- இது கிருஷ்ணா-கோதாவரி, மும்பை கடற்கரைப் பகுதி, அசாம் திட்டுப் பகுதி, ராஜஸ்தான், காவிரி, அசாம்-அராக்கன் மடிப்பு மற்றும் காம்பே ஆகிய பகுதிகளுடன் சேர்ந்துள்ளது.
- இந்தியாவில் மொத்தம் 26 வடிநிலப் பகுதிகள் உள்ளன.
- இதில் 16 நிலப்பகுதியிலும் 7 நிலப்பகுதி மற்றும் கடற்கரைப் பகுதியிலும், 3 முழுவதுமாக கடற்கரைப் பகுதியிலும் உள்ளன.

## இமயமலை டிரில்லியம்

- இது இமயமலையின் ஒரு பொது மூலிகைச் செடியாகும்.
- இது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தினால் "அருகி வரும் இனமாக" அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்தியாவில் இது இமாச்சலப் பிரதேசம், ஜம்மு காஷ்மீர், சிக்கிம், உத்தரகாண்ட் ஆகிய 4 மாநிலங்களில் மட்டுமே காணப்படுகின்றது.



## திறன் மேம்பாட்டிற்கான இந்தியாவின் முதலாவது சிறப்புமிகு மையம்

- சமீபத்தில் திறன்மிகு இந்திய கழகமானது மின்துறையில் திறன் மேம்பாட்டிற்காக ஒரு சிறப்புமிகு மையத்தை உருவாக்கியுள்ளது.
- இந்த மையமானது ஹரியானாவின் குருகிராமில் உள்ள தேசிய சூரிய ஒளி ஆற்றல் உற்பத்தி மையத்தின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த மையமானது மத்தியத் திறன் மேம்பாட்டு மற்றும் தொழில்முனைவுத் துறை அமைச்சகம், பிரான்சு அரசின் தேசியக் கல்வித் துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் துறை அமைச்சகம் மற்றும் ஸ்னேய்டர் மின்உற்பத்தி நிறுவனம் ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

## 5வது உலகத் தொழில்நுட்ப மாநாடு

- இது கார்னேஜி இந்திய நிறுவனத்துடன் இணைந்து இந்திய அரசின் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தினால் (Ministry of External Affairs - MEA) காணொலி வாயிலாக நடத்தப்பட்டது.
- இந்த ஆண்டின் கருத்துரு, "தொழில்நுட்பத்தின் புவிசார் அரசியல்" என்பதாகும்.
- இது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தினால் நடத்தப்படும் 4 தலைமை வருடாந்திரக் கருத்தரங்குகளில் ஒன்றாக விளங்குகின்றது.
- ராய்சினா விவாதம், புவியியல்-பொருளாதார விவாதம், இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கு ஆகியவை இதர 3 கருத்தரங்குகளாகும்.

## ASSOCHAM அமைப்பின் 100வது ஆண்டு

- ASSOCHAM (Associated Chambers of Commerce / வர்த்தகத்திற்காக இணைக்கப்பட்ட அடித்தளம்) என்ற அமைப்பானது இந்தியாவில் வர்த்தகம் மற்றும் வர்த்தகத்தின் நலன்களைக் குறிக்கிறது.

- பூர்வாங்கச் சான்றிதழ்களை வழங்கவும், வணிக விலைப் பட்டியல்களுக்குச் சான்றளிக்கவும், வணிகத்திற்காக நுழைவு வசதியினைப் பரிந்துரைக்கவும் வேண்டி ASSOCHAM ஆனது இந்திய அரசால் அங்கீகரிக்கப் பட்டுள்ளது.
- இது 1920 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இந்தக் கொண்டாட்டத்தின் கருத்துரு "இந்தியாவின் தாங்குத்தன்மை: 5 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிலான பொருளாதாரத்தை நோக்கிய ஆத்ம நிர்பர் பாதையின் வரைபடம்" என்பதாகும்.
- தொழிலதிபர் ரத்தன் டாடாவிற்கு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 'ASSOCHAM நூற்றாண்டிற்கான நிறுவனம்' என்ற விருதை வழங்கினார்.
- டாடா குழுமத்தின் சார்பாக ரத்தன் டாடா மதிப்பு மிக்க இந்த விருதைப் பெற்றுக் கொண்டார்.

## உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்திற்காகப் புதிய பாதைகள்

- சமீபத்தில் மத்திய அரசானது உள்நாட்டு நீர்வழிப் பாதைகளின் மூலம் படகுப் போக்குவரத்திற்காக வேண்டி புதிய பாதைகளை அடையாளம் கண்டுள்ளது.
- இந்தப் புதிய பாதைகள் ஹசிரா, சோம்நாத் கோயில், ஒக்கா மற்றும் ஜாம்நகர் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன.
- மேலும், சர்வதேசப் பாதைகளில் உள்ள இடங்களும் சாகர்மாலா என்ற திட்டத்தின் கீழ் அடையாளம் காணப் பட்டுள்ளன.
- சாகர்மாலா திட்டமானது 7500 கிலோ மீட்டர் தொலைவுள்ள கடற்கரையைப் பயன்படுத்தி நாட்டில் உள்ள துறைமுகங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- ஏறத்தாழ 6 சர்வதேசப் பாதைகள் இதற்காக அடையாளம் காணப் பட்டுள்ளன.
- இந்தப் பாதைகள் செசல்ஸ், வங்க தேசத்தின் சட்டோகிராம், மடகாஸ்கர் மற்றும் இலங்கையின் ஜாப்னா ஆகிய 4 சர்வதேச இடங்களை உள்ளடக்கியுள்ளது.
- இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையமானது நாட்டின் சரக்குக் கையாளுகைத் திறனை 2021-22 ஆம் ஆண்டில் 100 மில்லியன் டன்களாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளது.

## இந்திய சர்வதேச அறிவியல் திருவிழா (IISF)

- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 22 அன்று பிரதமர் மோடி அவர்கள் 6வது இந்திய சர்வதேச அறிவியல் திருவிழாவை (IISF - India International Science Festival) தொடங்கி வைத்தார்.
- இந்தத் திருவிழாவின் கருத்துரு, "தன்னிறைவு இந்தியா மற்றும் உலக நலனிற்கான அறிவியல்" என்பதாகும்.
- விக்யான் யாத்திரையானது IISF-2020 விழாவினை முன்னிட்டு அறிவியல் மனப்பான்மையை அதிகரிப்பதற்காக வேண்டி டிசம்பர் 14 அன்று தொடங்கி வைக்கப் பட்டது.
- இது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சகம், உயிரித் தொழில்நுட்பத் துறை, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், மத்தியப் புவி அறிவியல் துறை அமைச்சகம், விஜ்னானா பாரதி என்ற ஒரு அறிவியல் நிறுவனம் ஆகியவற்றினால் கருத்தாக்கம் செய்யப் பட்டது.
- இதன் நோக்கம் அன்றாட வாழ்வில் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதவியல் பயன்பாட்டை ஊக்குவிப்பதாகும்.




## அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் 100வது ஆண்டு (AMU)

- பிரதமர் மோடி அவர்கள் அலிகார் முஸ்லீம் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழாவைக் குறிப்பதற்காக ஒரு அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளார்.
- உத்தரப் பிரதேசத்தில் உள்ள AMUவின் (Aligarh Muslim University) ஒரு நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்து கொள்வது இதுவே முதன்முறையாகும்.
- மேலும் கடந்த 50 ஆண்டு கால வரலாற்றில் இந்த பல்கலைக்கழகத்தின் நிகழ்வுகளில் பிரதமர் ஒரு "தலைமை விருந்தினராக" கலந்து கொள்வது இதுவே முதன்முறையாகும்.
- பிரதமர் மோடி அவர்கள் AMU பல்கலைக்கழகத்தை "ஒரு சிறிய இந்தியா" என்று புகழ்ந்து உள்ளார்.
- AMU ஆனது ஒரு இந்தியச் சட்டமன்றச் சட்டத்தின் மூலம் 1920 ஆம் ஆண்டில் ஒரு பல்கலைக் கழகமாக மாறியது.
- இது முகம்மதியன் ஆங்கிலோ ஓரியண்டல் கல்லூரி (Mohammedan Anglo Oriental - MAO) என்ற நிலையிலிருந்து ஒரு மத்தியப் பல்கலைக்கழகம் என்ற நிலைக்கு அதனை உயர்த்தியுள்ளது.
- MAO ஆனது 1877 ஆம் ஆண்டில் சர் சையது அகமது கான் அவர்களால் அமைக்கப் பட்டது.
- அதன் பிறகு இந்தக் கல்லூரியானது அலிகார் இயக்கம் எனப்பட்டது.
- இது இந்திய முஸ்லீம் மக்களுக்காக வேண்டி ஒரு நவீனக் கல்வி அமைப்பை ஏற்படுத்துவதன் தேவையை வலியுறுத்தியது.
- இது மலப்புரம் (கேரளா), AMU முர்ஷிதாபாத் மையம் (மேற்கு வங்கம்) மற்றும் கிசான்கன்ஜ் மையம் (பீகார்) ஆகிய 3 இடங்களில் கீழ்நிலை வளாக மையங்களைக் கொண்டிருக்கின்றது.



## டிஜிபாக்ஸ் (Digi Boxx)

- இது நிதி ஆயோக்கின் தலைமை செயல் அதிகாரியான அமிதாப் காந்த் அவர்களால் அறிவிக்கப் பட்டது.
- இது இந்தியாவின் முதலாவது டிஜிட்டல் சொத்து மேலாண்மைத் தளமாகும்.
- இது ஒரு கோப்புப் பகிர்வு மற்றும் மேக வழிச் சேமிப்பு (Cloud Storage) தளமாகும்.
- இது மாதத்திற்கு 20 ஜிபி இலவச மேக வழிச் சேமிப்பு வசதியையும் 100 ஜிபி இலவச தளத்தையும் வழங்குகின்றது.
- இது போன்ற சேமிப்புகளுக்காக இது மாதத்திற்கு 20 ரூபாயை மட்டுமே கட்டணமாக வசூலிக்கின்றது.
- இது இந்தியாவின் ஒரு முக்கியக் கொள்கையான "இந்தியாவில் தயாரிப்போம், இந்தியாவில் சேமிப்போம்" என்பதின் கீழ் தொடங்கப்பட்ட இதே வகையைச் சேர்ந்த முதலாவது முன்னெடுப்பாகும்.
- இது தேசியப் பாதுகாப்பு மற்றும் தரவு ஒரிடப் படுத்துதல் போன்ற முன்னுரிமைகளின் வரிசையில் தொடங்கப்பட்ட மென்பொருளை ஒரு சேவையாகக் கொண்ட ஒரு கூறு ஆகும்.




## இரயில்வேயில் அந்நிய நேரடி முதலீடு

- இரயில்வேயில் 25000 கோடி ரூபாய் மதிப்புள்ள மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் திட்டத்தை பிரான்சின் ஆல்ஸ்டோம் நிறுவனம் வென்றுள்ளது.
- இந்த நிறுவனம் இந்திய ரயில்வே நிறுவனத்திற்கு 12,000 குதிரைத்திறன் கொண்ட 800 முழு மின்சார என்ஜின்களை வழங்கும் ஒரு ஒப்பந்தத்தை வென்றுள்ளது.
- இவை 120 கி.மீ வேகத்தில் சுமார் 6,000 டன்களை இழுக்கும் திறன் கொண்டவை ஆகும்.
- உள்நாட்டில் அதிக சக்தி கொண்ட மின்சார என்ஜின்களை உற்பத்தி செய்யும் ஆறாவது நாடாக இந்தியா திகழ்கிறது.
- பிற நாடுகள் ரஷ்யா, சீனா, ஜெர்மனி மற்றும் சுவீடன் ஆகும்.
- 2018 ஆம் ஆண்டில், பீகாரில் உள்ள மாதேபுரா தொழிற்சாலையிலிருந்து 12,000 குதிரைத் திறன் கொண்ட முதல் மின்சார என்ஜின் துவக்கி வைக்கப் பட்டது.

## விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் 100வது ஆண்டு

- இது மேற்கு வங்கத்தின் சாந்தி நிகேதனில் அமைந்துள்ள ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனம் மற்றும் பொது ஆராய்ச்சி மத்தியப் பல்கலைக்கழகமாகும்.
- இது 1921 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று ரவீந்திரநாத் தாகூர் அவர்களால் தொடங்கப் பட்டது.

- விஸ்வ-பாரதி ஆனது 1951 ஆம் ஆண்டில் நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் ஒரு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனம் மற்றும் ஒரு மத்தியப் பல்கலைக்கழகமாக அறிவிக்கப் பட்டது.

## லித்தியம் சுத்திகரிப்பு நிலையம்

- இந்தியாவின் முதலாவது லித்தியம் சுத்திகரிப்பு நிலையமானது குஜராத்தில் அமைக்கப்பட உள்ளது.
- சுத்திகரிப்பிற்கான லித்தியம் ஆனது ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட உள்ளது.
- மணிக்கரன் ஆற்றல் நிறுவனமானது இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்காக ரூ.1000 கோடியை முதலீடு செய்ய உள்ளது.
- இந்தியாவின் 3வது மிகப்பெரிய ஆற்றல் வர்த்தக நிறுவனம் மணிக்கரன் ஆகும்.
- அரிய வகைத் தனிமமான லித்தியம் ஆனது இந்தியாவில் காணப் படுவதில்லை.
- சமீபத்தில் இந்தியாவானது பொலிவியா நாட்டின் லித்தியத்தை பயன்படுத்திக் கொள்ள அனுமதி பெற்றது.
- பொலிவியா ஆனது உலக லித்தியம் இருப்பில் 4ல் 1 பகுதியைக் கொண்டுள்ளது.
- சீனாவானது உலக லித்தியத்தில் 51% பங்கையும் 62% கோபால்ட்டையும் கொண்டு இருக்கின்றது.
- இந்த 2 தனிமங்கள் லித்தியம்-அயனி மின்கலன்களில் ஒரு முக்கியப் பொருட்களாக உள்ளன.
- இந்தியாவில் எதிர்கால லித்தியத் தேவையானது மின்சாரப் போக்குவரத்து மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சேமிப்பு ஆகியவற்றினால் வழி நடத்தப் படுகின்றது.

## முதன்மை ஆற்றல் கலவை

- இந்திய அரசானது நாட்டின் முதன்மை ஆற்றல் கலவையில் இயற்கை எரிவாயுவின் பங்கை தற்பொழுதுள்ள 6.2% என்ற அளவிலிருந்து 2030 ஆம் ஆண்டில் 15% அளவிற்கு அதிகரிக்க முடிவு செய்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் பிரதமர் மோடி அவர்கள் "ஒரு நாடு ஒரு எரிவாயுத் தொடர்" என்பதனை அறிவித்தார்.
- இதன் கீழ், இந்தியாவானது 17,000 கிலோ மீட்டர் எரிவாயு குழாய்த் தொடரை அமைப்பதன் மூலம் இயற்கை எரிவாயுத் தொடரை விரிவாக்கம் செய்ய உள்ளது.

## கோவிட் நோய்த் தொற்று காலத்தில் மிகவும் உதவிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் (MP)

- இது புதுதில்லியை தளமாகக் கொண்ட ஒரு குடிமக்கள் பங்கெடுப்புத் தளமான ஆளுகை கணகாணிப்பு என்ற அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வாகும்.
- இது இந்த ஆண்டில் பொது முடக்கத்தின் போது தங்களது தொகுதிகளில் அதிக அளவிலான உதவிகளைச் செய்த முக்கியத் தலைவர்கள் பற்றி ஒரு ஆய்வு செய்து உள்ளது.
- பிஜேபி கட்சியின் உஜ்ஜயின் தொகுதி MP அனில் பிரோஜியா, ஒய்எஸ்ஆர்சிபி கட்சியின் நெல்லூர் தொகுதி MP அதாலா பிரபாகர ரெட்டி மற்றும் முன்னாள் காங்கிரஸ் தலைவர் மற்றும் வயநாடு தொகுதி MP ராகுல் காந்தி ஆகியோர் முதல் 3 இடங்களில் உள்ளனர்.

- முதல் 10 MPக்கள் பின்வருமாறு
  1) அனில் பிரோஜியா (பிஜேபி)
  2) அதாலா பிரபாகர ரெட்டி (ஒய்எஸ்ஆர்சிபி)
  3) ராகுல் காந்தி (காங்கிரஸ்)
  4) மகுவா மொய்த்ரா (டிஎம்சி)
  5) எஸ்.எஸ். தேஜஸ்வி சூர்யா (பிஜேபி)
  6) ஹேமந்த் துக்காராம் கோட்சே (சிவ சேனா)
  7) சுக்பீர் சிங் பாதல் (எஸ்ஏடி)
  8) சங்கர் லால்வானி (பிஜேபி)
  9) டாக்டர் டி சுமதி என்ற தமிழச்சி தங்க பாண்டியன் (திமுக)
  10) நிதின் ஜெய்ராம் கட்கரி (பிஜேபி)

## மிகப்பெரிய ஓவியம்

- பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நேகா சிங் என்பவர் இயற்கை வண்ணங்களைப் பயன்படுத்தி மிகப்பெரிய ஓவியத்தை வரைந்துள்ளார்.
- "மோக்சா கா விரிக்சா" (முக்தியடைவதற்கான மரம்) என்ற ஓவியத்தை இவர் வரைந்ததற்காக இவரது பெயரானது கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.
- இந்த ஓவியத்தின் அளவானது 62.72மீ$^2$ (675.12 சதுர அடி) ஆகும்.
- இதற்கு முன்பு மிகப்பெரிய வண்ண ஓவியமானது ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரேயா டாட்டினினி என்பவர் பெயரில் பதிவு செய்யப் பட்டுள்ளது.
- இவர் 588.56 சதுர அடி என்ற அளவில் ஓவியத்தை வரைந்துள்ளார்.



## இந்தியாவின் இளம் வயது மாநகராட்சித் தலைவர்

- கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்தின் அடுத்த மாநகராட்சித் தலைவராக (மேயர்) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை (மார்க்சிஸ்ட்) சேர்ந்த ஆர்யா இராஜேந்திரன் என்பவர் பதவியேற்க உள்ளார்.
- இவர் 21 வயதில் இந்தியாவில் இளம் வயது மாநகராட்சித் தலைவராகப் பொறுப்பேற்க உள்ளார்.



## 100வது கிசான் இரயில்

- மகாராஷ்டிராவின் சங்கோலாவிலிருந்து மேற்கு வங்காளத்தின் ஷாலிமார் வரை செல்லும் 100வது கிசான் இரயிலைப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் துவக்கி வைத்து உள்ளார்.
- முதன்முதலான கிசான் இரயிலானது 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 7 அன்று துவங்கப் பட்டது.
- மகாராஷ்டிராவின் தேவலாலி மற்றும் பீகாரில் தனப்பூர் இடையே இந்த சேவை தொடங்கப் பட்டது.
- பின்னர் அது பீகாரின் முசாஃபர்பூர் வரை நீட்டிக்கப் பட்டது.




## கிழக்குப் பிராந்திய சரக்குப் போக்குவரத்திற்கான பிரத்தியேக தடம்

- புதிய பாபூர் - புதிய குர்ஜா இடையிலான பிரிவு மற்றும் கிழக்குப் பிராந்திய சரக்குப் போக்குவரத்திற்கான பிரத்தியேக தடத்தின் ஒரு செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையம் ஆகியவற்றைப் பிரதமர் துவக்கி வைத்துள்ளார்.
- உத்தரப் பிரதேசத்தின் பிரயாக்ராஜில் உள்ள செயல்பாட்டுக் கட்டுப்பாட்டு மையமானது இந்த முழு தடத்தின் நீளத்திற்கும் ஒரு கட்டளை மையமாக செயல்பட உள்ளது.
- இந்தத் திட்டம் உலக வங்கியால் நிதியளிக்கப் பட்டுள்ளது.
- இதன் நீளம் 1856 கி.மீ. ஆகும்.
- இது லூதியானா (பஞ்சாப்) அருகிலுள்ள சஹ்னேவலில் இருந்து தொடங்கி பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்கள் வழியாக மேற்கு வங்காளத்தின் டாங்குனியில் முடிவடையும்.




## மோன்பா என்ற கையால் உற்பத்தி செய்யப்படும் காகிதத் தொழிற்சாலை அலகு

- காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம் சமீபத்தில் மோன்பா என்ற கையால் உற்பத்தி செய்யப்படும் காகிதம் தயாரிக்கும் பிரிவை நிறுவியுள்ளது.
- இது அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ளூர் வேலைவாய்ப்பை அதிகப் படுத்தும்.
- கையால் காகிதத்தை உற்பத்தி செய்யும் இந்தக் கலையானது சீனாவில் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது.

## சிஐஐ-ஐடிசி நிலைத்தன்மை விருதுகள் 2020

- நாட்டின் மிகப்பெரிய மின்சார உற்பத்தியாளரான என்டிபிசி நிறுவனம், நாட்டின் பெருமைமிகு சிஐஐ-ஐடிசி நிலைத் தன்மை விருதுகள் 2020 என்ற விருதில் பெருநிறுவன சமூகப் பொறுப்பு பிரிவில் சிறந்து விளங்கியதற்கான விருதை வென்று உள்ளது.
- என்டிபிசி லிமிடெட்டின் குறிப்பிடத் தகுந்த சாதனையைப் பாராட்டி பெருநிறுவன உயர் சிறப்புப் பிரிவில் அந்நிறுவனத்திற்கு இந்த கௌரவம் அளிக்கப்பட்டது.
- பெருநிறுவன சமூகப் பொறுப்புப் பிரிவில் சிஐஐ-ஐடிசி நிறுவனத்தால் வழங்கப்படும் மிகப்பெரிய விருது இதுவாகும்.
- பெருநிறுவன உயர் சிறப்புப் பிரிவில் விருதை பெறும் ஒரே பொதுத்துறை நிறுவனம் என்டிபிசி ஆகும்.
- 2019 மற்றும் 2020 என்று தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இந்த விருதுகளை என்டிபிசி பெற்றுள்ளது.
- தமிழ்நாட்டின் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் ஆலத்தியூர் பிரிவு 'பெருநிறுவன சமூகப் பொறுப்பு' என்ற பிரிவில் அதன் குறிப்பிடத் தகுந்த சாதனைக்காக விருது பெற்றுள்ளது.

## டிஜிட்டல் இந்தியா விருதுகள் 2020

- பீகார் முதலமைச்சர் செயலகம், தேசியத் தகவல் மையம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை ஆகியவை 2020 ஆம் ஆண்டு டிஜிட்டல் இந்தியா விருதுகளில் "பெருந் கொள்ளை நோய்த் தடுப்புப் பிரிவில்" வெற்றியாளர்களாக தேர்வு செய்யப் பட்டுள்ளன.
- உத்தரப் பிரதேச உணவு மற்றும் குடிமை வழங்கல் துறையானது 2020 ஆம் ஆண்டிற்கான டிஜிட்டல் இந்தியா விருதை "சிறப்பான டிஜிட்டல் ஆளுமை" பிரிவின் கீழ் வென்றது.




# சர்வதேசச் செய்திகள்

## அதிக அளவில் இணைப்பு கொண்ட நகரம்

- சமீபத்தில் சர்வதேச வான்வெளிப் போக்குவரத்து கூட்டமைப்பானது உலகில் அதிக அளவில் இணைப்பு கொண்ட நகரமாக ஷாங்காய் நகரத்தை அறிவித்துள்ளது.
- உலகின் 2வது பரபரப்பான விமான நிலையம் இலண்டனின் ஹீத்ரோ விமான நிலையமாகும்.
- ஷாங்காய் நகரத்துடன் சேர்த்து சீனாவின் இதர 3 நகரங்களான பெய்ஜிங், செங்குடு, குயாங்சோ ஆகிய நகரங்களும் உலகில் அதிக அளவில் இணைப்பு கொண்ட நகரங்களாக உருவெடுத்துள்ளன.

| Ranking | Sep-19 | Sep-20 |
|---|---|---|
| 1 | London | Shanghai |
| 2 | Shanghai | Beijing |
| 3 | New York | Guangzhou |
| 4 | Beijing | Chengdu |
| 5 | Tokyo | Chicago |
| 6 | Los Angeles | Shenzhen |
| 7 | Bangkok | Los Angeles |
| 8 | Hong Kong | London |
| 9 | Seoul | Dallas |
| 10 | Chicago | Atlanta |

## ஆசியான் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் சந்திப்பு – ப்ளஸ்

- வியட்நாம் ஆனது ஆசியான் பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் சந்திப்பு – ப்ளஸ் (ASEAN Defence Ministers' Meeting Plus – ADMM Plus) என்ற நிகழ்விற்கு இந்தியாவை அழைத்துள்ளது.
- இது 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வியட்நாம் நாட்டினால் நடத்தப்பட உள்ளது.
- ADMM-Plus என்பது ஆசியான் மற்றும் அதன் 8 உரையாடல் பங்காளர்களுக்கான ஒரு தளமாகும்.
- 2007 ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் நடைபெற்ற 2வது ADMM ஆனது ADMM-Plus அமைப்பை ஏற்படுத்துவதற்கான ஒரு கருத்தாக்க ஆவணத்தை ஏற்றுக் கொண்டது.
- இது இப்பிராந்தியத்தில் அமைதி, நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டிற்காக வேண்டி பாதுகாப்பு சார்ந்த ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான், நியூசிலாந்து, கொரியக் குடியரசு, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவை இந்த 8 உரையாடல் பங்காளர்களாகும்.
- இவை ஒட்டுமொத்தமாக "ப்ளஸ் நாடுகள்" எனப்படும்.
- கடல்சார் பாதுகாப்பு, தீவிரவாத எதிர்ப்பு, மனிதாபிமான உதவி & பேரிடர் நிவாரணம், அமைதி நடவடிக்கைகள் மற்றும் இராணுவ மருத்துவம் ஆகியவை இந்த செயல்முறையின் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்ட 5 நடைமுறை ஒத்துழைப்புப் பகுதிகள் ஆகும்.

## கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு

- இந்தியா, இலங்கை மற்றும் மாலத் தீவுகள் ஆகியவை 54வது தேசிய பாதுகாப்பு ஆலோசக மும்முனைச் சந்திப்பை நடத்தி உள்ளன.
- இது இலங்கையினால் நடத்தப் பட்டது.
- இந்தியாவின் சார்பாக தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் இதில் கலந்து கொண்டார்.

## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அரசாங்கத் தலைவர்களுக்கு இடையேயான உச்சி மாநாடு 2020

- இது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மன்றத்தின் அரசாங்கத் தலைவர்களுக்கு இடையேயான உச்சி மாநாட்டின் (Shanghai Cooperation Organization Council of Heads of Government summit) 19வது கூட்டமாகும்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் அரசாங்கத் தலைவர்களின் மன்றமானது தனது உறுப்பு நாடுகளின் பிரதமர்களைக் கொண்டுள்ளது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மன்றத்தின் அரசாங்கத் தலைவர்களின் மாநாடானது 7 பிரதமர்களின் பங்களிப்பைக் கண்டது.
- இதில் ரஷ்யா, சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் ஆறு உறுப்பு நாடுகளும், பார்வையாளர் நாடான பெலாரஸும் அடங்கும்.
- இந்தக் கூட்டத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ஆகியோர் பங்கேற்கவில்லை.
- இந்த இணைய வழி மாநாட்டிற்கு இந்திய துணை ஜனாதிபதி எம்.வெங்கையா நாயுடு அவர்கள் தலைமை தாங்கினார்.

- இந்தியா, அதன் சிறப்பு தலைமை உரிமைகளைக் கொண்டு, ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க துர்க்மெனிஸ்தானுக்கு அழைப்பு விடுத்துள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் முழு நேர உறுப்பினரான பிறகு, இந்தியாவானது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு மட்டத்திலான முதல் கூட்டத்தை நடத்துகிறது.
- சுழற்சியின் படி, உஸ்பெகிஸ்தானுக்கு அடுத்த படியாக 2019 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் தேதி ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு அரசாங்கத் தலைவர்களின் மன்றத்தின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றது.
- இந்தியாவின் ஓராண்டு கால அளவிலான பதவிக் காலமானது நவம்பர் 30 ஆம் தேதியுடன் முடிவடையும்.
- 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தலைமையில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் "அரசத் தலைவர்கள்" கூட்டத்தில் மோடி அவர்கள் ஏற்கனவே கலந்து கொண்டார்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது மொத்தம் 8 உறுப்பு நாடுகளையும் 4 பார்வையாளர் நாடுகளையும் கொண்டுள்ளது.
- ஆப்கானிஸ்தான், பெலாரஸ், ஈரான் மற்றும் மங்கோலியா ஆகியவை அதன் இதர பார்வையாளர் நாடுகளாகும்.

## சூடானின் முன்னாள் பிரதமர்



- சாதிக் அல் மஹ்தி அவர்கள் சூடானில் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட கடைசித் தலைவராவார்.
- சமீபத்தில் இவர் ஐக்கிய அரபு அமீரகத்தில் காலமானார்.
- அல்-மஹ்தி அவர்கள் 1989 ஆம் ஆண்டில் சர்வாதிகாரியான ஓமர் அல் பஷீர் அவர்களால் ஆட்சியில் இருந்து அகற்றப் பட்டார்.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரலில் சூடானின் ஜனநாயக சார்பு எழுச்சியானது தனது இராணுவத்தைக் கொண்டு அல் பஷீரை ஆட்சியில் இருந்து அகற்றியது.

## ஆஸ்திரேலியா மற்றும் இஸ்ரோ

- ககன்யான் திட்டத்திற்காக வேண்டி ஆஸ்திரேலியாவானது இஸ்ரோ செயற்கைக் கோள் கண்காணிப்பு வசதிகளை தற்காலிகமாக மேற்கொள்ள உள்ளது.
- இது இந்தியா திட்டமிட்டுள்ள மனித விண்வெளிப் பயணத் திட்டத்தை (planned human space flight programme) ஆதரிக்கும்.

- அந்தத் திட்டம் விண்வெளிக்கு ஒரு பயணக் குழுவை அனுப்பும் நான்காவது நாடாக இந்தியா உருவெடுப்பதை காணும்.
- சோவியத் யூனியன் / ரஷ்யா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே அவர்களின் பயணக் குழுவை விண்வெளிக்கு அனுப்பியுள்ளனர்.

## 2020 ஆம் ஆண்டின் சொல் (வார்த்தை)

- "தனிமைப்படுத்தல்" என்ற வார்த்தையானது 2020 ஆம் ஆண்டின் வார்தையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.
- கேம்பிரிட்ஜ் அகராதியில் மிகவும் தேடப்பட்ட ஒரு வார்த்தை இதுவாகும்.
- இந்த வார்த்தையானது "பொது முடக்கம்" மற்றும் "கொள்ளை நோய்" ஆகிவற்றைப் பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளது.




## ஈரானில் யூரேனியம் செறிவூட்டல்

- சமீபத்தில் ஈரான் நாடாளுமன்றமானது "தடைகளை நீக்குவதற்கான உத்திசார் நடவடிக்கைகள்" எனப்படும் ஒரு மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது மோக்சென் பஹ்ரிசாடெக் என்ற ஈரானைச் சேர்ந்த ஒரு அணு ஆயுத விஞ்ஞானி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஈரானில் அணு ஆயுத நடவடிக்கையை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவானது யுரேனியம் செறிவூட்டல் அளவை 20% அல்லது அதற்கு மேல் அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- விரிவான கூட்டுச் செயல் திட்டமானது யுரேனியத்தின் செறிவூட்டல் அளவை (உச்ச வரம்பு) 3.67% ஆக நிர்ணயித்துள்ளது.
- இந்த மசோதாவானது அராக் அணு உலையை மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வர உள்ளது.

## 5 கண்கள் – நாடுகளைக் கொண்ட குழு

- சமீபத்தில் 5 கண்கள் என்ற ஒரு குழுவில் உள்ள நாடுகள் ஹாங்காங் நாட்டின் தன்னாட்சி மீது சீனாவின் தடை அதிகரிக்கப் பட்டுள்ளது குறித்து தங்களது வருத்தத்தை ஒரு கூட்டு ஆவணமாக வெளியிட்டுள்ளன.
- 5 கண்கள் என்ற நாடுகள் குழு என்பது ஆஸ்திரேலியா, கனடா, ஐக்கியப் பேரரசு, நியூசிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைக் கொண்ட ஒரு நுண்ணறிவுக் கூட்டிணைவாகும்.

| Country | Year of Joining | FVEY Coverage |
|---|---|---|
| United Kingdom | 1946 (UK & US formed the FVEY in 1946) | UK monitors Middle East, Europe, European Russia & Hong Kong |
| United States | | US monitors Middle East, the Caribbean, Africa, China & Russia. |
| Canada | 1948 | Canada monitors China & Russia |
| Australia | 1956 | Australia monitors South and East Asia |
| New Zealand | 1956 | New Zealand monitors Southeast Asia, South-west of Blenheim, North Island at Tangimoana & South Island at Waihopai Valley |

## அதிகக் கல்வியறிவு பெற்ற புலம்பெயர்ந்தோர்கள்

- ❖ பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு என்ற குழுவில் உள்ள நாடுகளில் அதிக அளவு கல்வியறிவு பெற்ற புலம்பெயர்ந்தோரை அனுப்பும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ இது 2015/16 ஆம் ஆண்டின்படி ஏறத்தாழ 3 மில்லயின் மக்களை அனுப்பி இருக்கின்றது.




## உணவு மற்றும் வேளாண்மையின் நிலை 2020

- ❖ இது உணவு மற்றும் வேளாண் அமைப்பினால் (Food and Agriculture Organization - FAO) வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையாகும்.
- ❖ இந்த அறிக்கையின் கருத்துரு, "வேளாண்மையில் உள்ள நீர்ப் பிரச்சினைகளை எதிர் கொள்தல்" என்பதாகும்.
- ❖ இது உலகில் உள்ள மக்களில் 6 பேரில் ஒருவர் மிகக் கடுமையான நீர்ப் பிரச்சினையை எதிர் கொள்கின்றனர் என்று கூறுகின்றது.
- ❖ FAO ஆனது இயற்கையான நன்னீர் வளங்களின் மீது மனித நடவடிக்கைகளின் அழுத்தத்தை அளவிடும் நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு 6.4.2 என்ற ஒரு குறிகாட்டியின் செயல்பாட்டாளராக விளங்குகின்றது.

## ஐ.நா. துப்புரவு மற்றும் சுகாதார நிதி

- ஐக்கிய நாடுகள் சபையானது துப்புரவு மற்றும் சுகாதார நிதியை அறிமுகப் படுத்தி உள்ளது.
- துப்புரவுச் சேவைகள் பற்றாக்குறையால் உருவாகும் நோய்களின் அதிக சுமையைக் கொண்ட நாடுகளுக்கு விரைவாக நிதி வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த நிதியை ஐ.நா. திட்டங்கள் சேவைகளுக்கான அலுவலகம் வழங்குகிறது.
- இது ஐ.நா மற்றும் அதன் கூட்டாளர்களுக்குத் தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் திட்டங்கள் செயல்படுத்துதலை வழங்குகிறது.

## UNCTAD அறிக்கை

- 'வர்த்தகம் மற்றும் மேம்பாட்டில் கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கம்: புதிய இயல்பிற்கு மாறுதல்' என்ற தலைப்பில் இந்த அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் வர்த்தகம் மற்றும் மேம்பாடு குறித்த மாநாட்டின் (United Nations Conference on Trade and Development - UNCTAD) ஒரு புதிய அறிக்கையாகும்.
- ஒரு தகுதியான கோவிட்-19 தடுப்பூசியானது தொற்றுநோயினால் உருவாக்கப் பட்ட பொருளாதார சேதத்தின் பரவலைத் தடுக்காது என்று அது எச்சரித்துள்ளது.
- இந்த அறிக்கையின் படி உடனடிக் கொள்கை நடவடிக்கைகள் எடுக்கப்படா விட்டால் ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் அதன் பாதையை விட்டு விலகக் கூடும் என அறிவித்துள்ளது.

## ஓநாய் படைபிரிவு 44

- ஜெர்மனியானது ஒரு வலது சாரி அமைப்பான "ஓநாய் படைப் பிரிவு 44" என்ற அமைப்பைத் தடை செய்துள்ளது.
- இந்த 44 படைப் பிரிவானது நாசித் தலைவரான அடோல்ப் ஹிட்லருக்கு வெளிப்படையாக தனது ஆதரவினைத் தெரிவித்து இருந்தது.
- இது ஜெர்மனியில் மக்களாட்சித் தன்மை கொண்ட நிர்வாகத்தை முடிவுக்குக் கொண்டு வர வலியுறுத்தி இருக்கின்றது.
- 44 என்ற எண்ணானது ஆஸ்கர் டைர்லே வாஞ்சேர் என்பவரின் நினைவாகப் பெயரிடப்பட்ட "டிவிசன் டைர்லேவாஞ்சர்" (Division Dirlewanger) என்பதைக் குறிக்கின்றது.
- இவர் 1940 ஆம் ஆண்டில் பெலாரஸில் குடிமக்களுக்கு எதிரான படுகொலைக்கு ஆணையிட்டவர் என்று குற்றம் சுமத்தப்பட்டு உள்ளார்.

## உலக மலேரியா அறிக்கை, 2020

- சமீபத்தில் இது உலக சுகாதார அமைப்பால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவானது தென்கிழக்கு ஆசியப் பகுதியில் அதிக அளவிலான மலேரியா நோய்க் குறைப்பைப் பதிவு செய்துள்ளது.
- இந்தப் பகுதியில் ஏறத்தாழ 88% அளவிலான மலேரியா நோய் பாதிப்புகள் இந்தியாவில் உள்ளன.
- எனினும், இந்தியாவானது 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்

பகுதியில் மலேரியா நோய் பாதிப்புகளை 21% என்ற அளவிற்குக் குறைத்து உள்ளது.

- இந்த அறிக்கையின்படி, கேமரூன், காங்கோ மக்களாட்சிக் குடியரசு, பர்கினா பாசோ, மொசாம்பிக், மாலி, கானா, இந்தியா, நைஜீரியா மற்றும் தான்சானியா ஒன்றியக் குடியரசு ஆகியவை அதிக அளவிலான மலேரியா நோய் பாதிப்புள்ள நாடுகளாகும்.




## சர்வதேச ஊழல் குறிகாட்டி – ஆசியா

- இது ஒரு உலகப் பொதுச் சமூக அமைப்பான "டிரான்ஸ்பரென்சி இண்டர்நேஷனல்" என்ற அமைப்பினால் வெளியிடப்படும் ஒரு ஆய்வு அறிக்கையாகும்.
- இந்தியாவானது ஆசியாவில் அதிக அளவிலான ஊழல் விகிதத்தை, அதாவது 39% என்ற அளவில் ஊழலைக் கொண்டுள்ளது.
- இந்தியாவைத் தொடர்ந்து ஆசியாவில் கம்போடியா மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகள் அதிக அளவிலான ஊழல் விகிதத்தைக் கொண்டுள்ளன.
- மாலத்தீவு மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் குறைந்த ஊழல் விகிதத்தைக் கொண்டுள்ள நாடுகளின் பட்டியலில் முன்னிலையில் உள்ளன. இதற்கு அடுத்து தென் கொரியா குறைந்த ஊழல் விகிதத்தைக் கொண்டுள்ளது.




## QS ஆசியப் பல்கலைக்கழகத் தரவரிசை 2021

- உலகில் உயர்கல்வியில் கொள்கை வகுக்கும் ஒரு முக்கிய அமைப்பான "குவாக்குரேலி சைமண்ட்ஸ்" (Quacquarelli Symonds - QS) என்ற அமைப்பானது இதனை வெளியிட்டு உள்ளது.
- தேசிய சிங்கப்பூர் பல்கலைக்கழகமானது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஆசியாவின் சிறந்த பல்கலைக் கழகமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

- இதில் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ள 650 பல்கலைக் கழகங்களில் 107 பல்கலைக் கழகங்கள் இந்தியாவிலிருந்துத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.
- ஐஐடி-பம்பாய் (47), ஐஐடி-தில்லி (50) மற்றும் ஐஐடி-மதராஸ் (56) ஆகியவை ஆசியத் தரவரிசையில் முன்னிலையில் இடம் பிடித்த 3 பல்கலைக்கழகங்களாகும்.

## தெரேமின் - 100 வது ஆண்டு

- இது ஓர் இசைக் கருவியாகும்.
- இது உலகின் முதல் மின்னணு கருவியாகக் கருதப் படுகிறது.
- மேலும் இது 2020 ஆம் ஆண்டில் தனது நூறு வயதை அடைந்துள்ளது.
- இது லியோன் தெரேமின்என்பவரால் உருவாக்கப் பட்டுள்ளது.
- ஆரம்பகால டிரம் இயந்திரங்கள் (early drum machines) முதல் அமெரிக்க விமானங்கள் வரை பல்வேறு கண்டுபிடிப்புகளுக்காக லியோன் தெரெமின் போற்றப் படுகிறார்.



## அவசரகாலப் பயன்பாட்டு அதிகாரமளிப்பு

- கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு எதிராக பிசர்-பயோன்டெக் என்ற தடுப்பு மருந்தின் (Pfizer-BioNTech vaccine) மிகப் பரவலான பயன்பாட்டிற்கு ஒப்புதல் அளித்த முதலாவது நாடு ஐக்கியப் பேரரசு ஆகும்.
- இது எம்ஆர்என்ஏ நோய்த் தடுப்பு மருந்து எனப்படும் ஒரு புதிய வகையாகும்.
- அமெரிக்க மருந்துத் தயாரிப்பாளரான மாடர்னா ஆனது தனது கோவிட்-19 நோய்த் தடுப்பு மருந்திற்கான அவசரகாலப் பயன்பாட்டு அதிகாரமளிப்பிற்கு வேண்டி விண்ணப்பித்து இருக்கின்றது.
- இந்தியாவில், சீரம் இந்திய நிறுவனமானது ஆஸ்ட்ராஜெனேகா-ஆக்ஸ்போர்டு நோய்த் தடுப்பு மருந்தின் ஒரு வகை பதிப்பு மீதான சோதனையை மேற்கொண்டு வருகின்றது.
- இந்தியாவில், மத்திய மருந்துகள் தரநிர்ணயக் கட்டுப்பாட்டு அமைப்பானது ஒழுங்குமுறை ஆணையமாக செயல்படுகின்றது.

## உலக வர்த்தக அறிக்கை, 2020

- சமீபத்தில் உலக வர்த்தக அமைப்பானது இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- தற்போதைய டிஜிட்டல்மய உலகப் பொருளாதாரத்தில் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கக் கொள்கைகளின் மீது இது கவனம் செலுத்துகின்றது.
- இது ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படுகின்றது.
- இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய ஆசியாவின் வலிமை மிக்க நாடுகள் 2017 ஆம்

ஆண்டில் 40% அளவிற்கு உலக ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்குப் பங்களித்தன என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

- இந்த அறிக்கையின் படி, புலம்பெயர்ந்தோரினால் பயனடைந்ததின் விளைவை ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் பெற்றுள்ள அதே வேளையில் இந்தியா இதனைப் பெற்றிருக்க வில்லை.

## IFCN நிறுவனத்தின் உலகப் பால் பண்ணைச் செயற்பாட்டாளர்கள் தரவரிசை

- பால்வள நிறுவனமான அமுல் நிறுவனமானது முன்னிலையில் உள்ள 20 உலகளாவிய பால் பண்ணைச் செயற்பாட்டாளர்களிடையே 8வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இது ஒரு ஆண்டில் மேற்கொள்ளப்படும் பால் கொள்முதலின் அளவைப் பொறுத்து மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- அமெரிக்காவின் பால் பண்ணை விவசாயிகள் இந்தப் பட்டியலின் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.
- இதற்கு அடுத்து நியூசிலாந்தின் போன்டெரா, பிரெஞ்சு நிறுவனமான குரூப்பி லாக்டாலிஸ், டென்மார்க் நாட்டின் அர்லா புட்ஸ் மற்றும் சுவிட்சர்லாந்தின் நெஸ்லே ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- அமுல் என்பது குஜராத்தின் ஆனந்த்தில் உள்ள ஒரு இந்தியப் பால்வள கூட்டுறவுச் சங்கமாகும்.
- அமுல் நிறுவனமானது 1946 ஆம் ஆண்டில் சர்தார் வல்லபாய் படேலின் வழிகாட்டுதலின் பேரில் திரிபுவன்தாஸ் படேல் அவர்களால் தொடங்கப் பட்டுள்ளது.
- அமுல் நிறுவனமானது இந்தியாவின் வெண்மைப் புரட்சிக்கு ஊக்கமளித்தது.
- வெண்மைப் புரட்சி அல்லது வெண்மை (வெள்ளம்) நடவடிக்கையானது 1970 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளது.
- இது இந்தியாவை உலகின் மிகப்பெரிய பால் மற்றும் பால் பொருட்கள் உற்பத்தியாளர் நாடாக மாற்றியுள்ளது.




## கஞ்சாவின் புதிய வகைப்பாடு

- சமீபத்தில் போதைப்பொருள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஆணையமானது 1961 ஆம் ஆண்டின் போதைப்பொருள் தொடர்பான ஒற்றை உடன்படிக்கையில் இருந்து கஞ்சாவை நீக்கி உள்ளது.
- இந்தத் தாவரத்தின் மருத்துவக் குணங்களை அங்கீகரிக்க இது செய்யப்பட்டுள்ளது.

- உருகுவே மற்றும் கனடா போன்ற நாடுகள் ஒரு பொழுதுபோக்குப் பயன்பாட்டிற்கு வேண்டி இதைச் சட்டப்பூர்வமாக அனுமதித்து இருக்கின்றன.
- இந்தியாவில் கஞ்சாவின் பயன்பாடானது போதை மருந்து மற்றும் மனோவியல் பொருட்கள் சட்டம், 1985 என்ற சட்டத்தால் நிர்வகிக்கப் படுகிறது.

## 7 வது IEF-IGU அமைச்சர்கள் எரிவாயு மன்றம்




- மலேசியாவானது 7வது சர்வதேச எரிசக்தி மன்றம் (IEF - International Energy Forum) - சர்வதேச எரிவாயு ஒன்றியம் (IGU - International Gas Union) என்ற அமைச்சர்கள் எரிவாயு மன்றத்தை நடத்துகிறது.
- இந்த வருடத்தின் கருத்துரு "மீட்பு மற்றும் பகிரப்பட்ட செழிப்பை நோக்கி: ஒரு நீடித்த நிலையான உலகத்திற்கான இயற்கை எரிவாயு வாய்ப்புகள்" (Towards Recovery and Shared Prosperity: Natural Gas Opportunities for a Sustainable World) என்பதாகும்.
- இந்தியாவில், முதன்மை எரிசக்திக் கலவையானது (primary energy mix) தேசிய அளவில் 6.3% ஆக உள்ள நிலையில், குஜராத் மாநிலம் 25% என்ற அளவிலான இயற்கை எரிவாயு கலவையைக் கொண்டு ஒரு முன்னுதாரணமாக திகழ்கிறது.

## உற்பத்தி இடைவெளி, 2020

- இது ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டத்தால் வெளியிடப் படுகிறது.
- பேரழிவினை நிகழ்த்தக் கூடிய அளவிலான உலக வெப்பநிலை உயர்வைத் தவிர்க்க வேண்டுமென்றால், 2020 மற்றும் 2030 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், நாடுகள் புதைபடிவ எரிபொருட்களின் உற்பத்தியை ஆண்டுக்கு 6 சதவீதம் குறைக்க வேண்டும்.
- ஆனால் உண்மையில், நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியை ஆண்டுதோறும் 2% அதிகரிக்க நாடுகள் திட்டமிட்டுள்ளன.
- இந்த அறிக்கையின் படி, 8 முக்கிய நாடுகளான - ஆஸ்திரேலியா, கனடா, சீனா, இந்தியா, இந்தோனேசியா, நார்வே, ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகியவை உலகின் புதைபடிவ எரிபொருளில் 60% உற்பத்தி செய்கின்றன.




## உலகளாவிய காலநிலை மீதான நிலை பற்றிய தற்காலிக அறிக்கை

- இந்த அறிக்கை உலக வானிலை அமைப்பால் வெளியிடப் பட்டுள்ளது.
- 2011 முதல் 2020 வரையான பத்து ஆண்டுகளும் இதுவரை இல்லாத அளவிற்கு வெப்பமானதாக இருந்துள்ளது.
- மேலும், 2020 ஆம் ஆண்டானது அதிக வெப்பமான முதல் மூன்று ஆண்டுகளில் ஒன்றாக உள்ளது.
- அதிகரித்து வரும் வெப்பநிலையானது மனிதனால் ஏற்படும் புவி வெப்பமடைதலின் நேரடி விளைவாகவும், பசுமை இல்ல வாயு உமிழ்வின் தாக்கமாகவும் உள்ளதாக அறிவியல் சான்றுகளானது கருதுகிறது.




## அமைதிக் கலாச்சார அமர்வு

- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் நடத்தப்படுகின்றது.
- ஐக்கிய நாடுகளானது 1997 ஆம் ஆண்டு முதல் இது போன்ற அமர்வுகளை ஆண்டிற்கு ஒரு முறை நடத்துகின்றது.
- அமைதிக் கலாச்சாரம் குறித்த செயல்திட்டம் மற்றும் பிரகடனமானது 1999 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் ஏற்றுக் கொள்ள ப்பட்டது.
- சமீபத்திய அமர்வில், இந்தியாவானது யூதம், கிறிஸ்துவம், இஸ்லாம் ஆகிய 3 ஆபிராஹாமிய மதங்களுக்கு அப்பால் உள்ள மதங்களுக்கு எதிரான வெறுப்புணர்வு மற்றும் வன்முறைக்கான தனது கண்டன எல்லையை விரிவாக்குமாறு ஐக்கிய நாடுகளைக் கேட்டுக் கொண்டது.

## 8வது உலகத் தீவிரவாதக் குறியீடு – 2020

- இது ஆஸ்திரேலியாவில் உள்ள ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பான பொருளாதார மற்றும் அமைதி மையத்தினால் தயாரிக்கப்பட்டுள்ளது.
- தொடர்ந்து 2வது ஆண்டாக, 2019 ஆம் ஆண்டில் தெற்கு ஆசியப் பகுதியானது தீவிரவாதத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்தக் குறியீட்டில் ஆப்கானிஸ்தான் முதலிடத்திலும் ஈராக், நைஜீரியா, சிரியா ஆகியவை அதற்கு அடுத்தடுத்த இடங்களிலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
- ஆப்கானிஸ்தான், நைஜீரியா, சிரியா, சோமாலியா மற்றும் ஏமன் ஆகிய 5 நாடுகள் போர்ச் சூழல் கொண்ட நாடுகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.
- கடந்த 10 ஆண்டுகளில் தீவிரவாதத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட உலகின் 8வது நாடு இந்தியா ஆகும்.
- ஜம்மு காஷ்மீர் மற்றும் சத்தீஸ்கர் ஆகியவை இந்தியாவில் தீவிரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டு முன்னிலையில் உள்ள பகுதிகளாகும்.




## 2020 ஆண்டிற்கான டைம் பத்திரிக்கையின் குழந்தை

- இந்திய-அமெரிக்கரான கீதாஞ்சலி ராவ் அவர்கள் முதலாவது முறையாக "இந்த ஆண்டிற்கான குழந்தையாக" டைம் பத்திரிக்கையினால் பெயரிடப் பட்டுள்ளார்.
- இவர் மாசு கலந்த குடிநீர் முதல் போதை மற்றும் இணையவழிச் சித்திரவதை வரையிலான பிரச்சினைகளைக் கையாளுவதற்கு வேண்டிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திய தனது வியத்தகு பணிக்காக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.



## சிஎல்எம்வி மாநாடு

- 6வது இந்தியா-சிஎல்எம்வி வர்த்தக மாநாடு 2020 என்ற மாநாடானது நடத்தப்பட்டது.
- இது "கடந்த காலத்தின் ஆக்கப் பூர்வமான வளர்ச்சிக்கான இணைப்புகளைக் கட்டமைத்தல்" என்ற ஒரு கருத்துருவின் கீழ் நடத்தப்பட்டது.
- சிஎல்எம்வி (CLMV) ஆனது கம்போடியா, மியான்மர், லாவோஸ் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைக் கொண்டுள்ளது.




## 3ஆர்எப் செயல்திட்டம்

- இது பெய்ரூட்டைப் புத்துயிர் பெறச் செய்வதற்காக ஐக்கிய நாடுகளினால் தொடங்கப் பட்டுள்ளது.
- இது ஐக்கிய நாடுகள், உலக வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றினால் தயாரிக்கப் பட்டுள்ளது.
- 3 ஆர்எப் என்பது சீர்திருத்தம், மீட்டெடுப்பு மற்றும் மறுகட்டமைப்புச் செயல்திட்டம் என்பதைக் குறிக்கின்றது.
- 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், லெபனானின் தலைநகரான பெய்ரூட் நகரில் ஒரு மிகப்பெரிய வெடிவிபத்தானது ஏற்பட்டது.




## குறைவாக வளர்ந்த நாடுகள் அறிக்கை 2020

- வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- குறைவாக வளர்ந்த நாடுகள், கொரோனா தொற்றுநோயால் 2020 ஆம் ஆண்டில் கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவில் ஒரு மிக மோசமான பொருளாதார நிலையை அனுபவிக்கக் கூடும்.
- இது 47 நாடுகளில் 32 மில்லியன் மக்களை தீவிர வறுமையில் தள்ளக் கூடும்.




## ஆசாத் பட்டான் திட்டம்

- இது பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் கட்டமைக்கப்பட இருக்கும் ஒரு நீர் மின் சக்தித் திட்டமாகும்.
- இது ஜீலம் நதியின் மீது கட்டமைக்கப்பட உள்ளது.
- இது சீனா-பாகிஸ்தான் பொருளாதாரப் பெருவழிப் பாதையின் ஒரு பகுதியாக சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளினால் கூட்டாக மேற்கொள்ளப் படுகின்றது.




## பாஷன் சார் தீவு

- இது மக்கள் யாரும் வசிக்காத வகையில் வங்காள விரிகுடாவில் தொலைதூரத்தில் அமைந்துள்ள வங்க தேசத்தின் ஒரு தீவாகும்.
- இது சார் பியா என்றும் அழைக்கப்படுகின்றது.
- காக்ஸ் பஜார் அகதிகள் முகாமில் உள்ள ஆயிரக்கணக்கான ரோஹிங்கியாக்கள் இந்தத் தீவிற்கு மாற்றப் பட்டுள்ளனர்.
- இந்தத் தீவானது 40 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது.
- இது இமயமலை வண்டல் படிவினால் 2006 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது என்று நம்பப் படுகின்றது.
- மேலும் இது மிதக்கும் தீவு என்றும் அழைக்கப் படுகின்றது.




## பார்ச்சூன் 2020 ஆண்டின் சிறந்த தொழிலதிபர்

- ❖ இதில் டெஸ்லா தலைமை நிர்வாக அதிகாரியான எலான் மஸ்க் அவர்கள் இரண்டாவது முறையாக முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- ❖ அடோப் தலைமை நிர்வாக அதிகாரி சாந்தனு நாராயண் மற்றும் மாஸ்டர்கார்டு தலைமை நிர்வாக அதிகாரி அஜய் பங்கா ஆகியோர் முறையே 8வது மற்றும் 9வது இடங்களைப் பிடித்துள்ளனர்.
- ❖ இது பார்ச்சூன் பத்திரிகையால் ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது.




## டிரேஸ் லஞ்ச அபாயக் குறியீடு

- ❖ இது 194 நாடுகளில் லஞ்சம் கோருவதற்கான வாய்ப்பை அளவிடும் ஒரு ஆண்டுப் பட்டியலாகும்.
- ❖ இது முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.
- ❖ 2020 ஆம் ஆண்டின் பட்டியலில் கடந்த ஆண்டை விட ஒரு இடம் முன்னேறி இந்தியா 77வது இடத்தில் உள்ளது.
- ❖ இந்தப் பட்டியலில் டென்மார்க் முதலிடத்தில் உள்ளது.
- ❖ அதைத் தொடர்ந்து நார்வே, பின்லாந்து, சுவீடன் மற்றும் நியூசிலாந்து ஆகியவை உள்ளன.
- ❖ இதை டிரேஸ் இன்டர்நேஷனல் (TRACE International) என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது.

- ❖ இது ஒரு லஞ்ச ஒழிப்புத் தர நிர்ணய அமைப்பாகும்.




## கோவாக்ஸ் முன்னெடுப்பு

- ❖ இது கோவிட்-19 தடுப்பூசியின் சமமான விநியோகத்தை உறுதி செய்வதற்காக WHO, GAVI கூட்டணி, தொற்றுநோய்களுக்காக ஆயத்தமாதல் மற்றும் புத்தாக்கங்கள் கூட்டமைப்பு (Coalition for Epidemic Preparedness Innovations) ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.
- ❖ இப்போது வரை, கிட்டத்தட்ட 189 நாடுகள் இந்த கோவாக்ஸ் சேவையில் சேர்ந்துள்ளன.
- ❖ அமெரிக்காவானது இந்த கோவாக்ஸ் முன்னெடுப்பில் பங்கேற்கவில்லை.
- ❖ 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் குறைந்தது 2 பில்லியன் மருந்துகளை உற்பத்தி செய்வதே இதன் குறிக்கோளாகும்.
- ❖ இதன் மூலம் 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் குறைந்தது அரை பில்லியன் விழுங்கு என்ற அளவிற்கு கோவிட் -19 தடுப்பூசிகளைப் பெறும் என்று உலக சுகாதார நிறுவனம் நம்புகிறது.

## உலகளாவிய ஊதிய அறிக்கை 2020-21

- ❖ இது சமீபத்தில் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கை ஆகும்.
- ❖ மூன்றில் இரண்டு பங்கு நாடுகளில் சராசரி ஊதியமானது நோய்த் தொற்றின் காரணமாக 2020 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் குறைவாக அல்லது மிக மெதுவாக வளர்ந்து வருகின்றது.
- ❖ குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்கள், பொதுவாகப் பெண்கள், பணி நேர இழப்புகளினால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ வங்கத் தேசத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடந்த 10 ஆண்டுகளில் மிகவும் திறனுள்ள வகையில் செயல்பட்டுள்ளனர்.
- ❖ ஆனால் வங்க தேசமானது ஆசிய-பசிபிக் நாடுகளில் மிகப்பெரிய அளவில் ஊதிய இழப்பைப் பதிவு செய்துள்ளது.
- ❖ இதற்கு அடுத்து இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் உள்ளன.



Figure 7.6 Share of women among employees earning the minimum wage or less, and above the minimum wage, global and by region, 2019 (percentage)

*Source: ILO Global Wage Report 2020-21*

## உலகப் பொருளாதார மன்றம் 2021 (WEF 2021)

- இது கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரிலிருந்து சிங்கப்பூருக்கு மாற்றப்பட உள்ளது.
- இது முதன்முறையாக ஆசியாவில் நடைபெற உள்ளது.
- WEF (World Economic Forum) என்பது அரசியல் மற்றும் வணிகத் தலைவர்களின் ஒரு வருடாந்திரக் கூடுகையாகும்.
- சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ள இது 1971 ஆம் ஆண்டில் தொடங்கப் பட்ட ஒரு சர்வதேச அரசு சாரா அமைப்பாகும்.

## யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தளங்களின் பட்டியல்

- இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள கோட்டை நகரங்களான ஓர்ச்சா மற்றும் குவாலியர் ஆகியவை யுனெஸ்கோ பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.
- ஓர்ச்சா என்பது 16 ஆம் நூற்றாண்டில் இருந்த பந்தேலா பேரரசின் (Bundela Kingdom) தலைநகரமாகும்.
- குவாலியர் நகரமானது 9 ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது ராஷ்வன்ஷ், பாகேல் கச்வாகோ, தோமர் மற்றும் சிந்தியர்கள் ஆகியோரால் ஆளப் பட்டது.
- உலகப் பாரம்பரியத் தளக் குறியீடுகள் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல்சார், மற்றும் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோவினால் வழங்கப் படுகின்றன.

## ஆயுதங்களின் சந்தை அறிக்கை

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனமானது உலகம் முழுவதும் உள்ள ஆயுதங்களின் சந்தை குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அமெரிக்க ஆயுதத் தொழிற்துறையானது கடந்த ஆண்டில் உலகின் "முதல் 25" உற்பத்தியாளர்கள் பட்டியலில் ஆயுத விற்பனையில் 61% அளவைப் பதிவு செய்திருந்தது. இதில் சீனாவின் அளவானது 15.7% ஆகும்.

- உலக ஆயுதங்கள் விற்பனையில் சிறந்து விளங்கும் 2 மிகப்பெரிய நாடுகள் சீனா மற்றும் அமெரிக்கா ஆகியவையாகும்.
- முதன்முறையாக, "முதல் 25" என்ற பட்டியலில் மேற்கு ஆசியாவைச் சேர்ந்த ஒரு நிறுவனமானது இடம் பிடித்துள்ளது.
- இது ஐக்கிய அரபு அமீரகத்தின் "EDGE" என்ற ஒரு நிறுவனமாகும்.

## வங்க தேசம் மற்றும் பூடான்

- வங்க தேசமானது பூடானுடன் தனது முதலாவது முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தில் (PTA - Preferential Trade Agreement) கையெழுத்திட்டுள்ளது .
- வங்க தேசமானது உலகில் உள்ள எந்தவொரு நாட்டுடனும் PTA ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது இதுவே முதன்முறையாகும்.
- 1971 ஆம் ஆண்டில் வங்க தேசத்தை ஒரு சுதந்திர நாடாக ஏற்றுக் கொண்ட முதல் நாடு பூடான் மற்றும் 2வது நாடு இந்தியா ஆகும்.

## எவரெஸ்ட் மலையின் புதிய உயரம்

- நேபாளம் மற்றும் சீனா ஆகியவை கூட்டாக எவரெஸ்ட் மலையின் புதிய உயரத்தை அறிவித்துள்ளன.
- இது முந்தைய அளவை விட கூடுதலாக 0.86 சென்டிமீட்டர் என்ற அளவில் 8848.86 மீட்டர் என்ற அளவில் உள்ளது.
- முந்தைய உயரமானது 1954 ஆம் ஆண்டில் இந்தியக் கள ஆய்வு நிறுவனத்தினால் மேற்கொள்ளப் பட்ட ஒரு ஆய்வின்படி கணக்கிடப்பட்டது.




## சர்வதேச மதச் சுதந்திரச் சட்டம்

- அமெரிக்க உள்துறையானது சர்வதேச மதச் சுதந்திரச் சட்டத்திற்கு இணங்கும் வகையில் பல்வேறு பட்டியலில் பல்வேறு நாடுகளைத் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- அதில் உள்ள இதர 8 நாடுகளில் பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகியவை மதச் சுதந்திர மீறலுக்கான குறிப்பிட்ட அளவில் கவலை கொள்ள வைக்கும் நாடுகள் (CPC - Country of Particular Concern) என்ற பட்டியலில் வைக்கப் பட்டுள்ளன.
- மியான்மர், எரித்திரியா, ஈரான், நைஜீரியா, வட கொரியா, சவுதி அரேபியா, தஜிகிஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தான் ஆகியவை அந்த இதர நாடுகளாகும்.

- அமெரிக்க உள்துறையானது இந்தியா, ரஷ்யா, சிரியா மற்றும் வியட்நாம் ஆகியவற்றை CPC ஆக வகைப்படுத்தும் யுஎஸ்சிஐஆர்எப் (USCIRF) என்ற அமைப்பின் பரிந்துரையை ஏற்றுக் கொள்ள வில்லை.
- கோமோரோஸ், கியூபா, நிகரகுவா மற்றும் ரஷ்யா ஆகியவை மதச் சுதந்திரத்தின் மீது தீவிரமான விதிமீறல்களைச் சகித்துக் கொண்ட அல்லது அதில் ஈடுபட்ட அரசாங்கங்களுக்கான சிறப்புக் கண்காணிப்புப் பட்டியலில் வைக்கப் பட்டுள்ளன.
- அல் சஹாபாப், அல்குவைதா, போகோ ஹராம், ஹயத் தாஹ்ரின் அல்-ஷாம், ஹவுதீஸ், ஐஎஸ்ஐஎஸ், ஐஎஸ்ஐஎஸ்-கிரேட்டர் சஹாரா, ஐஎஸ்ஐஎஸ் மேற்கு ஆப்பிரிக்கா, ஜமாத் நஸர் அல்-இஸ்லாம் வால் முஸ்லீம்ன் மற்றும் தலிபான் ஆகியவை "குறிப்பிட்ட அளவில் கவலை கொண்ட நிறுவனங்களாக" வகைப்படுத்தப் பட்டுள்ளன.

## கூகுள் தேடல்கள்

- கூகுள் இந்தியாவின் 'இந்த ஆண்டிற்கான தேடல் பிரிவின்படி', 2020 ஆம் ஆண்டில் கூகுள் இந்தியாவில் மிகவும் தேடப்பட்ட வார்த்தை இந்தியப் பிரீமியர் லீக் என்பதாகும். இது கொரானா வைரஸ் என்ற வார்த்தையைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் இந்தியாவில் மிகவும் தேடப்பட்ட ஆளுமை அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள ஜோ பைடன் ஆவார். அவரைத் தொடர்ந்து அர்னாப் கோஸ்வாமி, கனிகா கபூர், கிம் ஜாங் உன் மற்றும் அமிதாப் பச்சன் ஆகியோர் அதிக அளவில் தேடப்பட்ட நபர்களாவர்.
- சர்வதேச அளவில் கூகுள் தேடலில் கொரானா வைரஸ் முதலிடத்திலும் அதற்கு அடுத்த இடங்களில் தேர்தல் முடிவுகள் மற்றும் கோபே பிரையாண்ட் ஆகியனவும் உள்ளன.

## கோவிட்-19 தடுப்பூசியை அறிமுகப்படுத்திய முதல் நாடு

- உலகில் கோவிட் -19 தடுப்பூசியை வெளியிடும் முதல் நாடாக ஐக்கியப் பேரரசு திகழ்கிறது.
- பிரிட்டிஷ் அரசாங்கம் சமீபத்தில் ஃபைசர் மற்றும் பயோஎன்டெக் உருவாக்கிய கோவிட் -19 தடுப்பூசியை வெளியிட்டது.
- 21 நாட்களுக்குள் இரண்டு ஊசிகள் தடுப்பூசி மருந்துகளாக வழங்கப்பட உள்ளன.
- ஃபைசர் தடுப்பூசியானது எம்ஆர்என்ஏ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- இந்தத் தடுப்பூசி ஆக்ஸ்போர்டு தடுப்பூசி போலல்லாமல் மைனஸ் 20 டிகிரி முதல் மைனஸ் 80 டிகிரி வரையிலான செல்சியஸ் வெப்பநிலையில் கொண்டு செல்லப்பட வேண்டும்.
- ஆக்ஸ்போர்டு தடுப்பூசிகளை சாதாரணமாக இரண்டு முதல் எட்டு டிகிரி செல்சியஸ் வரை குளிரூட்டலாம்.

## கொள்ளை நோய்த் தடுப்புத் தயார்நிலை நாள்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது சமீபத்தில் இந்தத் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது டிசம்பர் 27 ஆம் தேதியை சர்வதேச கொள்ளை நோய்த் தடுப்புத் தயார்நிலை நாளாக அறிவித்துள்ளது.
- தகவல் பரிமாற்றம், விஞ்ஞான அறிவு மற்றும் சிறந்த நடைமுறைகளை உள்நாட்டிலும், பிராந்தியத்திலும், தேசிய அளவிலும் மற்றும் சர்வதேச அளவிலும் பரப்புவதை இது குறிக்கிறது.

- கொள்ளை நோய் என்பது ஒரு நோயானது குறுகிய காலத்திற்குள் அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு வேகமாக பரவுவதைக் குறிக்கும்.

## இஸ்ரேல் – மொராக்கோ அமைதி ஒப்பந்தம்

- மொராக்கோ நாடானது இந்த ஆண்டில் இஸ்ரேல் நாட்டுடன் ராஜ்ஜிய உறவுகளை சமநிலைப் படுத்திய 4வது அரபு நாடாக உருவெடுத்துள்ளது.
- இது ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், சூடான் ஆகிய நாடுகளுக்குப் பிறகு மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- ஒட்டு மொத்தமாக, முதன்முறையாக இஸ்ரேலை அங்கீகரித்த எகிப்து மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளுக்குப் பிறகு, இஸ்ரேலை அங்கீகரித்த 6வது நாடு மொராக்கோ ஆகும்.
- இதற்குப் பலனாக, அமெரிக்காவானது பிரச்சினைக்குரிய மேற்கு சகாராப் பகுதியில் மொராக்கோவின் உரிமைக் கோரிக்கையை அங்கீகரித்துள்ளது.
- இந்தப் பகுதி மொராக்கோ மற்றும் அல்ஜீரியாவினால் ஆதரிக்கப்படும் போலிசாரியோ முன்னணி ஆகியவற்றுக்கு இடையே உரிமை கோரப் படும் இரு சர்ச்சைக்குரிய பகுதியாகும்.

## இந்தியப் பெருங்கடல் தீவு விளையாட்டுகள்

- 2023 ஆம் ஆண்டின் இந்தியப் பெருங்கடல் தீவு விளையாட்டுப் போட்டிகளை மாலத் தீவுகளுக்குப் பதிலாக மடகாஸ்கர் நடத்த உள்ளது.
- இது இந்தியப் பெருங்கடல் தீவு நாடுகளைச் சேர்ந்த தடகள விளையாட்டு வீரர்களைக் கொண்டு 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது.
- இந்த விளையாட்டுகளில் தற்பொழுது செசல்ஸ், இலங்கை, மொரீஷியஸ், ரீயூனியன் மற்றும் கோமோரோஸ் ஆகிய 5 நாடுகள் பங்கு கொள்கின்றன.

## ஆசிய வளர்ச்சிக் கண்ணோட்டம்

- சமீபத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியானது இதனை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2020-21 ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 8% என்ற அளவில் சுருக்கம் பெறும்.

## ஆசிய பசிபிக் நோய்த் தடுப்பு அணுகல் வசதி

- சமீபத்தில் ஆசிய வளர்ச்சி வங்கியானது வளரும் நாடுகளுக்கு ஒரு சமமான ஆதரவை அளிப்பதற்காக இதனைத் தொடங்கியுள்ளது.
- இது நோய்த் தடுப்பு மருந்துகள் வாங்கும் முயற்சிகளுக்கு உதவுவதற்காக வேண்டி வளரும் நாடுகளுக்கு உதவ உள்ளது.

## டைம் பத்திரிகை 2020 ஆம் ஆண்டின் நபர்

- டைம் பத்திரிக்கையானது அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜோ பைடன் மற்றும் துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கமலா ஹாரிஸ் ஆகியோரை "2020 ஆம் ஆண்டின் ஆளுமைகளாக" தேர்ந்தெடுத்துள்ளது.
- டைம் பத்திரிக்கையானது 16 வயது நிரம்பிய காலநிலை ஆர்வலரான கிரேட்டா துன்பெர்க் என்பவரை 2019 ஆம் ஆண்டின் நபராகத் தேர்ந்தெடுத்திருந்தது.

## கோல்டுமேன் சுற்றுச்சூழல் விருது – 2020

- ❖ இந்த விருதானது ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, தீவுகள் மற்றும் தீவு நாடுகள், வட அமெரிக்கா மற்றும் தெற்கு & மத்திய அமெரிக்கா ஆகிய உலகின் 6 புவியியல் பகுதிகளிலிருந்தும் தலா ஒருவருக்கு ஒவ்வோர் ஆண்டும் வழங்கப் படுகின்றது.
- ❖ இது பசுமை நோபல் என்றும் அழைக்கப்படுகின்றது.
- ❖ இந்த விருதானது கலிபோர்னியாவின் சான் பிரான்சிஸ்கோவில் உள்ள கோல்டுமேன் என்ற ஒரு சுற்றுச்சூழல் அமைப்பினால் வழங்கப்படுகின்றது.
- ❖ 2020 ஆம் ஆண்டின் விருதுப் பட்டியல் பின்வருமாறு
  - ○ சிபெசி ஏசிகியல், கனடா
  - ○ கிறிஸ்டல் ஆம்ப்ரோஸ், பஹாமாஸ்
  - ○ லேடி பெச், மெக்சிகோ
  - ○ லூசி பின்சன், பிரான்ஸ்
  - ○ நெபோன்டி நென்குய்மோ, ஈகுவடார்
  - ○ பால் செயின் வா, மியான்மர்.




## யுனெஸ்கோ கல்வி அறிக்கை

- ❖ யுனெஸ்கோவானது '2020 ஆம் ஆண்டு இந்தியாவிற்கான கல்வியின் நிலை குறித்த அறிக்கை : தொழில்சார் கல்வி முதலில்' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ இது ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் யுனெஸ்கோ புது தில்லியின் முதன்மை அறிக்கைகளில் ஒன்றாகும்.
- ❖ இதன் முக்கிய நோக்கம் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் உள்ள கல்வி இலக்குகளை நோக்கிய செயல்பாடுகளைக் கண்காணிப்பதாகும்.
- ❖ இந்த அறிக்கையின் 2வது பதிப்பானது தொழில்நுட்பக் கல்வி, தொழில்சார் கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சியின் மீது கவனம் செலுத்துகின்றது.
- ❖ தேசிய திறன் மேம்பாட்டு மற்றும் தொழில்முனைவுக் கொள்கையானது 2022 ஆம் ஆண்டில் 150 மில்லியன் இந்திய மக்களுக்கு திறன் அளிக்க இலக்கு நிர்ணயித்து உள்ளது.
- ❖ இந்தக் கொள்கையானது 2015 ஆம் ஆண்டில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் தொடங்கப் பட்டுள்ளது.

## வங்கபந்து ஷேக் முஜிப் பரிசு

- வங்கபந்து ஷேக் முஜிபுர் ரஹ்மான் பெயரில் 'ஆக்கப் பூர்வ பொருளாதாரம்' (creative economy) என்ற துறையில் ஒரு பரிசைத் தொடங்க யுனெஸ்கோ முடிவு செய்துள்ளது.
- 2021 ஆம் ஆண்டு நவம்பர் முதல், இளைஞர்களின் உலகளாவியப் பொருளாதார முயற்சிகளுக்காக இந்த விருது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும்.
- யுனெஸ்கோவானது 2021 ஆம் ஆண்டை 'நிலையான வளர்ச்சிக்கான ஆக்கப் பூர்வமான பொருளாதாரத்திற்கான சர்வதேச ஆண்டு' என்று அறிவித்துள்ளது.
- முஜிபூர் ரஹ்மான் வங்க தேசத்தின் முதல் பிரதமராவார் (1972-75).
- அவர் "வங்க தேசத்தின் தந்தை" என்றும் அழைக்கப் படுகிறார்.
- 1949 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அவாமி கூட்டிணைவில் வங்கபந்து ஒரு முன்னணி நபராக இருந்தார்.




## சிவப்பு வழி ஒப்பந்தம்

- இது உலக சுகாதார அமைப்பு, சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறைச் சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றின் இடையே கையெழுத்தானது.
- இது ஒரு அவசர மருத்துவக் குழு முன்முயற்சியைச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக வேண்டி கையெழுத்தானது.
- இது மனித உயிர்களுக்கு நெருக்கடி ஏற்படும் போது சுகாதார மற்றும் அவசர மருத்துவச் சேவைகளை வழங்குவதைப் பலப்படுத்தும்.
- பேரழிவுகளால் பாதிக்கப் பட்டவர்களுக்கு உதவும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்கிற வகையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பு என்பது ஒரு மனிதாபிமான உதவி அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.

## இந்தியப் பணியிட சமத்துவக் குறியீடு

- பிரைட் சர்க்கிள், ஸ்டோன்வால் இங்கிலாந்து மற்றும் FICCI ஆகியவற்றுடன் இணைந்து கேசவ் சூரி எனும் ஒரு அறக்கட்டளையால் இது இந்தியாவில் தொடங்கப் பட்டது.
- இது எல்ஜிபிடி (LGBT) சமூகத்தின் மீதான முன்னேற்றத்தையும், பணியிடத்தில் அவர்கள் உள்ளடக்கத்தையும் அளவிட முதலாளிகளுக்கு உதவும் முதலாவது திறன் மதிப்பிடல் கருவியாகும்.
- இது ஐக்கியப் பேரரசில் 2005 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

## WHO நிறுவனத்தின் 2019 உலகளாவிய சுகாதார மதிப்பீடுகள்

- இந்தப் புதிய தரவுவானது 2000 ஆம் ஆண்டு முதல் முதல் 2019 ஆண்டு வரையிலான தரவுகளை உள்ளடக்கியுள்ளது.
- உலகில் ஏற்படும் இறப்புகளுக்கான முதன்மை காரணங்களுள் பத்தில் ஏழு தொற்றா நோய்களால் ஏற்படுகிறது.
- நீரிழிவு நோய் மற்றும் டிமென்ஷியா ஆகியவை உலகின் முதல் 10 இறப்புக் காரணங்களில் ஒன்றாகும்.
- கடந்த 20 ஆண்டுகளாக உலக அளவில் மரணத்திற்கு இதய நோய் ஒரு முக்கியக் காரணமாக இருந்து வருகிறது.
- தொற்று நோய்களால் ஏற்படும் இறப்புகள் உலகளவில் சரிவைக் கண்டுள்ளது.
- கிட்டத்தட்ட 67 ஆண்டுகளாக (2000 ஆம் ஆண்டில்) இருந்த சராசரி ஆயுட்காலமானது 2019 ஆம் ஆண்டில் 73 ஆண்டுகளுக்கும் மேலாக இருப்பதை ஒப்பிடும் போது மனித ஆயுட்காலம் அதிகரித்துள்ளது என்பதையும் கண்டறிய முடிகிறது.
- அமெரிக்காவில், ஊனநிலை மற்றும் இறப்பு இரண்டிலும் போதைப் பொருள் பயன்பாடு ஒரு முக்கிய காரணியாக இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.




## வாஷ் (WASH) குறித்த உலகளாவிய முன்னேற்ற அறிக்கை

- இந்த அறிக்கைக்கு ‘முதலில் அடிப்படைகள்: பாதுகாப்பான, தரமான, பராமரிப்புக்கான சுகாதார வசதிகளில் அனைவருக்குமான நீர், சுகாதாரம் மற்றும் சுகாதாரச் சேவைகள்’ (Fundamentals first: Universal water, sanitation, and hygiene services in health care facilities for safe, quality care’ ) என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இது உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐ.நா. குழந்தைகள் நிதியத்தினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையாகும்.
- சுகாதார வசதிகளில் அடிப்படைத் தேவையான நீர் மற்றும் சுகாதார சேவைகள் இல்லாததால் சுமார் 1.8 பில்லியன் சுகாதார ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் கோவிட்-19 தொற்று மற்றும் பிற நோய்களுக்கு ஆளாகக் கூடிய அதிக ஆபத்தில் உள்ளனர்.

## சமநிலை வாழ்க்கை (வாழ்வு) மாநாடு

- இது உலக சுகாதார அமைப்பின் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் புதிதாகப் பிறந்தவர்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோரது நலத்திற்கான பங்களிப்பு என்ற ஒரு அமைப்பினால் ஒருங்கிணைக்கப் பட்டது.
- இந்தியாவானது உலகம் முழுவதும் உள்ள பெண்கள், புதிதாகப் பிறந்த குழந்தைகள், இளம் குழந்தைகள் மற்றும் பதின்மப் பருவத்தினருக்கு அத்தியாவசியச் சேவைகளை அளிப்பதற்காக 2 பில்லியன் அமெரிக்க டாலரை வழங்க முடிவு செய்துள்ளது.

## மனித வளர்ச்சிக் குறியீடு 2020

- ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டமானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டில் இதன் கருத்துரு மனித மேம்பாடு மற்றும் மானுடவியல் என்பது ஆகும்.
- இது 2019 ஆம் ஆண்டிற்கான HDI (Human Development index) தரவரிசைகளை வழங்குகிறது.
- இந்த ஆண்டின் அறிக்கை "கோள் அழுத்தங்களுக்கு" (planetary pressures) ஏற்ப அமைந்துள்ளது.
- இதன் பொருள், கார்பன் டை ஆக்சைடு உமிழ்வு மற்றும் கரிமப் பொருள் தடம் ஆகிய ஒவ்வொன்றையும் ஒரு தனிநபரின் அடிப்படையில் வைத்து ஒரு நாட்டின் நிலையான மனித வளர்ச்சிக் குறியீட்டைச் சரி செய்வதாகும்.
- 189 நாடுகளில் இந்தியா 131வது இடத்திற்குச் சரிந்தது.
- இந்த அறிக்கையில் நார்வே, அயர்லாந்து மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகள் முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன.
- இதன் உலகத் தரவரிசையில் ஹாங்காங் நான்காவது இடத்தையும், ஐஸ்லாந்து மற்றும் ஜெர்மனி ஆகியவை ஐந்தாவது மற்றும் ஆறாவது இடங்களையும் பிடித்துள்ளன.
- இந்த அறிக்கையில் சீனா 85வது இடத்திலும், பாகிஸ்தான் 154வது இடத்திலும் உள்ளன.

### *இந்தியாவின் செயல்திறன்*

- இந்தியாவின் மனித மேம்பாட்டுக் குறியீடு 0.640 புள்ளிகளாக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியர்களின் பிறப்பின் போதான சராசரி வாழ்நாள் ஆயுட் காலம் 69.7 ஆண்டுகளாகும்.
- வாங்கும் திறன் சமநிலை அடிப்படையில் இந்தியாவின் மொத்தத் தேசிய வருமானம் 2018 ஆம் ஆண்டில் 6,829 அமெரிக்க டாலர்களிலிருந்து 2019 ஆம் ஆண்டில் 6,681 அமெரிக்க டாலர்களாக சரிந்தது.
- நிறுவப்பட்ட சூரிய மின் உற்பத்தித் திறன் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டில் இந்தியா ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் HDI மதிப்பு 0.645 ஆகும்.
- 2018 ஆம் ஆண்டில் இந்தியா 130வது இடத்தில் இருந்தது.
- இது நடுத்தர மனித மேம்பாட்டுப் பிரிவில் உள்ளது.
- 1990 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவின் HDI மதிப்பு 0.429 என்ற புள்ளியிலிருந்து 0.645 என்ற புள்ளியாக உயர்ந்துள்ளது (50.3 சதவீதம் அதிகரித்து உள்ளது).
- 1990 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவின் பிறப்பின் போதான வாழ்நாள் எதிர்பார்ப்பானது 11.8 ஆண்டுகள் அதிகரித்துள்ளது, சராசரி பள்ளிப் படிப்பு ஆண்டுகள் 3.5 ஆண்டுகள் அதிகரித்து உள்ளன, மேலும் பள்ளிப் படிப்பின் எதிர்பார்க்கப் பட்ட ஆண்டுகள் 4.5 ஆண்டுகள் அதிகரித்து உள்ளன.
- இந்தியாவின் தனிநபர் அடிப்படையிலான மொத்த தேசிய வருமானமானது 1990 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் சுமார் 273.9 சதவீதம் அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் சூரிய ஒளி உற்பத்தித் திறனானது 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 2.6 ஜிகா வாட்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு ஜூலையில் 30 ஜிகா வாட்டாக அதிகரித்து உள்ளது.

### *HDI பற்றி*

- இது முதன்முதலில் 1990 ஆம் ஆண்டில் நோபல் பரிசு பெற்ற இந்தியரான அமர்த்தியா சென் மற்றும் பாகிஸ்தான் பொருளாதார நிபுணர் மஹ்பூப் உல் ஹக் ஆகியோரால் தொடங்கப் பட்டது.
- இது மனித வளர்ச்சியின் மூன்று பரிமாணங்களில் சராசரி சாதனை என்று அளவிடப் படுகிறது.
- இது ஆயுட்காலம், கல்வி மற்றும் தனிநபர் வருமானம் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது.

**Miles to go**

Though India improved its absolute value of the Human Development Index (0.645 in 2019 from 0.642 the previous year), it dropped a place in the overall ranking

| Country | HDI rank (2019) | Change from 2018 |
|---|---|---|
| Russia | 52 | -3 |
| Sri Lanka | 72 | 1 |
| Brazil | 84 | 0 |
| China | 85 | 2 |
| South Africa | 114 | 1 |
| **India** | **131** | **-2** |
| Bangladesh | 133 | 1 |
| Nepal | 142 | 1 |
| Pakistan | 154 | 0 |

## சாபஹார் துறைமுகம் குறித்த TWG சந்திப்பு

- சாபஹார் துறைமுகத்தின் கூட்டுப் பயன்பாடு குறித்த இந்தியா, ஈரான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையேயான முதலாவது முத்தரப்பு பணிக் குழுவின் சந்திப்பானது (Trilateral Working Group - TWG) நடத்தப் பட்டது.
- இந்தியாவானது 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இந்தியாவினால் நடத்தப்பட இருக்கும் சர்வதேச கடல்சார் மாநாட்டின் ஒரு பகுதியாக "சாபஹார் தினத்தை" அனுசரிக்கப் பரிந்துரை செய்துள்ளது.



## "நாணய மோசடியாளர்கள்" கண்காணிப்புப் பட்டியல்

- ❖ அமெரிக்க கருவூலத் துறையானது சுவிட்சர்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை நாணய மோசடியாளர்களாக அறிவித்துள்ளது.
- ❖ மேலும் இது தைவான், தாய்லாந்து, இந்தியா ஆகிய நாடுகளைக் கண்காணிப்பு நாடுகளின் பட்டியலில் புதிதாகச் சேர்த்துள்ளது.
- ❖ இது டாலருக்கு எதிராக தங்களது நாணயங்களின் மதிப்பைக் குறைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சந்தேகிக்கின்றது.




## நேத்ரா (NETRA) கட்டுப்பாட்டு மையம்

- ❖ இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பானது விண்வெளி கடல்சார் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கு வேண்டி பிரத்தியேகக் கட்டுப்பாட்டு மையத்தை அமைத்துள்ளது.
- ❖ இந்த மையமானது "நேத்ரா" என்று பெயரிடப்பட்டுள்ளது.
- ❖ இந்த மையமானது பெங்களூருவில் உள்ள ஐஎஸ்டிஆர்ஏசி வளாகத்திற்குள் அமைந்து உள்ளது.

## மைய வங்கிகள் மற்றும் மேற்பார்வையாளர்களின் அமைப்பு

- ❖ அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியானது காலநிலை மாற்ற அபாயத்தின் மீது கவனம் செலுத்தும் சர்வதேச மத்திய வங்கிகள் குழுவில் இணைந்துள்ளது.
- ❖ இந்திய ரிசர்வ் வங்கியைத் தவிர்த்து இதுவரை மைய வங்கிகள் மற்றும் மேற்பார்வையாளர்கள் என்ற அமைப்பின் உறுப்பினராக இல்லாத ஒரே உலக மைய வங்கி இதுவாகும்.

## மனிதச் சுதந்திரக் குறியீடு 2020

- ❖ இது அமெரிக்கக் கொள்கை வகுக்கும் அமைப்பான கேட்டோ மையம் மற்றும் கனடாவில் உள்ள பிரேசர் நிறுவனம் அகியவற்றினால் வெளியிடப்பட்டுள்ளது.
- ❖ இது குடிமையியல், பொருளாதாரம் மற்றும் தனிப்பட்டச் சுதந்திரம் ஆகியவற்றின் மீதான ஒரு உலகளாவியத் தரவரிசையாகும்.
- ❖ இது 2008 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை 162 நாடுகளைத் தரவரிசைப் படுத்துவதற்காக தனிப்பட்ட, குடிமை மற்றும் பொருளாதாரச் சுதந்திரத்தின் 76 குறிகாட்டிகளை எடுத்துக் கொண்டு உள்ளது.
- ❖ இது 162 நாடுகளில் இந்தியாவை 111வது இடத்தில் தரவரிசைப்படுத்தியுள்ளது.
- ❖ நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் ஹாங்காங் ஆகியவை முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன.
- ❖ இந்தப் பட்டியலில் சிரியா கடைசி இடத்தைப் பிடித்துள்ளது.

**top & bottom countries**

| | | | |
|---|---|---|---|
| 1. New Zealand | 8.87 | 158. Iran | 4.54 |
| 2. Switzerland | 8.82 | 159. Yemen, Rep. | 4.17 |
| 3. Hong Kong | 8.74 | 160. Venezuela | 4.08 |
| 4. Denmark | 8.73 | 161. Sudan | 4.01 |
| 5. Australia | 8.68 | 162. Syria | 3.97 |

## சர்வதேச விளையாட்டில் ரஷ்யா

- ஜெனீவாவில் உள்ள விளையாட்டிற்கான நடுவர் நீதிமன்றமானது ஒலிம்பிக் அல்லது இதர சர்வதேச சாம்பியன்ஷிப்பில் தனது பெயர், கொடி மற்றும் கீதம் ஆகியவற்றை 2 ஆண்டுகளுக்குப் பயன்படுத்த இரஷ்யாவிற்குத் தடை விதித்துள்ளது.
- மேலும் இரஷ்யாவின் மீது அடுத்த 2 ஆண்டுகளுக்கு நடைபெறும் போட்டிகளை நடத்துவதற்கான ஏலத்தில் பங்கு கொள்வதற்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது.
- எனினும், இரஷ்ய வீரர்கள் மற்றும் அணிகள் அனைத்து சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலும் விளையாட அனுமதிக்கப் பட்டுள்ளனர்.
- இது வரவிருக்கும் 2022 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்ஸ், பெய்ஜிங்கில் நடைபெற இருக்கும் 2022 ஆம் ஆண்டு குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகள், உலக சாம்பியன்ஷிப் போட்டிகள், மற்றும் கத்தாரில் 2022 ஆம் ஆண்டில் நடைபெற இருக்கும் பிபா உலகக் கோப்பை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- "சமநிலை தடகளம்" அல்லது "சமநிலை அணி' என்ற சொற்கள் சமநிலை முக்கியத்துவம் கொண்டதாக இருப்பின் தனது சீருடைகளின் மீது ரஷ்யப் பெயரைத் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

## நுழைவாயில் ஒப்பந்தம்

- சமீபத்தில் நாசா மற்றும் கனடா விண்வெளி நிறுவனம் ஆகியவை இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- கனடா ஆனது நிலவு நுழைவாயில் விண்வெளி நிலையம் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக விளங்குகின்றது.
- மேலும், கனடா ஆனது ஆர்டிமிஸ் II திட்டத்தின் ஒரு பகுதியாகவும் விளங்குகின்றது.
- ஆர்டிமிஸ் II என்பது 1972 ஆம் ஆண்டிற்குப் பிறகு நாசாவில் செயல்படுத்தப்பட இருக்கும் நிலவிற்கான விண்வெளி வீரர்களைக் கொண்ட முதலாவது திட்டமாகும்.
- நிலவு நுழைவாயில் விண்வெளி நிலையமானது சர்வதேச விண்வெளி நிலையத்தின் அளவில் 6ல் 1 பங்கு அளவு கொண்டதாகும்.
- இது நிலவின் சுற்று வட்டப் பாதையில் அமைக்கப்பட உள்ளது.

## நிதியியல் அமைப்பைப் பசுமையாக்குவதற்கான அமைப்பு

- சமீபத்தில் அமெரிக்க பெடரல் வங்கியானது நிதியியல் அமைப்பை பசுமை ஆக்குவதற்கான அமைப்பில் இணைந்துள்ளது.
- இது 75 மத்திய வங்கிகள் மற்றும் நிதியியல் மேற்பார்வையாளர்களைக் கொண்ட ஒரு அமைப்பாகும்.
- இது 2017 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

- இது பாரிஸ் ஒப்பந்தத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்தவற்குத் தேவையான உலகளாவிய எதிர்வினையை வலுப்படுத்துவதற்காக வேண்டி 8 மத்திய வங்கிகளால் தொடங்கப் பட்டுள்ளது.

## 6வது இந்திய-ஜப்பான் சம்வாத் கருத்தரங்கு

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் காணொலி வாயிலாக இக்கருத்தரங்கில் உரையாற்றினார்.
- இவர் அனைத்துப் புத்தமத இலக்கியங்கள் மற்றும் வேதங்களின் நூலகத்தை அமைக்கப் பரிந்துரைத்துள்ளார்.
- முதலாவது இந்திய-ஜப்பான் சம்வாத் கருத்தரங்கானது 2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் உள்ள புத்த கயாவில் நடத்தப் பட்டது.




## கொள்ளை நோய்க் காலம் மற்றும் கூட்ட நெரிசலுக்கான (அதிகளவில் கூடுதல்) எதிர்வினை

- இது காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையின்படி, 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் ஜுன் மாதங்களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் கோவிட் – 19 தொற்றின் காரணமாக இந்தியச் சிறைச் சாலைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கையானது 10.42% அளவிற்குக் குறைந்து உள்ளது.

## 20வது IORA அமைப்பின் அமைச்சர்கள் குழு

- இந்தியக் கடலோர நாடுகள் கூட்டமைப்பின் (Indian Ocean Rim Association - IORA) அமைச்சர்கள் குழுவின் 20வது சந்திப்பானது ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைமையின் கீழ் நடத்தப்பட்டது.
- இந்தக் காணொலி வாயிலான சந்திப்பில் அனைத்து 22 உறுப்பு நாடுகளும் மற்றும் 10 பங்காளர் நாடுகளும் கலந்து கொண்டன.
- இந்தச் சந்திப்பின் கருத்துரு, "இந்தியப் பெருங்கடலில் பகிரப்பட்ட விதி மற்றும் வாய்ப்புகளுக்கான ஒரு பாதையை ஊக்குவித்தல்" என்பதாகும்.
- இலங்கையானது 2021-23 காலக் கட்டத்திற்கான IORA அமைப்பின் துணைத் தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டது.

- இந்தச் சந்திப்பின் போது பிரான்சு நாடானது IORA அமைப்பின் 23வது உறுப்பு நாடாக இணைக்கப் பட்டது.
- IORA ஆனது 1997 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது. இதன் தலைமையகம் மொரீஷியலின் எபீனில் உள்ளது.




## 2020 ஆம் ஆண்டின் கலாச்சாரப் பாரம்பரியப் பாதுகாப்பிற்கான யுனெஸ்கோ ஆசிய-பசிபிக் விருதுகள்

- ஸ்ரீநகரில் உள்ள அமர்சிங் கல்லூரிக்கு யுனெஸ்கோவின் கீழ் புகழ்பெற்ற தகுதிநிலை விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- காஷ்மீரில் உள்ள ஒரு கலாச்சாரப் பாரம்பரியத்திற்கு வழங்கப் படும் முதலாவது சர்வதேச விருது இதுவாகும்.
- மலபாரி வளாகக் கட்டிடம், மும்பையின் சேவா சதன் சமூகம் ஆகியவையும் இந்தத் தகுதிநிலை விருதைப் பெற்றுள்ளன.
- தில்லியின் பாரம்பரியப் பூங்காவானது சிறப்புமிகு விருதினைப் பெற்றுள்ளது.
- யுனெஸ்கோ ஆனது 2020 ஆம் ஆண்டு விருதுகளில் நீடித்த மேம்பாட்டிற்கான சிறப்பு அங்கீகாரத்தை அறிமுகப் படுத்தியுள்ளது.



- புது தில்லயில் உள்ள சுந்தர் காப்பகமானது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த விருதைப் பெற்றுள்ளது.
- மேலும் கேரளாவின் திருச்சூரில் உள்ள குருவாயூர் ஆலயத்தில் உள்ள கூத்தம்பலம் தனித்துவப் பிரிவு விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

## 4வது ஆசிய நீர் மேம்பாட்டுக் கண்ணோட்டம் 2020

- இது ஆசிய மேம்பாட்டு வங்கியால் (Asian Development Bank - ADB) வெளியிடப் பட்டது.
- இதை ADB ஆசிய-பசிபிக் நீர் மன்றம் மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை இணைந்து தயாரித்துள்ளன.
- இது ஆசிய-பசிபிக் பகுதி முழுவதும் தேசிய நீர்ப் பாதுகாப்பை மதிப்பிடுகிறது.
- இதன்படி, கிராமப்புறங்களில் 1.5 பில்லியன் மக்களுக்கும், நகர்ப்புறங்களில் 0.6 பில்லியன் மக்களுக்கும் இன்னும் போதுமான நீர் வழங்கல் மற்றும் சுகாதார வசதி இல்லை.
- சீனா, கிர்கிஸ்தான் மற்றும் மாலத்தீவுகள் ஆகிய நாடுகள் ஆசிய-பசிபிக் பகுதியில் சிறந்து விளங்கும் முதல் 3 நாடுகள் ஆகும்.

## ஐக்கியப் பேரரசு இந்தியா இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தம்

- நெதர்லாந்தின் தி ஹேக்கில் உள்ள நிரந்தர நடுவர் நீதிமன்றமானது வரி சார்ந்த பிரச்சினையில் இந்தியாவிற்கு எதிரான ஐக்கியப் பேரரசின் கெய்ர்ன் ஆற்றல் நிறுவனத்திற்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கியுள்ளது.

### A taxing journey

A timeline of the conflict

**January 2014:** Income Tax Department seeks information from Cairn Energy about group reorganisation done **in 2006**

**March 2015:** Cairn Energy receives draft assessment order from I-T Department, citing **retrospective legislation to seek ₹10,247 crore** in taxes. Cairn reacts by filing a notice of dispute

**May 2018:** Pending arbitration proceedings, I-T Department begins selling Cairn shares to recover tax dues

**2018:** Three-member international arbitration tribunal concludes hearings in tax dispute

**December 23, 2020:** Cairn Energy wins arbitration

- 2011 ஆம் ஆண்டில் கெய்ர்ன் நிறுவனமானது தனது கெய்ர்ன் இந்தியா நிறுவனத்தில் உள்ள தனது பங்கை வேதாந்தா நிறுவனத்திற்கு விற்றுள்ளது.
- 2014 ஆம் ஆண்டில் இந்திய வரித்துறையானது ரூ.10,247 கோடியை அதனிடம் வரியாகக் கோரியது.
- இந்திய அரசானது 2012 ஆம் ஆண்டில் உள்நாட்டு வணிக மறுசீரமைப்பின் மீது பின்னோக்கித் தேதியிட்ட வகையில் கடந்த காலத்திற்கும் பொருந்தக் கூடிய வரிச் சட்டத்தைப் பயன்படுத்தி வரியைக் கோரியது.
- இதற்கு முன்பு இந்த ஆண்டின் செப்டம்பர் மாதத்தில் வோடபோன் நிறுவனமானது இந்திய அரசிறகு எதிராக ஒரு சர்வதேச நடுவர் வழக்கில் வெற்றி பெற்றது.

## இஸ்ரேல் தேர்தல்

- இஸ்ரேல் பாராளுமன்றமான (நெசட்) தேசியப் பாராளுமன்றமானது நிதிநிலை அறிக்கையை நிறைவேற்றுவதில் தோல்வி அடைந்துள்ளது.
- இஸ்ரேலியப் பிரதமரான பெஞ்சமின் நெதான்ஹீயூ மற்றும் அவரது கூட்டணியைச் சேர்ந்தவரும் நீலம் மற்றும் வெள்ளைக் கட்சியின் தலைவருமான பென்னி கான்ட்ஸ் ஆகியோர் 7 மாத கால அரசின் வீழ்ச்சிக்காக ஒருவரையொருவர் குற்றம் சுமத்திக் கொண்டனர்.
- இஸ்ரேல் ஆனது கடந்த 2 ஆண்டுகளில் 4வது தேர்தலைச் சந்திக்க வுள்ளது.
- இஸ்ரேல் 2021 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் தேர்தலை நடத்த வாய்ப்புள்ளது.
- 3 முடிவு பெறாத தேர்தல்களுக்கு அடுத்து பென்னி கான்ட்ஸ் அவர்கள் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு “அவரச கால கூட்டணி அரசாங்கத்தை” அமைப்பதற்காக பெஞ்சமின் நெதான்ஹீயூ அவர்களுடன் இணைந்தார்.

## அயல்நாட்டில் அமைந்த நாடு கடந்த திபெத்தியப் பாராளுமன்றம்

- அமெரிக்க காங்கிரஸ் ஆனது திபெத்தியக் கொள்கை மற்றும் ஆதரவுச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.
- சீனாவின் எந்தவொரு குறுக்கீடும் இல்லாமல் தலாய் லாமாவின் அடுத்த வாரிசைத் தேர்ந்தெடுப்பதற்கான திபெத்திய பௌத்தர்களின் உரிமைகளை அது மீண்டும் உறுதிப்படுத்துகிறது.
- நாடு கடந்த திபெத்தியப் பாராளுமன்றத்தின் தலைமையகம் இமாச்சலப் பிரதேசத்தின் காங்க்ரா மாவட்டத்தில் உள்ள தர்மசாலாவில் உள்ளது.
- தற்போதைய மற்றும் 14வது தலாய் லாமா 1959 ஆம் ஆண்டு திபெத்திலிருந்து தப்பி வந்த காலம் முதல் இந்தியாவில் வாழ்ந்து வருகிறார்.

## கரையோரக் கண்காணிப்பு (ரேடார்) அமைப்பு

- மாலத்தீவு, மியான்மர் மற்றும் வங்க தேசத்தில் கடலோரக் கண்காணிப்பு நிலையங்களை அமைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- மொரீஷியஸ், செசல்ஸ் மற்றும் இலங்கை ஆகியவை ஏற்கனவே நாட்டின் கடலோர ரேடார் வலையமைப்பில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
- இந்தியக் கடற்படையின் தகவல் மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு மையம் ஆனது கடல்சார் தரவு இணைவிற்கான ஒரு முதன்மை நிறுவனமாகும்.
- ஹரியானாவின் குருகிராமில் அமைந்துள்ள இது 26/11 மும்பை பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பின்னர் அமைக்கப் பட்டது.

## ஐக்கிய நாடுகள் மற்றும் இஸ்ரேல்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது (UNGA) 2020 ஆம் ஆண்டில் இஸ்ரேல் நாட்டின் மீது அதிக அளவு கண்டனங்களைச் சுமத்தியுள்ளது.
- இது ஜெனீவாவில் உள்ள ஒரு அரசு சாரா அமைப்பான UN கண்காணிப்பு அமைப்பினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையாகும்.
- UNGA ஆனது இந்த ஆண்டில் இஸ்ரேல் நாட்டிற்கு எதிராக 17 தீர்மானங்களை ஏற்றுக் கொண்டது, ஆனால் UNGA மற்ற நாடுகளுக்கு எதிராக 6 தீர்மானங்களை மட்டுமே ஏற்றுக் கொண்டு உள்ளது.
- வட கொரியா, ஈரான், சிரியா, மியான்மர் ஆகிய நாடுகளுக்கு எதிராக தலா 1 தீர்மானமும் கிரீமியாவின் மீது 2 தீர்மானங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- UNGA தீர்மானங்கள் யாரையும் கட்டுப்படுத்தக் கூடியவை அல்ல, ஆனால் இவை உலக அளவில் அடையாள ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.
- இந்த ஆண்டு தொடக்கத்தில், இஸ்ரேல் ஆனது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையகத்துடனான தனது உறவைத் துண்டித்தது.

## வோடபோன் வழக்கு

- இந்தியாவானது வோடபோன் குறித்த நடுவர் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து சிங்கப்பூர் நடுவர் மையத்தில் முறையீடு செய்துள்ளது.
- நெதர்லாந்தில் உள்ள நிரந்தர நடுவர் நீதிமன்றமானது பிரிட்டிஷ் தொலைதொடர்பு நிறுவனமான வோடாபோன் நிறுவனத்திற்கு ஆதரவாகத் தீர்ப்பு வழங்கியது.
- இருதரப்பு முதலீட்டு ஒப்பந்தமானது 1995 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு இடையே கையெழுத்திடப்பட்டது.
- இது ஒரு நாடு மற்றொரு நாட்டின் வரம்பில் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முதலீடுகளைப் பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல் ஆகியவற்றிற்காக வேண்டி கையெழுத்திடப் பட்டது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் மற்றொரு நாட்டில் முதலீடு செய்துள்ள நிறுவனங்கள் "அனைத்து நேரங்களிலும் நியாயமான மற்றும் சமமான ஒரு அணுகுமுறையைக் கொண்டு" இருக்கும்.




## இந்தியாவின் மீது ஐரோப்பிய ஒன்றியம் (EV) – ஐக்கியப் பேரரசு (UK) பிரிக்ஸிட் ஒப்பந்தத்தின் தாக்கம்

- சமீபத்தில் கையெழுத்திடப்பட்ட ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவற்றிற்கிடையேயான பிரிக்ஸிட் ஒப்பந்தத்திலிருந்து இந்தியா மிக அதிக அளவில் பயனடைய இருக்கின்றது.

- இந்தியாவிற்கான ஆதாயங்கள் குறிப்பாக சேவைத் துறையில் உள்ளன.
- இதற்குக் காரணம் UK நாட்டின் நாணயம் இனி மிக மலிவானதாக விளங்குவதாகும்.
- இந்தியாவின் 14வது மிகப்பெரிய வர்த்தகப் பங்காளர் நாடு UK ஆகும்.
- தற்பொழுது இந்தியாவானது UK நாட்டுடன் 2 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வர்த்தக உபரியைக் கொண்டுள்ளது.




## 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களின் சர்வதேச ஆண்டுகள்

- இவை தற்பொழுது ஐக்கிய நாடுகள் அமைப்பினால் சர்வதேச ஆண்டுகளாக கடைபிடிக்கப் படுகின்றன.
- பொதுவாக, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பு நாடுகள் இதன் அனுசரிப்பு குறித்து பரிந்துரைக்கும்.
- அதன் பின்னர் பொதுச் சபையானது ஒரு தீர்மானத்துடன் இந்த ஆண்டை ஏற்படுத்தும்.

***2021***

- சர்வதேச அமைதி மற்றும் நம்பிக்கைக்கான ஆண்டு.
- நீடித்த மேம்பாட்டிற்காக வேண்டி ஆக்கப் பூர்வமான பொருளாதாரத்திற்கான சர்வதேச ஆண்டு
- சர்வதேச பழங்கள் மற்றும் காய்கறிகள் ஆண்டு.
- சர்வதேச குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு ஆண்டு.

***2020***

- சர்வதேச தாவர வள (ஆரோக்கிய) ஆண்டு
- சர்வதேச செவிலியர்கள் மற்றும் மருத்துவர்கள் ஆண்டு

***சர்வதேசப் பத்தாண்டுகள் 2011-2020***

- காலனியாதிக்க ஒழிப்பிற்கான மூன்றாவது சர்வதேச பத்தாண்டு
- பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த ஐக்கிய நாடுகளின் பத்தாண்டுகள்
- சாலைப் பாதுகாப்பு மீதான நடவடிக்கை குறித்த பத்தாண்டுகள்

- பாலைவனங்கள் மற்றும் பாலைவனமயமாதலை எதிர்த்துப் போராடுதல் ஆகியவற்றுக்கான ஐக்கிய நாடுகளின் பத்தாண்டுகள்.

***2021-2030***

- ஆரோக்கியமான வயது முதிர்விற்கான ஐக்கிய நாடுகளின் பத்தாண்டுகள்
- சுற்றுச்சூழலமைப்பு மீட்டெடுப்பு குறித்த ஐக்கிய நாடுகளின் பத்தாண்டுகள்
- நீடித்த வளர்ச்சிக்கான பெருங்கடல் அறிவியல் மீதான ஐக்கிய நாடுகளின் பத்தாண்டுகள்.

## உலக சுகாதாரப் பிரச்சினைகள்

- சமீபத்தில் உலக சுகாதார அமைப்பானது (WHO) உலக சுகாதாரப் பிரச்சினைகள் குறித்த ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது.
- WHO ஆனது 2021 ஆம் ஆண்டில் அவசரகால நிலைகளுக்கான தயார்நிலைகளை வலுப்படுத்துவதற்கு வேண்டி 10 வழிகளைப் பரிந்துரைத்துள்ளது.

### WHO list of 10 global health issues in 2021

- Build global solidarity for worldwide health security
- Speed up access to Covid-19 tests, medicines and vaccines
- Advance health for all
- Tackling health inequities
- Provide global leadership on science and data
- Revitalize efforts to tackle communicable diseases
- Combat drug resistance
- Prevent and treat NCDs and mental health conditions
- Build back better
- Act in solidarity

## இந்தியா-ஜப்பான் எஃகு ஒத்துழைப்பு

- இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவை தங்களது எஃகு தொழிற்துறைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்து போட்டுள்ளன.
- 2019 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் ஜப்பான் ஆகியவை இரண்டாவது மற்றும் மூன்றாவது மிகப்பெரிய எஃகு உற்பத்தி நாடுகளாக விளங்குகின்றன.
- இவை முறையே 111.2 மில்லியன் டன்கள் மற்றும் 99.3 மில்லியன் டன்கள் எஃகை உற்பத்தி செய்தன.
- ஆனால் 2019 ஆம் ஆண்டில் சீனாவின் எஃகு உற்பத்தியானது 996.3 மில்லியன் டன்களாக இருந்தது.




### இயற்கைக் குறியீடு 2020 செயற்கை நுண்ணறிவு

- இதை இயற்கை ஆராய்ச்சி (Nature Research) என்ற சர்வதேச அறிவியல் வெளியீட்டு நிறுவனம் வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, 2015-2019 ஆகிய ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் குறித்த அதிக பிரசுரங்களைக் கொண்ட 25 நாடுகளில் இந்தியா 3வது இடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் சீனா முதலிடத்திலும், அமெரிக்கா 2வது இடத்திலும் உள்ளன.
- செயற்கை நுண்ணறிவின் மீதான மொத்தப் பிரசுரங்களின் அடிப்படையில் இந்தியாவின் அண்ணா பல்கலைக்கழக ஆராய்ச்சி நிறுவனமானது 32வது இடத்தில் உள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

### தேன் - வேளாண் உற்பத்தியாளர் அமைப்பு திட்டம்

- மத்திய வேளாண் துறை அமைச்சரான நரேந்திர சிங் தோமர் அவர்கள் சமீபத்தில் இந்தக் கூட்டுறவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டத்தின் கீழ், 5 மாநிலங்களில் 5 வேளாண் உற்பத்தியாளர் அமைப்புகள் (Farmer Producer Organization - FPO) ஏற்படுத்தப்பட உள்ளன.
- இவை பீகாரில் கிழக்கு சம்பாரன், இராஜஸ்தானில் பரத்பூர், மத்தியப் பிரதேசத்தில் மொரேனா, உத்தரப் பிரதேசத்தில் மதுரா, மேற்கு வங்காளத்தில் சுந்தரவனம் ஆகிய இடங்களில் ஏற்படுத்தப்பட உள்ளன.
- இந்த அமைப்புகள் இந்தியாவின் தேசிய வேளாண் கூட்டுறவுச் சந்தையிடல் கூட்டமைப்பான NAFED (National agricultural Cooperative marketing federation) என்ற அமைப்பினால் அமைக்கப்பட உள்ளன.
- ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் படி, தேன் உற்பத்தியில் இந்தியா உலக அளவில் 8வது இடத்தில் உள்ளது.
- அதே சமயம் தேன் உற்பத்தியில் சீனா முதல் இடத்தில் உள்ளது.

## இந்தியப் பொருளாதாரம் – பொருளாதார மந்த நிலை

- இந்தியப் பொருளாதாரமானது 2020-21 ஆம் நிதியாண்டின் 2வது கால் பகுதியில் (ஜூலை முதல் செப்டம்பர் வரை) 7.5% என்ற அளவில் சுருங்கியுள்ளது.
- இந்தச் சுருங்குதலின் (குறைதல்) மூலம், இந்தியா முதன்முறையாக அதிகாரப் பூர்வமாக பொருளாதார மந்தநிலையை அடைந்துள்ளது.
- எனினும் இந்த பொருளாதாரச் சுருங்குதலானது 2020-21 ஆம் நிதியாண்டின் முந்தைய காலாண்டிலிருந்து மீள் உருவாக்கம் அடைந்துள்ளது.
- இந்தியாவின் பொருளாதாரமானது ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலாண்டில் 23.9% என்ற அளவில் குறைந்துள்ளது.
- இது கடந்த 40 ஆண்டுகளில் ஏற்பட்ட முதலாவது பொருளாதாரச் சுருக்கத்தைக் குறிக்கின்றது.
- 2020-21 நிதியாண்டின் இரண்டாம் கால்பகுதியில் 2011-12 ஆண்டின் அடிப்படை விலையின் படி கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 33.14 இலட்சம் கோடியாக கணிக்கப் பட்டுள்ளது. இது 2019-20 ஆம் நிதியாண்டின் இதே காலத்தில் ரூ.35.84 இலட்சம் கோடியாக இருந்தது.
- இது 2019-20 ஆம் நிதியாண்டின் 2வது கால்பகுதியில் இருந்த 4.4% வளர்ச்சியுடன் ஒப்பிடும் பொழுது 7.5% என்ற அளவிலான வளர்ச்சி பொருளாதாரச் சுருங்குதலைக் குறிக்கின்றது.

## இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு (FDI) : தற்பொழுது, அடுத்து, அதற்கு அப்பால்

- இது இந்தியத் தொழிற்துறைக் கூட்டமைப்பு மற்றும் எர்னஸ்ட் & யங் நிறுவனம் ஆகியவற்றினால் வெளியிடப்படும் ஒரு அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவானது 2025 ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு ஆண்டும் 120-160 பில்லியன் அமெரிக்க டாலர் என்ற அளவில் அந்நிய நேரடி முதலீட்டை (FDI – Foreign Direct Investment) ஈர்க்கும்.
- இந்தியாவானது கடந்த பத்து ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.8% என்ற அளவுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீது 1.8% என்ற அளவில் FDI முதலீட்டு வளர்ச்சியைக் கொண்டுள்ளது.
- தானியங்கி வாகனங்கள், இரசாயனங்கள் மற்றும் மருந்துகள் துறையானது அதிக அளவாக 89% என்ற அளவிற்கு FDI முதலீட்டை ஈர்த்துள்ளன.
- மாநிலங்களின் அடிப்படையில், மகாராஷ்டிரா மாநிலமானது அதிக அளவில் FDI முதலீட்டை ஈர்க்கும் மாநிலமாக (28%) விளங்குகின்றது.
- இதற்கு அடுத்து கர்நாடகா (19%), தில்லி (16%), குஜராத் (10%) ஆகியவை உள்ளன.



## உலக முதலீட்டாளர் வாரம்




- இது சர்வதேசப் பத்திரங்கள் ஆணையத்தினால் ஊக்குவிக்கப்பட்ட ஒரு வார கால அளவிலான ஒரு உலகளாவிய பிரச்சாரமாகும்.
- முதலீட்டாளர்களின் கல்வி மற்றும் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தியாவில் செபி அமைப்பானது நவம்பர் 23-29 வரை இதனை அனுசரித்தது.
- இந்தியாவின் தேசியப் பங்குச் சந்தையானது 2017 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர் வாரம் துவங்கப் பட்டதிலிருந்து அதில் பங்கேற்றும் அதனைக் கொண்டாடியும் வருகிறது.

## சந்தை மூலதனம்

- எச்.டி.எஃப்.சி வங்கியானது முதன்முறையாக சந்தை மூலதனத்தில் ரூ 8 டிரில்லியன் என்ற அளவினைத் தாண்டியுள்ளது.
- இந்த மைல்கல்லை எட்டிய இந்தியாவின் மூன்றாவது நிறுவனம் மற்றும் முதல் கடன் வழங்கும் நிறுவனம் இதுவாகும்.
- தற்போது, ரிலையன்ஸ் நிறுவனம் ரூ.13.34 டிரில்லியனுடன் சந்தையில் முன்னிலை வகிக்கிறது, அதனையடுத்து டாடா கன்சல்டன்சி சர்வீசஸானது ரூ.10.19 டிரில்லியனுடன் இரண்டாம் நிலையில் உள்ளது.

## அந்நிய நேரடி முதலீட்டின் மூலங்கள்

- இந்தத் தரவு, வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக முன்னேற்றத் துறையால் அளிக்கப் பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் ஏப்ரல்-செப்டம்பர் காலத்தில் சிங்கப்பூர் தனது முதல் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.
- 2020-2021 ஆம் ஆண்டின் முதல் பாதி காலத்தில் இந்தியாவிற்கான இரண்டாவது மிகப் பெரிய அன்னிய நேரடி முதலீடானது அமெரிக்காவின் முதலீடாகும்.
- அமெரிக்காவானது மொரீஷியஸை மூன்றாவது இடத்திற்குத் தள்ளியுள்ளது.
- 2019-20 ஆம் நிதியாண்டில் இந்தியாவின் சிறந்த வர்த்தகப் பங்காளராகவும் அமெரிக்காவே இருந்தது.

## RTGS

- இந்திய ரிசர்வ் வங்கியானது நிகழ்நேரப் பெருந்திரள் தீர்வுகள் மூலம் மேற்கொள்ளப் படும் பணப்பரிமாற்ற வசதியை (Real-Time Gross Settlement - RTGS) வாரத்தின் அனைத்து நாட்களிலும் அல்லது 24 மணி நேரமும் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கச் செய்யுமாறு மாற்றி அமைத்துள்ளது.
- இது பொதுவாக மிகப்பெரிய அளவிலான பணப் பரிமாற்றங்களுக்குப் பயன்படுத்தப் படும் ஒரு பணப் பரிமாற்ற முறையாகும்.
- இது நிகழ் நேரத்தில் நடைபெறுகின்றது.
- RTGS மூலம் மேற்கொள்ளப் படும் பணப் பரிமாற்றத்திற்கான குறைந்தபட்சத் தொகை 2 இலட்சமாகும். மேலும் இதில் பண உச்ச வரம்பு எதுவும் கிடையாது.
- RTGS முறையில், அனைத்துப் பரிமாற்றங்களும் ஒரு தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப் படுகின்றன.

## MSPக்கு 1.5 மடங்கு சூத்திரம்

- பயிர்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையை (Minimum Support Price - MSP) தீர்மானிக்க 1.5 மடங்கு என்ற சூத்திரம் பயன்படுத்தப் படுகிறது.
- இது 2018-19 ஆம் ஆண்டின் மத்திய நிதிநிலை அறிக்கையின் போது அறிமுகப் படுத்தப் பட்டது.
- இதன்படி, பயிர்களுக்கு வேண்டிய குறைந்தபட்ச ஆதரவு விலையானது அந்தப் பயிர்களுக்கான உற்பத்திச் செலவை 1.5 மடங்காக்கி ஒரு 'முன்பே தீர்மானிக்கப்பட்ட கொள்கையாக' நிர்ணயிக்கப் படுகிறது.
- இதன் கீழ், விவசாயச் செலவுகள் மற்றும் விலைகளுக்கான ஆணையம் மட்டுமே ஒரு பருவத்திற்கான உற்பத்திச் செலவை நிர்ணயித்து இந்த சூத்திரத்தைப் பயன்படுத்த வேண்டும்.
- இந்த ஆணையம் கள அடிப்படையிலான எந்தவொரு செலவு மதிப்பீடுகளையும் செய்யாது.
- ஒவ்வோர் ஆண்டும் வேளாண் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் விவசாயச் செலவுகள் மற்றும் விலைகளுக்கான ஆணையம் 23 பயிர்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலைகளைப் பரிந்துரைக்கும்.
- பருவமழைக்குப் பிந்தைய அல்லது காரீப் பருவத்தில் பயிரிடப்படும் 14 பயிர்களும், குளிர்காலம் அல்லது ராபி பருவத்தில் பயிரிடப்பட்ட ஆறு பயிர்களும் இதில் அடங்கும்.
- ஒவ்வொருப் பயிருக்கும் மூன்று இதர வகையான உற்பத்திச் செலவுகளையும் இது கணக்கிடுகிறது.
- அவை A2, C2 மற்றும் A2 + FL என்பவையாகும்.
- A2 விவசாயிக்கு ஏற்படும் அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கியதாகும்.
- இதில் உரங்கள், விதைகள், பூச்சிக் கொல்லிகள், தொழிலாளர் கூலி, நீர்ப்பாசனச் செலவுகள் ஆகியவை அடங்கும்.
- A2 + FL என்பதில், A2 என்பதின் கீழ் ஏற்படும் அனைத்துச் செலவும் மற்றும் குடும்ப உழைப்பின் மதிப்பும் அடங்கும்.
- C2 என்பது சொந்த நிலத்தின் மீது வாடகை, வட்டிக்குச் செலவிட்டது மற்றும் நிலையான மூலதனச் சொத்துக்கள் மற்றும் A2 + FL செலவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிவான செலவாகும்.

## எச்.எஸ்.என் விதிமுறை

- 9 வேதியியல் அடிப்படையிலான தயாரிப்புகளுக்கான வரி விலைப் பட்டியலில் 8 இலக்க எச்.எஸ்.என் குறியீட்டைக் குறிப்பிடுவதை மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியம் கட்டாயமாக்கியுள்ளது.
- இந்த நடவடிக்கை வரி ஏய்ப்பைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- எச்.எஸ்.என் அல்லது ஹார்மோனைஸ்ட் சிஸ்டம் ஆப் நோமென்கிளச்சர் (Harmonized System of Nomenclature – பெயரிடும் முறைக்கான ஒத்திசைவான அமைப்பு) என்பது உலகெங்கிலும் சரக்குகளை வகைப்படுத்துவதற்கான ஓர் அமைப்பாகும்.
- இந்தக் குறியீடு பொருட்களுக்கான உலகளாவியப் பொருளாதார மொழி என்று அழைக்கப் படுகிறது.
- இது உலகச் சுங்க அமைப்பால் உருவாக்கப் பட்டுள்ளது.




## பணக் கொள்கை 2020-21

- இந்திய ரிசர்வ் வங்கியானது 2 மாதத்திற்கு ஒரு முறை வெளியிடப் படும் தனது பணக் கொள்கை குறித்த மறு ஆய்வுக் குறிப்பை வெளியிட்டுள்ளது.
- இது ரெப்போ விகிதத்தை மாற்றாமல் 4% என்ற அளவில் வைக்க முடிவு செய்துள்ளது.
- ரெப்போ விதிதம் என்பது ரிசர்வ் வங்கி ஆனது வங்கிகளுக்குக் கடன் தரும் ஒரு விகிதம் ஆகும்.
- தலைகீழ் ரெப்போ விகிதமும் மாற்றப் படாமல் 3.35% என்ற அளவிலும் மேம்பட்ட கடன் வசதி விகிதம் மற்றும் வங்கி விகிதம் ஆகியவையும் மாற்றப் படாமல் 4.25% என்ற அளவிலும் வைக்கப் பட்டுள்ளன.

## லாட்டரி மீதான வரிகள்

- இந்திய உச்ச நீதிமன்றமானது லாட்டரி, பந்தயம் மற்றும் சூதாட்டம் ஆகியவை "நடவடிக்கைக்கு உட்பட்ட செயல்பாடுகள்" என்று அறிவித்துள்ளது.
- இது மத்திய சரக்கு மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 2017 என்ற சட்டத்தின் கீழ் "சரக்கு" என்ற வரையறையின் கீழ் வருகின்றது.
- இதனால் மாநில அரசுகள் லாட்டரி மீது GST வரியை (Goods and Services Tax – சரக்கு மற்றும் சேவைகள் வரி) விதிக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

## இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி

- இந்தியாவின் சர்க்கரை உற்பத்தியானது 2020 ஆம் ஆண்டில் 42.90 இலட்சம் டன்களாக இரு மடங்காக ஆகியுள்ளது.
- கடைசிப் பருவ காலத்தின் சர்க்கரை உற்பத்தியானது 20.72 இலட்சம் டன்களாக உள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் நவம்பர் 30 ஆம் தேதியின் படி நாட்டில் 408 சர்க்கரை ஆலைகள் செயல்பாட்டில் உள்ளன. 2019 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதியின் படி 309 சர்க்கரை ஆலைகள் செயல்பாட்டில் இருந்தன.
- நாட்டில் கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாநிலம் உத்தரப் பிரதேசமாகும்.
- இந்தியாவில் சர்க்கரை உற்பத்தியில் 2வது மிகப்பெரிய மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- உலகின் 2வது மிகப்பெரிய சர்க்கரை உற்பத்தியாளர் நாடு இந்தியாவாகும்.
- உலகில் மிகப்பெரிய சர்க்கரை நுகர்வு நாடு இந்தியாவாகும்.
- உலகில் மிகப்பெரிய சர்க்கரை உற்பத்தியாளர் நாடு பிரேசில் ஆகும்.

## ரொக்கத் தகவமைப்பு வசதி – RRB

- சமீபத்தில் இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) ரொக்க மேலாண்மையை மிகவும் திறனுள்ள வகையில் மாற்றுவதற்காக வேண்டி ஊரக வட்டார வங்கிகளுக்கு (RRB – Regional Rural Bank) ரொக்கத் தகவமைப்பு வசதியை (liquidity adjustment facility - LAF) நீட்டிக்க முடிவு செய்து உள்ளது.
- தற்பொழுது வரை, RRBகள் RBIயின் ரொக்கத் தகவமைப்பு வசதியை அணுக அனுமதிக்கப் படுவதில்லை.
- LAF ஆனது வங்கித் துறைச் சீர்திருத்தங்கள் குறித்த நரசிம்மன் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 1998 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்டது.
- இது ரெப்போ அல்லது மீண்டும் வாங்குதல் என்ற ஒப்பந்தத்தின் மூலம் தற்காலிக நிதிப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு வழிவகை செய்யும் ஒரு நிதியியல் கொள்கைக் கூறாகும்.
- RBI ஆனது நாட்டில் நிதி ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக 4 கூறுகளைப் பயன்படுத்துகின்றது. அவையாவன :
  - பண ஒதுக்கீட்டு விகிதம்,
  - ரெப்போ விகிதம் மற்றும் தலைகீழ் ரெப்போ விகிதம் (LAF),
  - முறைசார் ரொக்க விகிதம் மற்றும்
  - திறந்த வெளி நடவடிக்கைகள்.
- LAF வசதியின் 2 முக்கியக் கூறுகள் ரெப்போ விகிதம் மற்றும் தலைகீழ் ரெப்போ விகிதம் ஆகியனவாகும்.

## வரி நீதி மீதான நிலை 2020

- இது வரி நீதி என்ற அமைப்பின் இம்மாதிரியான முதல் வருடாந்திர அறிக்கையாகும்.
- சர்வதேசப் பெருநிறுவனங்களின் வரி மோசடி மற்றும் தனியார் வரி ஏய்ப்பு ஆகியவற்றால் உலகின் ஒவ்வொரு நாடும் எவ்வளவு வரியை இழக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

- இது பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைமையில், சுரண்டல் மற்றும் இலாப மாற்றத் திட்டத்தின் (base erosion and profit shifting project) கீழ் தயாரிக்கப் பட்டுள்ளது.
- ஒவ்வோர் ஆண்டும், உலக நாடுகள் 427 பில்லியனுக்கும் அதிகமான அளவில் வரியை இழந்து வருவதாக இது கண்டறிந்துள்ளது.
- இந்தப் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தியா மற்ற நாடுகளிடம் 70000 கோடியை வரியாக இழந்து வருகிறது.

## PM - WANI

- பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையானது பொது மக்களுக்கான வை-பை (அருகலை – வைபை) சேவைகளை வலுப்படுத்துவதற்காக நாடு முழுவதும் பொது வை-பை அமைப்புகளை அமைப்பதற்கு ஒப்புதல் அளித்து உள்ளது.
- இந்தப் பொது அருகலை அணுகல் அமைப்பு இடைமுகமானது பிரதான் மந்திரி – WANI என்றறியப் பட்டு, இந்திய அரசினால் அமைக்கப்பட உள்ளது.
- PM-WANI ஆனது நாட்டில் அருகலை அமைப்புகளின் வளர்ச்சியை ஊக்கப்படுத்த உள்ளது.
- இது பொதுத் தகவல் அலுவலக மாதிரியைப் போன்றதாகும்.
- பொது அருகலைச் சேவையானது பொதுத் தரவு அலுவலத்தின் மூலம் வழங்கப் படுகின்றது.
- தேசிய டிஜிட்டல் தகவல் தொடர்புக் கொள்கை, 2018 என்ற கொள்கையானது 2020 ஆம் ஆண்டில் இணைய வசதியானது 5 மில்லியன் மக்களை எட்டுவதையும் 2022 ஆம் ஆண்டில் 10 மில்லியன் மக்களை எட்டுவதையும் இலக்காக நிர்ணயித்துள்ளது.

## ஆத்ம நிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனா

- ஆத்ம நிர்பர் பாரத் தொகுப்பு 3.0 என்பதின் கீழ் கோவிட் மீட்பு நிலையின் போது புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கத்திற்கு ஊக்கம் அளித்தல் மற்றும் முறையான பொருளாதாரத் துறையில் வேலைவாய்ப்பை ஊக்கப்படுத்துதல் ஆகியவற்றுக்காக ஆத்ம நிர்பர் பாரத் ரோஜ்கர் யோஜனாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதன் கீழ், இந்திய அரசானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 01 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பணியில் சேர்ந்த புதிய தொழிலாளர்களுக்கு 2021 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் தேதி வரை 2 ஆண்டுகளுக்கு தொழிலாளர் வைப்பு நிதியில் (12%) மானியம் அளிக்க உள்ளது.

## நேர்மறை செலுத்து முறை

- 2021 ஆம் ஆண்டு ஜனவரி 1 முதல் ரூ.50000க்கு மேல் பணம் செலுத்துவோர் புதிய காசோலை செலுத்தும் முறையான 'நேர்மறை செலுத்து முறை' என்ற முறையைப் பின்பற்ற வேண்டும்.
- எந்தவொரு மோசடி நடவடிக்கைகளுக்கும் எதிராக வாடிக்கையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக காசோலை துண்டிப்பு முறைக்கான நேர்மறை செலுத்து முறையானது இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப் பட்டுள்ளது.

- இந்த முறையை உருவாக்கும் பொறுப்பு இந்தியத் தேசிய பணவழங்கீட்டுக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.
- காசோலை பணவழங்கீடுகளில் நடைபெறும் மோசடிச் செயல்களைக் கண்டறியும் வசதி கொண்ட நேர்மறை செலுத்து முறை என்பது காசோலை துண்டிப்பு முறைமையின் (Cheque Truncation System) கீழ் உள்ள ஒரு கருவியாகும்.




## தானியங்கி வங்கிப் பணச் செயல்பாட்டு மையம்

- இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) பணத் தாள்களின் சேமிப்பு, வரவு மற்றும் பகிர்ந்தளிப்பு அகியவற்றிற்காக ஜெய்ப்பூரில் தனது முதலாவது தானியங்கி வங்கிப் பணச் செயல்பாட்டு மையத்தை அமைக்கவுள்ளது.
- நாட்டில் வங்கிப் பணத் தாள்களை விநியோகிக்கும் ஒரே மற்றும் பிரத்தியேக அமைப்பு RBI ஆகும்.

## பீம் தளம்

- பம்பாய் பங்குப் பரிவர்த்தனை அமைப்பானது (BSE) “BSE மின்னணு விவசாயச் சந்தையிடல் நிறுவனம் அல்லது BEAM” எனப்படும் ஒரு மின்னணுத் தளத்தைத் தொடங்கியுள்ளது.
- இது தேசிய அளவில், மின்னணு மயப்படுத்தப்பட்ட, நிறுவனமயமாக்கப்பட்ட, வெளிப்படைத் தன்மை கொண்ட ஒரு வர்த்தகத் தளமாக செயல்பட உள்ளது.
- BEAM ஆனது இந்தியாவில் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்படும் ஒரே நிறுவனம் ஆகும்.

## அலைக்கற்றை ஏலம்

- மத்திய அமைச்சரவையானது அலைக் கற்றை ஏலத்தின் அடுத்தக் கட்டத்திற்கு தனது ஒப்புதலை வழங்கியுள்ளது.
- இது அடுத்த 20 ஆண்டுக் காலத்திற்கு 700 மெகா ஹெர்ட்ஸ் (MHz), 200 MHz, 900 MHz, 1800 MHz, 2100 MHz, 2300 MHz, 2500 MHz ஆகிய அதிர்வெண் கற்றைகளைக் கொண்டிருக்கும்.
- மொத்தம் 2251.25 MHz என்ற அளவிலான அலைக் கற்றையானது ஒரு ஒதுக்கப்பட்ட விலையில் ரூ.3,92,332.70 கோடி மதிப்பீட்டுடன் வழங்கப்பட இருக்கின்றது.

## நிதியியல் நிலைப்புத் தன்மை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் 23வது சந்திப்பு

- சமீபத்தில் மத்திய நிதித்துறை அமைச்சரான நிர்மலா சீதாராமன் இதற்கு தலைமை தாங்கினார்.
- இது 2010 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது.
- இது நாட்டின் நிதியியல் ஒழுங்குமுறையாளர்களைக் கொண்ட ஒரு சட்டப்பூர்வமற்ற தலைமை அமைப்பாகும்.
- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர், பொருளாதார விவகாரங்கள் துறைச் செயலாளர், மத்திய நிதித் துறை அமைச்சகத்தின் தலைமைப் பொருளாதார ஆலோசகர், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம், காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் ஆகியவை இதில் உறுப்பினர்களாக உள்ளனர்.
- மேலும் இது திவால் நிலை மற்றும் நொடித்தல் வாரியத்தின் தலைவரையும் கொண்டு உள்ளது.

## ஒழுங்குமுறை ஆய்வுப் பெட்டி

- சமீபத்தில் இந்திய ரிசர்வ் வங்கியானது ஒழுங்குமுறை ஆய்வுப் பேட்டியின் கீழ் 2வது குழுவை அறிவித்துள்ளது
- இது "குறுக்கெல்லைப் பணவழங்கீடுகள்" என்ற கருத்துருவின் கீழ் அறிவிக்கப் பட்டு உள்ளது.
- ஒழுங்குமுறை ஆய்வுப் பெட்டி என்பது கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் புதிய பொருட்கள் மற்றும் சேவைகளின் ஒரு நிகழ்நேரச் சோதனையைக் குறிக்கின்றது.
- ஒழுங்குமுறை ஆய்வுப் பெட்டியின் கீழ் முதல் குழுவானது சில்லறைப் பண வழங்கீட்டுப் பிரிவில் நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.
- இது கைபேசிகள், நேரடித் தொடர்பற்ற பணவழங்கீடுகள் மற்றும் நேரடிப் பண வழங்கீடுகள் போன்ற வசதியை உள்ளடக்கியுள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டுள்ளது.

## 17வது தொழில் செய்வதற்கு உகந்த நாடுகள் அறிக்கை

- இந்த அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது.
- தரவுகளில் முறைகேடுகள் ஏற்பட்டதால், 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில், உலக வங்கி இந்த அறிக்கையை வெளியிடுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிவு செய்திருந்தது.
- சீனா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அஜர்பைஜான் ஆகிய 4 நாடுகள் முறைகேடான தரவுகளைச் சமர்ப்பித்திருந்தன.
- புதிய அறிக்கையின்படி, சீனா 78வது இடத்திலிருந்து 85வது இடத்திற்குச் சரிந்துள்ளது.
- சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் அஜர்பைஜான் ஆகிய மூன்று நாடுகளின் தரவரிசைகளும் மாறியுள்ளன.
- 2020 ஆம் ஆண்டின் அறிக்கையின்படி, 190 நாடுகளில் இந்தியா 63வது இடத்தில் உள்ளது.
- முந்தைய ஆண்டை விட இந்தியா 14 இடங்கள் முன்னேறியுள்ளது.

### உலகின் 6வது மிகப்பெரிய பொருளாதாரம்

- இது பொருளாதார மற்றும் வர்த்தக ஆராய்ச்சிக்கான மையத்தினால் வெளியிடப்பட்ட ஒரு வருடாந்திர அறிக்கையாகும்.
- இந்தியாவானது 2025 ஆம் ஆண்டில் உலகின் 5வது மிகப்பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்தியா மீண்டும் ஐக்கியப் பேரரசைப் பின்னுக்குத் தள்ள இருக்கின்றது.
- இந்தியாவானது ஐக்கியப் பேரரசைப் பின்னுக்குத் தள்ளி 5வது மிகப்பெரிய பொருளாதாரமாக உருவடுத்தது.
- ஆனால் இந்தியா 2020 ஆம் ஆண்டில் மீண்டும் 6வது இடத்திற்குச் சென்றது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதமானது கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில் 2018 ஆம் ஆண்டில் 6.1லிருந்து 2019 ஆம் ஆண்டில் 4.2% ஆகக் குறைந்தது.
- இந்தியாவானது 2030 ஆம் ஆண்டில் 3வது மிகப்பெரிய பொருளாதாரமாக உருவெடுக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது.
- சீனாவானது 2028 ஆம் ஆண்டில் அமெரிக்காவைப் பின்னுக்குத் தள்ளி உலகின் மிகப்பெரிய பொருளாதார நாடாக உருவெடுக்கும்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### மாபெரும் மீட்டர் அலை வானொலி அதிர்வெண் தொலைநோக்கி

- அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்ட மின் மற்றும் மின்னணு பொறியியலாளர்களால் (IEEE - Institute of Electrical and Electronics Engineers) மாபெரும் மீட்டர் அலை வானொலி அதிர்வெண் தொலைநோக்கியானது (Giant Metre wave Radio Telescope) ஒரு 'முக்கிய' வசதியாக தேர்வு செய்யப் பட்டுள்ளது.
- மாபெரும் மீட்டர் அலை வானொலி அதிர்வெண் தொலைநோக்கியானது முப்பது பரவளைய வானொலி தொலைநோக்கிகளைக் கொண்டதாகும்.
- இது புனேவின் தேசிய வானொலி வானியற்பியல் மையத்தால் இயக்கப் படுகிறது.
- இது மும்பையில் அமைந்துள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சிக் கழகத்தின் ஒரு பகுதியாகும்.
- வானொலி வானியற்பியல் தேசிய மையத்தின்படி இந்தியாவிற்கு வழங்கப்படும் மூன்றாவது IEEE மைல்கல் அங்கீகாரம் இதுவாகும்.
- முந்தைய இரண்டு IEEE மைல்கல் அங்கீகாரங்கள் 1895 ஆம் ஆண்டில் ஜே.சி.போஸுக்கும் 1928 ஆம் ஆண்டில் சி.வி.ராமனுக்கும் வழங்கப் பட்டது.
- ஜே.சி போஸ் அவர்கள் கம்பியில்லா முறையிலான தகவல்தொடர்பின் தந்தையாகக் கருதப் படுகிறார்.

### ஹுவாலாங் ஒன்

- இது சீனாவின் முதலாவது உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அணு உலை ஆகும்.
- இது புஜியன் மாகாணத்தில் அமைந்துள்ள ஃபுகிங் அணு மின் நிலையத்தின் பிரிவு 5 என்பதில் நிறுவப் பட்டுள்ளது.

- இதனால் ஆண்டுக்கு 10 பில்லியன் கிலோ வாட் மணி நேர அளவிலான (10 billion kilo watt hour) மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.
- ஹுவாலாங் ஒன் அணு உலையின் ஆயுட்காலம் 60 ஆண்டுகள் ஆகும்.
- சீனாவில் 47 அணு மின் நிலையங்கள் உள்ளன.
- அவை மொத்தமாக 48.75 மில்லியன் கிலோ வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன.
- இதன் மூலம், அமெரிக்கா மற்றும் பிரான்சிற்கு அடுத்தபடியாக சீனாவானது உலகின் மூன்றாவது மிக அதிகமான அணுசக்தியைக் கொண்டுள்ளது.
- பாகிஸ்தானிற்கு ஐந்து ஹுவாலாங் ஒன் அணு உலைகளை அளிக்க சீனா திட்டமிட்டுள்ளது.
- அதில் நான்கு உலைகள் கராச்சி அணுமின் நிலையத்திலும், ஒன்று சாஷ்மா அணுமின் நிலையத்திலும் கட்டமைக்க திட்டமிடப் பட்டுள்ளது.

## MQ-9B ஆளில்லா விமானம்

- ஆயுதங்கள் இல்லாத இரண்டு MQ-9B ட்ரோன்களை (ஆளில்லா விமானம்) ஒரு வருடத்திற்கு இந்தியக் கடற்படையானது அமெரிக்காவிடமிருந்து குத்தகைக்கு எடுத்து உள்ளது.
- இது இந்திய கடற்படையின் முதல் குத்தகை ஆகும்.
- 2020 ஆம் ஆண்டின் பாதுகாப்பு கையகப்படுத்துதல் நடைமுறை (Defence Acquisition Procedure) என்ற முறையானது இராணுவத் தளவாடங்களைக் குத்தகைக்கு எடுப்பதற்கான ஒரு வசதியை அறிமுகப் படுத்தியது.

## ஹயபூசா 2 விண்கலம்

- ஹயபூசா 2 விண்கலமானது ரைகு என்ற குறுங்கோளிலிருந்து 1 ஆண்டு காலப் பயணத்திற்குப் பின்பு பூமியை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கின்றது.
- இந்த ரைகு என்ற குறுங்கோளானது பூமியிலிருந்து 300 மில்லியன் கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.
- இந்த விண்கலமானது குறுங்கோளிலிருந்து எடுக்கப்பட்ட அரிதான மாதிரிகளுடன் பூமியில் தெற்கு ஆஸ்திரேலியாவில் தரையிறங்க உள்ளது.
- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், இந்த விண்கலம் குறுங்கோள் ரைகுவிலிருந்து மேற்புறத் தூசு மாதிரிகளை சேகரித்தது.
- 2019 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், இது அந்த குறுங்கோளிலிருந்து நிலத்திற்கு அடியிலிருந்து மாதிரிகளைச் சோதித்தது.
- ஒரு குறுங்கோளிலிருந்து நிலத்திற்கு அடியிலிருந்து மாதிரிகளைச் சேகரிப்பது உலக வரலாற்றில் இதுவே முதன்முறையாகும்.




## வறண்ட சுருட்டப்பட்ட பஞ்சு கொண்ட நேரடி ஆர்டி-பிசிஆர் முறை

- ❖ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது கோவிட்-19 நோய்த் தொற்று சோதனையை விரைவுபடுத்துவதற்காக ஒரு வறண்ட சுருட்டப்பட்ட பஞ்சு கொண்ட நேரடி ஆர்டி-பிசிஆர் முறைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இது அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சிக் குழு - செல் மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தினால் வடிவமைக்கப் பட்டுள்ளது.
- ❖ இது ஒரு ஆர்என்ஏ பிரித்தெடுப்பு சோதனை முறையாகும்.




## கர்நாடகாவில் கடல் ஒளிர்வி பூத்தல்

- ❖ "கடல் ஒளிர்வி" (sea sparkle) என்று அழைக்கப்படும் நோக்டிலுகா சிண்டிலான்ஸின் (Noctiluca Scintillans) பூக்களானது கர்நாடகக் கடற்கரையில் சுமார் ஒரு மாதமாக காணப் படுகின்றது.
- ❖ ஒளி வீசும் பச்சை இருகசை உயிரியான நோக்டிலுகா சிண்டிலன்ஸ் (bioluminescent green dinoflagellate N. Scintillans) என்பதும் இரவில் கடல் நீரைப் பிரகாசமாக்குகிறது.
- ❖ என். சிண்டிலன்ஸ் ஒரு தாவரமாகவும் விலங்காகவும் விளங்குகிறது.

## நீல அலை நிகழ்வு

- இது மகாராஷ்டிரக் கடற்கரையின் பல பகுதிகளில் காணப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்விற்கு உயிரி ஒளிர்வே (பயோலுமினென்சென்ஸ்) காரணமாகும்.
- நுண்ணுயிரிகளிடமிருந்து கடலில் தோன்றும் பிரகாசமான ஒளியானது பயோ-லுமினென்சென்ஸ் அல்லது உயிரி ஒளிர்வு என்று அழைக்கப் படுகிறது.
- இது தாவர மிதவை உயிரி (பைட்டோபிளாங்க்டன்ஸ்) எனப்படும் நுண்ணிய கடல் தாவரங்களால் ஒளியை வெளியேற்றும் ஒரு நிகழ்வாகும்.
- நீல ஒளியானது உயிரினத்தின் உள்ளே உள்ள புரதங்களின் வேதியியல் எதிர்வினைகளிலிருந்து உருவாகிறது.

## வரிக்குதிரை வகை மீன் மரபணு

- புனேவில் உள்ள அகார்கர் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இருதய மீளுருவாக்கத்தை ஊக்குவிக்கக் கூடிய வரிக்குதிரை வகை மீனின் மரபணுக்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இது குறுகிய காலத்திற்குள் மூளை, இருதயம், கண், தண்டு வடம் உள்ளிட்ட தனது உறுப்புகளை மீள் உருவாக்கம் செய்து கொள்ளும்.
- இதன் காரணமாக இது ஒரு மாதிரி உயிரினமாகப் பயன்படுத்தப் படுகின்றது.
- இது வெப்ப மண்டல மற்றும் துணை வெப்ப மண்டலப் பகுதிகளில் காணப்படும் ஒரு சிறிய நன்னீர் வாழ் மீனாகும்.

## உலகின் மிகச்சிறிய நினைவகச் சாதனம்

- விஞ்ஞானிகள் ஒரு மெல்லிய நினைவகச் சேமிப்புச் சாதனத்தின் அளவைக் குறைத்துள்ளனர்.
- இது அதன் குறுக்கு வெட்டுப் பகுதியை ஒற்றை சதுர நானோ மீட்டர் அளவிற்குக் குறைப்பதன் மூலம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த வளர்ச்சியானது நுகர்வோர் மின்னணுச் சாதனங்களுக்காக மிக விரைவான, மிகச் சிறிய மற்றும் ஆற்றல் திறன் கொண்ட மின்னணுச் சில்லுகளின் உருவாக்கத்திற்கு வழி வகுக்கும்.
- விஞ்ஞானிகள் தங்களது ஆய்விற்கு MoS2 எனப்படும் மாலிப்டினம் டை சல்பைடு என்ற ஒரு கூறை ஒரு முதன்மை நானோ பொருளாகப் பயன்படுத்தியுள்ளனர்.
- இந்த ஆய்வானது சமீபத்தில் “இயற்கை நானோ தொழில்நுட்பம்” எனப்படும் இதழில் வெளிவந்தது.
- இந்த ஆராய்ச்சியாளர்கள் அமெரிக்காவில் ஆஸ்டினில் உள்ள டெக்சாஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## பிரம்மோஸ் மீயொலி வேக ஏவுகணை

- இந்தியக் கடற்படையானது அந்தமான் நிக்கோபர் தீவுப் பகுதியில் கப்பல் எதிர்ப்பு ஏவுகணையான பிரம்மோஸ் மீயொலி வேக ஏவுகணைப் பதிப்பை வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்தது.
- இதற்கு முன்பு இந்த ஏவுகணையின் நிலத்திலிருந்துத் தாக்கும் வகையிலான பதிப்பானது அந்தமான் நிக்கோபர் தீவுப் பகுதியில் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப் பட்டது.

- இந்த வகுப்பைச் சேர்ந்த உலகின் மிக விரைவானச் செயல்பாட்டு ஏவுகணை அமைப்பு இதுவாகும்.
- இதனை நீர்மூழ்கிக் கப்பல்கள், கப்பல்கள், விமானம் மற்றும் நிலம் போன்றவற்றிலிருந்துச் செலுத்த முடியும்.
- பிரம்மோஸ் ஏவுகணையின் தாக்குதல் வரம்பானது தற்பொழுது 400 கிலோ மீட்டருக்கு மேலாக மேம்படுத்தப் பட்டுள்ளது.

## டமாரு அடிப்படையிலான வலையமைப்பு

- ஐ.ஐ.டி கான்பூர் 'தம்பாரு' அல்லது 'டமாரு' அடிப்படையில் ஒரு வலையமைப்பை (லாட்டிஸ் ) உருவாக்கியது.
- ஒரு லாட்டீஸ் என்பது ஒரு படிகத்தை உருவாக்கும் துகள்களின் ஒழுங்குமுறையை விவரிக்கும் புள்ளிகளின் ஒரு வரிசையாகும்.



## பாதுகாப்பு புவித் தகவல் ஆராய்ச்சி அமைப்பு

- சமீபத்தில் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி அமைப்பானது இந்த ஆய்வகத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் புதிய ஆய்வகமானது மணாலியில் உள்ள பனி மற்றும் பனிச் சரிவு ஆய்வு அமைப்பு மற்றும் தில்லியில் உள்ள பாதுகாப்புப் பகுதி ஆராய்ச்சி அமைப்பு ஆகிய ஆய்வகங்கள் ஒன்றிணைக்கப் பட்டு உருவாக்கப் பட்டுள்ளது.
- இந்தப் புதிய ஆய்வகமானது சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனான எல்லையில் உள்ள நிலப்பரப்பு மற்றும் பனிச்சரிவு குறித்த ஒரு ஆராய்ச்சியின் மீது கவனம் செலுத்துகின்றது.

## C32 LH2 உந்து விசைத் தொட்டி

- இது ஒரு அலுமினியக் கலவையினால் உருவாக்கப் பட்ட ஒரு கிரையோஜெனிக் உந்து விசைத் தொட்டியாகும்.
- இது இந்துஸ்தான் விண்வெளி நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு மிகப்பெரிய கிரையோஜெனிக் தொட்டியாகும்.
- இது சமீபத்தில் இஸ்ரோவிற்கு வழங்கப்பட்டது.
- இது இஸ்ரோவின் புவி ஒத்திசைவு செயற்கைக் கோள் செலுத்து வாகனமான மாக் – III என்ற வாகனத்தின் எடைத் திறனை 3 டன்களிலிருந்து 4 டன்களாக அதிகரிப்பதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளது.




## ஆஸ்திரேலியாவின் சதுரக் கிலோமீட்டர் தொகுப்புப் பாதை கண்டுபிடிப்பான் (ASKAP)

- இது காமன்வெல்த் அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி அமைப்பினால் உருவாக்கப்பட்ட ஒரு புதிய வகை ரேடியோ தொலைநோக்கியாகும்.
- சமீபத்தில் இந்தத் தொலைநோக்கியானது "பிரபஞ்சத்தின் ஒரு புதிய வரைபடத்தை" உருவாக்குவதற்காக ஏறத்தாழ 300 மணி நேரங்களில் 300 மில்லியன் அண்டங்களை ஆராய உதவியுள்ளது.

## குவாண்டம் மேலாதிக்கம்

- சீனாவானது தன்னுடைய குவாண்டம் மேலாதிக்கம் கூகுளின் மாதிரிக் கணினியை விட 10 பில்லியன் மடங்கு வேகம் கொண்டது என்று உரிமை கோருகின்றது.
- கடந்த ஆண்டு கூகுள் நிறுவனம் இது அடுத்த 10,000 ஆண்டுகளுக்கு முன்னோடியான அதிவேகக் கணினிகள் என்ற நிலைக்கு எடுத்துச் செல்லும் வகையில் 200 வினாடிகளில் ஒரு கணக்கீட்டை நிறைவு செய்யும் ஒரு கணினியை வடிவமைத்து உள்ளதாக அறிவித்திருந்தது.
- குவாண்டம் கணினிகள் க்யூபிட்ஸ் எனும் அலகைப் பயன்படுத்துகின்றன.
- ஒரே நேரத்தில் அதிகச் செயல்பாட்டுத் திறனைத் தருகிற அதே சமயத்தில் இது 0 மற்றும் 1 என்ற ஒரு அலகாக விவரிக்கப் படுகின்றது.
- இது அமெரிக்காவின் ஜான் பிரெஸ்கில் என்பவரால் 2012 ஆம் ஆண்டில் முன்மொழியப் பட்ட ஒரு கூறாகும்.

## எச்எல்-2எம் டோகாமாக் அணுஉலை

- இது சீனாவின் மிகப்பெரிய மற்றும் மிகவும் மேம்படுத்தப்பட்ட அணுக்கரு இணைவு சோதனைச் சாதனமாகும்.
- சீனாவானது முதன்முறையாக இந்த உலையை வெற்றிகரமாகச் செயல்படுத்தி உள்ளது.
- இந்த அணுக்கரு இணைவு உலையானது அதன் "செயற்கை சூரியன்" என்றும் அழைக்கப் படுகின்றது.



## சாங்’இ திட்டம்

- சாங் இ-5 திட்டத்தின் போது சீனாவானது சந்திரனில் தனது நாட்டின் கொடியை ஏற்றியது.
- சீனாவானது அமெரிக்காவிற்குப் பிறகு இவ்வாறு செய்யும் 2வது நாடாகும்.
- 1969 ஆம் ஆண்டில் அப்பல்லோ திட்டத்தின் போது அமெரிக்கா முதன்முதலில் நிலவில் கொடியை நட்டது.
- சீனாவின் சாங்’இ-5 என்ற சந்திர வாகனமானது நிலவின் பாறைகள் மற்றும் நிலவின் மண்ணின் மாதிரிகளைச் சேகரித்துள்ளது.
- இது 1970 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு சந்திரனின் மாதிரிகளைச் சேகரிக்கும் முதல் திட்டம் ஆகும்.
- 21 ஆம் நூற்றாண்டில் சந்திரனில் வெற்றிகரமாக தரையிறங்கிய மூன்றாவது விண்கலமாக இது அமைந்துள்ளது.
- மனிதனால் உருவாக்கப்பட்டு சந்திரனைத் தொட்ட முதல் பொருள் சோவியத் யூனியனின் லூனா 2 (1959 ஆம் ஆண்டில்) என்ற விண்கலம் ஆகும்.
- அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியனுக்குப் பிறகு, நிலவின் மாதிரிகளைச் சேகரிக்கும் மூன்றாவது நாடாக இப்போது சீனா உள்ளது.



## 5G NR - புதிய வானொலி

- நோக்கியா தனது அடுத்த தலைமுறை 5ஜி கருவியின் உற்பத்தியை இந்தியாவில் தொடங்கியுள்ளது.
- இந்தியாவில் 5G NR என்ற கருவியைத் தயாரிக்கும் முதல் நிறுவனம் இதுவாகும்.
- 5G NR என்பது 5G New Radio ஆகும்.

- இது ஐந்தாம் தலைமுறை அலைபேசி வலைப் பின்னலுக்காக உருவாக்கப்பட்ட புதிய வானொலி அணுகல் தொழில்நுட்பமாகும்.
- 2019 ஆம் ஆண்டில், 5ஜி வலைப் பின்னலை உருவாக்கிய முதல் நாடு தென் கொரியா ஆகும்.

## காற்றிலிருந்து நீர்

- ஈரப்பதம் கொண்ட காற்றிலிருந்து தண்ணீரை எடுக்கும் ஒரு முறையை குவஹாத்தியின் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குழு உருவாக்கி உள்ளது.
- இந்த முறை ஒரு சாதாரண அச்சுப்பொறி காகிதத்தில் பஞ்சு போன்ற நுண்ணிய பாலிமெரிக் பொருளைத் தெளிப்பதை உள்ளடக்குகிறது.
- இந்த முறை முக்கியமாக நீர் தவிர்ப்புத் தன்மை (ஹைட்ரோபோபிசிட்டி) என்ற கொள்கையைப் பயன்படுத்துகிறது.
- தாமரை இலைகள் ஹைட்ரோபோபிசிட்டியின் பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

## குறுகிய பட்டை இணையப் பொருட்கள் அமைப்பு

- பிஎஸ்என்எல் ஆனது ஸ்கைலோவுடன் (Skylo) இணைந்து இந்தியாவில் உலகின் முதலாவது செயற்கைக் கோளை அடிப்படையாகக் கொண்ட குறுகிய பட்டை இணையப் பொருட்கள் (IOT - internet of things) என்ற அமைப்பை அறிமுகப் படுத்தி உள்ளது.
- இது செயற்கைக் கோளை அடிப்படையாகக் கொண்ட குறுகிய பட்டை இணையப் பொருட்கள் தொழில்நுட்பத்தில் ஒரு திருப்புமுனையைக் கொண்டு வர உள்ளது.
- இது பரந்த வரம்புடன் கூடிய புதிய இணையப் பொருட்களுக்கான சாதனங்களில் செயல்படுத்துவதற்காக வேண்டி மேம்படுத்தப்பட்ட ஒரு குறைந்த மின் பரந்த பரப்புத் தொழில்நுட்பமாகும்.
- இது சாதனங்களின் மின் நுகர்வு, அலைக் கற்றைத் திறன் மற்றும் அந்த அமைப்பின் திறன் ஆகியவற்றை மேம்படுத்த உள்ளது.
- இந்தத் தொழில்நுட்பமானது இரண்டு வாகனங்கள் மற்றும் இதர IOT சாதனங்களை இணைப்பதற்குப் பயனுள்ளதாக உள்ளது.

## தரவுப் பேச்சற்ற கேட்பொலி

- சமீபத்தில் தேசிய வானூர்தி மற்றும் விண்வெளி நிறுவனமானது (NASA - National Aeronautics and Space Administration) நண்டு வடிவ நெபுலாவின் தரவுப் பேச்சற்ற ஒரு கேட்பொலியைப் பகிர்ந்துள்ளது.
- இந்தக் காணொலியானது நெபுலா தனது பல்வேறு நிறங்களை அடிப்படையாகக் கொண்டு இசையாக மாற்றம் பெறுவதைக் காட்டுகின்றது.
- இதில் நீல நிழல்கள் பேஸ் என்ற ஒரு ஒலி வகையாகவும் வெள்ளை நிழல்கள் மரக் காற்றுகளாகவும் மாற்றம் பெறுகின்றன.
- நெபுலா என்பது ஹைட்ரஜன், தூசு, ஹீலியம் மற்றும் அயனியாக்கப்பட்ட வாயுக்களின் விண்மீன்களுக்கிடையேயுள்ள ஒரு மேகக் கூட்டங்களாகும்.
- தரவுப் பேச்சற்ற கேட்பொலி என்பது தரவைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக வேண்டி ஏற்படுத்தப்பட்ட ஒலியின் பயன்பாடாகும்.

## குவாண்டம் பாதுகாப்பு தகவல் பகிர்ந்தளிப்பு

- சமீபத்தில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பானது குவாண்டம் பாதுகாப்பு தகவல் பகிர்ந்தளிப்புத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தனது 2 ஆய்வகங்களுக்கிடையே தகவல் தொடர்புச் சோதனையை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இந்தச் சோதனையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி ஆய்வகம், இம்ராத் ஆராய்ச்சி மையம் ஆகிய 2 ஆராய்ச்சி மையங்கள் கலந்து கொண்டன.




## அங்காரா A5

- இது ரஷ்யாவின் கனரக ஏவு வசதி கொண்ட ஒரு விண்வெளி விண்கலமாகும்.
- இது 20 டன்களுக்கும் அதிகமான எடை கொண்ட பொருட்களை விண்வெளிச் சுற்று வட்டப் பாதைக்கு எடுத்துச் செல்லும் திறன் கொண்டது.
- இது ரஷ்யாவின் கனரகப் பொருள் ஏவு விண்கலமான புரோட்டான் எம் என்பதற்கு மாற்றாக உருவாக்கப் படுகின்றது.
- ரஷ்யாவின் கனரகப் பொருள் ஏவு விண்கலமானது முதன்முறையாக 2014 ஆம் ஆண்டில் ஏவப்பட்டது.

## திட்டம் 17A என்பதின் ஹிம்கிரி

- சமீபத்தில் கார்டன் ரீச் கப்பல் கட்டுமானம் மற்றும் பொறியாளர்கள் (Garden Reach Shipbuilders and Engineers - GRSE) அமைப்பானது இந்தியக் கடற்படைக்காக 17A திட்டத்தின் ஒரு கப்பலான "ஹிம்கிரியை" அறிமுகப் படுத்தியுள்ளது.
- GRSE நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டு வரும் 3 கப்பல்களில் முதலாவது கப்பல் இதுவாகும்.
- இந்தக் கப்பலானது ஹூக்ளி நதி நீரில் செயல்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.
- இது மறைந்திருந்துத் தாக்கும் நீலகிரி வகுப்பைப் சேர்ந்த ஒரு கப்பலாகும்.
- இந்தியக் கடற்படையின் நீலரிகி வகுப்பைச் சேர்ந்த கப்பல்கள் ஹிம்கிரி, தூணகிரி, உதய்கிரி, விந்தியகிரி மற்றும் தாராகிரி ஆகியவையாகும்.
- இந்தத் திட்டமானது 2015 ஆம் ஆண்டில் இந்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்து.
- இந்தத் திட்டத்தின் கீழ், மேம்படுத்தப்பட்ட (உயர் ரக) வகையில் மொத்தம் 7 கப்பல்கள் இந்தியக் கடற்படைக்கு வழங்கப்பட உள்ளன.
- இதில் 4 கப்பல்கள் மசகான் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட உள்ளன. மீதம் உள்ள 3 கப்பல்கள் GRSE கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப் பட உள்ளன.

- 17A திட்டத்தின் கப்பல்கள் ஒரு வழிகாட்டு ஏவுகணை வகைக் கப்பல்களாகும்.
- இந்த வகைக் கப்பலானது சில நேரங்களில் பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் ஒரு வகை போர்க் கப்பலாகும்.



## HGC019 தடுப்பூசி

- இது புனேவைச் சேர்ந்த ஜெனோவா பயோஃ பார்மாசூட்டிகல்ஸ் என்ற நிறுவனத்தால் உருவாக்கப் பட்டுள்ளது.
- இது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நாட்டின் முதல் எம்ஆர்என்ஏ வகை தடுப்பூசி ஆகும்.
- இது அமெரிக்காவின் எச்டிடி பயோடெக் கார்ப்பரேஷனுடன் இணைந்து உருவாக்கப் பட்டது.
- இந்தத் தடுப்பூசியின் மருத்துவப் பரிசோதனைகள் சமீபத்தில் இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குனரகத்தால் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளன.
- இந்தத் தடுப்பூசி ஃபைசர் மற்றும் மாடர்னா உருவாக்கிய கோவிட்-19 தடுப்பூசிகளால் பயன்படுத்தப்படும் அதே தளத்தைப் பயன்படுத்துகிறது.
- இந்தத் தடுப்பூசி 2-8 டிகிரி செல்சியஸ் என்ற வெப்ப நிலையில் நிலையாக இருக்கும்.

## GECAM பணி

- புவி ஈர்ப்பலைகளைக் கண்டறிய சீன விண்வெளி நிறுவனமானது இரண்டு செயற்கைக் கோள்களை ஏவியுள்ளது.
- இந்த இரண்டு செயற்கைக் கோள்களும் ஈர்ப்பலை உயர் ஆற்றல் மின்காந்த எதிர்முனை அனைத்து வான் கண்காணிப்புப் பணியின் (GECAM - Gravitational Wave High-energy Electromagnetic Counterpart All-sky Monitor mission) ஒரு பகுதியாகும்.

## S-400 டிரைம்ஃப்

- அமெரிக்காவானது ரஷ்யாவின் S-400 டிரைம்ஃப் வான் பாதுகாப்பு அமைப்புகளை வாங்கியதற்காக துருக்கியின் மீது தடை விதித்துள்ளது.
- S-400 டிரைம்ஃப் ஆனது ரஷ்யாவினால் உருவாக்கப்பட்ட, எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய, நிலப் பகுதியிலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் ஒரு ஏவுகணை அமைப்பாகும்.
- இது உலகின் மிகவும் அபாயகரமான செயல்பாடு கொண்ட மற்றும் நவீன அதிக வரம்பு கொண்ட வசதியோடு பொருத்தப்பட்டுள்ளது.

- இது அமெரிக்காவினால் வடிவமைக்கப்பட்ட அதி உயரப் பகுதி முனையப் பாதுகாப்பு அமைப்பை விட (Terminal High Altitude Area Defense system - THAAD) சிறந்ததாகக் கருதப் படுகின்றது.
- தடைச் சட்டங்களின் மூலம் அமெரிக்காவின் எதிரி நாடுகளைக் கையாளுதல் (Countering America's Adversaries through Sanctions Act - CAATSA) என்ற சட்டத்தின் முக்கிய நோக்கம் தடை விதிப்பு நடவடிக்கைகளின் மூலம் ஈரான், ரஷ்யா மற்றும் வட கொரியாவை எதிர்ப்பதாகும்.




## ஜெமினிட்ஸ் விண்கற்கள் பொழிவு

- இது இந்த ஆண்டின் வலிமையானதாகக் கருதப் படுகின்றது.
- இதனுடைய தோற்றம் ஒரு வால் நட்சத்திரத்தில் இருந்து ஆரம்பிக்காத காரணத்தினால் இது தனித்துவம் மிக்கதாகக் காணப்படுகின்றது.
- இதன் தோற்றம் குறுங்கோள் அல்லது அழிந்து போன வால் நட்சத்திரமான 3200 பேத்தோன் ஆக இருக்கலாம் என்று நம்பப் படுகின்றது.
- ஜெமினிட்ஸ்க்குப் பிறகு, வடதுருவ அரைக் கோளத்தில் உள்ள பார்வையாளர்கள் அர்சிட்ஸ் (Ursids) என்ற விண்கற்கள் பொழிவைப் பார்க்க முடியும்.
- எனினும், அர்சிட்ஸின் விகிதமானது ஜெமினிட்ஸின் விகிதத்தை விடக் குறைவானது ஆகும்.
- விண் வீழ்கற்கள் என்பவை சூரியனைச் சுற்றி வரும் வகையில் தன்னுடைய சுற்று வட்டப் பாதையில் நிலையாகச் சுற்றி வரும் வால் நட்சத்திரத்திலிருந்துப் பிரிந்த ஒரு வகை பாறை மற்றும் பனித் துண்டுகளாகும்.
- வீண் வீழ்கற்கள் பொழிவை ஒரு வால் நட்சத்திரம் அல்லது குறுங்கோள் தனக்குப் பின்னால் விட்டுச் சென்ற கழிவுப் பொருட்களை பூமி கடக்கும் போது காண முடியும்.




## சிம்எஸ்-01 செயற்கைக்கோள்

- இது பிஎஸ்எல்வி-சி50 என்ற விண்வெளிக் கலத்தின் மூலம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தினால் ஏவப்பட்ட ஒரு தகவல் தொடர்பு செயற்கைக் கோளாகும்.
- இது அதிர்வெண் அலைக் கற்றையின் நீட்டிக்கப்பட்ட சி பட்டையில் சேவைகளை வழங்குவதற்காக செலுத்தப்பட்ட 42வது தகவல் தொடர்புச் செயற்கைக் கோளாகும்.
- இது இந்திய மைய நிலப்பகுதி, அந்தமான் நிக்கோபார் மற்றும் இலட்சத் தீவுகள் ஆகியவற்றிற்குச் சேவை அளிக்கும் திறன் கொண்டது.



- இது புவி ஒத்திசைவு மற்றும் சுற்றுவட்டப் பாதையில் சிஎம்எஸ்-01 என்ற செயற்கைக் கோளைச் செலுத்த உள்ளது.
- இந்தச் செயற்கைக் கோளின் செயல்படும் காலமானது 7 ஆண்டுகளாகும்.
- இது பிஎஸ்எல்வி விண்வெளிக் கலம் மற்றும் இஸ்ரோவின் 52வது விண்கலம் ஆகும்.
- சிஎம்எஸ்-01 செயற்கைக் கோள் ஏவுதலானது உள்நாட்டிலேயே செலுத்தப்பட்ட 77வது பயணமாகும்.
- இது ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்துச் செலுத்தப்பட்டது.

## லூன் திட்டம்

- லூன் திட்டமானது உலகில் உள்ள தொலைதுரப் பகுதிகளுக்கு இணைய வசதியை அளிப்பதற்காக பூமியின் அடுக்கு மண்டலத்தைப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது கூகுள் நிறுவனத்தினால் செயல்படுத்தப்படுகின்றது.
- சமீபத்தில் கூகுள் நிறுவனமானது தனது பலூன்கள் ஒரு ஆண்டு காலத்திற்கு வளியடுக்கு மண்டலத்தில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப் பட்டுள்ளதாக அறிவித்து உள்ளது.
- இந்தப் பலூன்கள் ஹீலியத்தினால் நிரப்பப்பட்டுள்ளன. இது 2.1 லட்சம் கிலோ மீட்டர்கள் அளவிற்குத் தொலைவைக் கண்காணிக்கும் திறன் கொண்டது.
- சமீபத்தில், லூன் ஆனது 318 நாட்கள் வான்வெளியில் இருந்ததன் மூலம் அதிக நாட்கள் வளியடுக்கு மண்டலத்தில் இருந்த பறக்கும் பொருள் என்ற ஒரு புதிய சாதனையைப் படைத்துள்ளது.




## எரிக்சன் கைபேசி அறிக்கை

- இந்த அறிக்கையானது 2020 ஆம் ஆண்டு இறுதியில், உலகம் முழுவதும் ஏறத்தாழ 1 பில்லியன் மக்கள் 5 ஆம் தலைமுறை இணைய வசதியைப் பெறுவர் என்று கணித்து உள்ளது.
- 2026 ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் 60% நபர்கள் 5 ஆம் தலைமுறை இணைய வசதியைப் பெற உள்ளனர்.
- இது 2024 ஆம் ஆண்டில் ஒவ்வொரு 10 கைபேசி இணைப்புகளிலும் 4 கைபேசி இணப்புகள் 5 ஆம் தலைமுறை இணைய வசதியைக் கொண்டிருக்கும்.
- 5 ஆம் தலைமுறையானது 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியாவில் 27% கைபேசி இணைப்புகளைக் கொண்டதாக இருக்கும்.

- இது இந்தியாவில் 350 மில்லியன் இணைப்புகளைக் கொண்டு இருக்கும் என்று கணக்கிடப் பட்டுள்ளது.




## சாங்’இ 5 (Chang’e 5)

- சீனாவின் நிலவு விண்கலமான Chang’e 5 என்ற விண்கலமானது நிலவிலிருந்து எடுத்து வரப்பட்ட பாறைகள் மற்றும் குப்பைகளின் 2 கிலோ கிராம் புதிய மாதிரிகளுடன் உள்புற மங்கோலியாவில் புவியில் தரையிறங்கியது.
- Chang’e 5 ஆனது நவம்பர் 23 அன்று சீனாவில் உள்ள ஹய்னான் மாகாணத்திலிருந்து ஏவப் பட்டது.
- இது சீனாவின் மூன்றாவது வெற்றிகரமான நிலவுத் தரையிறக்கத்தைக் குறிக்கின்றது. அதே சமயம் நிலவிலிருந்து திரும்பி வந்த ஒரே விண்கலம் இதுவாகும்.
- 1976 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியத்தின் லூனா 24 திட்டத்திற்குப் பிறகு எந்தவொரு நாட்டினாலும் மேற்கொள்ளப் படாத நிலவின் முதலாவது மாதிரிச் சேகரிப்பு இது ஆகும்.
- 2003 ஆம் ஆண்டில் சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்காவிற்குப் பிறகு தனது சொந்த விண்கலத்தின் மூலம் நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் விண்வெளி வீரர்களை அனுப்பிய மூன்றாவது நாடு சீனாவாகும்.
- 2019 ஆம் ஆண்டில், Chang’e 4 ஆனது நிலவின் மறுபுறத்தில் உள்ள நிலத்தின் மீது தரையிறக்கப்பட்ட வகையில் மனிதனால் உருவாக்கப்பட்ட முதலாவது நிலவுத் திட்டம் இது ஆகும்.

## நேர்கோட்டில் சனி மற்றும் வியாழன் கோள்கள் சேர்க்கை

- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 21 அன்று உலகம் ஆனது சனி மற்றும் வியாழன் கோள்களின் சேர்க்கையைக் கண்டுள்ளது.
- இந்தச் சேர்க்கையானது 400 ஆண்டுகளுக்குப் பிறகு நிகழ்ந்துள்ளது.
- அடுத்த முறை, இந்த இரண்டு கோள்களின் சேர்க்கையானது 2080 ஆம் ஆண்டு மார்ச் 15 அன்று நிகழ இருக்கின்றது.
- கடந்த முறை இந்த 2 கோள்கள் 1623 ஆம் ஆண்டு ஜூலை 16 அன்று ஒன்றுக்கொன்று நெருக்கமாக வந்தன.
- வியாழன் கோள் ஆனது சூரியனைச் சுற்றி வர 12 ஆண்டுகளையும் சனிக் கோளானது 29 ஆண்டுகளையும் எடுத்துக் கொள்கின்றது.




## குளிர் காலத்தின் நீண்ட இரவு நாள்

- டிசம்பர் 21 ஆனது வட அரைக்கோளத்தில் குளிர் காலத்தின் நீண்ட இரவு நாளாகும்.
- இது இந்த ஆண்டில் நீண்ட இரவுப் பொழுது கொண்ட ஒரு தினமாகும்.
- குளிர் காலத்தின் நீண்ட இரவு தினத்தின் போது சூரியன் ஆனது தென் அரைக் கோளத்தில் -23.5 டிகிரி என்ற அளவில் சாய்வு நிலையை அடைகின்றது.
- இந்தக் காலக் கட்டத்தில், சூரியன் ஆனது தென் அரைக்கோளத்தில் மகர ரேகைக்கு நேர் மேலே இருக்கும்.

## வெளிக் கிரகத்திலிருந்து முதல் சாத்தியமான வானொலி சமிக்ஞை

- நெதர்லாந்தில் அமைந்துள்ள ஒரு குறைந்த அதிர்வெண் வரிசையின் அடிப்படையிலான வானொலி தொலைநோக்கியின் வழியே சர்வதேச விஞ்ஞானிகள் குழுவானது வேற்றுக் கிரகத்திலிருந்து வந்த முதல் வானொலி சமிக்ஞையைச் சேகரித்துள்ளது.
- இது சூரிய மண்டலத்திற்கு அப்பாற்பட்ட ஒரு கிரகத்திலிருந்துப் பெறப்பட்ட முதல் ரேடியோ சமிக்ஞையாகும்.
- இந்த வெளிக்கிரகம் பூமியிலிருந்து 51 ஒளி ஆண்டுகள் தொலைவில், தாவ்பூட்ஸ் என்ற விண்மீன் அமைப்பில் (Tau Bootes star - system) அமைந்துள்ளது.

## ஐநூறு மீட்டர் துளை கோள வடிவத் தொலைநோக்கி

- சீனாவானது சர்வதேச விஞ்ஞானிகளுக்காக வேண்டி தனது உலகின் மிகப்பெரிய ரேடியோ தொலைநோக்கியைத் திறந்திருக்கின்றது.
- இது மிகப்பெரிய நிரப்பப்பட்ட வகையைச் சேர்ந்த துளை வடிவிலான ஒரு ரேடியோ தொலைநோக்கி ஆகும்.
- இது இரண்டாவது மிகப்பெரிய சிறுவட்டுத் துளையைக் கொண்ட ஒரு ரேடியோ தொலைநோக்கியாகும்.
- உலகின் மிகப்பெரிய ஒற்றை-சிறுவட்டுத் துளை தொலைநோக்கியானது இரஷ்யாவில் உள்ள BATA-600 ஆகும்.
- சமீபத்தில் உலகின் 2வது மிகப்பெரிய அரெக்கிபோ கண்காணிப்பு ஆய்வகமானது பியூரிடோ ரிக்கோவில் செயலிழந்தது.



## ஐ.ஐ.டி-தில்லியின் 'போலி முட்டைகள்'

- ஐ.ஐ.டி தில்லியானது Innovate4SDG என்ற ஒரு போட்டியில் முதல் பரிசைப் பெற்றுள்ளது.
- இதை 'இந்தியாவின் ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் ஆக்சிலலேட்டர் லேப்' என்ற அமைப்பு ஏற்பாடு செய்தது.
- ஐ.ஐ.டி தில்லியின் பேராசிரியர் காவ்யா தஷோரா உருவாக்கிய தாவர அடிப்படையிலான போலி முட்டை இதுவாகும் .
- இந்தப் போலி முட்டையானது உணவு சார்ந்த புரதத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது
- இந்தக் கண்டுபிடிப்பு நிலையான வளர்ச்சி இலக்குகள் 2 மற்றும் 3 (பட்டினியை ஒழித்தல் மற்றும் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு) ஆகியவற்றைக் குறிக்கிறது.




## நடுத்தர வரம்பு கொண்ட நிலத்திலிருந்து வானில் உள்ள இலக்கைத் தாக்கும் ஏவுகணை

- இது சமீபத்தில் ஒடிசாவில் உள்ள ஒரு பாதுகாப்பு நிலையத்திலிருந்து சோதனை செய்யப் பட்டது.
- இது ஏவுகணைகள், ரேடார் மற்றும் நடமாடும் ஏவும் அமைப்புகள் போன்றவற்றைக் கண்காணிக்கும் ஒரு கட்டளைக் கட்டுப்பாட்டு அமைப்பு ஆகும்.
- இதை பாரத் டைனமிக்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது.
- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது இந்த ஏவுகணையை இஸ்ரேலுடன் இணைந்து உருவாக்கியுள்ளது.




## நாக்லேரியா பௌலேரி

- ❖ இது ஒற்றை செல் கொண்ட ஒரு அமீபா ஆகும்.
- ❖ இது மூளையை உண்ணும் அமீபா என்றும் அழைக்கப் படுகின்றது.
- ❖ இந்த அமீபாவானது தற்பொழுது அமெரிக்காவில் வேகமாகப் பரவி வருகின்றது.




## போர்டுலாகா லால்ஜி

- ❖ இது இந்தியாவின் கிழக்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்ட காட்டு சூரிய ரோஜாப்பூ வகையின் ஒரு புதிய இனமாகும்.
- ❖ இது ஆந்திரப் பிரதேசத்தின் பிரகாசம் மாவட்டத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.



## பசுமை உந்துவிசைத் தொழில்நுட்பம்

- இஸ்ரோவானது "பசுமை உந்துவிசைத் தொழில்நுட்பத்தை" உருவாக்கி வருகிறது.
- இது ககன்யான் என்ற இந்திய விண்வெளிப் பயணத் திட்டத்திற்காக உருவாக்கப் பட்டு வருகிறது.
- ககன்யான் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏவப்படவுள்ளது.
- ராக்கெட்டுகள் மற்றும் விமானங்களில், நியூட்டனின் மூன்றாவது விதியைப் பயன்படுத்துவதன் மூலம் இந்த உந்துவிசை உருவாக்கப் படுகிறது.
- இதன் பொருள் "ஒவ்வொரு செயலுக்கும் அதற்குச் சமமான மற்றும் எதிர்வினை இருக்கிறது" என்பதாகும்.

## நிமோனியா தடுப்பூசி

- நிமோனியாவிற்கு எதிரான முதல் இந்தியத் தடுப்பூசியை சீரம் இந்திய நிறுவனம் உருவாக்கியுள்ளது.
- இது தற்போது இந்தியாவின் அனைவருக்குமான நோய்த் தடுப்புத் திட்டத்தின் (Universal Immunization Programme) கீழ் உள்ளது.
- லான்செட் இதழின் ஒரு ஆய்வின்படி, நிமோனியா காரணமாக ஏற்படும் குழந்தைகளின் இறப்புகளில் 20% இந்தியாவில் நிகழ்கிறது.
- இந்தியாவில் நிமோனியா தொற்றினை அதிகமாகக் கொண்டுள்ள முதல் ஐந்து பங்களிப்பாளர்கள் உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார், ஜார்க்கண்ட் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஆகும்.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## சாங் அணை குடிநீர் திட்டம் – உத்தரகாண்ட்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள வன ஆலோசனைக் குழுவானது டேராடூனில் சாங் அணை குடிநீர் திட்டத்தின் கட்டமைப்பிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது ரிஸ்பானா நதியின் புத்துயிர்ப்பிற்கு வழிவகை செய்ய உள்ளது.

## கிழக்குத் தொடர்ச்சி மலையில் புதிய பல்லி வகை

- கிழக்குத் தொடர்ச்சி மலையில் Cnemaspis avasabinaem என்ற ஒரு புதிய பல்லி வகை இனமானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இது பொதுவாக சாபினின் நெல்லூர் குள்ள வகைப் பல்லி என்று அழைக்கப் படுகின்றது.
- இது மிகவும் சிறிய உருவம் கொண்ட ஒரு இந்திய கெக்கோனிட் என்று அழைக்கப் படுகின்றது.
- இது 2.9 செ.மீக்கும் குறைவான நீளத்துடன் வறண்ட நிலை கொண்ட பசுமை மாறாக் காடுகளில் காணப்படுகின்றது.
- இந்தியாவில், 45 வகை நெமாஸ்பிஸ் (Cnemaspis) காணப்படுகின்றன. இவற்றில் 34 வகை மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படுகின்றன.



## அமெரிக்கக் காற்றுத் தரக் குறியீடு

- உலகில் மிகவும் மாசுபட்டுள்ள நகரங்களின் பட்டியலில் லாகூர் மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- இதற்கு அடுத்து புது தில்லி மற்றும் காத்மாண்டு ஆகிய நகரங்கள் உள்ளன.
- காற்றுத் தரக் குறியீடானது நிலத்தில் உள்ள ஓசோன் அளவு, சல்பர் டை ஆக்ஸைடு, கார்பன் மோனாக்சைடு, நைட்ரஜன் டை ஆக்ஸைடு மற்றும் நுண்மத் துகள் ஆகிய 5 முக்கிய காற்று மாசுபடுத்திகளை அடிப்படையாக கொண்டு கணக்கிடப் படுகின்றது.

## இந்தியாவின் தடை செய்யப்பட்ட கெளுத்தி மீன்

- தாய் மங்கூர் என்பது தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தால் தடை செய்யப்பட்ட ஒரு கெளுத்தி மீன் வகையாகும்.
- இது அதன் சுற்றுச்சூழலையும் மற்றும் நுகர்வோரின் ஆரோக்கியத்திற்கும் தீங்கு விளைவிக்கிறது.

- சமீபத்தில் இது மகாராஷ்டிராவின் தானேவில் சட்டவிரோதமாக வளர்க்கப்பட்டது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

## குஜராத்தில் சிறுத்தைகளுக்கான தனியார் பாதுகாப்பு

- குஜராத் வனத்துறையானது 12 சிறுத்தைகளை ஜாம்நகரில் உள்ள தனியார் மீட்பு மற்றும் மறுவாழ்வு மையத்திற்கு அனுப்பியுள்ளது.
- இந்த வகையான திட்டமானது மாநிலத்தில் முதன்முறையாகக் கொண்டு வரப்பட்டு உள்ளது.
- அந்தச் சிறுத்தைகள் ஜூனகாட்டில் உள்ள சக்கர் பாக் விலங்கியல் பூங்காவிலிருந்து அனுப்பப் பட்டுள்ளன.

## இடம்பெயரும் பறவைகள் விழா

- பீகார் இந்தப் பறவை திருவிழாவை முதல் முறையாக நடத்துகிறது.
- இது பீகாரின் பாகல்பூர் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.
- சுல்தான்கஞ்ச் மற்றும் கஹல்கானுக்கு இடையில் உள்ள பீகாரின் 60 கி.மீ நீளம் கொண்ட விக்ரம்ஷீலா டால்பின் சரணாலயமானது நீண்ட காலமாக இடம்பெயரும் பறவைகளின் ஒரு மையமாக உள்ளது.

## மாசுபாடு குறித்த மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் – தில்லி ஐஐடியின் ஆய்வு

- இந்திய-கங்கைச் சமவெளியானது நாட்டில் மிகவும் மாசுபட்ட ஒரு பகுதியாகத் தொடர்ந்து நீடிக்கின்றது.
- 2000 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் தெற்கு மற்றும் கிழக்கு இந்தியாவில் மாசுபாட்டு அளவுகளின் அதிகரிப்பு விகிதமானது கங்கைச் சமவெளியை விட அதிகமாக உள்ளது.
- இந்த ஆய்வகமானது மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் ஐஐடி தில்லி ஆகியவற்றினால் கூட்டாக மேற்கொள்ளப்பட்டது.
- செயற்கைக் கோள் தரவை அடிப்படையாகக் கொண்டு இடம் சார்ந்த அளவில் காற்று மாசுபாட்டைக் கண்டறிந்த இதே வகையைச் சேர்ந்த முதலாவது ஆய்வு இதுவாகும்.

**STATES WITH HIGH PM 2.5 INCREASE**

| State | Urban | Rural |
|---|---|---|
| Kerala | 24.2% | 21.9% |
| Goa | 36.4% | 37.3% |
| Andhra Pradesh | 20.1% | 18.9% |
| Maharashtra | 24% | 21% |
| Odisha | 28% | 28% |

**Data from 2000-2019; source: CPCB-IIT Delhi study*

## காலநிலை அவசரநிலை

- நியூசிலாந்து நாடானது காலநிலை அவசரநிலையை அறிவித்துள்ளது.
- இது 2025 ஆம் ஆண்டில் தனது பொதுத் துறை கார்பன் சமநிலை கொண்டதாக உருவெடுக்கும் என்று உறுதியளித்துள்ளது.
- இதன் மூலம் காலநிலை நெருக்கடி நிலையை அறிவித்த ஜப்பான், கனடா, பிரான்சு மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட இதர 32 நாடுகளுடன் நியூசிலாந்தும் இணைந்துள்ளது.

## பெரிய மலேயன் அணில்

- இந்திய விலங்கியல் ஆய்வு நிறுவனத்தினால் (Zoological Survey of India - ZSI) நடத்தப் பட்ட சமீபத்திய ஆய்வின்படி, இந்த வகை அணில் இனங்கள் அழியும் நிலையில் உள்ளன.
- ZSI அமைப்பினால் மேற்கொள்ளப்படும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது ஆய்வு இதுவாகும்.
- இந்தியாவில், இந்த இனங்கள் அதிக எண்ணிக்கையில் அசாம் மாநிலத்தின் காசிரங்கா தேசியப் பூங்காவிலும் வடகிழக்கு இந்தியாவின் சில பகுதிகளிலும் காணப் படுகின்றன.
- பகல் நேர வாழ்வியான இந்தத் தாவர உண்ணிகள் மரங்களில் வாழ்கின்றன.
- பெரிய மலேயன் அணில் அல்லது பெரிய கருப்பு அணில் ஆனது உலகில் மிகப்பெரிய மர அணில் இனங்களில் ஒன்றாகும்.
- இந்தியாவானது பெரிய நரைத்த அணில், பெரிய இந்திய அணில் மற்றும் பெரிய மலேயன் அணில் ஆகிய 3 பெரிய அணில் இனங்களுக்கு வாழ்விடமாகத் திகழ்கின்றது.



## அம்மோனியாவின் முக்கியப் பகுதி

- கரக்பூர் இந்தியத் தொழில்நுட்ப நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வானது இந்திய-கங்கைச் சமவெளிப் பகுதி வளிமண்டல அம்மோனியாவின் ஒரு உலகளாவிய முக்கியப் பகுதி என்பதைக் கண்டறிந்துள்ளது.
- வளிமண்டல அம்மோனியா என்பது நைட்ரஜன் உரங்கள், உர மேலாண்மை, மண் & நீர் மேலாண்மை நடைமுறைகள் மற்றும் விலங்கு வளம் ஆகியவற்றின் பயன்பாடு உள்ளிட்ட வேளாண் நடவடிக்கைகளின் காரணமாக உருவாக்கப் படுகின்றது.

## கென்-பெட்வா நதிநீர் இணைப்புத் திட்டம்

- ❖ இந்தியாவின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் வல்லுநர் குழுவானது ஆர் கீழணை என்ற ஒரு அணைக்கான சுற்றுச்சூழல் அனுமதியை ஒத்தி வைத்துள்ளது.
- ❖ இது கென்-பெட்வா நதிநீர் இணைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- ❖ நாட்டில் முதலாவது நதிநீர் இணைப்புத் திட்டம் இதுவாகும்.
- ❖ இந்தத் திட்டமானது நீர் அதிகமாக உள்ள மத்தியப் பிரதேசத்தின் கென் நதியிலிருந்து வறட்சி அதிகமாகவுள்ள பந்தேல்கண்ட் பகுதிக்கு நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதற்காக உத்தரப் பிரதேசத்தில் உள்ள பெட்வா நதிக்கு நீர் திறக்கப் படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ கென் மற்றும் பெட்வா நதிகள் மத்தியப் பிரதேசத்தில் உற்பத்தியாகின்றன.
- ❖ இவை யமுனை நதியின் துணை நதிகளாகும்.
- ❖ கென் நதியானது பன்னா புலிகள் காப்பகத்தின் வழியே பாய்கின்றது.




## ராய்மோனா தேசியப் பூங்கா

- ❖ இது அசாமின் 6வது தேசியப் பூங்கா ஆகும்.
- ❖ ராய்மோனா தேசியப் பூங்காவானது ரிபு காப்புக் காடுகளுக்குள் அமைந்துள்ளது.
- ❖ இவை பூடானின் பிப்கோ வனவிலங்குச் சரணாலயம் மற்றும் ஜிக்மே வாங்சுக் தேசியப் பூங்கா ஆகியவற்றின் எல்லையுடன் தொடர்ச்சியாக உள்ளது.
- ❖ இது அசாமின் அழிந்து வரும் ஒரு இனமாக இருக்கும் தங்க நிற மந்திக்கு ஒரு மிகப்பெரிய வாழ்விடமாகத் திகழ்கின்றது.
- ❖ காசிரங்கா, மானஸ், திப்ரு - சாய்கோவா, ஒராங் ஆகியன அசாமில் தற்பொழுது உள்ள தேசியப் பூங்காக்களாகும்.

## பெரிய ஆப்பிரிக்க நத்தை ஊடுருவல் (ஆக்கிரமிப்பு)

- ❖ இது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தினால் மிக மோசமான ஊடுருவல் (ஆக்கிரமிப்பு) இனங்களில் ஒன்றாக அறிவிக்கப்ப ட்டுள்ளது.
- ❖ இந்தியாவானது நத்தை இனங்களில் ஆப்பிரிக்க கண்டத்தைப் பூர்வீக கொண்டுள்ளதை விட அதிக அளவிலான மரபணு வகையைக் கொண்டுள்ளது.
- ❖ இதன் அதிக எண்ணிக்கையானது இந்தியாவின் கேரளாவில் காணப்படுகின்றது.



## இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் உலகப் பாரம்பரியக் கண்ணோட்டம் - 3

- இதை இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் சமீபத்தில் வெளியிட்டது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவின் மேற்கு தொடர்ச்சி மலை எனும் உலக இயற்கைப் பாரம்பரியத் தளமாமானது காலநிலை மாற்றம், மக்கள் தொகை அழுத்தம் ஆகிய காரணங்களால் பாதுகாப்புச் சிக்கல்களை எதிர்கொள்கிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலை என்பது உயிரியல் பன்முகத் தன்மைக்கான உலகின் முக்கிய எட்டு இடங்களில் ஒன்றாகும்.

## புதிய மிருகக்காட்சிச் சாலைகள்

- மத்திய மிருகக்காட்சிச் சாலையின் 37வது பொதுக் கூட்டத்திற்கு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் அவர்கள் தலைமை தாங்கினார்.
- இந்தக் கூட்டத்தின் போது இரண்டு புதிய மிருகக்காட்சிச் சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டது.
- அவை பீகாரின் நாலந்தாவில் உள்ள ராஜ்கிர் விலங்குச் சவாரி மற்றும் உத்தரபிரதேசத்தின் கோரக்பூரில் உள்ள அசபுல்லா கான் பிராணி உதயான் ஆகியன ஆகும்.

## மகாராஷ்டிராவின் புதிய வனவிலங்குச் சரணாலயம்

- மகாராஷ்டிரா மாநில அரசானது சந்திரப்பூரின் கோண்ட்பிப்ரி வட்டப் பிரிவில் (Gondpipri tehsil) கன்ஹர்கானில் உள்ள பகுதியை ஒரு புதிய வனவிலங்குச் சரணாலயமாக அங்கீகரித்துள்ளது.
- இது அந்த மாநிலத்தின் 50வது வனவிலங்குச் சரணாலயமாகும்.
- தெலுங்கானாவில் உள்ள காவல் புலிகள் காப்பகத்தில் (Kawal tiger reserve) உள்ள புலிகள் மற்றும் இந்திராவதி புலிகள் காப்பகத்தில் இருக்கும் புலிகள் ஆகியன கடந்து செல்லும் ஒரு பாதையாக கன்ஹர்கான் அமைந்துள்ளது.
- கொல்ஹாப்பூர், நாக்பூர், அமராவதி, சதாரா மற்றும் சிந்துதுர்க் மாவட்டங்களில் 11 காப்புப் பகுதிகளைப் பாதுகாப்புக் காப்பகங்களாக அறிவிக்கவும் முடிவு செய்யப் பட்டுள்ளது.
- இதன்மூலம் மகாராஷ்டிராவானது 19 பாதுகாப்புக் காப்பகங்களைக் கொண்டிருக்கும்.

- தற்போது, நாடு முழுவதும் 92 பாதுகாப்புக் காப்பகங்கள் உள்ளன.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கூற்றுப்படி, பாதுகாப்புக் காப்பகங்கள் என்பது பாதுகாக்கப்பட்ட பகுதிகளாகும், அவை நிறுவப்பட்ட தேசிய பூங்காக்கள், வனவிலங்குச் சரணாலயங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட காடுகளுக்கு இடையில் இடையக மண்டலங்கள் (buffer zones) அல்லது இணைப்பிகள் (connectors) மற்றும் விலங்குகள் இடம்பெயர்ந்துச் செல்லும் பாதைகளாக செயல்படுகின்றன.

## காலநிலை மாற்றச் செயல்திறன் குறியீடு

- சமீபத்தில் புதிய காலநிலை நிறுவனம், ஜெர்மன் வாட்ச் மற்றும் கேன் (க்ளைமேட் ஆக்சன் நெட்வொர்க்) ஆகியவற்றால் இது வெளியிடப்பட்டது.
- இந்தக் குறியீடானது 2005 ஆம் ஆண்டு முதல், உலகின் ஐம்பத்தேழு பசுமைக்குடில் வாயுக்களை உமிழும் உமிழ்ப்பாளர்களை மதிப்பிடுகிறது.
- ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவற்றுடன் சேர்த்து இந்தியா, தொடர்ந்து இரண்டாவது முறையாக முதல் 10 இடங்களில் உள்ளது.
- இந்தியா 2019 ஆண்டில் ஒன்பதாவது இடத்திலிருந்து ஓரிடம் சரிந்து இந்த ஆண்டு 10வது இடத்திற்கு வந்துள்ளது.
- ஜி 20 நாடுகளுள் இந்தியா மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே அதிகத் தரவரிசையில் உள்ளன.
- மற்ற எந்த நாடுகளும் முதல் மூன்று இடங்களில் இல்லை.
- இதற்குக் காரணம் 2015 ஆம் ஆண்டின் பாரிஸ் ஒப்பந்தத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்யும் நிலையில் எந்த நாடும் போதுமானதாக இல்லாததால் தான் ஆகும்.
- சுவீடன் இதில் நான்காவது இடத்தில் உள்ளது, அதைத் தொடர்ந்து ஐக்கியப் பேரரசு, டென்மார்க், மொராக்கோ, நார்வே, மற்றும் சிலி உள்ளன.
- 61வது இடத்தைப் பெற்று அமெரிக்காவானது மிக மோசமான செயல்திறனைக் கொண்டுள்ளது.




## நுண்-காலநிலை மாற்றம் அடைதல்

- சமீபத்தில் "காலநிலை நிகழ்வுகளுக்காக இந்தியாவைத் தயார் செய்தல்" என்ற ஒரு ஆய்வானது ஆற்றல், சுற்றுச்சூழல், நீர் குறித்த மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் மிகக் கடுமையான காலநிலை உள்ள இடங்கள் வரைபடமிடப் படுவது இதுவே முதல்முறையாகும்.

- இந்த ஆய்வானது நாட்டில் கடந்த 50 ஆண்டுகளில் வெள்ள நிகழ்வு ஏற்படுதலானது 8 மடங்காக அதிகரித்துள்ளதைக் கண்டறிந்துள்ளது.
- நுண் காலநிலை மண்டல மாற்றம் அடைதலில் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாநிலம் மகாராஷ்டிரா ஆகும்.
- மிகக் கடுமையான காலநிலை நிகழ்வுகள் என்பவை வெள்ளம், புயல், வெப்பம் மற்றும் குளிர்காற்று ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- ஒரு சிறிய பகுதி அல்லது மாவட்டத்திற்குள் காலநிலை அமைப்பில் ஏற்படும் மாற்றமானது நுண் காலநிலை மண்டலம் மாற்றம் அடைதல் என்பதாகும்.

## உமிழ்வுகள் இடைவெளி அறிக்கை 2020

- இந்த வருடாந்திர அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் வெளியிடப் படுகின்றது.
- இது இந்த நூற்றாண்டில் உலக வெப்பமயமாதலை 2°Cற்குக் குறைவாகவும் கட்டாயம் 1.5°Cற்குக் குறைவாக வைத்திருக்க வகை செய்யும் பாரிஸ் ஒப்பந்தத்தின் இலக்குகளுடன் ஒன்றிப் பொருந்தும் வகையில் எதிர்பார்க்கப் படும் உமிழ்வுகள் மற்றும் நிலைகளுக்கிடையேயான அளவை அளவிடுகின்றது.
- ஜி20 நாடுகள் அதிக அளவிலான உமிழ்வுகளை வெளியிடுகின்றன.

## கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வுகள் (CO2) வீழ்ச்சி

- கோவிட் – 19 நோய்த் தொற்றின் காரணமாக 2020 ஆம் ஆண்டில் உலக CO2 உமிழ்வானது 7% என்ற அளவில் குறைந்துள்ளது.
- தரைவழிப் போக்குவரத்தானது CO2 உமிழ்வுகளில் 5ல் ஒரு பங்கிற்கு மேலாகப் பதிவாகி உள்ளது.
- இது புவி அமைப்பு அறிவியல் தரவு என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின் படி கணிக்கப்பட்டதாகும்,
- உலக கரிமத் திட்டமானது 2020 ஆம் ஆண்டில் உலகமானது வான்வெளியில் 37 பில்லியன் அமெரிக்க டன்கள் என்ற அளவிலான CO2 உமிழ்வை வெளியிட்டுள்ளதாக கணித்து உள்ளது.
- இது 2019 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்ட CO2 உமிழ்வான 40.1 பில்லியன் அமெரிக்க டன்கள் என்ற அளவை விடக் குறைவானதாகும்.
- இந்தத் திட்டமானது உமிழ்வுகளைக் கண்காணிக்கும் சர்வதேச விஞ்ஞானிகளைக் கொண்ட ஒரு குழுவினால் மேற்கொள்ளப் பட்டதாகும்.

## காலநிலை உயர் இலட்சிய மாநாடு 2020

- இந்த மாநாடானது பாரிஸ் ஒப்பந்தத்தின் 5வது ஆண்டைக் குறிப்பதற்காக ஐக்கிய நாடுகள், பிரான்சு மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகியவற்றினால் இணைந்து நடத்தப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைவர் காலநிலைச் சமநிலையை அடையும் வரை உறுப்பு நாடுகள் “காலநிலை அவசரச் சூழ்நிலையை” அறிவிக்குமாறு அந்நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.
- இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனானது உலகில் 4வது மிகப் பெரியது என்றும் அது 2022 ஆம் ஆண்டில் 175 ஜிகாவாட் அளவை எட்டும் என்றும் இந்தியப்

பிரதமர் அறிவித்துள்ளார்.

- மேலும் அவர் இந்தியாவானது 2030 ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனானது 45 ஜிகாவாட் என்ற அளவை எட்ட அதிக அளவிலான குறிக்கோள்களைக் கொண்டுள்ளது என்றும் அறிவித்துள்ளார்.
- இந்தியாவானது பாரிஸ் ஒப்பந்த இலக்குகளை அடையும் வகையில் செயல்பட்டு வருகின்றது.
- இந்தியாவானது தனது கார்பன் உமிழ்வு தீவிரத் தன்மையை 2005 ஆம் ஆண்டில் இருந்த நிலையை விட 21% என்ற அளவில் குறைந்துள்ளது.

## மைரிஸ்டிக்கா சதுப்பு நில மரத் தவளை

- இந்த அரிய வகை மரங்களில் வாழும் இனமானது மேற்குத் தொடர்ச்சி மலையில் மட்டுமே காணப்படுகின்றது.
- இது அகஸ்திய மலையின் மேற்கு அடிவாரத்தில் உள்ள குழத்துப்புழா பாதுகாக்கப் பட்ட காடுகளுக்கு அருகில் உள்ள அரிப்பாவின் மைரிஸ்டிக்கா சதுப்பு நிலப் பகுதியில் முதன்முறையாக கண்டறியப்பட்டது.
- தற்பொழுது இது கேரளாவின் செங்கோட்டை கணவாய்ப் பகுதிக்கு வடக்குப் பகுதியில் திருச்சூர் மாவட்டத்தில் உள்ள வழச்சல் பாதுகாக்கப் பட்ட காடுகளில் கண்டறியப் பட்டுள்ளது.

## 2020 புவியின் சாதனையாளர்கள் விருது

- ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டமானது இந்த விருதுக்கு ஆறு பரிசு பெற்றவர்களை அறிவித்துள்ளது.
- இது 2005 ஆண்டு முதல் வழங்கப்படும் ஐ.நா.வின் மிக உயர்ந்த ஒரு சுற்றுச்சூழல் விருதாகும்.
- இவ்விருது பெற்ற ஆறு பேர் பின்வருவனமாறு,
  - பிஜியின் பிரதமர் பிராங்க் பைனிமராமா
  - டாக்டர் ஃபேபியன் லீண்டெர்ட்ஸ் (ஜெர்மனி)
  - மிண்டி லப்பர் (அமெரிக்கா)
  - நெமண்டே நென்கிமோ (ஈக்வடார்)
  - யாகௌபா சவாடோகோ (புர்கினா பாசோ)
  - ராபர்ட் டி. புல்லார்ட் (அமெரிக்கா)
- சுற்றுச்சூழல் நீதிக்கான அர்ப்பணிப்பு மற்றும் சேவைக்காக ராபர்ட் அவர்களுக்கு புவியின் சாதனையாளர் பிரிவில் வாழ்நாள் சாதனையாளர் என்ற விருதும் வழங்கப் பட்டுள்ளது.
- 2021 ஆம் ஆண்டு மே மாதத்தில் சீனாவின் குன்மிங்கில் நடைபெற உள்ள ஐ.நா. பல்லுயிர் மாநாட்டிற்கான உத்வேகத்தை திரட்டுவதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தின் #ஃபார்நேச்சர் பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக இந்த விருதுகள் உள்ளன, மேலும் நவம்பர் 2021 ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற உள்ள ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டிற்கு வேண்டி அனைத்து வழிகளிலும் இந்த விருதுகள் காலநிலை நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றன.




## பூமியின் இளம் சாதனையாளர்கள் பரிசு 2020

- ஐ.நா. சுற்றுச்சூழல் திட்டமானது உலகெங்கிலும் உள்ள ஏழு இளம் விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழில்முனைவோர் மற்றும் ஆர்வலர்கள் ஆகியோரை இதில் குறிப்பிட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் நிலையான சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான துணிவான யோசனைகளுடன் உள்ள 30 வயதிற்குட்பட்ட ஏழு தொழில்முனைவோருக்கு இது வழங்கப் படுகிறது.
- இந்தியாவில் இருந்து வித்யுத் மோகன் (Takachar என்பதின் இணை நிறுவனர்) இந்தப் பரிசிற்கு அங்கீகரிக்கப் பட்டுள்ளார்.
- விவசாயக் கழிவுகளை எரிக்கும் போது அவை தீங்கு விளைவிக்கும் பசுமைக்குடில் வாயுக்களை வளிமண்டலத்தில் வெளியிடுவதைத் தடுத்து அந்த விவசாயக் கழிவுகளை எரித்து அவற்றைக் கரி மற்றும் உரமாக மாற்றும் ஒரு நடமாடும் சிறிய இயந்திரத்தினை உருவாக்கியதில் அவர் ஒரு முன்னோடியாக உள்ளார்.

| Winners | Region |
|---|---|
| **Nzambi Matee (Kenya, 29)** | Africa |
| **Xiaoyuan Ren (China, 29)** | Asia and the Pacific |
| **Vidyut Mohan (India, 29)** | Asia and the Pacific |
| **Lefteris Arapakis from Greece, 26 years old** | Europe |
| **Max Hidalgo Quinto (Peru, 30)** | Latin America and the Caribbean |
| **Niria Alicia Garcia (USA, 28)** | North America |
| **Fatemah Alzelzela from Kuwait, 24 years old** | West Asia |

## முரைனா புல்

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி நிறுவனமான புனேவில் உள்ள அகர்கர் ஆராய்ச்சி மையமானது சமீபத்தில் முரைனா புல் என்ற ஒரு புதிய இனத்தைக் கண்டறிந்துள்ளது.
- இந்தப் புதிய மற்றும் அதிக தாங்குந் தன்மை கொண்ட இனமானது மேற்குத் தொடர்ச்சி மலையில் கோவாவில் கண்டறியப் பட்டுள்ளது.
- இது வெப்ப மண்டல மற்றும் துணை வெப்ப மண்டலப் பகுதிகளில் காணப்படும் ஒரு வகை புல் இனமாகும்.

## கட்ச் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்திப் பூங்கா

- குஜராத்தின் கட்ச் பகுதியில் உள்ள விகாகோட் கிராமத்தின் அருகில் உள்ள இந்தப் பூங்காவானது இந்தியாவின் மிகப்பெரிய ஆற்றல் உற்பத்திப் பூங்காவாகும்.
- இது 30 ஜிகா வாட் அளவிற்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது.
- இது காற்று ஆற்றல் மற்றும் சூரிய ஒளி ஆற்றல் சேமிப்பிற்கான ஒரு பிரத்தியேக மண்டலமாகும்.

## இமய மலை செரோ (மலை ஆடு)

- இது முதன்முறையாக இமயமலையின் குளிர் பாலைவனப் பகுதியில் (இமாச்சலப் பிரதேசம்) கண்டறியப் பட்டுள்ளது.
- இமயமலை செரோவானது ஆடு, கழுதை, குரங்கு, மாடு மற்றும் பன்றி ஆகியவற்றின் ஒரு கலப்பாகும்.
- இது அச்சுறுத்தல் கொண்ட சர்வதேச இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் சிவப்பு நிறப் பட்டியலில் "பாதிப்பிற்கு உள்ளாகக் கூடிய இனமாக" வகைப்படுத்தப் பட்டு உள்ளது.
- இது வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972 என்ற சட்டத்தின் அட்டவணை 1-ன் கீழ் பட்டியலிடப் பட்டுள்ளது.



## இந்திய வெட்டுக் கிளிகள் – சிவப்புப் பட்டியல்

- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் (International Union for the Conservation of Nature - IUCN) வெட்டுக்கிளி நிபுணர் குழுவானது முதன்முறையாக இந்தியாவில் வெட்டுக்கிளிகளின் மீதான ஒரு சிவப்புப் பட்டியல் ஆய்வைத் தொடங்கியுள்ளது.

- இதுவரை, எந்தவொரு இந்திய வெட்டுக்கிளி இனமும் சிவப்புத் தரவுப் பட்டியலில் இடம் பெறவில்லை.
- இந்த ஆய்வானது தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவற்றின் எல்லையில் அமைந்த நீலகிரி பல்லுயிர்ப் பெருக்கக் காப்பகத்தில் (Nilgiris Biosphere Reserve - NBR) தொடங்கப்பட உள்ளது.
- இந்த ஆய்வானது டெட்டிலோபஸ் திரிஷூலா அல்லது சிலாவின் பிக்மி திரிஷூலா எனப்படும் புதிய வெட்டுக்கிளி இனத்துடன் சேர்த்து NBR பகுதியைப் பூர்வீகமாகக் கொண்ட 30 இனங்களையும் உள்ளடக்கியுள்ளது.
- சிலாவின் பிக்மி திரிஷூலா 2018 ஆம் ஆண்டில் கேரளாவில் உள்ள இரவிகுளம் தேசியப் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1964 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களின் மீதான சிவப்புப் பட்டியலானது உலகில் உயிரியல் இனங்களின் உலகப் பாதுகாப்பு நிலைக்கான மிகவும் விரிவான ஒரு பட்டியலாகும்.

## R தொகுப்பு

- ரிலையன்ஸ் தொழிற்துறை நிறுவனம் மற்றும் பிரிட்டிஷ் பெட்ரோலியம் ஆகியவை R தொகுப்பிலிருந்து வாயு உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.
- R தொகுப்பு என்பது ஆசியாவில் உள்ள மிக ஆழமான கடலோர எண்ணெய்ப் பகுதி ஆகும்.
- இது இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் கேஜி பகுதி டி 6 (கிருஷ்ணா கோதாவரி) பகுதியில் உள்ள மிக ஆழமான நீர் வாயுப் பகுதியாக விளங்குகின்றது.
- இது 200 மீட்டர்களுக்கு அதிகமான ஆழத்தில் அமைந்துள்ளது.

## ஐஎஸ்ஓ 9001:2015 தரச் சான்றிதழைப் பெற்ற முதலாவது விலங்கியல் பூங்கா

- ஹைதராபாத்தில் உள்ள நேரு விலங்கியல் பூங்காவானது ஐஎஸ்ஓ 9001:2015 என்ற தர மேலாண்மை தர நிர்ணய சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் முதலாவது பூங்காவாக உருவெடுத்துள்ளது.
- இது ஐக்கியப் பேரரசில் உள்ள சான்றளிப்பு அமைப்புகளுக்கான ஊக்கமளிப்பு அமைப்பிடமிருந்துப் பெற உள்ளது.



## 2020 ஆம் ஆண்டின் கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத்திற்கான உலகளாவிய நிலை குறித்த அறிக்கை

❖ இது ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

❖ கட்டுமானத் துறையிலிருந்து வெளியிடப்படும் கார்பன் உமிழ்வுகள் 2019 ஆம் ஆண்டில் அதிகமாக இருந்தன.

❖ 2019 ஆம் ஆண்டில் கட்டிடத் துறையானது மூன்றில் ஒன்று என்ற அளவிற்கு மேற்பட்ட அளவில் கார்பன் டை ஆக்ஸைடு ($CO_2$) உமிழ்வுகளை வெளியிட்டுள்ளது.

❖ இது 2019 ஆம் ஆண்டில் 9.95 ஜிகா டன்கள் $CO_2$ உமிழ்வு என்ற அளவிற்கு அதிகரிக்கப் பட்டுள்ளது.

❖ கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத்திற்கான உலகளாவியக் கூட்டமைப்பு என்பது அரசாங்கங்கள், தனியார் துறை, சிவில் சமூகம் மற்றும் அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகள் ஆகியவற்றிற்கான ஒரு உலகளாவியத் தளமாகும்.

❖ இது சுழிய உமிழ்வு திறனுள்ள மற்றும் தாங்கு தன்மையுள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டுமானத் துறை நோக்கிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக வேண்டி பணியாற்றுகின்றது.




## 12வது கிரிகா மாநாடு – புது தில்லி

❖ இந்த மாநாட்டின் கருத்துரு, “தாங்குந்தன்மை கொண்ட வாழ்விடங்களைப் புனரமைத்தல்” (Rejuvenating Resilient Habitats) என்பதாகும்.

❖ இது ஒருங்கிணைந்த வாழ்விட ஆய்விற்கான பசுமைத் தரநிர்ணய மாநாடு (GRIHA - Green Rating for Integrated Habitat Assessment) என்பதைக் குறிக்கின்றது.

❖ இது எந்தவொரு முடிக்கப்பட்ட கட்டிடக் கட்டுமானத்திற்கான இந்தியாவின் தேசியத் தர நிர்ணய அமைப்பாகும்.

❖ இது ஆற்றல் மற்றும் வள மையத்தினால் கருத்தாக்கம் செய்யப்பட்டு மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டது.

## புதுப்பிக்கப்பட்ட ஐயூசின் (IUCN) சிவப்புப் பட்டியல்

❖ சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியமானது (IUCN - International Union for Conservation of Nature) அச்சுறுத்தல் நிலையில் உள்ள இனங்களின் மீதான தனது சிவப்புப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது.

- தற்பொழுது IUCN சிவப்புப் பட்டியலில் கங்கை, அமேசான், சிந்து, ஐராவதி போன்ற நதிநீர் வகை நன்னீர் ஓங்கில் இனங்கள் "அழிந்து போகும் நிலையுடன் கூடிய அச்சுறுத்தல் நிலையில்" (threatened with extinction) வைக்கப் பட்டுள்ளன.
- தற்பொழுது நன்னீர் ஓங்கில்கள் "தரவு போதாமை" என்ற நிலையிலிருந்து "அருகி வரும் இனங்கள்" என்ற நிலைக்கு நகர்ந்து கொண்டு இருக்கின்றன.

## கானமயில் (GIB)

- இந்திய வனவிலங்கு மையமானது GIB (Great Indian Bustard) பறவையின் வாழ்விடங்களில் செல்லும் அனைத்து மின் பகிர்மானத் தொடர்களையும் நிலத்துக்கு அடியில் அமைக்கப் பரிந்துரைத்துள்ளது.
- GIB என்பது இந்தியா மற்றும் பாகிஸ்தானில் வாழும் ஒரு பறவை இனமாகும்.
- GIB ஆனது இராஜஸ்தானின் மாநிலப் பறவையாக விளங்குகின்றது.
- அதிக அளவிலான GIB பறவைகள் இராஜஸ்தானில் காணப்படுகின்றன.
- GIB பறவையைப் பாதுகாக்கும் சரணாலயங்கள் பின்வருமாறு:
  - பாலைவன தேசியப் பூங்கா, இராஜஸ்தான்
  - கட்ச் கானமயில் சரணாலயம், குஜராத்
  - கான மயில் சரணாலயம் அல்லது ஜவஹர்லால் நேரு கானமயில் சரணாலயம், மகாராஷ்டிரா.



## E20 எரிபொருள்

- சமீபத்தில் இந்திய அரசானது எத்தனால் போன்ற பசுமை எரிபொருளை ஊக்குவிப்பதற்காக வேண்டி E20 என்ற எரிபொருளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவானது அடுத்த 5 ஆண்டுகளில் எத்தனால் பொருளாதாரத்தை 2 இலட்சம் கோடி ரூபாய்க்கு உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளது.
- தற்பொழுது இந்தியாவின் எத்தனால் பொருளாதாரமானது 22,000 கோடி ரூபாயாக உள்ளது.
- E20 என்பது பெட்ரோலுடன் 20% அளவிற்கு எத்தனாலைக் கலப்பதைக் குறிக்கின்றது.
- தற்பொழுது இந்தியாவில் 10% அளவிற்கு எத்தனால் கலப்பானது அனுமதிக்கப்பட்டு உள்ளது.




## சிறுத்தைகளின் நிலை மீதான அறிக்கை - 2018

- ❖ இது இந்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- ❖ இந்தியாவில் தற்போது 12,852 சிறுத்தைகள் உள்ளன.
- ❖ நாடு முழுவதும் சிறுத்தைகள் எண்ணிக்கையில் 60 சதவீதம் உயர்வு காணப்பட்டு உள்ளது.
- ❖ 2014 ஆம் ஆண்டில் இந்தியா 7910 சிறுத்தைகளைக் கொண்டு இருந்தது.




- ❖ மத்தியப் பிரதேசம், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்கள் முறையே 3,421, 1,783 மற்றும் 1,690 என சிறுத்தைகளின் அளவில் அதிக எண்ணிக்கைகளைப் பதிவு செய்து உள்ளன.

- ஐ.யூ.சி.என் சிவப்பு பட்டியலில் சிறுத்தைகள் "பாதிக்கப்படக் கூடியவை" (Vulnerable) என்று பட்டியலிடப் பட்டுள்ளன.

## இந்திய சுறா மீன்கள் குறித்த ஆய்வு

- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு மன்றத்தின் சுறாமீன் வல்லுநர் குழுவானது இந்தியப் பிரத்தியேகப் பொருளாதார மண்டலத்தில் (Exclusive Economic Zone - EEZ) சுறா மீன்கள், மீன் துடுப்புக் கதிர்கள் மற்றும் சிம்மேராஸ் ஆகியவற்றை ஆய்வு செய்தது.
- இந்த ஆய்வானது இந்திய EEZ பகுதியிலிருக்கும் சுறா மீன்கள், மீன் துடுப்புக் கதிர்கள் சிம்மேராஸ் ஆகிய 170 மீன் இனங்களில் 19 இனங்களை "மிகவும் அருகி வரும் இனங்களாக" (Critically Endangered - CE) வகைப்படுத்தி இருக்கின்றது.
- இது முதன்முறையாக இந்தியப் பெருகு சுறா சிபாலோஸ்கிலியம் சிலாசி என்ற ஒரு இனத்தைக் கட்டுப்படுத்தப்பட்ட புவியியல் வரம்பு மற்றும் எண்ணிக்கை குறைவு ஆகியவற்றின் காரணமாக "CE" என வகைப்படுத்தி இருக்கின்றது.
- இந்தியப் பெருகு சுறாமீன் என்பது கேரளா, இலங்கை மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றின் கடற்கரைகளில் காணப்படும் ஒரு ஆழ்கடல் பூனை வகை சுறா மீனாகும்.
- கடல் வெள்ளை நுனி சுறாமீன் ஆனது அருகி வரும் இனமாக முன்பு வகைப்படுத்தப் பட்டு இருந்தது. இது தற்பொழுது "மிகவும் அருகி வரும் உயிரினமாக" வகைப்படுத்தப் பட்டுள்ளது.

## நீலத் திமிங்கலங்களின் எண்ணிக்கை

- சமீபத்தில் விஞ்ஞானிகள் மேற்கு இந்தியப் பெருங்கடலில் நீலத் திமிங்கலத்தின் ஒரு புதிய வகை உயிர் வாழ்வதற்கான ஆதாரத்தைக் கண்டறிந்துள்ளனர்.
- திமிங்கலங்கள் சப்தத்தை வெளியிட்டு அதனால் ஏற்படும் எதிரொலி மீதான அடிப்படையில் நீரில் தனக்கான இரையைக் கண்டறிகின்றன.
- இவர்கள் அரபிக் கடல் பகுதியில் ஓமன் பகுதியிலிருந்து மடகாஸ்கர் வரையிலான பதிவுகளை ஆய்வு செய்துள்ளனர்.
- இந்த இனமானது இந்தப் பகுதியில் முதன்முறையாக தற்பொழுது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- ஒரு காலத்தில் நீலத் திமிங்கலங்கள் பூமியில் உள்ள அனைத்துக் கடல்களிலும் ஏராளமான எண்ணிக்கையில் இருந்தன.
- ஐயூசிஎன் சிவப்புப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையில் உள்ள உயிரினங்களுக்கான பட்டியலில் நீலத் திமிங்கலங்கள் "அருகி வரும் இனமாக" பட்டியலிடப்பட்டுள்ளன.

## லடாக்கின் சோ கர் ஈரநிலப் பகுதி

- இது சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக அங்கீகரிக்கப்பட்டு உள்ளது.
- இதன் மூலம், சோ கர் ஈர நிலமானது இந்தியாவின் 42வது ராம்சார் தளமாகவும் லடாக்கின் 2வது ராம்சார் தளமாகவும் மாறியுள்ளது.
- இது ருபுசு பீடபூமியில் அமைந்துள்ள ஒரு மிதக்கும் வகையிலான (ஏற்ற இறக்கத்துடன் காணப்படும்) உப்பு ஏரி ஆகும்.
- இந்த அதிஉயரமான ஈரநிலப் பகுதியானது லடாக்கின் சாங்தாங் பகுதியில் அமைந்து உள்ளது.

- சோ கர் வடிநிலப் பகுதியானது சர்வதேச பறவை வாழ்வு அமைப்பின் படி ஒரு முதன்மையான ஏ1 பிரிவு முக்கியப் பறவைப் பகுதியாக வகைப்படுத்தப் பட்டுள்ளது.
- மேலும் இது மத்திய ஆசியாவின் வலசைப் பகுதியில் உள்ள பறவைகளின் ஒரு முக்கியமான தங்குமிடம் ஆகும்.
- இந்த வடிநிலப் பகுதியானது இந்தியாவில் கருப்புக் கழுத்து கொண்ட நாரையின் முக்கியமான இனப்பெருக்க இடங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.
- ராம்சார் ஒப்பந்தமானது ராம்சார் எனப்படும் ஈரான் நகரில் 1971 ஆம் ஆண்டில் பிப்ரவரி 02 அன்று ஏற்படுத்தப் பட்டது.




## குரங்குகளுக்கான மறுவாழ்வு மையம்




- தெலுங்கானா மாநிலத்தில் குரங்குகளுக்கான முதல் மீட்பு மற்றும் மறுவாழ்வு மையமானது காந்தி ராமண்ணா ஹரிதவனத்தில் சமீபத்தில் திறக்கப்பட்டது.
- இமாச்சலப் பிரதேசத்திற்குப் பிறகு நாட்டில் உள்ள இரண்டாவது மையம் இதுவாகும்.

## பேசல் ஒப்பந்தம்

- ஐரோப்பிய ஒன்றியமானது ஏழை நாடுகளுக்கு வரிசையாக்கம் செய்யப் படாத நெகிழி ஏற்றுமதியை முற்றிலுமாக தடை செய்ய இருக்கின்றது.
- அபாயகரமான கழிவுகளின் நாடு கடந்த இயக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்கான மற்றும் அவற்றை அகற்றுவதற்கான பேசல் ஒப்பந்தம் 1989 ஆம் ஆண்டில் கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தம் நாடுகளுக்கு இடையே அபாயகரமான கழிவுகளின் இயக்கத்தை குறைக்க கையெழுத்தானது.
- இந்தியா பேஸல் ஒப்பந்தத்தின் ஒரு உறுப்பினாராக உள்ளது ஆனால் அதை இந்தியா இன்னும் உறுதிப்படுத்த வில்லை.




## 2020 ஆம் ஆண்டின் மத்திய தரைக்கடல் மற்றும் கருங்கடலில் மீன்வள நிலை

- உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டது
- இந்த அறிக்கையின்படி, மத்திய தரைக் கடல் மற்றும் கருங்கடல் ஆகியவற்றின் கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் மீன்களின் எண்ணிக்கை பல தசாப்தங்களில் முதல் முறையாக குறைந்துள்ளது.
- இப்பகுதியில் 75% மீன்கள் அதிகப்படியான மீன்பிடிப்பிற்கு ஆளாகின்றன.
- நிலையான வளர்ச்சி இலக்கு 14 ஆனது பெருங்கடல்கள், கடல் வளங்கள் மற்றும் கடல்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பதையும் நீடித்த அளவில் அவற்றைப் பயன்படுத்தச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.



### பசுமை தேசிய நெடுஞ்சாலைப் பெருவழிப் பாதை

- இந்திய அரசானது நாட்டில் இந்தப் பெருவழிப் பாதைகளை மேம்படுத்துவதற்காக வேண்டி உலக வங்கியுடன் 500 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட ஒப்பந்தம் ஒன்றில் சமீபத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தப் பெருவழிப் பாதைகள் இமாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் ஏற்படுத்தப்பட உள்ளன.
- பசுமை நெடுஞ்சாலையின் முக்கிய நோக்கம் நெடுஞ்சாலைப் பாதைகளில் பசுமைப் போர்வையை அதிகரிப்பதாகும்.
- இந்த நடவடிக்கைகள் பசுமை நெடுஞ்சாலை கொள்கையின் கீழ் செயல்படுத்தப் படுகின்றன.
- இந்த மரம் நடுதல்கள் இஸ்ரோவின் புவன் மற்றும் ககன் ஆகிய செயற்கைக் கோள் அமைப்புகளினால் கண்காணிக்கப்பட உள்ளன.




## மாநிலச் செய்திகள்

### இருவாய்ச்சி பறவைத் திருவிழா

- இது திருவிழாக்களின் திருவிழா எனப்படுகின்றது.
- இது நாகாலாந்தின் ஒரு வருடாந்திர கலாச்சாரத் திருவிழாவாகும்.
- இது நாகா இனத்தின் வளம் மிக்கக் கலாச்சாரத்தை எடுத்துக் காட்டுகின்றது.
- இந்தத் திருவிழாவின் தொடக்கமானது நாகாலாந்து மாநில தினத்தை (டிசம்பர் 01) குறிக்கின்றது.



- இந்தத் திருவிழாவானது இந்திய இருவாய்ச்சிப் பறவையின் நினைவாகப் பெயரிடப் பட்டுள்ளது.
- முதன்முறையாக, இந்த திருவிழாவின் 21வது பதிப்பானது டிஜிட்டல் முறையில் நடத்தப்பட உள்ளது.

## துவாரே சர்க்கார்

- இது மேற்கு வங்க அரசினால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், உள்ளாட்சி அமைப்பு அளவில் முகாம்கள் ஏற்பாடு செய்யப் பட உள்ளன.
- இந்த முகாம்களின் மூலம், மாநில அரசானது மேற்கு வங்க மக்களுக்கு அரசுச் சேவைகளை அவர்கள் வீட்டிலேயே வழங்க வழிவகை செய்கிறது.

## அருணாச்சல மாநிலத்தின் பசலிப்பழம் (கிவி)

- அருணாச்சல மாநிலத்தின் பசலிப் பழமானது வடகிழக்குப் பகுதிக்கான கரிம மதிப்புச் சங்கிலி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பசலிப் பழத்திற்காக கரிமச் சான்றிதழைப் பெற்றுள்ளது.
- இது வடகிழக்கு மாநிலங்களுக்காக இந்திய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.
- பசலிப் பழத்திற்காக இந்தச் சான்றிதழைப் பெறும் நாட்டின் முதலாவது மாநிலம் அருணாச்சலப் பிரதேசம் ஆகும்.
- இந்தப் பசலிப் பழங்கள் அம்மாநிலத்தில் சைரோ பள்ளத்தாக்கில் விளைவிக்கப் படுகின்றன.




## குடியிருப்புப் பகுதிகளின் மீதான மறுபெயரிடுதல்

- சாதி அடிப்படையில் பெயர்களைக் கொண்ட அனைத்துக் குடியிருப்புகளையும் மறுபெயரிடக் கோரும் ஒரு திட்டத்திற்கு மகாராஷ்டிர மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்து உள்ளது.
- இதன் மூலம், பிராமண-வாடா, மகர்-வாடா, தோர்-வஸ்தி, பௌத்-வாடா, மாலி-கல்லி மற்றும் மங்-வாடா போன்ற பெயர்களைக் கொண்ட அனைத்துக் குடியிருப்புப் பகுதிகளுக்கும் சமதா நகர், பீம் நகர், ஜோதிநகர், ஷாஹுநகர் மற்றும் கிரந்தி நகர் போன்ற புதிய பெயர்கள் வழங்கப் படும்.

- பிரிட்டிஷ் ஆட்சியின் போது மக்களைப் பிரிக்க இந்த சாதி அடிப்படையிலான குடியிருப்புகள் நிறுவப் பட்டன.

## சுவஸ்திய சாத்தி சுகாதாரத் திட்டம்

- மேற்கு வங்க மாநில முதல்வரான மம்தா பானர்ஜி அவர்கள் மாநிலத்தின் ஒட்டு மொத்த மக்களையும் உள்ளடக்கும் வகையில் "சுவஸ்திய சாத்தி சுகாதாரத் திட்டத்தை" விரிவாக்கம் செய்ய முடிவு செய்துள்ளார்.
- இது 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மேற்கு வங்க மாநில அரசினால் அதிகாரப் பூர்வமாகத் தொடங்கப்பட்ட ஒரு சுகாதாரத் திட்டமாகும்.
- இது ஆண்டுதோறும் ஒரு குடும்பத்திற்கு ரூ. 5 இலட்சம் வரை இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மருத்துவத்திற்கான சுகாதார வசதியை அளிக்கின்றது.

## எலுரு மர்ம நோய்

- ஆந்திராவின் எலுரு நகரில் கண்டறியப்படாத ஒரு நோய் காரணமாக குறைந்தது 550 பேர் நோய்வாய்ப் பட்டுள்ளனர்.
- இதன் மீதான எய்ம்ஸின் ஆய்வு முடிவுகள் குடிநீர் அல்லது /பாலில் ஈயம் மற்றும் நிக்கல் ஆகியன கலந்திருக்கும் என்பதை ஒரு சாத்தியமான காரணமாகக் குறிக்கின்றன.

## மகாசரத்

- மகாராஷ்டிரா மாநிலமானது மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிப் பொருட்களை வழங்குவதற்காக ஒரு முன்னோக்குத் திட்டத்தைத் தொடங்கவுள்ளது.
- இந்த டிஜிட்டல் தளமானது தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரான சரத் பவாரின் நினைவாக இப்பெயரிடப் பட்டுள்ளது.
- இது சுகாதாரம் மற்றும் புனர்வாழ்வு உதவிக்கான மகாராஷ்டிரா அமைப்பு அல்லது "மகாசரத்" என்று பெயரிடப் பட்டுள்ளது.

## போடோ மொழி

- போடோ மொழியை தனது மாநிலத்தின் அலுவல் மொழியாக மாற்றும் ஒரு மசோதாவிற்கு அசாம் மாநில அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- அசாமின் அலுவல் மொழி அசாமி ஆகும்.
- கூடுதல் அலுவல் மொழிகள் வங்காளம் மற்றும் போடோ ஆகும்.

## ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி – ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY) செகாத் (SEHAT)

- பிரதமர் மோடி அவர்கள் ஜம்மு காஷ்மீரில் வாழும் மக்களுக்காக ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி – ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY/Ayushman Bharat Pradhan Mantri Jan Arogya Yojana) செகாத் (SEHAT) என்ற திட்டத்தைத் தொடங்கவுள்ளார்.
- SEHAT (Social, Endeavour for Health and Telemedicine) திட்டம் என்பது சுகாதாரம் மற்றும் தொலைதூர மருத்துவத்திற்கான சமூகம் மற்றும் முயற்சி என்பதைக் குறிக்கின்றது.

- இந்தத் திட்டமானது அம்மாநிலத்தில் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் சேர்க்கப் படாத ஒரு கோடி மக்களுக்குப் பயனளிக்க இருக்கிறது.
- இந்தியாவில் ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசமானது அனைவருக்குமான சுகாதார வசதியினை அளிக்க இருக்கும் முதல் ஒன்றியப் பிரதேசமாகும்.
- இந்தத் திட்டமானது ஜம்மு காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தில் வாழும் அனைத்து குடியிருப்பு வாசிகளுக்கும் 1 குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் வரை இலவச சுகாதாரக் காப்பீட்டு வசதியை அளிக்கின்றது.
- PMJAY ஆனது அரசினால் முழுவதும் நிதியளிக்கப் படும் வகையில் உலகின் மிகப்பெரிய சுகாதார காப்பீட்டு/உறுதித் திட்டமாகும்.
- இது குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் அடிப்படையில் ரூ.5,00,000 அளவிற்கு ஒரு காப்பீட்டை வழங்குகின்றது.
- அதாவது இதனைக் குடும்பத்தில் உள்ள ஒரு உறுப்பினராலோ அல்லது அனைத்து உறுப்பினர்களாலோப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.
- மேற்கு வங்காளம், ஒடிசா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் இந்த ஆயுஷ்மான் பாரத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை.




## முதலாவது வெப்பக் காற்று பலூன் சவாரி

- சமீபத்தில் மத்தியப் பிரதேசத்தின் வனத் துறை அமைச்சரான விஜய் ஷா அவர்கள் மத்தியப் பிரதேசத்தில் உள்ள பாண்டவகர் புலிகள் காப்பகத்தில் இந்தியாவின் முதலாவது வெப்பக் காற்று பலூன் சவாரியைத் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவில் முதலாவது வெப்பக் காற்று பலூன் சவாரி இதுவாகும்.

## 8 வது வடகிழக்குத் திருவிழா

- இது சமீபத்தில் அசாமில் உள்ள குவஹாத்தியில் நடைபெற்றது.
- இந்த விழா முதல் முறையாக அசாமில் நடைபெற்றது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு "கோவிட்டிற்குப் பிறகு வட கிழக்கிற்கான வளர்ச்சி திட்டத்தின் நிரல்" என்பதாகும்.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பக்கிர் சந்த் கோஹ்லி – மறைவு

- இவர் இந்தியத் தகவல் தொழில்நுட்பத் துறையின் தந்தையாகக் கருதப்படுகின்றார்.
- இவர் டாடா ஆலோசக நிறுவனத்தின் நிறுவனராக (TCS – Tata Consultancy Services) அறியப் படுகின்றார்.
- உலகின் 3வது மிகப்பெரிய தகவல் தொழில்நுட்பத் துறை நிறுவனம் TCS ஆகும்.




## உலகளாவிய ஆசிரியர் பரிசு, 2020.

- மகாராஷ்டிராவின் சோலாப்பூரைச் சேர்ந்த தொடக்கப் பள்ளி ஆசிரியர் ரஞ்சித் சிங் டிசாலே என்பவர் இந்தப் பரிசை வென்றுள்ளார்.
- இது இங்கிலாந்தைச் சேர்ந்த வர்கி என்ற ஒரு அறக்கட்டளையால் வழங்கப் பட்டு உள்ளது.
- இது ஊடகவியலாளர்களால், 'கற்பிப்பதற்கான நோபல் பரிசு' என்று குறிப்பிடப் பட்டு உள்ளது.

## இரவீந்திரநாத் தாகூர் இலக்கிய விருது – 2020

- இது அமெரிக்காவில் உள்ள ஒரு பதிப்பகத்தாரான பண்டாலோவினால் 2018 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது.
- இந்தியப் பத்திரிக்கையாளரும் எழுத்தாளருமான ராஜ் கமல் ஷா அவர்கள் அவருடைய நாவலான "நகரம் மற்றும் கடற்கரை" (The City and The Sea) என்பதற்காக 2020 ஆம் ஆண்டின் இரவீந்திரநாத் தாகூர் இலக்கிய விருது வழங்கி கௌரவிக்கப் பட்டு உள்ளார்.
- ஷாவின் புத்தகமான "நகரம் மற்றும் கடற்கரை" ஆனது 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த நிர்பயா கற்பழிப்பு மற்றும் கொலை வழக்கை அடிப்படையாகக் கொண்டதாகும்.
- 2020 ஆம் ஆண்டின் சமூக சாதனைக்கான இரவீந்திரநாத் தாகூர் இலக்கிய விருதானது ஓமன் நாட்டின் மறைந்த வலிமை வாய்ந்த சுல்தானான சுல்தான் குவாமோஸ் பின் சையது அல் சையது மற்றும் ஓமன் நாட்டின் மக்கள் ஆகியோருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- சமூக சாதனை விருதானது இந்த ஆண்டில் 2 வெற்றியாளர்களைக் கொண்டுள்ளது.
- புகழ்பெற்ற இந்திய நடன இயக்குநரான சந்தீப் சோப்பார்க்கர் என்பவர் அதன் மற்றொரு வெற்றியாளர் ஆவார்.

## 2020 ஆம் ஆண்டின் இளம் கணிதவியலாளர்களுக்கான ராமானுஜர் விருது

- இந்த விருதானது பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் உள்ள அசல் மற்றும் பயன்பாட்டுக் கணிதவியல் மையத்தைச் சேர்ந்த கணிதவியலாளரான டாக்டர் கரோலின் அரௌஜோ என்பவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது சர்வதேசக் கோட்பாட்டு இயற்பியல் மையம் மற்றும் சர்வதேசக் கணித ஒன்றியம் ஆகியவற்றுடன் இணைந்து இந்திய அரசின் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் நிதியளிக்கப்பட்டு, வளரும் நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றது.
- இவ்விருதானது இயற்கணித வடிவியலில் தலைசிறந்த அவருடைய பணிக்காக வேண்டி அவருக்கு வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதைப் பெறும் இந்தியாவைச் சேராத முதலாவது கணிதவியலாளர் இவரே ஆவார்.
- டாக்டர் அரௌஜோ அவர்கள் சர்வதேசக் கணித ஒன்றியத்தில் கணிதத்திற்கான பெண்கள் குழுவின் துணைத் தலைவராக உள்ளார்.

## படைத் தலைவர் பிரீத்திபால் சிங் கில்

- இவர் தற்போது 100 வயதை எட்டியுள்ளார்.
- இவர் இரண்டாம் உலகப் போரில் கலந்து கொண்ட ஒரு வீரராவார்.
- இவர் அனைத்து 3 பாதுகாப்புப் படைப் பிரிவுகளிலும் பணியாற்றிய சிறப்பான ஒரு தனித்துவத்தைக் கொண்டுள்ளார்.
- கில் ராயல் இந்திய விமானப் படை, ராயல் இந்தியக் கடற்படை மற்றும் இந்திய ராணுவம் ஆகியவற்றில் பணியாற்றிய ஒரு தனித்துவத்தைக் கொண்டுள்ளார்.



## 2020 ஆம் ஆண்டின் சமூகத் தொழில்முனைவோர் விருது

- இந்த விருதானது அஸ்ரப் பட்டேல் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இவர் பிரவாஹ் மற்றும் கம்மியூட்னி இளைஞர்கள் அமைப்பு ஆகிய இரண்டு நிறுவனங்களின் இணை நிறுவனர் ஆவார்.
- இந்த விருதானது ஸ்வாப் அமைப்பு மற்றும் ஜுப்லியண்ட் பாரதிய அறக்கட்டளை அமைப்பு ஆகியவற்றினால் ஏற்படுத்தப் பட்டுள்ளது.




### The Presidential Years

- வெளியிடப் படவுள்ள இந்தப் புத்தகம் இந்தியாவின் மறைந்த முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி அவர்கள் எழுதிய புத்தகமாகும்.
- இது அவரது நினைவுக் குறிப்பின் நான்காவது தொகுதியாகும்.
- இந்த முன்னாள் ஜனாதிபதியின் சுயசரிதையின் மூன்றாவதுத் தொகுதி "The Coalition Years - 1996-2012" என்ற தலைப்பில் 2017 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது.




### ஹிந்த் கேசரி



- ஸ்ரீபதி காஞ்சன்னாலே என்பவர் ஒரு புகழ்பெற்ற மல்யுத்த வீரராவார்.
- இவர் சமீபத்தில் மகாராஷ்டிராவில் கொல்ஹாபூரில் (86) காலமானார்.
- இவர் 1956 ஆம் ஆண்டில் ரஸ்டன்-இ-பஞ்சாப் பட்டாசிங் என்பவரை வீழ்த்தியதன் மூலம் ஹிந்த் கேசரி என்ற புகழ்பெற்ற ஒரு பட்டத்தைப் பெற்றார்.

## 100 மிகவும் சக்தி வாய்ந்த பெண்களின் போர்ப்ஸ் 2020 பட்டியல்

- இந்தப் பட்டியலில் தொடர்ந்து 10வது ஆண்டாக ஜெர்மனி நாட்டின் ஆட்சியாளரான ஏஞ்சலா மெர்க்கல் அவர்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.
- நியூசிலாந்து நாட்டுப் பிரதமரான ஜெசிந்தா ஆர்டெர்ன் மற்றும் அமெரிக்காவின் துணை அதிபராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளவரான கமலா ஹாரிஸ் ஆகியோரும் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்.
- நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், பயோகான் நிறுவனரான கிரண் மசூம்தார் ஷா, எச்சிஎல் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான ரோஷிணி நாடார் மல்கோத்ரா, லேண்ட்மார்க் குழுமத்தின் தலைவரான ரேணுகா ஜக்தியானி ஆகியோர் போர்ப்ஸ் பத்திரிக்கையினால் உலகின் 10 சக்தி வாய்ந்த பெண்களாக தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளனர்.
- இந்தப் பட்டியலில் நிர்மலா சீதாராமன் 41வது இடத்திலும் நாடார் மல்கோத்ரா 55வது இடத்திலும் மசூம்தார் ஷா 68வது இடத்திலும் ரேணுகா ஜக்தியானி 98வது இடத்திலும் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளனர்.
- இந்தியாவின் முதலாவது முழுநேர பெண் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆவார்.




## தங்க மயில் சுற்றுச்சூழல் மேலாண்மை விருது



- இந்திய எஃகு ஆணைய நிறுவனமானது 2020 ஆம் ஆண்டிற்கான இந்த விருதைப் பெற்றுள்ளது.
- இந்த விருதானது 1998 ஆம் ஆண்டில் உலக சுற்றுச்சூழல் அறக்கட்டளையினால் ஏற்படுத்தப் பட்டது.

## சுகதாகுமாரி மறைவு

- இவர் ஸ்ரீகுமார் என்ற புனைப்பெயரில் மலையாள இலக்கியத்தில் தனது இலக்கிய வாழ்வைத் தொடங்கினார்.
- இவர் கேரளாவில் நடைபெற்ற அமைதிப் பள்ளத்தாக்கைப் பாதுகாத்தல் என்ற ஒரு இயக்கத்தின் மிகவும் துடிப்பு மிக்க பிரச்சாரகர்களில் ஒருவராக விளங்கினார்.
- இவர் தனது சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காடு வளர்ப்பு முயற்சிகளுக்காக இந்திய அரசிடமிருந்து இந்திரா பிரியதர்ஷினி விருக்ச மித்ரா என்ற விருதைப் பெற்று உள்ளார்.
- 1996 ஆம் ஆண்டில் இவர் கேரள மாநிலத்தின் பெண்கள் (மகளிர்) ஆணையத்தின் முதலாவது தலைவராக பதவியேற்றார்.
- இவரது பதவிக் காலமானது குடும்ப ஸ்ரீ திட்டம் தொடங்கப் பட்டதைக் குறிக்கின்றது.
- அமைதிப் பள்ளத்தாக்கானது இந்தியாவில் கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள ஒரு வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகளாகும்.

## கைலாஷ் சத்யார்த்தியின் ஒரு புதிய புத்தகம்

- "கோவிட் – 19 : சப்யதா கா சங்கத் அவுர் சமாதான்" (கோவிட்-19 : நாகரிகத்தின் பிரச்சினைகள் மற்றும் தீர்வுகள்) என்ற தலைப்பு கொண்ட ஒரு புத்தகமானது காணொலி வாயிலாக இந்திய உச்சநீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான தீபக் மிஸ்ரா மற்றும் மாநிலங்களவையின் துணைத் தலைவரான ஹர்வன்ஷ் நாராயண் சிங் ஆகியோரால் வெளியிடப்பட்டது.
- இது நோபல் பரிசு பெற்றவரான கைலாஷ் சத்யார்த்தி அவர்களால் எழுதப்பட்டது.
- இவர் 2014 ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் மலாலா யூசப்சாய் என்பவருடன் இணைந்து அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- பச்பன் பச்சாவோ ஆந்தோலன், குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான ஒரு உலகளாவியப் பிரச்சாரம், கல்விக்கான ஓர் உலகளாவியப் பிரச்சாரம் மற்றும் கைலாஷ் சத்யார்த்தியின் குழந்தைகள் அமைப்பு உள்ளிட்டவற்றின் நிறுவனர் இவர் ஆவார்.

## ஜெய்ராம் ரமேஷ் புத்தகம்

- ஆசியாவின் ஒளி: புத்தரை வரையறுத்த அந்தக் கவிதை" என்ற தலைப்பில் ஒரு புத்தகம் முன்னாள் மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் அவர்களால் எழுதப் பட்டு உள்ளது.
- சமீபத்தில் 2020 ஆம் ஆண்டின் கமலாதேவி சட்டோபாத்யாய் NIF புத்தகப் பரிசு "A Chequered Brilliance: The Many Lives of VK Krishna Menon" என்ற இவரது புத்தகத்திற்கு வழங்கப் பட்டுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## 2020 ஆம் ஆண்டிற்கான பிபாவின் இறுதித் தரவரிசை

- பெல்ஜியம் நாடு இதில் முதலிடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.
- பிரான்சு 2வது இடத்திலும் பிரேசில் மூன்றாவது இடத்திலும் இங்கிலாந்து 4வது இடத்திலும் போர்ச்சுக்கல் 5வது இடத்திலும் இதில் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளன.




| RANK | TEAM | POINTS | +/- POSITION |
|---|---|---|---|
| 1 | BELGIUM | 1765 | 0 |
| 2 | FRANCE | 1733 | 0 |
| 3 | BRAZIL | 1712 | 0 |
| 4 | ENGLAND | 1661 | 0 |
| 5 | URUGUAY | 1645 | 0 |
| 6 | CROATIA | 1642 | 0 |
| 7 | PORTUGAL | 1639 | 0 |
| 8 | SPAIN | 1636 | 0 |
| 9 | ARGENTINA | 1623 | 0 |
| 10 | COLOMBIA | 1622 | 0 |

## இந்திய விளையாட்டு விருதுகள் 2020

- 2020 ஆம் ஆண்டின் இந்திய விளையாட்டு விருதுகளானது இந்திய வர்த்தக மற்றும் தொழிற்துறைக் கூட்டமைப்பினால் வழங்கப் பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம் என்ற விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா மற்றும் துப்பாக்கி சுடுதல் வீரரான இளவேனில் வாலறிவன் ஆகியோர் இந்த ஆண்டின் சிறந்த விளையாட்டு வீரர்கள் விருதினை வென்றுள்ளனர்.
- கிரிக்கெட் வீரரான அனில் கும்ப்ளே அவர்கள் டென்விக் விளையாட்டுகள் என்ற அவருடைய நிறுவனத்தின் சார்பாக “விளையாட்டுகளை ஊக்குவிக்கும் சிறந்த நிறுவனம்” (தனியார் துறை) என்ற ஒரு விருதைப் பெற்றுள்ளார்.

## 15வது ஆண்கள் ஹாக்கி உலகக் கோப்பை

- 2023 ஆம் ஆண்டு ஹாக்கி உலகக் கோப்பையானது ஒடிசாவின் தலைநகரான புவனேஸ்வருடன் சேர்ந்து போட்டி நடத்தப்படும் ஒரு இரண்டாவது நகரமாக அம்மாநிலத்தில் உள்ள ரூர்கேலா நகரத்தையும் கொண்டுள்ளது.
- ரூர்கேலா நகரமானது பல்வேறு சர்வதேச ஹாக்கி வீரர்களை உருவாக்கிய ஹாக்கியின் தொட்டிலாக விளங்குகின்றது.
- 2018 ஆம் ஆண்டு ஹாக்கி உலகக் கோப்பையானது இந்தியாவில் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா அரங்கில் நடத்தப்பட்டது.

## பிபா கால்பந்து விருதுகள் 2020

- சிறந்த பிபா ஆண் விளையாட்டு வீரராக போலந்தைச் சேர்ந்த ராபர்ட் லீவாண்டோஸ்கீ என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

- 2018 ஆம் ஆண்டில் பிபா சிறந்த ஆண் விளையாட்டு வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட லூகா மோட்ரிக் என்பவரைத் தொடர்ந்து லியோனல் மெஸ்ஸி மற்றும் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி தற்பொழுது முதலாவது வீரராக லீவாண்டோஸ்கீ என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இங்கிலாந்து மற்றும் மான்செஸ்டர் நகர விளையாட்டு வீரரான லூசி பிரான்சு என்பவர் சிறந்த பிபா பெண் விளையாட்டு வீரராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- லிவர்பூலைச் சேர்ந்த ஜுர்கெஸ் க்ளோப் என்பவர் தொடர்ந்து 2வது முறையாக ஆண்டின் சிறந்த ஆண்களுக்கான பயிற்சியாளர் விருதை வென்றுள்ளார்.
- நெதர்லாந்து பெண்கள் அணியின் பயிற்சியாளரான சரினா வியாக்மென் என்பவர் இரண்டாவது முறையாக சிறந்த பிபா பெண்கள் அணியின் பயிற்சியாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

## டென்னிஸ் விருதுகள் - 2020

- நோவக் ஜோகோவிக் (செர்பியா), ரஃபேல் நடால் (ஸ்பெயின்) மற்றும் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) ஆகியோர் 2020 ஆம் ஆண்டிற்கான ஏடிபியின் (Association of Tennis Professionals / டென்னிஸ் நிபுணர்களின் சங்கம்) சிறந்த விருதுகளை வென்றுள்ளனர்.
- ஜோகோவிக் "Year-end No. 1" (ஆண்டின் இறுதியில் முதலிடம்) எனும் விருதை வென்று உள்ளார்.
- நடால் "Stefan Edberg sportsmanship" எனும் விருதை வென்றுள்ளார்.
- ஆர்தர் ஆஷே மனிதாபிமான விருதை (Arthur Ashe Humanitarian Award) தியாஃபோ (அமெரிக்கா) வென்றுள்ளார்.

## 2020 ஆம் ஆண்டிற்கான சர்வதேச ஹாக்கிக் கூட்டமைப்புத் தரவரிசைகள்

- சர்வதேச ஹாக்கிக் கூட்டமைப்பானது, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இந்திய ஆண்கள் ஹாக்கி அணியானது 4வது இடத்தைப் பிடிக்க உள்ளதாகவும் இந்தியப் பெண்கள் அணியானது 9வது இடத்தைப் பிடிக்க உள்ளதாகவும் உறுதிப்படுத்தி உள்ளது.
- இந்த ஆண்டின் உலகத் தரவரிசையில் பெல்ஜியமின் ஆண்கள் அணி மற்றும் நெதர்லாந்தின் பெண்கள் அணி ஆகியவை முதலிடத்தைப் பிடித்து நிறைவு செய்ய உள்ளன.



## கொலோன் குத்துச்சண்டை உலகக் கோப்பை

- ஜெர்மனியில் நடைபெற்ற கொலோன் உலகக் கோப்பையில் இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்தியா 3 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 4 வெண்கலப் பதக்கங்கள் ஆகியவற்றை வென்றுள்ளது.
- இந்தத் தங்கப் பதக்கங்களை சிம்ரான்ஜித் கவுர், மணீஷா மற்றும் அமித் பங்கால் ஆகியோர் வென்றுள்ளனர்.
- வெள்ளி பதக்கத்தை அமித் பங்கல் மற்றும் சதீஷ்குமார் வென்றனர்.
- இந்த நிகழ்வில் ஜெர்மனி, பெல்ஜியம், குரோஷியா, டென்மார்க், பிரான்ஸ், மால்டோவா, நெதர்லாந்து, போலந்து மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரர்கள் பங்கேற்றனர்.




## கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு 2021

- சமீபத்தில் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு 2021 ஆம் ஆண்டில் நான்கு உள்நாட்டு விளையாட்டுகளைச் சேர்க்க விளையாட்டு அமைச்சகம் ஒப்புதல் அளித்து உள்ளது.
- அவை பஞ்சாபின் கட்கா, மணிப்பூரின் தங்-டா, கேரளாவின் களரிப் பயட்டு மற்றும் மகாராஷ்டிரா மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களின் மல்லகம்பா ஆகும்.
- 2021 ஆம் ஆண்டின் கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியானது ஹரியானாவில் நடைபெற உள்ளது.



## தசாப்தத்தின் ஐ.சி.சி அணிகள்

- சர்வதேசக் கிரிக்கெட் மன்றமானது தசாப்தத்தின் ஐ.சி.சி ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான டி 20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் அணிகளை அறிவித்துள்ளது.
- முன்னாள் இந்தியக் கேப்டன் எம்.எஸ்.தோனி ஐ.சி.சி ஆண்களுக்கான டி20 மற்றும் ஒருநாள் அணிகளின் கேப்டனாக தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- விராட் கோலி தசாப்தத்தின் ஐ.சி.சி ஆண்கள் டெஸ்ட் அணியின் கேப்டனாக தேர்வு செய்யப் பட்டுள்ளார்.
- பெண்கள் அணியில், ஆஸ்திரேலியா மெக் லானிங் தசாப்தத்தின் டி20 போட்டிக்கான அணியின் கேப்டனாக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- இந்தியக் கேப்டன் விராட் கோலி தசாப்தத்தின் ஐ.சி.சி ஆண் கிரிக்கெட் வீரருக்கான சர் கேர்பீல்ட் சோபர்ஸ் விருதை வென்றுள்ளார்.
- ஆஸ்திரேலியாவின் எலிஸ் பெர்ரி தசாப்தத்தின் ஐ.சி.சி பெண் கிரிக்கெட் வீரருக்கான ரேச்சல் ஹேஹோ பிளின்ட் விருதை வென்றுள்ளார்.




## 2021 கால்பந்து உலகக் கோப்பை

- 20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆண்கள் உலகக் கோப்பை மற்றும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆண்கள் உலகக் கோப்பையின் 2021 ஆண்டுப் போட்டிகளை ரத்து செய்ய ஃபிஃபா முடிவு செய்துள்ளது.
- இது 2023 ஆண்டுப் போட்டிகளை நடத்தும் உரிமைகளை முறையே இந்தோனேசியா மற்றும் பெரு நாடுகளுக்கு வழங்கியுள்ளது.
- 2021 ஆம் ஆண்டிலும், இந்தோனேசியா மற்றும் பெரு நாடுகளே இதை நடத்த இருந்தன.
- 2023 ஆம் ஆண்டிற்கான ஃபிஃபா மகளிர் கால்பந்து உலகக் கோப்பைப் போட்டியை ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாடுகள் நடத்துகின்றன.

# முக்கிய தினங்கள்

## உலக எய்ட்ஸ் தினம் – டிசம்பர் 01

- இது பெறப்பட்ட மனித நோய் எதிர்ப்புத் திறன் குறைபாட்டு நோய்க் கூட்டறிகுறி (AIDS - Acquired Immuno Deficiency Syndrome) குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது மனித நோய் எதிர்ப்பு அமைப்பைப் பாதிக்கும் மனித நோய் எதிர்ப்புத் திறன் குறைபாட்டு வைரஸின் தொற்றின் (HIV) காரணமாக ஏற்படும் ஒரு கொள்ளை நோய் ஆகும்.
- இந்தத் தினமானது HIV தொற்றிற்கு எதிரான போராட்டத்தில் மக்களை ஒன்றிணைப்பதற்காகவும் HIV தொற்றுடன் வாழ்பவர்களுக்கு தேவையான ஆதரவைத் தெரிவிப்பதற்காகவும் வேண்டிய ஒரு வாய்ப்பினை அளிக்கின்றது.
- உலக எய்ட்ஸ் தினமானது முதன்முதலில் 1988 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “HIV/எய்ட்ஸ் தொற்று நோயின் தாங்கு தன்மை மற்றும் தாக்கத்தை முடிவிற்குக் கொண்டு வருதல்” என்பதாகும்.




### *AIDSற்கான திட்டம்*

- மத்திய அரசானது எய்ட்ஸின் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்காக தேசிய எய்ட்ஸ் நோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தை (National AIDS Control Programme - NACP) 100% அளவில் ஒரு மத்தியத் துறைத் திட்டமாகச் செயல்படுத்தி வருகின்றது.
- HIV கொள்ளை நோய்க்கான NACPயின் எதிர்வினையானது தடுத்தல், பரிசோதனை மற்றும் சிகிச்சை என்ற விரிவான 3 அடுக்கு கொண்ட ஒரு உத்தி முறையைக் கொண்டுள்ளது.
- மேலும் மத்திய அரசானது 2017 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை 7 ஆண்டு கால அளவிற்கு ஒரு தேசிய உத்திசார் திட்டத்தையும் உருவாக்கியுள்ளது.

## உலகக் கணினி எழுத்தறிவு நாள் - டிசம்பர் 02

- உலகக் கணினி எழுத்தறிவு நாளானது முதன்முதலில் 2001 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டு கொண்டாடப் பட்டது.
- உலகக் கணினி எழுத்தறிவு நாளானது தேசியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் இருபதாவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- மக்களுக்கு இன்னும் எட்டாத கணினி மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றைப் பற்றிய போதுமான விழிப்புணர்வை அளிக்கும் வகையில் இந்நாள் அனுசரிக்கப் படுகிறது.

## தேசிய மாசுக் கட்டுப்பாட்டு நாள் - டிசம்பர் 02

- இது அதிகரித்து வரும் மாசு அளவு மற்றும் மனிதர்கள் மற்றும் நமது சுற்றுச்சூழல் அமைப்பு மீதான அதன் அபாயகரமான விளைவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த டிசம்பர் 2 ஆம் தேதி அனுசரிக்கப் படுகிறது.
- இது போபால் நச்சுவாயுப் பேரழிவு சம்பவத்திற்குப் பிறகு அனுசரிக்க தொடங்கப் பட்டது.
- இது 1984 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதி இரவு நடந்தது.
- 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதி போபால் நச்சுவாயுப் பேரழிவின் 36வது ஆண்டு நிறைவைக் குறிக்கும்.




## அடிமைத் தனத்தை ஒழிப்பதற்கான சர்வதேச நாள் - டிசம்பர் 02

- இந்த நாள் மக்களைக் கடத்துதல், பாலியல் ரீதியான சுரண்டல், குழந்தைத் தொழிலாளர்கள், கட்டாயத் திருமணம், மற்றும் ஆயுதப் போட்டியில் குழந்தைகளை ஈடுபடுத்துதல் போன்ற அடிமைத்தனத்தின் தற்போதைய வடிவங்களை அகற்றுவதில் கவனம் செலுத்துகிறது.
- ஐ.நா.வின் கூற்றுப் படி, 40.3 மில்லியன் மக்கள் நவீன அடிமைத்தனத்தில் உள்ளனர், இதில் 24.9 மில்லியன் கட்டாயப் படுத்தப்பட்ட வேலை மற்றும் 15.4 மில்லியன் கட்டாயத் திருமணம் ஆகியன அடங்கும்.
- மக்கள் கடத்தப்பட்டு பாலியல் ரீதியாகச் சுரண்டப் படுவதை எதிர்க்கும் ஒரு ஒப்பந்தமானது 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் நிறைவேற்றப் பட்டது.

## மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச நாள் - டிசம்பர் 03

- சமூகம் மற்றும் வளர்ச்சியின் அனைத்துத் துறைகளிலும் மாற்றுத் திறனாளிகளின் உரிமைகள் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டு உள்ளது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு "சிறந்ததை மீண்டும் கட்டியெழுப்புதல்: இயலாமையை உள்ளடக்கிய, அனைவராலும் அணுகக் கூடிய மற்றும் கோவிட்-19 தொற்றுக்குப் பிந்தைய ஒரு நிலையான உலகத்தை நோக்கி" (Building Back Better: toward a disability-inclusive, accessible and sustainable post COVID-19 World) என்பதாகும்.

## 56வது எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) எழுச்சி தினம் – டிசம்பர் 01

- எல்லைப் பாதுகாப்பு படை (Border Security Force - BSF) என்பது பாகிஸ்தான் மற்றும் வங்க தேசத்துடனான தனது எல்லையைப் பாதுகாக்கும் இந்தியாவின் முதன்மையான எல்லைப் பாதுகாப்பு அமைப்பாகும்.
- இது இந்தியப் பகுதிகளின் முதல்நிலைப் பாதுகாப்பு அமைப்பு என்று குறிக்கப் படுகின்றது.
- இது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.
- BSF ஆனது இந்தியா – பாகிஸ்தான் மற்றும் இந்தியா – சீனா ஆகிய போர்களைத் தொடர்ந்து 1965 ஆம் ஆண்டு டிசம்பர் 01 அன்று உருவாக்கப் பட்டது.




## வங்கிகளுக்கான சர்வதேச நாள் - டிசம்பர் 04

- இது முதல் முறையாக இந்த ஆண்டு கொண்டாடப் படுகிறது.
- இந்த நாளைக் கொண்டாட 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 19 அன்று ஐ.நா பொதுச் சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

## உலக மண் தினம் - டிசம்பர் 05

- ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்கும் உணவு மற்றும் விவசாய அமைப்பால் இந்த நாள் கொண்டாடப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான கருத்துரு 'மண்ணை உயிருடன் வைத்திருத்தல், மண் பல்லுயிரியலைப் பாதுகாத்தல்' என்பதாகும்.
- இந்த நாளைக் கொண்டாட சர்வதேச மண் அறிவியல் சங்கம் பரிந்துரை செய்தது.
- தாய்லாந்தின் தலைமையின் கீழ், உலக மண் தினத்தை முறையாக நிறுவுவதற்கு உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆதரவளித்தது.



- ❖ இந்நாள் தாய்லாந்து மன்னரான மறைந்த பூமிபோல் அதுல்யதேஜின் (King Bhumibol Adulyadej) பிறந்த நாளுடன் ஒத்துப் போகின்றது.
- ❖ இது முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.

## பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கான சர்வதேச தன்னார்வ தினம் - டிசம்பர் 05

- ❖ இது பொதுவாக சர்வதேச தன்னார்வ தினம் என்று குறிப்பிடப் படுகிறது.
- ❖ இது 1985 ஆம் ஆண்டில் ஐ.நா பொதுச் சபையால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சர்வதேச அனுசரிப்பு ஆகும்.
- ❖ இது பல அரசு சாரா நிறுவனங்கள், குடிமைச் சமூகங்கள் மற்றும் தனியார் துறையினரால் கொண்டாடப் படுகிறது.
- ❖ இதற்கு ஐக்கிய நாடுகள் தன்னார்வலர்கள் திட்டமும் துணை புரிகிறது.
- ❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு "Together We Can Through Volunteering" அல்லது "நாம் ஒன்றிணைந்தால் தன்னார்வத் தொண்டு புரிய முடியும்" என்பதாகும்.




## இந்தியக் கடற்படை தினம் – டிசம்பர் 04

- ❖ ஒவ்வொரு ஆண்டும் இந்தியக் கடற்படை தினமானது ட்ரைடென்ட் என்ற ஒரு நடவடிக்கைக்காக அனுசரிக்கப் படுகின்றது.



- இந்த நடவடிக்கையானது கராச்சித் துறைமுகத்தைத் தாக்குவதற்காக இந்தியப் – பாகிஸ்தான் போரின் போது இந்தியக் கடற்படையினால் தொடங்கப் பட்டது.
- இந்தியக் கடற்படைத் தினத்தின் இந்த ஆண்டிற்கான கருத்துரு, "போர்த் தயார்நிலை, நம்பகமானது மற்றும் ஒத்திசைவு" என்பதாகும்.

## மகாபரிநிர்வாண் திவாஸ் - டிசம்பர் 06

- டிசம்பர் 06 அன்று இந்தியாவானது மகாபரிநிர்வாண் திவாஸை அனுசரித்தது.
- இது டாக்டர் பாபாசாஹேப் அம்பேத்கரின் நினைவு தினத்தைக் குறிக்கின்றது.
- பரிநிர்வாண் என்பது புத்த மதத்தின் கொள்கைகள் மற்றும் இலக்குகளில் ஒன்றாகும்.
- அம்பேத்கர் அவர்கள் 'புத்தர் மற்றும் அவரது தம்மா' என்ற அவரது கடைசிப் படைப்பை நிறைவு செய்த சில நாட்களுக்குப் பின் காலமானார்.




## ஆயுதப் படைகள் கொடி தினம் – டிசம்பர் 07

- இது இந்தியாவில் 1949 ஆம் ஆண்டின் டிசம்பர் 07 ஆம் தேதி முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
- இது மக்களிடமிருந்து நிதியினைச் சேகரிப்பதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- டிசம்பர் மாதமானது "கௌரவ் மாஹ்" ஆக கொண்டாடப்படுகின்றது.
- 1949 ஆம் ஆண்டில், பல்தேவ் சிங் குழுவானது கொடி தின நிதியை உருவாக்கியது.



## சர்வதேசப் பயணியர் விமானப் போக்குவரத்து தினம் – டிசம்பர் 07

- 1996 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ICAO's 50வது நினைவு தின நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்தத் தினத்தைப் பறை சாற்றியுள்ளது.
- இந்தத் தினமானது சர்வதேசப் பயணியர் விமானப் போக்குவரத்து அமைப்பால் (International Civil Aviation Organization - ICAO) அனுசரிக்கப் படுகின்றது.
- தற்பொழுதிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையிலான கருத்துரு, "சர்வதேச விமானப் போக்குவரத்து வளர்ச்சிக்கான மேம்படுத்தப்பட்ட புத்தாக்கம்" என்பதாகும்.

## சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் – டிசம்பர் 09

- 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஊழலுக்கு எதிராக ஒன்றிணைதல்/ நேர்மையுடன் மீண்டு வருதல்" என்பதாகும்.
- இந்தக் கருத்துருவானது நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவதற்கு ஊழல் மிகப்பெரிய தடைக் கல்லாக உள்ளது என்ற கருத்தின் மீது கவனம் செலுத்துகின்றது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2003 ஆம் ஆண்டில் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டது.

## மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10

- இந்த நாளில் ஐக்கிய நாடுகள் சபை 1948 ஆண்டில் உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டது.
- இது மனித உரிமைகள் பற்றிய முதல் உலகளாவிய ஆவணமாகும்.
- அது உலகளவில் பாதுகாக்கப்பட வேண்டிய அனைத்து மனிதர்களின் அடிப்படை உரிமைகளையும் கோடிட்டுக் காட்டுகிறது.
- 1950 ஆம் ஆண்டு டிசம்பர் 4 ஆம் தேதி நடைபெற்ற பொதுச் சபையின் 317வது கூட்டத்தில் மனித உரிமைகள் தினம் முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக தேசிய மனித உரிமைகள் ஆணையம் 1993 ஆம் ஆண்டு அக்டோபரில் நிறுவப் பட்டது.
- 2020 ஆம் ஆண்டின் கருத்துரு 'சிறந்ததை மீட்டெடுங்கள் - மனித உரிமைகளுக்காக துணை நிற்போம்' (Recover Better - Stand Up for Human Rights) என்பதாகும்.



## சர்வதேச விலங்கு உரிமைகள் தினம் - டிசம்பர் 10

- மனித கொடுங்கோன்மையால் பாதிக்கப்பட்ட விலங்குகளை நினைவில் கொள்வதும், விலங்குகளின் உரிமைகள் பற்றிய உலகளாவியப் பிரகடனத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதும் இதன் நோக்கமாகும்.
- இது 1998 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த வரலாற்றுப் பிரச்சாரத்தின் குறிக்கோள், மனித உரிமைகளை அங்கீகரிப்பதை உருவாக்குவது என்பதாகும், மேலும் கருணை மற்றும் மரியாதை என்பது அனைத்து உணர்வுள்ள உயிரினங்களுக்கும் பொதுவாக உரியது என்பதை மனிதகுலத்திற்கு அறிவுறுத்துவதாகும்.

## சர்வதேச யுனிசெஃப் தினம் - டிசம்பர் 11

- யுனிசெஃப் என்பது குழந்தைகளின் உரிமையைக் காக்கும் ஒரு அமைப்பாகும்.
- இது 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் தேதி அன்று நிறுவப்பட்டது.
- ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (யுனிசெஃப்) என்பது உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கு மனிதாபிமான மற்றும் மேம்பாட்டிற்கான உதவிகளை வழங்கும் ஐக்கிய நாடுகளின் ஒரு முகமையாகும்.
- யுனிசெப்பின் முக்கிய குறிக்கோள், 'ஒவ்வொரு குழந்தைக்கும் ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், பாதுகாப்பாகவும் வளர வாய்ப்பளிப்பதாகும்'.
- இந்த அமைப்பு முதலில் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகளின் அவசர நிதி என்று பெயரிடப் பட்டது.
- 1953 ஆம் ஆண்டில், அதிலிருந்த 'சர்வதேசம்' மற்றும் 'அவசரம்' ஆகிய இரண்டு சொற்கள் கைவிடப் பட்டன, ஆனால் அந்தப் பெயர்களின் சுருக்கம் தொடர்ந்து பயன்பாட்டில் உள்ளது.

## 36வது SAARC சாசன நாள் - டிசம்பர் 08

- 1985 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் தேதி வங்கதேசத்தின் டாக்காவில் நடைபெற்ற முதல் சார்க் உச்சி மாநாட்டில் சார்க் அமைப்பு நிறுவப்பட்டது.
- தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு (SAARC - South Asian Association for Regional Cooperation) என்பது தெற்காசியாவில் உள்ள பிராந்திய அரசுகளுக்கு இடையேயான அமைப்பு மற்றும் அப்பகுதி நாடுகளின் ஒரு புவிசார் அரசியல் கூட்டமைப்பாகும்.
- இதன் உறுப்பு நாடுகள் ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூடான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகும்.
- இதன் செயலகம் நேபாளத்தின் காத்மாண்டுவில் அமைந்துள்ளது.
- நேபாளமானது தற்போது சார்க் அமைப்பின் தலைமைப் பொறுப்பை வகிக்கிறது.

## பன்னாட்டு மலைகள் நாள் - டிசம்பர் 11

- இது மலைகளின் நிலையான மேம்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2002 ஆம் ஆண்டை ஐ.நா. பன்னாட்டு மலைகள் ஆண்டாக அறிவித்தது.
- முதல் பன்னாட்டு மலைகள் நாளானது 2003 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

- மலை பல்லுயிர்ப் பெருக்கம் (Mountain biodiversity) என்பது இந்த ஆண்டின் கருத்துரு ஆகும்.




## சர்வதேச நடுநிலைமை நாள் - டிசம்பர் 12

- ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானமானது 2017 ஆம் ஆண்டு பிப்ரவரி 2 ஆம் தேதி அன்று ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது 2017 ஆம் ஆண்டு டிசம்பர் 12 அன்று முதன்முதலில் அனுசரிக்கப் பட்டது.
- நடுநிலை நாடு என்பது ஒரு இறையாண்மை கொண்ட நாடாகும், இது சர்வதேச சட்டத்தின் படி போரில் பங்கேற்பதைத் தவிர்க்கிறது.
- நடுநிலை நாட்டின் உரிமைகள் மற்றும் கடமைகள் 1907 ஆம் ஆண்டின் தி ஹேக் மாநாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.
- 1815 ஆம் ஆண்டில், சுவிட்சர்லாந்து நாடானது தன்னை ஒரு நிரந்தர நடுநிலை நாடு என்று அறிவித்த முதல் நாடாகும்.
- ஆனால் 1995 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் நடுநிலைமை நாடாக அங்கீகரிக்கப் பட்ட முதல் நாடு துர்க்மெனிஸ்தான் ஆகும்.

## சர்வதேச உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு நாள் - டிசம்பர் 12

- பல பங்குதாரர் கூட்டாளர்களுடன் வலுவான மற்றும் உறுதி வாய்ந்த சுகாதார அமைப்புகள் மற்றும் உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றின் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையானது டிசம்பர் 12 ஆம் தேதியை சர்வதேச உலகளாவிய சுகாதாரப் பாதுகாப்பு நாளாக அறிவித்தது.
- 2019 ஆம் ஆண்டில் இந்நாளுக்கான கருத்துரு 'Protect Everyone' (ஒவ்வொருவரையும் பாதுகாத்தல்) என்பதாகும்.



## தேசிய ஆற்றல் பாதுகாப்பு தினம் – டிசம்பர் 14

- இந்தத் தினமானது உலக வெப்பமயமாதல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஆற்றல் வளங்களைப் பாதுகாப்பது குறித்த முயற்சிகளை ஊக்குவிப்பதன் மீது கவனம் செலுத்துகின்றது.
- இந்தியாவில் ஆற்றல் பாதுகாப்புச் சட்டமானது 2001 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஆற்றல் திறன் முகமையினால் (BEE - Energy Efficiency Bureau) செயல்படுத்தப் படுகின்றது.
- BEE என்பது ஆற்றல் பயன்பாடு குறித்த கொள்கைகளை வடிவமைப்பதற்காக இந்திய அரசின் கீழ் செயல்படும் ஓர் அமைப்பாகும்.




## சுவர்னிம் விஜய் மஷால் – டிசம்பர் 16

- பிரதமர் அவர்கள் தில்லியில் உள்ள தேசியப் போர் நினைவகத்தில் “சுவர்னிம் விஜய் மஷாலை” தொடங்கி வைத்தார்.
- இது 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தானியப் போரில் இந்தியா பெற்ற வெற்றியின் 50வது நினைவு தினக் கொண்டாட்டத்தைக் குறிக்கின்றது.
- இது வங்க தேச நாட்டின் உருவாக்கத்திற்கு வழி வகுத்துள்ளது.
- இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு 1971 ஆம் ஆண்டுப் போரானது அதிக அளவிலான இராணுவம் சரணடைந்ததையும் குறிக்கின்றது.
- டிசம்பர் 16 அன்று, இந்தியாவானது “சுவர்னிம் விஜய் வர்ஷ்” எனப்படும் இந்திய-பாகிஸ்தானியப் போரின் 50வது ஆண்டை அனுசரித்து உள்ளது.

## பாலியல் தொழிலாளர்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் – டிசம்பர் 17

- இந்தத் தினமானது உலகம் முழுவதும் உள்ள பாலியல் தொழிலாளர்களுக்கு எதிராக நிகழ்த்தப் படும் குற்றங்களை ஒழிப்பதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வேண்டி தொடங்கப்பட்டுள்ளது.
- இதன் முதலாவது வருடாந்திர தினமானது 2003 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- இது வாஷிங்டனில் சியாட்டிலில் பசுமை நதித் தாக்குதலில் பாதிக்கப் பட்டவர்களுக்கான நினைவு மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக அனுசரிக்கப் பட்டது.
- இது உலகம் முழுவதும் நகரங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு என்று பாகுபாட்டிற்கு எதிராக ஒன்றிணைந்து செயல்படுதல் மற்றும் வன்முறையினால் பாதிக்கப் பட்டவர்களை நினைவு கூர்ந்து செயல்படுதல் ஆகியவற்றிற்கு அதிகாரம் அளிக்கின்றது.

## சர்வதேசப் புலம்பெயர்ந்தோர் தினம் – டிசம்பர் 18

- ❖ இந்தத் தினமானது உலகம் முழுவதும் உள்ள புலம்பெயர்ந்தோரின் உரிமைகள் மற்றும் கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க செய்கின்றது.
- ❖ 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 18 அன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டது.
- ❖ 2020 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "மனிதனின் நடமாட்டத்தை மறு கற்பனை செய்தல்" என்பதாகும்.




## 49வது விஜய் திவாஸ் – டிசம்பர் 16

- ❖ இத்தினமானது ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 16 அன்று அனுசரிக்கப்படுகின்றது.
- ❖ இது 1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற இந்திய-பாகிஸ்தான் போரில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றதைக் குறிப்பதற்காக அனுசரிக்கப் படுகின்றது.




- ❖ மேலும் இது வங்கதேச விடுதலைப் போர் என்றும் அழைக்கப் படுகின்றது.
- ❖ இந்திய-பாகிஸ்தான் போரானது 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 16 அன்று தொடங்கியது.

- இது மிகக் குறுகிய காலப் போர்களில் (13 நாட்கள்) ஒன்றாகும். மேலும் இது அதிக அளவிலான வீரர்கள் சரணடைதலைக் கண்டுள்ளது.
- 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 16 அன்று 93,000 துருப்புகளுடன் பாகிஸ்தான் படைகளின் தலைவரான அப்துல்லா கான் நியாசி என்பவர் முக்தி பாஹினி மற்றும் இந்திய இராணுவம் ஆகியவற்றின் கூட்டு நேசப் படைகளிடம் சரணடைந்தார்.
- விஜய் திவாஸ் ஆனது வங்க தேசத்தில் பிஜோய் திபோஸ் ஆக அனுசரிக்கப் படுகின்றது.

## சர்வதேச தேநீர் தினம் - டிசம்பர் 15

- இது முதன் முதலில் 2005 ஆம் ஆண்டில் இந்தியாவில் புதுதில்லியில் கொண்டாடப் பட்டது.
- இது டிசம்பர் 15 அன்று வங்க தேசம், இலங்கை, நேபாளம், வியட்நாம், இந்தோனேசியா, கென்யா, மலாவி, மலேசியா, உகாண்டா, இந்தியா, தான்சானியா, நெதர்லாந்து, ஐக்கியப் பேரரசு, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகளில் அனுசரிக்கப் படுகிறது.
- இது "Harnessing Benefits for all From Field to Cup" (வயலிலிருந்து கோப்பை வரையில் அனைவருக்குமான பலன்களைப் பாதுகாத்தல்) என்ற குறிக்கோளில் கொண்டாடப் படுகிறது.
- 2019 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பானது மே 21 அன்று இத்தினத்தை கடைபிடிக்க முடிவு செய்தது.
- தேயிலை உற்பத்தி செய்யும் பெரும்பாலான நாடுகளில் தேயிலை உற்பத்தி செய்யும் பருவமானது மே மாதத்தில் தொடங்குகிறது.
- சீனா தற்போது தேயிலையை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் நாடாக இருக்கிறது.




## உலக அரபு மொழி நாள் - டிசம்பர் 18

- இந்த ஆண்டின் கருத்துரு "Arabic Language Academics: Necessity or Luxury" (அரபி மொழி கல்வியாளர்கள்: தேவையா அல்லது ஆடம்பரமா) என்பதாகும்.
- இந்த தினம் 2010 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவால் நிறுவப்பட்டது.
- 1973 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையானது அரபியை ஐ.நா.வின் ஒரு அலுவல் மொழியாக அங்கீகரித்தது.

- ஐ.நாவில் ஆறு அலுவல் மொழிகள் உள்ளன.
- அவை அரபு, சீனம், ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்ய மொழி மற்றும் ஸ்பானிய மொழி ஆகியனவாகும்.

| |
|---|
| Arabic (18 December) |
| Chinese (20 April) |
| **English** (23 April) |
| Spanish (23 April)) |
| French (20 March) |
| Russian (6 June) |

## சிறுபான்மையினர் உரிமைகள் நாள் - டிசம்பர் 18

- இந்தியாவில் இந்த தினம் முதன்முதலில் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் 18 அன்று அனுசரிக்கப் பட்டது.
- 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 18 அன்று, ஐக்கிய நாடுகள் சபையானது மதம் அல்லது மொழி, தேசியம் அல்லது இனம் சார்ந்த சிறுபான்மையினருக்குச் சொந்தமான தனிநபர்களின் உரிமைகள் குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- நாட்டில் உள்ள மத ரீதியிலான சிறுபான்மையினருக்காக அரசியலமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாக்க இது அனுசரிக்கப் படுகிறது.
- இந்தியாவில் ஆறு மதச் சமூகங்கள் சிறுபான்மையினராக அறிவிக்கப்பட்டுள்ளன.
- இதில் இஸ்லாமியர்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள் மற்றும் ஜோராஸ்ட்ரியர்கள் அல்லது பார்சிகள் மற்றும் சமணர்கள் (2014) அடங்குவர்.
- ஜம்மு-காஷ்மீர், பஞ்சாப், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து மற்றும் லட்சத்தீவு ஆகியவை மட்டுமே எந்தவொரு சிறுபான்மையினரும் பெரும்பான்மையாக உள்ள மாநிலங்கள் ஆகும்.
- இந்தியாவில் சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையமானது 1992 ஆண்டின் சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் கீழ் நிறுவப் பட்டது.

## கோவா விடுதலை நாள் - டிசம்பர் 19

- 1961 ஆம் ஆண்டில் இந்திய ஆயுதப் படைகள் மேற்கொண்ட ஒரு இராணுவ நடவடிக்கையின் மூலம் கோவா விடுவிக்கப்பட்டது.
- போர்த்துகீசிய ஆட்சியில் இருந்து கோவாவை விடுவிக்க இது விஜய் நடவடிக்கை மூலம் மேற்கொள்ளப் பட்டது.
- இந்த ஆண்டு இந்த நடவடிக்கையின் 60வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- மேலும், இந்த நாளில் ஐரோப்பிய ஆட்சியில் இருந்து இந்தியா முற்றிலும் விடுவிக்கப் பட்டது.
- 1510 ஆம் ஆண்டில் போர்த்துகீசிய ஆளுநரான அல்போன்சோ டி அல்புகர்க் என்பவர் கோவாவைக் கைப்பற்றினார்.

- 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், அவர்களின் காலனிகளாக கோவா, டையு - டாமன், தாத்ரா மற்றும் நகர் ஹவேலி ஆகியவை மட்டுமே இருந்தன.




## சர்வதேச மனித ஒற்றுமை தினம் – டிசம்பர் 20

- இது ஐக்கிய நாடுகளின் ஒரு சர்வதேச வருடாந்திர ஒற்றுமை தினமாகும்.
- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் 2005 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது.
- "HeForShe" என்பது பாலினச் சமத்துவத்திற்காக வேண்டி உலகளாவிய ஒற்றுமை இயக்கத்திற்கான ஐக்கிய நாடுகளின் ஒரு முழக்கமாகும்.

## தேசியக் கணிதவியல் தினம் – டிசம்பர் 22

- இது 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி 26 அன்று முன்னாள் பிரதமரான மன்மோகன் சிங் அவர்களால் மதராஸ் பல்கலைக்கழகத்தில் அறிவிக்கப்பட்டது.
- இது ஸ்ரீனிவாச இராமானுஜரின் 125வது பிறந்த தின நினைவைக் குறிப்பதற்காக அனுசரிக்கப் பட்டது.
- மேலும் 2012 ஆம் ஆண்டானது தேசியக் கணிதவியல் ஆண்டாக அனுசரிக்கப்பட்டது.
- 1887 ஆம் ஆண்டில் இத்தினத்தில் இராமானுஜன் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஈரோட்டில் பிறந்தார்.
- இவரது சுயசரிதையான "முடிவுறாத எண்ணை அறிந்த மனிதர்" (The man who knew infinity) என்ற திரைப்படமானது 2015 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது.
- 1918 ஆம் ஆண்டில் இவர் நீள்வட்டச் செயல்பாடுகள் மற்றும் எண் கோட்பாடுகள் குறித்த இவரது ஆய்விற்காக ராயல் சமூகத்தின் தோழமைப் பிரதிநிதி என்ற ஒரு தகுதி நிலைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

- 1918 ஆம் ஆண்டில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உள்ள டிரினிட்டி கல்லூரியின் தோழமைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது இந்தியர் இவராவார்.
- இராமானுஜன் கடினமான முக்கோணவியல் கணக்குகளைத் தீர்ப்பதற்கான கோட்பாடுகளைக் கண்டறிந்தார்.
- சாஸ்த்ரா இராமானுஜர் பரிசானது இராமானுஜரின் விருப்பத் துறையில் தலைசிறந்த பங்களிப்புகளை வழங்கிய இளம் கணிதவியலாளருக்கு (32 வயதுக்குக் கீழ்) ஒவ்வொரு ஆண்டும் வழங்கப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டு சாஸ்த்ரா இராமானுஜன் பரிசானது அமெரிக்காவின் பிரின்ஸ்டேன் பல்கலைக்கழகம் மற்றும் இஸ்ரேலின் ஹீப்ரு ஜெருசலம் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஷாய் எவ்ரா என்பவருக்கு வழங்கப்பட உள்ளது.




## தேசிய விவசாயிகள் தினம் (கிசான் திவாஸ்) - டிசம்பர் 23

- முன்னாள் பிரதமர் சவுத்ரி சரண் சிங்கின் பிறந்த நாளைக் குறிக்கும் வகையில் இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- இவர் 1902 ஆம் ஆண்டில் மீரட்டில் பிறந்தார்.
- இவர் 1979 ஆம் ஆண்டு ஜூலை 28 முதல் 1980 ஆம் ஆண்டு ஜனவரி 14 வரை இந்தியாவின் ஐந்தாவது பிரதமராக இருந்தார்.
- "உண்மையான இந்தியா அதன் கிராமங்களில் வாழ்கிறது" என்று அவர் ஒரு தடவை கூறினார்.
- 1952 ஆம் ஆண்டில், இந்திய விவசாயத் துறை அமைச்சராக இருந்த சரண் சிங் இந்தியாவில் ஜமீன்தாரி முறையை ஒழிக்க கடுமையாக உழைத்தார்.
- 1953 ஆம் ஆண்டில், இவர் நில ஒருங்கிணைப்புச் சட்டத்தை நிறைவேற்றச் செய்தார்.
- 2001 ஆம் ஆண்டில், சரண் சிங்கின் பிறந்த நாளை கிசான் திவாஸ் என்று அனுசரிக்க இந்திய அரசு முடிவு செய்தது.




## தேசிய நுகர்வோர் தினம் - டிசம்பர் 24

| Provision | Consumer Protection Act,1986 | Consumer Protection Bill, 2019 |
|---|---|---|
| **Regulator** | No Central Regulator | Central Consumer Protection Authority to be set up. |
| **Filing of Complaint** | A complaint needs to be filed in the consumer court under whom jurisdiction of the seller falls under | A complaint can be filed from anywhere or from where the consumer resides. |
| **Mediation** | No Provision | Courts can work towards settlement through mediation cells. |
| **Jurisdiction** | The jurisdiction at District level was complaints worth of Rs. 20 Lakh | District level authorities can take-up complaints with goods and services worth up to Rs.1 crore. |
| **Product Liability** | No Provision | Consumers have the right to seek compensation for any harm caused. |
| **E-Commerce** | No Provision | E-Commerce transactions will come under the provisions involving direct sales. |
| **Video Conferencing** | No Provision | Consumers can seek hearing through Video Conference. |

- 1986 ஆம் ஆண்டின் இதே நாளில், 1986 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றது.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 ஆனது 2020 ஆம் ஆண்டின் ஜூலை 20 முதல் அமலில் இருந்து வருகிறது.
- நுகர்வோரின் உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் வேண்டி மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையத்தை நிறுவுவதை இந்தச் சட்டம் உள்ளடக்கி இருக்கின்றது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு நீடித்த வாடிக்கையாளர்/"The Sustainable Consumer" என்பதாகும்.
- உலக நுகர்வோர் உரிமை தினம் மார்ச் 15 அன்று கொண்டாடப் படுகிறது.

## நல் ஆளுகை தினம் - டிசம்பர் 25

- இது முன்னாள் பிரதமர் வாஜ்பாயைக் கௌரவிப்பதற்காக 2014 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் பிறந்த நாளாகும்.
- 1996 ஆம் ஆண்டில் 13 நாட்கள், பின்னர் 1998 முதல் 1999 வரை 13 மாதங்கள், பின்னர் 1999 முதல் 2004 வரையிலான முழு பதவிக் காலம் என அவர் மூன்று முறை இந்தியப் பிரதமராக பணியாற்றியுள்ளார்
- பாரதீய ஜனதா கட்சியின் உறுப்பினரான இவர் முழு பதவிக் காலமும் பணியாற்றிய இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி சாராத முதல் இந்தியப் பிரதமர் ஆவார்.
- 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று, திரு வாஜ்பாய், மற்றும் பண்டித மதன் மோகன் மாளவியா (இறப்பிற்குப் பின்) ஆகியோர் இந்தியாவின் மிக உயர்ந்த குடிமக்கள் விருதான பாரத ரத்னாவைப் பெற்றவர்களாக அறிவிக்கப்பட்டனர்.
- "வாஜ்பாய்: இந்தியாவை மாற்றிய ஆண்டுகள்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஒரு புத்தகம் வாஜ்பாயின் 96வது பிறந்த நாளன்று வெளியிடப் பட்டது.
- இது சக்தி சின்ஹா என்பவரால் எழுதப் பட்டதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★